உ
சிவமயம்.
மகாகணபதே நம:
திருச்சிற்றம்பலம்.


அளகை
அஷ்டப் பிரபந்தம்.

தனிப் பிரபந்தம்.
சித்தி விநாயகர் மாலை
புதுவயல் கைலாச விநாயகரந்தாதி
பழனியாண்டவர் மாலை
கம்பை நான்மணி மாலை
கம்பை முருகன் திருப்புகழ்

இது
புதுவயல்
திருவாளர், நா. அ. அண்ணாமலைச்செட்டியார்
கனிஷ்ட குமாரர்
சண்முகச் செட்டியாரவர்களால்
பாடப்பெற்று

காரைக்குடி
குமரன் பவர் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கலாயின.

யுவ வருடம் ஆவணி.
1935.



நூலாசிரியர்

சண்முகச் செட்டியார் கி.பி. 1873

சாலிவாகன சகம் 1795 ஸ்ரீமுக வருஷம் ஐப்பசிமீ 13௳ சோமவாரம்
பூர்வ சஷ்டி பூராட நக்ஷத்திரத்தில் ஜெனனம்.

உ

சிவமயம்.

மகாகணபதே நம:

சிறப்புப்பாயிரம்.

திருவாளர்

புதுவயல் வெ. பெரி. வீர. (நடராஜபுரம்)

சோமசுந்தரச் செட்டியார் இயற்றியது.

நேரிசை யாசிரியப்பா.

திருவளர் தாமரைச் செல்வி நாதனும்
பருவரல் தீர்சொற் பாரதி கேள்வனும்
இருவருந் தம்மு ளிகலிய ஞான்று
பொருவரு மலையிற் புணர்ந்தெரி நிமிர்ந்து
நடுவட் டோன்றி நாகத் தொருசொல்
அடிமுடி காண்கென் றறைதலு நெடியோன்
பன்னரு மாவாய்ப் பாரிடங் கீண்டும்
அன்னம் ஆகி அயன்மேற் பறந்தும்
தேடுதற் கரிதாய்த் திரண்டபொற், சோதிப்
பீடுடைப் பெம்மான் பெரும்பற்றப் புலியூர்
ஆடகப் பொதுவி லாருயிர்க் கிரங்கி
நாடக நவிற்றும் நம்பன் றென்னல்
வேதந் தொடரா வித்தக னனுதி
நாத வதீதன் னற்பர வெளியாய்ப்
பரந்து மண்டப் பரப்பெலாங் கலந்தும்
கரந்தெண் ணெய்போற் கவின்பர சின்மயன்
மணிநீ ருலகந் தன்வயிற் றந்த
அணியார் பரையை யர்த்தஞ் சேர்த்து
நெருப்பிற் சூடும் நீரிற் குளிரும்
பொருப்பிற் றிண்மையும் போன்றசை வற்றுத்
தா தான் மியமாய்த் தழைத்தொன் றூன
ஆதா ரச்சிவ னருளுரு வானேன்
வீரை மூலத் தோரியல் வேடன்
பாரை பட்டுப் படர்சடை முடியிற்

பசும்புண் டாங்கி வசுந்தரை மேவாது
விசும்பின் மேலாம் வீடருள் பெருமான்
வீர சேகரன் மேவுமத் தலந்தான்
வீரை யளகை வில்வா ரணியம்
வீர வனம்பார் விளம்புறு சாக்கை
என்னவோ ரைந்தாய் மன்னிய பெயருள்
நன்னலந் துன்னி இன்னல் போக்கும்
அளகைப் பெயரா லஷ்டப்ர பந்தம்
பளகறுத் தின்சொற் பகர்ந்து தேன் றமிழால்
ஆசறு மணியி னரனுர்க் காறும்
தேசவிர் சொரூப சிற்சந்தி யாய
உமையாம் பிகையென் னெப்பனைக் கிரண்டும்
அமையா வின்பத் தமைத்திவ் வெட்டொடும்
அடியார் குறிப்பி னணைந்தவர்க் காத்துச்
செடிதீ ரின்பஞ் சேர நல்கும்
ஐந்து கரற்கு மவர்ப்பின் வந்த
கந்த வேட்குங் காமர்ப் புணர்த்தி
அன்பு குழைத்தோ ரைந்துநூ லாக்கி
மன்புகழ் நிறுவி வகுத்தபன் மூன்றும்
பாலோ தேனே பலத்தின் சாறே
மேலோர் வழுத்தி விழுப்பொரு டுதைந்து
பயிலும் நாவும் பழகிய மனமும்
உயிருந் தித்தித் துவட்டெடுத் தூறும்
அரும்பா வடித்த விருஞ்சுவை தானே
என்னப் பணுமுடி யீரைஞ் ஞூற்றுப்
பன்னக விராசன் பயங்கொளத் தந்தனன்
அன்னவன் யாரெனி னின்னகர்க் கணித்தாய்ப்
பொன்னக ரென்னப் பொலிந்துசீர் மல்கும்
மதிதவழ் குடுமி மாடத் துலாவரு
புதுவணி மகளிர் புக்கிரப் பார்க்கு
வேண்டுவ கொடுத்தும் விருந்தோ டுண்டும்
காண்டகு சிறப்பிற் கவின்பெற் றோங்கும்

புதுவயல் நகர்க்கட் பதிபணி புரிந்தே
அதிநலந் துய்த்துச் சதுருற வாழும்
சீரகத் தாரணி செல்வர் திரைகடற்
பாரகத் தேபுகழ் பரப்பிநல் லறத்தா
ரோம்பும் வணிக ருயர்குடிப் பிறந்து
தாம்பிழை யாநெறி சார்ந்த சற்குணன்
தங்குலப் புலமை தாங்கிய புலவன்
கங்கைவே ணியனே கடவுளென் றுன்னும்
பெற்றியன் மணியணி பேற்றின னீறரு
ணெற்றிய னிமலர்சொ னிறுத்து நெஞ்சினன்
சொற்பொருட் சுவைதழீஇத் தொகுக்கும் பாவலன்
விற்கருப் பேந்தும் வேணிக ரழகன்
மண்பால் வணிகர்த மொன்பான் கோயிலுள்
பண்பா ரிரணியூர்ப் பகுப்புடை யேந்தல்
அண்ணு மலைசெய் யருந்தவத் துதித்துக்
கண்ணு யினரிற் கல்விக் கடலை
மதியெனுங் கோலான் மதித்துக் கடவுளர்
துதிபல சொற்ற தூயோன் சுப்பிர
மணியற் கிளவலாய் வந்த தோன்றல்
அணிபல கற்றுயய்ந் தறிந்த விலக்கண
எவ்வமில் புலமைக் கேக்குற் றவரை
அவ்வையிற் றுங்கி யகங்களிப் புறுவோன்
உடலிற் சரிக்கு முயிரொத் தென்பால்
அடைவிற் பயிலு மன்பார் நண்பன்
பாலின் னீரைப் பகுத்துணு மன்னம்
போலு முலகியற் பொருளினை நாடி
உண்முக மாக வுணரும்
சண்முக னருந் தனிவிற லோனே

உ

சிவமயம்.

சாத்துக்கவி.

திருவாளர்
அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ்விரிவுரையாளர்
பண்டிதமணி

மகிபாலன்பட்டி மு. கதிரேசச் செட்டியாரவர்கள்

கூறியவை.

மதிவளர்செஞ் சடைப்பெருமான் மண்ணுலகி
ஒுயிர்கணைல மருவி வாழத்
துதிவளரும் இலிங்காதி தூயதிரு
வுருக்கொடுவீற் றிருக்குந் தொன்மைப்
பதிபலவுட் பழம்பதியாம் பாண்டிநாட்
டெழின்மிகுசீர் பலவு மோங்கி
நிதிவளரும் அளகையுமொன் றப்பதிவா
ழிறைவியொடு நிமலற் கேற்ப. (1)

எட்டுவகைப் பிரபந்த மினிமைமிகு
தமிழ்மொழியால் யாத்து மேலுந்
தட்டறநற் சித்திவிநா யகர்மாலை
முதலைந்து தகவிற் செய்து
மட்டவிழ்தா மரையனைய அவ்விறைவர்
திருவடிக்கண் மகிழ்விற் சேர்த்தான்
இட்டமறிந் துயிர்க்கருளும் இறைவனைத்தன்
னுளத்திருத்தும் இயல்பான் மிக்கோன். (2)

அவ்வளகைக் கயனிலவு புதுவயலா
மணிநகரி லன்பு சான்ற
திவ்வியமார் வணிககுலச் செம்மல்அண்ணு
மலைபயந்த சீர்சால் செல்வன்
அவ்வியமி னெஞ்சத்தான் தமிழ்பயின்று
கவிபாடும் ஆற்றல் மிக்கான்
செவ்வியநற் குணநிறைந்த சண்முகனும்
பெயர்படைத்த சீர்த்தி யோனே. (3)

உ

சிவமயம்.

மகாகணபதே நம :

அரங்கேற்றிடம்.

தனியன்.

சீராருந் தமிழ்ப்புலவர் கழகஞ் சார்ந்து
திருவளகை யாஞ்சாக்கைத் தலத்திற் கொன்றைத்
தாராரும் வீரசே கரனார் மேய
சந்நிதிமுன் சண்முகவேள் தான்செய் திட்ட
ஏராரு நூலெட்டு மற்றை யைந்து
மெழிற்ருதாண் டாவணிநா ளிரண்டு பத்திற்
பாராரும் புகழ்பரப்பி மக்கட் கின்பம்
பயப்பநனி வியப்பவரங் கேற்றி னானே.

பாலகவி
கா. நல்லையா
புதுவயல்.

சிவமயம்.

அஷ்டப்பிரபந்த அட்டவணை.

	பாடற்றொகை	பக்கம்
1. அளகைக் கலிவெண்பா	69	1
2. அளகை வெண்பாமாலை	100	7
3. அளகைச் சிலேடைவெண்பா	100	22
4. அளகை வெண்பா அந்தாதி	100	37
5. அளகைப் பதிற்றுப்பத்துப்பதிகம்	100	52
6. அளகை யலங்காரம்	100	75
7. அளகை யுமையந்தாதி	100	90
8. அளகை உமையம்மை பிள்ளைத்தமிழ்	100	105

தனி நூல் அட்டவணை.

1. சித்திவிநாயகர்மாலை	100	149
2. கைலாசவிநாயகரந்தாதி	100	167
3. பழநியாண்டவர்மாலை	30	185
4. கம்பை நான்மணிமாலை	40	197
5. கம்பை முருகன் திருப்புகழ்	18	219

பிழை திருத்தம்.

பக்கம்	பாட்டு	வரி	பிழை	திருத்தம்
2		13	ஆப்பலூராளி	ஆப்பனூராளி
3		22	வேதம்பல்	வோதம்பல்
8	8	3	பல்லுக்குத்	பல்லுகுத்
17	71	4	தான்	தா
24	12	1	வான்பனை	வான்பணை
28	42	2	கம்பர்வரி	கம்பரிவர்
34	82	3	யசசறச்	யசசுறச்
36	100	3	கைக்குழையார்	மைக்குழையார்
38	5	3	சேவேரி	சேவேறி
43	45	4	சங்கார	சங்கரா
65	58	2	கிளத்தி	கிழத்தி
68	73	1	யுவனங்	புவனங்
70	87	2	யொளித்தியே	யொழித்தியே
71	92	3	புற்பொருள்	புற்பொருளு
76	7	2	மரைமல	மரைமலை
78	18	4	மிகைத்தொகு	மிகைத்தொரு
82	50	1	கூளிகனை	கூளிகளை
86	79	3	கோதொத்	கோகொத்
89	100	1	தாராதயர்	தராதயர்
100	72	4	சளிப்பா	சனிப்பா
101	74	4	பரர்வீரைப்	பார்வீரைப்
102	86	2	சுரங்ந்தத	சுரந்தந்த
ஷை	ஷை	3	நுணைவி	துணைவி
103	90	2	செள்ளி	சென்னி
106	1	5	உரியிலளை	உறியிலளை
130	1	9	நிடொழிய	நீடொழிய
ஷை	2	1	யிருப்பே	யிருப்பை
142	5	11	ஞெருதுறை	ரூருதுறை
ஷை	ஷை	16	ராடியருயே	ராடியருளே
146	6	10	யரவியுய்த்	யாவியுய்த்
ஷை	ஷை	14	யொன்னூச	பொன்னூச
148	10	10	காடிசோ	கடிசோ
151	3	3	வவ்லன்	வல்லன்
177	54	4	களித்தனை	களித்தெனை
178	61	4	தானன்	கானனன்
ஷை	65	2	ரேத்துமன்றன்	ரேத்துமென்றன்
181	88	4	ரிகர்மர	சிகர்மர
189	8	2	தரக்கில்	தாக்கில்
193	20	1	அணிதகும்	அணிதரும்
234	17	2	பொழுதாழ்வாய்	பொழுதாள்வாய்

உ

சிவமயம்.

மகாகணபதே நம:

திருச்சிற்றம்பலம்.

அளகைக் கலிவெண்பா.

காப்பு.

ஏரார் கலிவெண்பாற் கேதுயின்மா லேத்தளகைச்
சீரார் கலிவெண்பாச் செப்பவருள்—வாரீசன்
கச்சிருக்கு மம்மான் கவுரிமுலே மேலன்பு
வச்சிருக்கு மம்மான் மகன்.

கத்த னளகைக் கலிவெண்பாக் கூறிடவைந்
தத்தனடி யெற்கோ ரரண்.

நூல்.

பூவா ழயனறியாப் பொற்சடையா வெம்மளகைத்
தேவா செழுஞ்சோதி தீவண்ணு—மாவாகி
மாஞடு செந்தா மரைப்பாதா நால்வருக்கா
ஆஞடுஞ் சாக்கைநக ரத்தாபூந்—தேஞடு
கொன்றைக் கிசைந்தபுயக் கோமானே வில்வவனத்
தென்றைக்கு நீங்கா திருப்போனே—குன்றைக்கு
னித்துப் புரமெரித்த நின்மலா வீரைவ
னத்துப் புரவலநன் ஞயகனே—கொத்துவளேக்
கையா மலேயெங் கயற்க ணுமைபாதி
மெய்யா மறைபரவும் வித்தகனே—வையார்ந்த

பாரையடி பற்றியொரு பார்வேடர் தாக்கியநாள்
வீரையடி மொத்துண்ட வீரேசா—ஆரை

முடியிற்புண் ணேந்தி முடித்தழும்ப ரானீர்
படியிற் சலிகையிலாப் பாவங்—கொடியபிணி

கண்டச்சோ ழற்கறுத்த கத்தாவாற் கீழ்ப்பொருளை
விண்டச்சோ கந்தவிர்த்த மெஞ்ஞானி—தொண்டரகம்

பையவந்து தீராப் பசிக்கறுத்த பிள்ளையுண்டு
கையணிய வோடுகொண்ட காபாலி—பொய்வாதக்

கூற்றுச் சமணர் குழுக்குலைத்துக் கூர்ங்கழுவில்
ஏற்றுந் தமிழ்மதுரை யெம்மானே—சாற்றுபுன

வாயிறிருப் புத்தூர் வளரிறையே ராமேசத்
தாயிற் சிறந்த தயாபரனே—சேயிலகுந்

தென்பரங்குன் றையா திகழாப்ப னூராளி
மன்கொடுங்குன் றத்துவளர் மாமணியே—முன்பரியாய்

நின்றதிரு மால்வடிவ நீக்கித் தலைசிறந்திங்
கொன்றுதனிச் சைவ வொளிவீசி—மன்றினடம்

ஆடும் பொருளலதோ, ரன்னியமில் லாததனை
நீடும் படியறிய நேர்காட்டி—நாடுசிவ

மெய்வடிவ மாமிலிங்க மேனிகொண்ட குற்றாலத்
தெய்வமே பொற்சுழியற் றெள்ளமுதே—யைவதன

ஆடானை மேவியவெம் மத்தாநெல் வேலியப்பா
பீடாருங் காளைநகர்ப் பெம்மானே—கோடாருங்

காதாநல் லேடகம்வாழ் கண்ணுதலே யெப்பொருட்கும்
நாதாபூ வண்ணத்து நாயகமே—பாதார

விந்தமல ரைத்தேடி விண்ணுமண்ணும் பாதலத்துஞ்
சந்தமறை யோலமிடுந் தற்பரா—வந்தமரர்

போற்றுமணி கண்டா புணரிவாராப் புத்தமுதே
கீற்றுமதி சூடுங் கிரீசனே—யேற்றுக்

கொடியானே யன்பருளங் கோயிலாக் கொண்டாய்மற்
கொடியானே வஞ்சர்க் கொளிப்போய்—கடியாருந்

தாதகியுங் கூவிளமுந் தண்கொன்றை யோடருக்கம்
போதகிலம் போற்றப் புனிதமுடி—மீதணியும்

முத்தாவீ மத்தாடி முப்பரமா யாவுஞ்செய்
சித்தாவெண் கண்ணன்மா றேவரெலாம்—பித்தாவென்

றேத்தும் படிக்கவர்க ளென்பணிந்து வெண்டலையுங்
கோத்துத் தரித்தாடுங் கோமானே—மாத்தவளக்

கோடு மணியரவுங் கொக்கிறகுங் கூனுமை
யோடு மணிந்தொளிரு மொய்யாரா—நாடரிய

வன்புலித்தோ லாடை வனைந்தரவக் கச்சிறுக்கி
என்புலத்தைக் கொள்ளைகொண்ட வெம்மானே-தென்புலத்தார்

கோவைக் குமைத்துக் குறுகினின்ற மாணிக்குச்
சாவைத் தகைத்த தனிவிறலோய்—பூவைப்பூ

வண்ணநர சிங்கத்தை மார்பிடந்து மாறின்றித்
தண்ணளிசெ யெண்காற் சரபமே—நண்ணுமத

ஆனையுரித் தேபோர்வை யாக்குஞ் சிவாவிடத்தின்
மானையுரித் தாக்குபர மானந்தா—மீனக்

கொடியானை யங்கோ குளக்கண் டிறந்து
பொடியாட வல்ல பொருவில்லி—படியாக்கும்

வேதன் சிரங்கொய்து மேலாய வண்டஞ்செய்
நாதன்றா னென்றொருசொ னூட்டழகா—வேதம்பல்

ஊழிதுயின் மாய னுடறடியு முத்தலைவேற்
பாழியுய ரங்கைப் படையாளா—யேழுலகுந்

தந்துகனி யானு டனமோந்து கொண்டழகு
சிந்துங் கிரிவளைத்த திண்டோளா—அந்தமுதல்

இல்லானே யெல்லாமா யெள்ளிலெண்ணே போனிறைந்துஞ்
சொல்லாதி மும்மைக்குஞ் சுட்டிறந்தோய்—கல்லாலிற்

போதமய மாயெப் புவனங் களுங்கடந்து
நாதவெளிக் கப்பாலாய் நாடரிதாய்ச்—சோதிமயம்

ஆகித் தனித்தணுவா யண்டபகி ரண்டமுமாய்ப்
பாகித் தறியவொணுப் பாரமதா—யேக

வுருவா யருவா யுருவருவ மாகிக்
கருவாகி யக்கருவிற் காணும்—அரியவுயிர்

தாஞகி யென்றுந் தணவாது காக்குமிய
மாஞகி மாதரையின் மாதிரமாய்—நாஞவி

தங்களுமா யைம்பூதந் தாஞகி நீடொளிசெய்
திங்களுமாய்ப் பானுமுதற் றேவாகிப்—பங்கமிலா

தெட்டுருவாய் நின்ற விறைவா விடப்பாகந்
தொட்டுருவொன் ருன துணைகொண்டு—சட்டமிட்டிங்

கைந்தொழில்செய் தின்பமுறு மாதீயென் றுன்பவினை
மைந்தொழிக்கச் சற்றெதிர்நீ வாராயோ—பைந்தொடிசேர்

பாகாவுன் பாதமலர்ப் பற்றின்றி யேதுமிலேன்
நாகா பரணு நகைமுகஞ்செய்—யேகாநான்

பட்டதுயர் சொல்லவொரு பாரதமா நீயறிவாய்
மட்டதுண்டோ நோய்தீர்க்கு மாமருந்தே—நட்டமிடுந்

தேவாவென் பார்க்குதவுந் தெய்வமே யெம்மைப்பே
பாவாணர் போற்றும் பரசிவமே—காவாயேற்

காக்கக் கடனெவர்க்கோ காசினியி லுன்னையலாற்
சாக்கைத் தலம்வளர்ந்த சம்புவே—தீக்கைமலர்

ஏந்திப் பரம்பொருளு மென்றுணர்த்தி வன்னஞ்சம்
மாந்திப் பயந்தவிர்த்த வள்ளால்யா—ஞேந்திக்

கொதுங்கு மயிலெனவே யுள்ளுடைந்து வஞ்சந்
ததும்புங் கலியிழைத்த தாழ்வில்—வெதும்பிமனம்

நைந்தே னினித்துயர நான்சகியே னல்லவருள்
வந்தாள்செந் தேனே மனதுகந்தா—ளெந்தாயே

வல்லுருமு கேட்டஞ்சும் வாளரவம் போனடுங்க
எல்லுருவப் பல்லுகுத்த வெம்மானே—வில்லுருவாய்க்

கல்வளைத்த தேவே கலிவளைக்கச் செய்ததெவன்
பல்வளைக்கை பாதி பகிர்மெய்யா—வல்வினையை

மாற்றிக் கலியின் வலிமாய்ப்பாய் மைந்தனியான்
ஆற்றிக் களிகொள்ள வாரமுதே—கூற்றினைமுன்

றுக்கினாய்க் கீதரிதோ தண்ணருள்செய் தாலதனை
நோக்கித் தடுப்பாரார் நோன்மையனே—பூக்கைநிதங்

கொண்டுவழி பாடுசெயுங் குற்றமற்றார்க் கும்புகழை
விண்டுதமிழ்ப் பாபாத்த மேலவர்க்கு—மண்டிவரும்

மாபா தகனுக்கும் வாயுரைக்கிற் கூச்சமுறுந்
தீபா தகர்தமக்குஞ் சிந்தைதவைத்து—நீபாதம்

ஆர்கலியிற் கான்யா றணைந்தனபோற் றன்மயமாய்ப்
பார்களிக்கத் தந்தின்பம் பாலித்தாய்—நீர்மலிந்த

வேணியா வீடளிக்கும் வேதியா தீயடுத்த
பாணியா வெவ்வமது பாராயே—கோணியாய்ப்

பன்னிரண்டு பிள்ளைகளைப் பால்கொடுத்துக் காத்தபரா
என்னிரண்டு கண்ணுக் கிசைமணியே—முன்னிரத

வாதஞ்செய் தம்பொன் மடமாதுக் கீய்ந்தாயென்
றீதஞ்ச நல்லருடான் செய்யாயா—நீதஞ்சம்

அல்லாது வேறொருவ ராவாரோ வாவாவன்
கல்லாமோ நெஞ்சங் கழியிரும்போ—பொல்லேனான்

ஆனாலு மென்குறைக ளையாநீ தாயாமால்
ஏனோ செவிக்கொண் டிரங்காய்காண்—பானாளிற்

பாதங்க ணோவப் படிநடந்த நின்னருட்கென்
ஏதஞ் செருக்கரிதோ வென்னிதுதான்—மாதங்கக்

கோடார்ந்த முத்தனத்தி கோனடந்த தென்பாண்டி
நாடாண்ட சொக்கேயிந் நாளருள்வாய்—வாடாது

சேய்துயரந் தன்னதுவாய்த் தீர்ப்பதற்க மாதரையிற்
றுய்துணையல் லாதொருவர் தாமுளரோ—பாய்விடைமேல்

ஏறுஞ் சிவாவனைவிட் டெவ்வுயிர்க்கு மன்னைபிதா
வேறுஞ் சிலருளரோ விள்ளுவாய்—மாறுகொடு

சீற்றத் தடித்தவற்குந் திண்சிலையான் மோதினற்குங்
காற்றைத்த தோலாற் கடிந்தவற்கு—மேற்றத்து

நல்கினாய் நின்கருணை நானறிவ தோவெளிதோ
வல்கியெனத் தன்னவய வங்கொண்டு—மல்கிசைக்கீ

தம்பா டிலங்கைத் தராபதிக்குந் தண்ணருள்செய்
நம்பாநின் றன்பெருமை நாகங்காண்—செம்பாதி

மைக்கண் ணுமையிடப்பான் மன்னவளர் வீரையா
வைக்கண் ணுவந்தழியா வாழ்வளிப்பாய்—செய்க்கண்

கமலந் திகழளகைக் கற்பகமே கண்ணே
அமலஞ் சிறந்தவெந்த மண்ணுல்—விமல

திருப்பாத மென்மனத்தே சேர்த்துக் களிப்பாய்
இருப்பாய்நீ நாளு மினி.

திருச்சிற்றம்பலம்.

அளகைக் கலிவெண்பா முற்றிற்று.

உ

சிவமயம்.

மகாகணபதே நம :

திருச்சிற்றம்பலம்.

அளகை வெண்பா மாலை.

காப்பு.

தேவிற் பொலியுளகைச் செம்மன்மே னுயடியேன்
பாவிற் பொலிதருவெண் பாச்சொல்ல—நாவிலயன்
தேவிநிதம் வாழவருள் செய்யுமே பெய்யுமத
மாவினடிச் செந்தா மரை.

நூல்.

சாக்கைதனில் வீரைத் தருமூலத் தேயிருந்து
தீக்கைதனி லேந்திவளர் செல்வத்தை—யாக்கையது
கோணித் திரைத்துக் குறுகுமுனங் கண்டேத்திக்
காணிக்கை யீதல் கடன் (1)

வந்திக்கு மாரன் மலர்தூவ மாதுமனம்
வெந்திக்கு மாமுலை விம்மியழு—மந்திக்கு
நேராயோர் மேனிகொண்ட நித்தா வளகேசா
தாராயோ கொன்றைமலர்த் தார். (2)

எத்தி மனைதோ றிரப்பான் பலதேவர்
அத்தி புனைவா னரவசைப்பான்—தித்தியெனும்
ஆட்டினு னங்கை யனலெடுப்பா னல்வேதப்
பாட்டினுன் வீரைப் பரன். (3)

சொற்கத்தா னீத்தமணித் தூசிகழு விக்கண்ணீர்
பக்கத்தே போடவிட்டுப் பாய்படுத்தாள்—சொக்கற்குத்
தூதத்தை யேர்தா டுயர்தீரச் சாக்கைபோய்
வாதத்தை யுய்யு மயில். (4)

பன்றிக் கறியளித்தார் பார்காணக் கண்ணப்பர்
மென்றுண்டார் காளத்தி மேயினு—ரென்றுபல
வோத்துளற வீரை யொருமுதலைப் பூச்சொரிங்தென்
ஏத்தும் படிநெஞ்ச மே. (5)

கட்டிக் கரும்பேகற் கற்கண்டே சர்க்கரையே
எட்டிக் கனியி லெனைநீத்தாய்—மட்டில்லா
தூற்றிற் கருணை யொழுக்குமள கேசதுயர்
மாற்றித்தா தாதா வரம். (6)

காலடிக்கு முத்திதருங் கஞ்சம்வேண் டாமெதொடு
தோலடிக்கு முத்திதருந் தோன்றலவன்—வேலைவரு
மாலமுண்டுங் காப்பா னளகைத் தனியடியர்
பாலனுண்டுங் காப்பான் பரிந்து. (7)

அன்றுசிலை யாயொருபெ ணுக்கினுன் றேடளகைக்
குன்றுசிலை யாக்கொண்ட கோமுன்றுன்—என்றினரும்
பல்லுக்குத்தான் பாலிப்பான் பச்சிலையிட் டாலுங்திண்
கல்லுகுத்தா லுந்தான் கதி. (8)

செந்தா மரையிற் றிருவுங் கலைமாதும்
வந்தா தரிக்க வரந்தருவாய்—இந்தார்
சடிலவள கேசா தனையரையுந் தாய்கை
விடிலுண்டோ வுய்யும் விதம். (9)

இன்னம் பிறவியுனக் கெய்துங்கா ணேழைநெஞ்சே
வன்னங் திகழ்முலையார் வாஞ்சைகொண்டா—லன்னஞ்சேர்
பூந்தா மரைத்தடஞ்சூழ் பொன்னளகை யம்மான்மேற்
காந்தாரம் பாடிக் களி. (10)

நாமடிமை வீரை நகராளி நந்தமக்குச்
சேமந் தருமாண்டான் றேரகமே—தீமலர்ந்த
கைதெரிக்குங் கூற்றிருந்த காறெரிக்கு மஞ்சமொடு
மெய்தெரிக்கு மெய்தெரிக்கு மே. (11)

பஞ்சரத்துப் பைங்கிளியைப் பாவிநான் றூதுவிட்டேன்
குஞ்சரத்துத் தோல்போர்த்த கோமான்பால்—வெஞ்சரத்து
மாரற்கு மாவாகி வஞ்சித்த தாய்வீரை
வீரற்குச் சொல்வாய் விரைந்து (12)

வில்வவனம் பேணாத வீணரையெம் வீரேசன்
செல்வ வடியார் சிரிப்பதல்லாற்—பல்கதிசேர்
நாலேழு கோடி நரகத்துங் காணிதருங்
கோலேறுந் தென்றிசையிற் கோ. (13)

இன்றிருப்ப தென்று மிருப்பதுவோ பாழ்மனமே
முன்றிருப்பா ரென்னங் குலையாதே—நன்றிருக்குஞ்
செங்கரத்தா ணீலவிழிச் சிற்றிடையா ளெம்மளகை
மங்கைகத்தா வைத்தினமும் வாழ்த்து. (14)

பூவேந்த ராயிப் புவனமெலா மாள்வதிலும்
பாவேந்த ராயிற் பயன்பெரிதா—லாவேந்துந்
தேவா வளகைச் சிவமேயென் பால்வாணி
தாவா திருக்கவரந் தா. (15)

வித்திருக்குங் கூழ்போல் விமலையுட னீயிருக்க
மத்திருக்கும் பாலாய் மயங்கினேன்—சத்திருக்கும்
மாசடையா தேவா வரதவெனும் வீரையம்மான்
மாசடையா தேயருள்செய் வாய். (16)

தூணிக்கண் ணீரென் சுதைசொரிந்து வாடவும்பால்
வாணிக்கண் ணீரென் மலரம்பான்—கோணிக்கின்
மைநீலம் போதரனை வாண்மனது வையளகை
யைநீலம் போதரனை யா. (17)

தாராயோ வில்வவனு தந்துசமன் செய்போரைத்
தீராயோ வஞ்சமேன் செய்கின்றாய்—ஆரேயோ
போலிருந்தா யென்னேயென் பொல்லா விதியோகல்
லாலிருந்தா யின்னே யருள். (18)

வாதுக்குந் தூர்த்த வழக்கிற்கும் வன்கொடிய
தீதுக்குங் கெட்ட செயலுக்குஞ்—சூதுக்குஞ்
அல்லாது கள்ளுக்கு மாமளகே சன்பணியிற்
செல்லார்கைப் பட்ட திரு. (19)

தாயாகி யெவ்வுயிர்க்குந் தண்ணருள்செய் வீரேசா
நோயா லுடன்மெலிந்து நொந்தேன்காண்—காயாமற்
பொல்லாப் பிணிவாட்டிப் போதசுகந் தாதாதா
நல்லா தரவளித்திந் நாள். (20)

சாந்தென் றனலரைத்துத் தாயப்பு வாள்பசும்பால்
மாந்தென்று தோழிவிடம் வாயிடுவாள்—சாந்திசெயப்
பன்னியழைத் தாளென்று பன்னளகைப் பண்டிதற்கு
மின்னிமழை பெய்மேக மே. (21)

இங்கிருக்கும் வேலை யினியே நியமவுமை
பங்கிருக்கும் வீரைப் பசுபதிதன்—கொங்கிருக்குந்
தாரிருக்குந் தோளிருக்கத் தண்டைவிம்மி யேங்குமலர்ச்
சூரிருக்குந் தாளிருக்கச் சொல். (22)

கல்லாக் கரிக்குமருள் காட்டாது காத்தொருபெண்
கல்லாக் கரிக்குமருள் காட்டியவா—வில்லார்க்கும்
மன்றுயரந் தீர்த்தாபெம் மானளகை வாழரசே
யென்றுயரந் தீர்த்தா ளினி (23)

சூதறியாய் தாய்க்கடங்கிச் சொற்கடவா பென்றெண்ணித்
தீதறியேன் சாக்கைதனைச் சேவிக்க—பாதரொடுஞ்
சென்றணவா யென்றேனென் செப்பென்றோ வீரனீ
இன்றணைந்தாய் பேதைமதி யே. (24)

கண்ணிற் சிறந்தகலை கற்றில்லான் கைப்பொருடான்
மண்ணிற் சிவலோக மாமளகை—பண்ணலே
தன்னுயிர்க்குந் தக்கார்க டம்முயிர்க்குங் கேடுதரும்
மின்னுயிர்க்கும் வாளையொக்கு மே. (25)

சிந்தா குலந்தவிர்ப்பாய் தீநெறியே ருயிடினும்
எந்தாய் பராமரித்த லேச்சாமோ—வந்தாள்வாய்
அன்மட்டு வார்குழல்சே ரத்தவள கேசவருள்
என்மட்டி லேனே விலை. (26)

ஆலைக் கரும்பமுத மாஞ்சொல்லி யெய்பேதை
வேலைக் கரும்பமர மென்கண்ணி—மாலை
விரும்புமனம் வேண்டாளிவ் வேளைவீ ரையா
இரும்புமனம் வேண்டா மினி. (27)

கோவணமு மோடுங் கொடுத்தடிமை கொண்டும்மற்
றுவணமுங் காட்டி யடிமைகொள்வார்—யேவலுக்கு
நாணுது தூது நடப்பா ரளகையரன்
ஏணருஞ் செய்கை யிது (28)

கல்லாது நல்லா கமந்தன்னை மெய்நெறியிற்
செல்லாது பாவந் திரட்டியே—பொல்லாப்
பவத்துக்கங் கொண்டுழலும் பாரீ ரளகைச்
சிவத்துங்குத் தொண்டு செயும் (29)

வெந்தறுகண் வேழ மிசைப்பொலிந்து வாழ்ந்தாலும்
வந்துறுமே சண்டனமர் வன்னெஞ்சே—சிந்தனைசெய்
சாக்கைதனை முக்கட் டனியை யவர்தருவார்
ஆக்கை தளரா வருள் (30)

வானுகம்பா தாலமெலாம் வாழ்த்துமுதல் வீரையிலம்
மானுகம்பார் வீதியுலா வந்தானுற்—பானுகம்பா
வெங்கானை யட்டதிரு வேங்கடமால் காணுத
சங்கானென் றாதிருச் சங்கு (31)

காமக் களைகளைந்து காதனீர் சிந்திமனச்
சேமப் பழனந் திருத்தியே—வாமப்பெண்
ஆதரித்த முக்க ணணிகரும்பை நட்டகமே
ஏதமற்றுச் சாக்கை யிரு (32)

கைவே லெடுத்துக் கடுகியொரு மாபுண்ணீர்
மைவேலை போலொழுக்கி வந்ததுண்டோ—நைவேனைத்
தாங்குமா வீரைத் தடத்திலிரு மேருசுமந்
தேங்குமா லெய்த்தவிடை யீர் (33)

நாரணற்கு நான்முகற்கு நான்மறைக்கு நாடரிய
பூரணற்கு நாமடிமை புன்னெஞ்சே—காரணங்கேள்
அச்சிதா மென்றுலகை யாக்கியழிக் குமளகைச்
சச்சிதா நந்தனவன் றான் (34)

மத்தகத்தீக் கண்ணன் மதனைப் பொடிசெய்த
வித்தகனைக் குத்திரர்பான் மேவானை—யுத்தமருள்
வாழ்வானை வீரை வளர்வானை யெம்மகந்தை
போழ்வானை நெஞ்சே புகல் (35)

போதிருக்கும் புத்தேளும் பூவைவணப் புத்தேளும்
ஆதிருக்குங் காணா வளகையான்—மாதிருக்கும்
பாகத்தான் றில்லைப் பதிவாழுங் கூத்தனங்கி
யாகத்தான் றானே யரண் (36)

குன்றாப் பெருவலிசேர் குஞ்சரத்தோல் போர்த்துமணி
மன்றாடுஞ் சைவ மணிதன்னை—யன்றாலம்
உண்டானை வீரை யுமைகோனை யெம்பணியுங்
கொண்டானை நெஞ்சே குறி. (37)

கையடுத்த வெண்டலையுங் காலடுத்த கிண்கிணியும்
மெய்யடுத்த தீவண்ண மேன்மையொடு—மையடுத்த
கண்டமுங்கண் டொப்புக் கழறுவார் வீரேசா
விண்டயனை யந்தோ விதி (38)

தேன்பாயுங் கொன்றைத் திருச்சடையி னீளரவுங்
கூன்பாயும் வெண்பிறையுங் கூடுமா—லூன்பாயுஞ்
சூலத்தர் வில்வவனஞ் சூழத்த ரெண்ணரிய
தோலத்தர்க் கேயாங் குடி (39)

சங்கத் தமிழத்தர் சாக்கைநகர் வாழ்முத்தர்
மங்கைக் கருளத்தர் மாமலேமே—லெங்கைக்கிங்
காயசத்தைத் தீர்க்கு மனேயேபொற் ருர்க்கொன்றை
பாயசத்தைத் தீர்க்கிற் பழி (40)

அம்பலத்தா னந்தநட மாடிகரு மாவுரித்த
கம்பலத்தான் வீரைக் கடவுளென் றன்—பம்பலற்ருன்
எட்டி விருமறைக்கு மெட்டாம லெஞ்சிநிற்பான்
மட்டில் கொடும்பவத்தை மாய்த்து (41)

மாறன் மகளே மணந்தணிதார் வேம்பணிந்து
கூறம் புவியைக் குளிர்வித்தான்—நீறணிந்து
பொற்புண்ட ரீக புரத்தாடும் வீரையரன்
நற்புண்ட ரீகத்தா ளுடு (42)

கோலஞ்செய் தான்மயக்கங் கொண்டுயிர்த்தா ளென் றுமணக்
கோலஞ்செய் தானளகைக் கோமான்பாற்—கோலஞ்செய்
திட்டமுலே முத்தார மிட்டிடுவேன் வன்மதனேச்
சுட்டடுவீ ரென்றவர்பாற் சொல் (43)

ஆக்கை தளராமு னன்புகொடு சாக்கைத்துப்
பூக்கை யெடுத்துப் புகழ்பேசிச்—சாக்கைவலம்
ஏகா யருச்சிப்பா யேழைநெஞ்சே பாழ்த்தவினே
ஆகா மருட்சி யறும் (44)

திரைகொழிக்குஞ் சங்குடைப்பத் தேனூற் றும் பண்ணே
விரைகொழிக்கும் பைங்கழைசூழ் வீரை—வரைகுழைத்த
நந்திப்பேர் நாயகனே நான்றழுவ வானேறே
வந்திப்பேன் கொண்டோடி வா (45)

தேன் பிடித்த பூங்கொன்றைத் தேவாநின் செம்மலர்த்தாள்
நான்பிடித்தே னெள்ளாம னன்கருள்வாய்—மான்பிடித்த
மாறலேயும் வாணிதலே வன்றலேயுஞ் சேர்த்தாடும்
ஆறலேயுஞ் செஞ்சடைவீ ரா (46)

எச்சிலுண்ட பித்தனையே னிச்சித்தாய் நச்சரவம்
உச்சிநின் று வல்விடத்தை யூற் றுமே—பிச்சியடி
கண்டத் திருக்குமது காலாந் தகன்வீரை
கண்டத் திருக்குவிட்டுக் காண் (47)

கஞ்சத்தான் றீப்பிறவிக் கார்க்கடலி லாழ்த்தாமல்
நெஞ்சத்தா னைந்துருகி நீநினைவாய்—அஞ்சத்தான்
கூற்றுதைத்தா னனந்தக் கூத்தி றுத்தான் வீரையில்வெள்
ளேற்றுகைத்தான் பேரெழுத்தைந் தே (48)

குற்றம் பொறுத்தடிமை கொண்டெந்தா யாதரித்துச்
சிற்றம் பலவளகைத் தேசிகா—இற்றென்னை
இம்மா நிலம்பேயென் றேசப் புலனடைத்துச்
சும்மா விருக்குநெறி சொல் (49)

கும்பிட்டா என்னநினைக் கோகிலமே கூன்கருப்பில்
அம்பிட்டான் றன்னை யழையாதே—வம்பிட்ட
மாதனத்தி வீரை வளர்மகிய முண்டுமிழ்ந்த
கோதனத்திக் கத்தலடங் கு (50)

வண்டிருக்குங் காந்தண் மலர்விரிந்து மல்லிகைப்பூச்
செண்டிருக்கு நீலியொரு செம்பாதி—கொண்டிருக்குங்
காணாத வீரைக் கபாலிபுயத் தார்கொடுவா
பூணா நிற்கிடுவேன் போ (51)

ஆறுபத்து நாலுவினை யாட்டுடையா மார்க்கண்டர்க்
காறுபத்து வாழ்நா ளளித்தசிவா—கூறுபத்து
வத்திரனுக் கும்மருள்செய் வள்ளாலுன் சீர்த்திசொல
எத்திறனுன் வீரை யிறை (52)

உள்ளிற் சிவானந்த மூறுமே நஞ்சிறுமை
தள்ளிப்பே ரின்பந் தருமரோ—வெள்ளிமலைப்
பித்தன்மா தேவன் பிறைசூடி வீரையுமை
யத்தன்மால் காணு வடி (53)

திங்கணுத லார்விழியிற் சிக்கிமனம் வேருகி
அங்கந் தளர்ந்தே னளகேசா—மங்கையொரு
பாகாவெண் ணீற்ருய் பரமேட்டி வெள்ளைவிடைப்
பாகா கடைக்கண்ணுற் பார் (54)

கண்டாற் பழவினைபோங் கைகுவித்துக் கால்வலந்தான்
கொண்டாற் பரலோகங் கூட்டிவைக்கும்—பண்டாரம்
வெண்டலையு மென்பு மிலைந்தாடும் வீரையரன்
வண்டலையும் பூந்தாண் மலர் (55)

மையழித்து நீரூற்றி வாட்கண் பொருந்தாட்கு
மையழித்து நோய்தீர்க்க வாய்க்குமோ—மையழுத்துங்
கார்க்கண்டர் வீரைக் கபாலிபுயத் தார்வேண்டிற்
றீர்க்கலா மன்னை தெளி (56)

உற்றவகு ளத்திருக்கு மொற்றியப்பா வெம்மளகை
நற்றவகு ளத்திருக்கு நாதனே—கற்றவர்சேர்
சங்கமது ரைப்புலவா தண்டமிழை நாயேற்குச்
சங்கமது ரைப்புலவா தா (57)

தெளியா தலமந்து தேடுவார்க் கெட்டார்
ஒளியாய் மதியா யுயிராய்—வளியாகி
மண்ணு யனலாய் வனமாய் வெளியாகி
யெண்ணுய வீரை யிறை (58)

தாதாதா தீதீதீ தாயனுத்தா ணனனுத்தேன்
வேதாவுங் கைசலித்தான் வீரைவளர்—நாதாபுன்
பாதகம லங்காட்டிற் பஞ்சிற் படுநெருப்பிற்
பாதகம லங்காட்டிப் பார் (59)

பொற்கல்வி ஞரணனைப் பூட்டிப் புரம்பொடித்தாய்
பற்கல்வி யென்றைப் படர்செய்தா—யற்கல்வி
கூடிக் களிமதியங் கூட்டியுயிர் வீட்டாமுன்
கூடிக் களியளகைக் கோ. (60)

சேலாடுங் கண்ணிதனைச் செம்பாதி வைத்தமெய்யா
சூலாடுங் கையா சுடர்மணியே—மாலாயுர்
பாதா வளகைப் பரமேட்டி தாகூற்றை
வாதாடி வெல்லும் வரம். (61)

இந்தூருஞ் செஞ்சடையா வீசா வளகேசா
செந்தூரன் றந்தையாஞ் சேவேறி—நந்தூருங்
கைக்கிளியெங் கன்னிமகள் கற்பழித்தா யான்மணந்து
மைக்கிழியா வைத்து மகிழ். (62)

அம்பொற் கிழியவிழ்க்க வந்தணர்க்குச் செந்தமிழ்ப்பா
தம்பொற் காத்தெழுதித் தந்தசிவா— துன்பகலத்
தாதா வளம்பலவுந் தாதாநீ தாநடன
பாதா வளகைப் பரா. (63)

வாதிட்ட கூற்றுவனை மார்க்கண்டன் பூசித்துப்
போதிட்ட காலாற் புடைத்தசிவா—காதிட்ட
பாப்புங் குழையா பழியஞ்சி வில்வவனு
தீப்புக்கு நோய்மாளச் செய். (64)

நாரணற்கும் வேதனுக்கு நாடரிய சோதியுருப்
பூரணனை வில்வவனப் புண்ணியனை—ஆரணமும்
ஆகமமு மாக்கிவழி யாயிரஞ்செய் தாண்டானைச்
சோகமற வாழ்த்தித் துதி. (65)

சம்புசிவ னைந்துமுகன் சங்கரன்மா தேவனரன்
அம்புமலி செஞ்சடைய னதிபரன்—தும்புருவும்
நாரதனுந் தொட்டிசைக்கு நன்னரம்பிற் கூட்டுபுகழ்ப்
பூரதனெம் வீரைப் புதன். (66)

பாடும் பணிமின் பதத்தொண்டி னேர்ந்துகைப்பூச்
சூடு மணிமின் சுருதிமுடி—யாடும்
பெருமானை வில்வவனப் பெம்மானை யோங்கல்
மருமானை யுள்ளத்தே வைத்து. (67)

அன்னப்பு ளேந்து மயனைச் சிரங்கொய்த
என்னப்பன் வீரை யிறைவனையே— தன்னொப்பில்
செந்தமிழ்ப்பாப் பாடித் தினம்புகழ்மி னச்சிவனார்
உந்தமக்குச் சொந்த முறும் (68)

கானேறுங் கொன்றைதனைக் கைவிடார் போலுமினி
ஆனேறும் வீரையா னாகெட்டேன்—மீனேரும்
மைக்கண் டுயிலாடன் மாமுலைமேன் மாரனம்பு
தைக்கவினை சூழ்ந்தனவே தான் (69)

வெள்ளன்னந் தூதுரைக்கும் வீரைவனத் தார்வருவார்
கொள்ளன்ன மென்றிச்சை கூறினையென்—எள்ளன்னம்
நேசந் தனைமறந்தாய் நேரிழைநீ சென்றுமலை
வாசன் றனையழைத்து வா (70)

சிற்றம் பலமணியே செம்மலள கேசாவென்
குற்றம் பலபொறுத்த கோமானே—பெற்றமிவர்
தேவாமெய் வீடுமநாட் சித்தத் துனையிருத்தித்
தாவாவெண் ணீறிடவே தான். (71)

காராழி வண்ணத்தார் கண்ணிட் டருச்சிக்க
வோராழி தந்த வுமாபதியைப்—பாராதி
அண்டமெலாந் தம்முருவ மானாரை வீரையிற்போய்த்
தெண்டமிடு முண்டாந் திரு. (72)

பாட்டுக் குவந்து பரிசளிப்பா ரம்பலத்தில்
ஆட்டுக் குகந்த வளகேசர்—வேட்டொருநாள்
வந்திரவிற் கூடி மகிழ்ந்தா ரெனைமறந்தார்
தந்திரமென் வாதுரைக்கத் தாய். (73)

படநாகப் பூணணிந்து பாய்ச்சற் புலியுங்
கடநாக மும்முரித்துக் கட்டி—யுடனாகத்
தோகை மயிலாடத் தொந்தோமென் றுடியொரு
வாகைபுனை வார்வீரை மன். (74)

ஈசாசர் வேசா விறைவாவெஞ் சாக்கைநகர்
வாசாசொல் வன்மைதரு வாய்வள்ளால்—தேசார்நூல்
கற்றறியே னுசாரங் கைவிட்டே னின்பெருமை
சற்றறியே னுன்ருள் சரண் (75)

பானுறுஞ் சொல்லியுமை பாக னளகேசன்
தேனுறுங் கொன்றைத் திருத்தாரை—யூனுறும்
வாளாலே தாளெறிந்தால் வாங்கலாங் கண்மணிநீ
மாளாதே போக்கு மயல். (76)

அஞ்செழுத்தை யோது மடியார் முடித்திங்கட்
பிஞ்சழுத்தித் தன்மயஞ்செய் பித்தனர்—நஞ்சமுத்துங்
கந்தாத்த ரெல்லாஞ்செய் கர்த்தாறி கன்னெஞ்சே
வந்தாற்றி வீரை வளே. (77)

சேவிக்க வந்தா டியங்கிமனம் வேருனுள்
ஆவிக்கு மோசமிக வாச்சுதுகாண்—நாவிக்கண்
வஞ்சமறி யாள்கூடி வாழ்க்கைகொள் வில்லவனு
எஞ்சுபழி யேருமலே. (78)

சங்கு குழையாகுஞ் சர்ப்பங்கள் பூணுகும்
எங்க ளளகை யிறைவருக்குப்—பொங்குகடல்
நஞ்ச மமுதாகு நாட்டமுன் ருகுநெஞ்சே
வஞ்சமிலார் தாளே வளே. (79)

வளேயிட்ட கைமானே வாமத்தில் வைத்துத்
தளேயிட்ட வன்புடையார் சாக்கை—யுளேயிட்டார்
வீதியடுத் தார்மின்னே வேட்டிடுவார் மாவென்று
தாதியெடுத் தூதுதிருச் சங்கு. (80)

பெத்தான்சாம் பானுக்குப் பேதமற வீடுதவ
வித்தார மாயெழுதி விட்டசிவா—பித்தாவென்
ருேலமிட்டு வீரைவல முற்ருர்க்கப் பெற்றியான்
சாலப் பரிந்து தரும். (81)

மையழித்துக் கண்ணீர் வடித்துமயல் கொண்டேங்குந்
தையலுக்கு நோய்தீர்க்கத் தாயேநீ—மையழிக்கிற்
பாவமிகும் வீரைப் பசுபதிபாற் கொன்றையிரந்
தாவனோய் தீர்த்த லறம். (82)

பாணர் குறைதீரப் பங்கயற்கெட் டாமுடியில்
மாண விறகெடுத்த மாதேவன்—யாணர்த்
திருவடியைச் சிந்தித்துச் சேவித்தேன் வீரைத்
தருவடியிற் கண்டு தக. (83)

எழுதா மறைகளுக்கு மெட்டாத தாளைத்
தொழுதாரன் றேபிறவி தோயார்—விழுதாருஞ்
செஞ்சடையார் தேவியுமை சீறடியை யேத்திக்கண்
பஞ்சடையா முன்னே பணி. (84)

தோன்றும் பொருள்யாவுஞ் சொப்பனமா நீர்க்குமிழி
போன்றழியு நெஞ்சே புகலக்கேள்—சான்றுமுடி
மன்னரையுந் தேவரையு மாய்வித்த கூற்றிறுத்தான்
முன்னவனும் வீரை முதல். (85)

எப்பொருளு மிக்க வெளிதாகும் பாழ்மனமே
முப்பொருளாம் வீரை முதற்பொருளை—ஒப்பில்லா
அப்பா வரசேயென் னாருயிரே யென்றுருகி
முப்போதும் பூசை முயல். (86)

பார்த்த னடிக்குப் பரிந்து மனங்குழைந்த
தீர்த்த னளகைச் சிவனன்றே—ஆத்திகர்க்கு
வேதந் தனிற்சிறந்த மெய்யா கமம்புகன்று
போதம் புணர்த்தும் புகல். (87)

அன்னந் தனைவிட்டா ளாரணங்கு துட்டமதன்
பொன்னங் கிரிதுளைத்துப் பூசலிட்டா—னென்னவிரைந்
தாருரைப்பார் சாக்கைநக ரண்ணலார்க் கென்றுணங்கல்
சாருரைக்குந் தூதுபயந் தாய். (88)

வார்முரசீ ராயிரங்கை வாணன் வளைதடியால்
ஆர்கலியின் ருழ்ப்ப வறைபொலிபோய்க்—காரொலியின்
மேலோங்கும் வில்வவன மேவியா னார்தாளின்
பாலோங்கு மன்பு பதி. (89)

அஞ்சக் கரமோதி யன்புருவா யாழிவரும்
நஞ்சக் கரமுண்ட நாயகனை—மிஞ்சக்கம்
பூண்டானைத் தோலுடுத்த புண்ணியனை வீரைவனத்
தாண்டானை நாவே யறை. (90)

காம்பாய தோளியுமை காதலனெம் வீரையரன்
தேம்பாயுங் கொன்றைத் திருச்சடையான்—பாம்பாய
பொற்பணிபூண் டென்கட் புலனாகி யாட்கொண்டான்
எற்கினியா ரொப்பா ரிவண். (91)

முத்திதனை நாரைக்கு முன்கொடுத்த தென்மதுரைச்
சித்தராம் வில்வவனச் செம்மறினங்—தத்திமிதா
என்றுநட மாட விடந்தருமா லென்னெஞ்சில்
இன்றுவினை சேர்தற் கிடம். (92)

நிலையில்லாச் செல்வத்தை நீடுநினைந் தந்தோ
வலையிற் படுமானின் மாழ்கி—யலைநெஞ்சே
மைப்புயல்சூழ் சொன்ன மதில்கிடக்கும் வீரையினம்
வைப்பிருக்குச் சற்று வளை. (93)

கோதண்டம் பொற்சிலையாங் கோதிருமா லாம்வெள்ளி
வேதண்ட மேவுகுடின் மேவலரை—மாதண்டஞ்
செய்து சிரித்துத் திரிபுரத்திற் றீயிட்ட
அய்தளகை யீசற் கறி. (94)

சித்திரப்பா வைக்கூட்டுஞ் செய்யதமிழ்ப் பாவலர்க்கு
மித்திரப்பா வைக்கூட்டும் வித்தகா—அத்திரப்போர்
காட்டுமதனைச்சுட்ட காமாரி வில்வவனா
வேட்டுமயல் போக்கி விடு. (95)

சொல்லறிபு ளேந்துகரச் சுந்தரிதோய் சுந்தரனை
வல்லரியின் றோலுடுத்த மாபரனை—நல்லறிஞர்
போற்று மளகைப் புராந்தகனைப் போற்றிச்சீர்
சாற்றுமவர்க் குண்டாஞ் சரண். (96)

தந்தை யடிப்பதுவுந் தன்கருணை யாமேழை
அந்தவகை பட்டயர்ந்தே னுசிவமே—மைந்தனிடர்
போக்கியாள் சாக்கைநகர்ப் புண்ணியா மாவேத
வாக்கியா தாதா வளம். (97)

அந்தி பகலா யடைக்கலம்புக் குன்மலர்த்தாள்
சிந்தனைசெய் தேனளகைத் தெய்வமே—முந்தைவினைப்
பாழுநோய் மெய்யிற் படர்செய்வ தாற்றுகிலேன்
சூழுமா தந்தாள் சுகம். (98)

ஊமன் கனுவொப்ப வுன்புகழ்யான் சொல்லகிலேன்
சாம முரைத்துத் தடுமாறு—மேமநெடுங்
கோதண்டா வெம்மளகைக் கோவே புலனுணர்ந்து
தீதண்டா தோதவருள் செய். (99)

மாவுகைத்துக் கூடறனில் வந்தவழ கைக்காணப்
பாவுகக்குஞ் சொல்லி பதறுகிறாள்—சேவுகைத்த
தேவா வளகைத் தெருவின்மா வேறியின்றே
வாவாரங் கொண்டுய்கு வாள். (100)

உப்பில்லாக் கூழ்போலு முன்பெருமை பேசாது
செப்புந் தமிழ்ப்பாக்க டெய்வமே—எப்படியும்
ஓதாமற் கேளாம லூமைசெவி டாகவரங்
தாதாநீ தாவீரே சா. (101)

திருச்சிற்றம்பலம்.

அளகை வெண்பாமாலை முற்றிற்று.

உ

சிவமயம்.

மகாகணபதயே நம:

திருச்சிற்றம்பலம்.

அளகைச் சிலேடை வெண்பா.

காப்பு.

அளகைச் சிலேடை யருந்தமிழாற் பாடப்
பளகையறுத் தெற்கருள்செய் பண்பாய்த்—தளமடியிற்
சிந்துங்கை யார்வினையைச் சிந்திமலே வாழ்வுதவ
முந்துங்கை யானை முகா.

நூல்.

தாரணிவான் போற்றுமுமை தையலா ரூடியெறி
யாரணிவா மஞ்சூ ழளகையே—நீரணியார்
பொற்கொன்றை யீவார் புரிசடைவைப் பாரெளிய
வெற்கொன்றை யீவா ரிடம். (1)

நஞ்சார்கண் ணிடைக்கு நாடுநதன் மென்னடைக்கும்
அஞ்சா னனஞ்சொ லளகையே—தஞ்சார்கை
அந்தங் குழையா ரவோ டரவஞ்செய்
நந்தங் குழையார் நகர். (2)

பங்கமிலாச் செல்வரகம் பாம்பார்த்த வேணியிடம்
அங்கமலே மேவு மளகையே—செங்கரவில்
வேழமுரித் தானுக்கி வீயப் பொடித்தொருநாள்
வேழமுரித் தானுக்கின் வீடு. (3)

வர்க்காரு நீர்த்தடமும் வானேபா யும்பணையும்
அக்கார மாரு மளகையே—திக்காடைக்
கட்டுருவா ரீசங் கமழடியர் செஞ்சடையர்
எட்டுருவா ரீச ரிடம். (4)

கொம்பனையார் கண்ணகையுங் கொண்முதல்செய் வாணிகரும்
அம்பார மாக்கு மளகையே—சம்பாதி
கங்கைக் களித்தார் கமழ்சடைக்குச் சேர்த்தார்மெய்
மங்கைக் களித்தார் மனே. (5)

செப்பரிய வன்புவைத்துஞ் சேவடியிற் கண்வைத்தும்
அப்பண் ணவர்வாழ்த் தளகையே—தப்பரிந்த
பத்தரவஞ் சேர்க்கார் பசுபதிமா யோகிமணிப்
புத்தரவஞ் சேர்த்தார் புரி. (6)

வஞ்சக் கரவில்லார் வாயுமிளை யார்தனமும்
அஞ்சக் கரஞ்சொ லளகையே—துஞ்சக்
கரனையிடந் தந்தவிலங் கைக்கோனை வென்ற
கரனையிடந் தந்தவிலன் காப்பு. (7)

வஞ்சந் தொலைத்தரசர் வாளதனை மாதவனை
அஞ்சலத்திற் காக்கு மளகையே—கஞ்சமுதல்
அஞ்சுமலர் கண்டனங்க னுவிகுறைத் தானலையின்
நஞ்சுமலர் கண்ட னகர். (8)

சங்கத்தான் செங்கமலன் சந்தத் தமிழ்ப்புலவர்
அங்கத்தார் வேயு மளகையே—வங்கத்தார்
கொங்கணத்தார் வாள்வாங்குங் கோப்பாண்டி யாண்டபணிக்
கங்கணத்தார் வாழுங் கதி. (9)

தாக்குமனத் தாசை தனைநெருப்பில் வேய்ங்குழலில்
ஆக்குவித்தார் நாடு மளகையே—தீக்குழுமு
கையா னனத்தான் கழிதலையிற் சோறிரக்கும்
ஐயா னனத்தா னகம். (10)

நித்தமலர் வேங்கைகளும் நீடெருவி னித்திலமும்
அத்தஞ் சொரியு மளகையே—பத்தருக்கா
வேடுவரைத் தாங்கினர் வீரையடி மூலங்கல்
வேடுவரைத் தாங்கினர் வீடு. (11)

வாம்பற் றழைகொய்தும் வான்பனையிற் பாண்செய்தும்
ஆம்பலரி மாவுண் ணளகையே—கூம்பலரைப்
பன்னரகஞ் சேர்ப்பார் பதம்பணிந்த தொண்டரையு
நன்னரகஞ் சேர்ப்பார் நகர். (12)

பம்போத வாவிகளிற் பாவையர்கள் வேற்கண்ணில்
அம்போ தனஞ்சா ரளகையே—வம்போதிச்
செங்கழுவி னார்சமணர்ச் சேர்த்தார்க்குத் தந்தையென்னச்
சங்கழுவி னார்வாழ் தலம். (13)

பொச்சமிலா வன்பருக்கும் பூவையர்பாற் சுந்தரற்கும்
அச்சந் தடுக்கு மளகையே—மச்சைமலி
ஒட்டினான் சேவலத்த னோர்தந்தை வையத்தோர்
ஒட்டினான் சேவலத்த னூர். (14)

மைந்தர்கை யீகையினான் மாதர்தோண் மாட்சியினால்
ஐந்தருவே யொக்கு மளகையே—சைந்தவமாக்
காட்டினரி தந்தார் கடையேனைத் தொண்டரொடுங்
கூட்டினரி தந்தார் குடி. (15)

பஞ்சடியார் மென்னடையும் பைம்பொழிலிற் கீசகமும்
அஞ்சம் பயிலு மளகையே—செஞ்சடையில்
மாகீச ரன்றளித்தார் வாண்மதியங் கங்கைவைத்தார்
வாகீச ரன்றளித்தார் வாழ்வு. (16)

நந்தமருஞ் செய்க்கழுநீர் நாரியர்முத் தாரமுலை
அந்தமத நாறு மளகையே—தந்தமத
வாரணத்தா னத்தன் மலரவன்மா ளாமனஞ்சப்
பாரணத்தா னத்தன் பதி. (17)

நஞ்சுமன நல்லோரு நல்லார் மொழியிடையும்
அஞ்சுகநா லோது மளகையே—மஞ்சுரகங்
கண்டங் கரியவரன் கார்வண்ண னண்டரயன்
கண்டங் கரியவரன் காப்பு. (18)

மிக்க தனவந்தர் மேற்றளமும் வீதிகளும்
அங்கமணி செய்யு மளகையே—தக்கற்
கசத்தலையி யும்பரம ராட்டியர்பா லெற்குக்
கசத்தலையி யும்பரமர் காப்பு. (19)

கம்புகளத் தார்தனமுங் காவலர்பாற் போர்மகளும்
அம்புயமே லாடு மளகையே—வெம்புவினை
எய்தா தரித்தா ரெளியேற்கு நல்லருளே
செய்தா தரித்தார் திணை. (20)

கச்சந் திகழரன்காற் கன்பினருங் காவகமும்
அச்சந் தவிரு மளகையே—பிச்சுருவங்
கொண்டன்ன மேந்தி கொழுப்படர்ந்த வெண்டலையிற்
பண்டன்ன மேந்தி பதி. (21)

கம்போத வாவிகளிற் கற்றவர்கள் சூழ்சபையில்
அம்போத மாரு மளகையே—சம்போவென்
றேத்துப் பயில்வா னிருமறைக்கெட் டான்பொதுவிற்
கூத்துப் பயில்வான் குடி. (22)

கட்டுழவர் தீங்கரும்பைக் காவலர்கள் வன்பகையை
அட்டுச் சயஞ்செ யளகையே—கொட்டுக்கூ
டையை யடைத்தார் டமரகஞ்சேர் தங்கரத்தார்
வையை யடைத்தார் மனை. (23)

உத்தமநூல் கற்றோரு முப்பரிகை வீடுகளும்
அத்திரிபோ லோங்கு மளகையே—கத்திரிநேர்
காதனரன் வில்லாற் கடியவருள் செய்தவன்பூம்
பாதனரன் வில்லார் பதி. (24)

சையமுலை யார்காமுந் தாபதர்கண் மாமெய்யும்
ஐயம் பொழியு மளகையே—செய்யம்பு
சந்திகழச் செல்விபுரை தையலிட னள்ளிருளிற்
சந்திகழச் செல்விபுதர் சார்பு. (25)

ஆலென் விழியா ரகடு மவர்தனமும்
ஆலென்ன லாகு மளகையே—மேலென்னுந்
தூயவுரு வானார் துரிய ருமைபாதி
பாயவுரு வானார் பதி. (26)

நம்பன் முடிமேலு நாகந் தொடுபொழிலும்
அம்பணைநின் றாடு மளகையே—செம்பதுமன்
அஞ்சக் கரத்த னமரேந் திரன்வணங்கும்
அஞ்சக் கரத்த னகம். (27)

வஞ்சியர்கண் முன்கரத்தின் மன்னர்சிரா ராடுகளத்
தஞ்சுகங்க ணொரு மளகையே—கஞ்சிருஞ்
சோத்துக்கு வந்தார் துகள்படச்செய் தாரையப்
பாத்துக்கு வந்தார் பதி. (28)

நீதிசா ரங்கற்று நேரிழையார் சிற்பர்சேப்
ஆதிசா ரங்கல் லளகையே—பாதிசார்
வெண்ணிலவங் கொன்றையார் வேணியார் பாணியார்
தண்ணிலவங் கொன்றையார் சார்பு. (29)

விஞ்சுமனு வாய்ந்தோரு மிக்கபொருள் பெற்றோரும்
அஞ்சுகர மாற்று மளகையே—மஞ்சுதவழ்
வெள்ளச் சடையார் விமலரடி தந்தென்னை
யெள்ளச் சடையா ரிடம். (30)

சம்பாஞ்சூழ் திண்மதிலுஞ் சங்கிராமர் தம்புயமும்
அம்பரத்துக் காக்கு மளகையே—கொம்பருறை
காரியுருப் பெற்றார் கருணைக் கடலர்த்த
நாரியுருப் பெற்றார் நகர். (31)

சிந்திமல ரன்புகொடு சேர்ந்தாரு மந்தணரும்
அந்திகர மாற்று மளகையே—வந்திதரும்
பிட்டுக்கு வந்தார் பிரம்படிபட் டந்தோமண்
வெட்டுக்கு வந்தார் விபு. (32)

தெள்ளிமலர்ச் செந்தேனைத் தீங்குசெய்த வேடுவரை
அள்ளியளி யூற்று மளகையே—வெள்ளிமலைச்
சீமா னிருக்குந் தினம்பரவித் தேடரிய
கோமா னிருக்குங் குடி. (33)

வாரம் பெருக்கி மணந்தாரும் வல்விலங்கும்
ஆரந் தரிக்கு மளகையே—தாரந்தம்
மெய்ப்பாதி வாழ்க்கைகொண்டும் வேறாகா தொன்றான
வைப்பாதி வாழு மனை. (34)

வித்தகர்போற் பைங்கிளியும் விண்கதுப்பா ரொண்கதுப்பும்
அத்தம் பகரு மளகையே—சித்தசனை
வாட்டுந் திருக்கரத்தர் மாமதுரை வீதியின்மா
ஓட்டுந் திருக்காத்த ரூர். (35)

வம்பரிந்த வாசகர்க்கு மாதங்க வார்சிலைக்கும்
அம்பரிமே லுந்து மளகையே—கும்பசம்ப
வன்வாரி யுண்டான் வணங்குந் தனிநஞ்சம்
மன்வாரி யுண்டான் மனை. (36)

ஆரியர்கள் பாவலர்க்கு மாராமந் தும்பிகட்கும்
ஆரங்க ணல்கு மளகையே—ஏரகனும்
வீரைச்செந் தூரிருந்தான் வேழந் தனைப்பயந்தான்
வீரைச்செந் தூரிருந்தான் வீடு. (37)

கோலமுலை யுங்கண்ணுங் கோதையர்க ணீள்காமும்
ஆலத்தி காட்டு மளகையே—பாலத்தீ
ஏவிப் புரம்பொடித்தா ரேமநெடு வில்லெடுத்து
மேவிப் புரம்பொடித்தார் வீடு. (38)

படியிற் பதஞ்சலிக்கும் பாவலர்பா விற்கும்
அடியெடுத்துக் காட்டுமள கையே—செடிதவிர்ப்பான்
கோட்டுருவங் காட்டுவான் கூடி வழிபறிக்க
வேட்டுருவங் காட்டுவான் வீடு. (39)

திங்கண்முடி யார்களமுந் தீத்தொழில்செய் பூரியரும்
அங்கதகுஞ் சேறு மளகையே—தங்கநெடுங்
குன்றந் தனைவளைத்தார் கொள்ளரிடந் தீமடுத்தார்
மன்றந் தனைவளைத்தார் வாழ்வு. (40)

வீதிசா ரந்தணரும் வேட்டமிகு வேடுவரும்
ஆதிமூ லங்கல் லளகையே—சோதிமயன்
பூண்டரங்க வார்புவியும் பொன்னுலகும் போற்றநின்ற
பாண்டரங்கன் வாழும் பதி. (41)

கும்பமுலைக் கொம்பனையார் கூர்விழியுங் கோநிரையும்
அம்புசத்தி நாடு மளகையே—கம்பர்வரி
கஞ்சி குடியார் நடுத்தின்பார் கங்கைமலை
வஞ்சி குடியார் மனை. (42)

வஞ்சம் புடைவீக்கி மாவேந்தர் மாதவர்கள்
அஞ்சலரை வாட்டு மளகையே—தஞ்சொருநை
காட்டும் வரதமொரு கைகாட்டும் பல்கதியும்
நாட்டும் வரத னகர். (43)

முத்தநகை யார்தனமு முச்சந்து கூடிடமும்
அத்தர் மணங்கூ டளகையே—பத்தரெறி
கல்லுக் குவந்தார் களித்தொருநாட் பார்த்தனெடு
மல்லுக்கு வந்தார் மனை. (44)

மந்தரநே ராமுலையார் மைவிழியுங் கைவிரலும்
அந்தங் குழையா மளகையே—நந்திசிவன்
சேனைகம் பூண்டார் சிரநாகஞ் செந்தழலாங்
கோணைசம் பூண்டார் குடி. (45)

துங்கத் தலைகொய்துஞ் சுட்டுப் புரம்பொடித்தும்
அங்கசனைக் காய்ந்த வளகையே—செங்கற்பொன்
மாற்றுக் கெடுத்தார் வழுவா துரைத்தார்தாள்
கூற்றுக் கெடுத்தார் குடி. (46)

விஞ்சு மயற்றூர்த்தர் மெய்யு மதிற்கொடியும்
அஞ்சம்பு தோயு மளகையே—சஞ்சிதத்தை
வீட்டியிதந் தந்துவினை மேவாது நன்னெறியிற்
கூட்டியிதந் தந்தான் குடி. (47)

முப்புரத்தில் வெள்விடையாய் முற்கூடல் வாதவராய்
அப்பரிமே லானா ரளகையே—திப்பியமாய்
வீரைமு லத்திருந்தார் வெட்டுண்டும் பிட்டுண்டுஞ்
சீரைமு லத்திருந்தார் சேர்வு. (48)

சாலப்பொன் பெற்றவருஞ் சார்வினைதுய்த் தெய்த்தவரும்
ஆலயஞ்செய் தாக்கு மளகையே—சூலத்தார்
அம்பலமே யானா ரடித்தொண்டு கொண்டாடல்
அம்பலமே யானா ரரண். (49)

சிறுத்தொண்டர் வன்றொண்டைத் தெய்வவழி பாட்டை
அறுத்தபிள்ளை காட்டுமள கையே—குறுத்தமுனி
கய்யடக்கங் காட்டினார் கௌரி திருக்கரத்தின்
மெய்யடக்கங் காட்டினார் வீடு. (50)

மஞ்சாரு மாமறையை மாறுகொண்ட மன்னவரை
அஞ்சாரு மோது மளகையே—தஞ்சார்
கடம்பவனங் கொண்டார் கரியவனைக் கல்லில்
இடம்பவனங் கொண்டா ரிடம். (51)

பங்கத் திரணரியைப் பாரஞ்சும் வெங்கரியை
அங்கலிங்க மாக்கு மளகையே—துங்கமறை
ஓதிக் கெடுத்தா ரொருதூதாய்ப் பெண்வடிவம்
பாதிக் கெடுத்தார் பதி. (52)

மட்டாடாக் கூடறனின் மாதரிளந் தென்சொல்லில்
அட்டாலை காட்டு மளகையே—வட்டாடிக்
கையின் வளைகொண்டார் காதற்சே யாயொருபெண்
கையின் வளைகொண்டார் காப்பு. (53)

மாடிநுழை மாமதியும் வல்லரவிற் றூண்மலரும்
ஆடிநிழல் காட்டு மளகையே—நாடிமறை
பாடிப் பதஞ்சலியார் பார்த்துவப்ப நின்றுசபை
ஆடிப் பதஞ்சலியா ரார்பு. (54)

பொங்கியெழு மாசுணத்தைப் பொய்யடிந்த நல்லோரை
அங்கமலை யாக்கு மளகையே—மங்கைமுலை
பட்டாற் களிப்பார் பரமபதங் காசிதனிற்
பட்டாற் களிப்பார் பதி. (55)

பாரமுலை யாரணையும் பாக்கிருப தாயிரமும்
ஆரமணங் காட்டு மளகையே—காரியுண்டு
கண்டத் திருக்கறுத்தார் காணிபெற மாமனெனக்
கண்டத் திருக்கறுத்தார் காப்பு. (56)

துப்பார் புரமெரித்துஞ் சொல்வேந்த ரன்புகொண்டும்
அப்பூதி யேந்து மளகையே—இப்பாரில்
அம்பர்மா காளரத்த ரம்மையொரு பாலிலத்தர்
உம்பர்மா காளரத்த ரூர். (57)

வன்னத்து மாமுலையார் வண்காமுந் தாமரையும்
அன்னத்தை யேந்து மளகையே—கன்னத்திற்
கிள்ளிமுத்தங் கொண்டாள் கிலேசமறுத் தென்னுளமே
பள்ளிமுத்தங் கொண்டான் பதி. (58)

செம்பதுமச் சேவடியுந் தேவர்கள் வெள்ளென்பும்
அம்புயக்கண் ணூரு மளகையே—வெம்புயங்கப்
பொற்பணியான் றில்லைப் பொதுநடத்தான் றூயுதரத்
தெற்பணியான் வாழு மிடம். (59)

விச்சை யறிபுலவர் வெங்கோணத் தானுளையர்
அச்சங் கறுக்கு மளகையே—தச்சனைமுன்
னையப் புடைத்தார் நளின தனத்திபுணர்
கையப் புடைத்தார் கதி. (60)

தம்பலத்தை யுண்டுபொருட் டையலார் மெய்யடியார்
அம்பரத்திற் கூடு மளகையே—நம்பரத்தர்
ஏகம்பத் தாரிடத்தா ரேழைமுலைக் காசைவைத்தார்
தேகம்பத் தாரிடத்தார் சேர்வு. (61)

செப்பிருக்குஞ் செஞ்சடையைத் தில்லைத் திருக்கூத்தை
அம்புலிக்குக் காட்டு மளகையே—வம்பனுக்குத்
தன்வண்ணங் காட்டித் தளையறுத்தெ னுள்ளலந்தே
என்வண்ணங் காட்டி யிடம். (62)

செம்மைத் தமிழ்முனிக்குந் தேவரையாண் டொண்களத்தும்
அம்மை மணங்காட் டளகையே—சும்மையெடுத்
துச்சம் பிடித்தா ரொருநாள் வலைவீசி
மச்சம் பிடித்தார் மனை. (63)

நந்திவிட மள்ளியுண்டும் நள்ளாரை மன்னரட்டும்
அந்தங் களங்காட் டளகையே—சிந்தணிவார்
கூப்பிட்டார் கேளார்முற் கூடறனிற் கூலிகொண்ட
மாப்பிட்டார் வாழு மனை. (64)

பங்கந் திரிகுருகும் பாவையர்க ளாடரங்கும்
அங்கயிரை யாரு மளகையே—மங்கையொரு
பாகத்த னத்தன் பழமறையோன் றேடநின்ற
மாகத்த னத்தன் மனை. (65)

கஞ்சமலர் மெல்லணையிற் காமுகர்த மெய்யதனில்
அஞ்சம் படுக்கு மளகையே—பஞ்சொலிக்கும்
வண்ணார்க்குக் காட்டார் மலர்ப்பாதம் புண்டரிகக்
கண்ணார்க்குக் காட்டார் கதி. (66)

ஊரக்கம் பைம்பொழிலு மோங்கு முவளகமும்
ஆரக்கஞ் சூழு மளகையே—சாரக்கம்
பாப்புரியார் பூணுடை பாமாலை யாரெமக்கோர்
காப்புரியார் மேய கதி. (67)

பாத்திகமழ் சோலைதொறும் பல்சமையத் தாருள்ளும்
ஆத்திகமே லோங்கு மளகையே—கூத்தி
ஒருத்தியைத் தந்தானத் துய்த்தபதத் தெற்கும்
அருத்தியைத் தந்தா னகம். (68)

தந்தவினை யாற்சீவர் தங்களையும் வீரையையும்
அந்தம் பலவாக் களகையே—முந்தம்பல்
அத்தி னடித்தா ரடியெடுத்துக் கூற்றைமரு
மத்தி னடித்தார் மனே. (69)

துப்பிட்ட வேணியினுஞ் சொக்கனகர் மாதிடத்தும்
அப்பிட்டு வேட்டா ரளகையே—கப்பிட்ட
கல்லா லடியார் கவின்சாய் கியரெறியுங்
கல்லா லடியார் கதி. (70)

சேறுகாண் செய்யிடத்துந் தேம்பாய் பொழிலிடத்தும்
ஆறுகால் பாயு மளகையே—மாறுகாண்
பொல்லார் புரமட்டார் பொற்சிலையா ரெல்லாஞ்செய்
வல்லார் புரமட்டார் வாழ்வு. (71)

சேட்டடவு வேங்கைகளுஞ் சேயிழையா ராடரங்கும்
ஆட்டை மணக்கு மளகையே—காட்டிமுறி
தந்துமணந் தீர்த்தார் தயையுடையா ரென்னுள்ளம்
வந்து மணந் தீர்த்தார் மனே. (72)

வங்கணமின் னார்தனமும் வாணிகர்வாழ் மாளிகையும்
அங்கனக மேவு மளகையே—தங்கநெடுங்
குன்றச் சிலையான் குணங்குடிபே ரோர்மருவு
பொன்றச் சிலையான் புரம். (73)

செந்தமிழ்சொ னுவலருஞ் சிற்றிலிழைத் தாடுநரும்
அந்தம்பா வைக்கூட் டளகையே—தந்திடையோர்
நற்பாதி மெய்யர் நகுதலையோ டுண்பலிகொள்
பொற்பாதி மெய்யர் புரம். (74)

மாணவத்தை வேசையரும் மாபுலமைத் தாபதரும்
ஆணவத்தை மாய்க்கு மளகையே—காணந்
தருவிழி யார்குதலைத் தையலாள் செவ்வாய்
மருவிழி யார்த மனை. (75)

பொங்கம் புகுமடையைப் பூந்துகில்க ழேழ்பரியை
அங்கம் புடைக்கு மளகையே—அங்கம்பெண்
ஆக்கினர் வேதியனை யன்றழைத்தார் கன்மிதந்தார்
வாக்கினர் வேதி மனை. (76)

செப்புமுலை யாரிதழுஞ் சேய்மகளிர் சிற்றிலும்
அப்பவளங் காட்டு மளகையே—இப்படிவன்
இந்தவணத் தானெனமா லெண்கணனும் போற்றரிய
அந்தவணத் தான்வா ழகம். (77)

பம்புவளை யிற்சம்பும் பாலிகையார் தோண்முகமும்
அம்பலவ ளூடு மளகையே—கம்பளமூர்
கந்தனத்த னாதி களங்கனயன் மால்புலவர்
வந்தனத்த னாதி மனை. (78)

சொரிதான வாரணத்துந் தூக்கர் முகத்தும்
அரிதார மேவு மளகையே—சரிதாங்கிக்
கூடலுக்கு வந்தார் குடிலைவடி வாரெனையுங்
கூடலுக்கு வந்தார் குடி. (79)

சேடுமுலை யார்குறியுந் தெய்வத் தருமலரும்
ஆடு படம்விழ்த் தளகையே—மாடுகொள்வான்
சேரற் கெழுதுவித்தார் செந்துவர்க்குன் றுயரிதச்
சாரற் கெழுதுவித்தார் சார்பு. (80)

கோனஞ்சா ராட்டுதலாற் கூர்ம்பழைய் ரீட்டுதலால்
ஆனஞ்சா லாடு மளகையே—மீனஞ்சரர்
வானப்ப தாகையார் வண்டில்லைக் காளியெதிர்
மானப்ப தாகையார் வாழ்வு. (81)

வரம்பார் வயற்சங்கும் வாணிகர்கூ லத்தும்
அரம்பை மனைக்கு மளகையே—நரம்பையாழ்
யாத்தவிலங் கையான் யசகறச்செ யண்ணனகங்
கோத்தவிலங் கையான் குடி. (82)

பாரோகைப் பார்த்திபரும் பானீயப் பைமுகிலும்
ஆரோடை மீது ரளகையே—வாரோதி
சொற்கவடுப் பட்டார் துதிக்கெளிய ரல்லார்பால்
நற்கவடுப் பட்டார் நகர். (83)

செஞ்சாலி நீள்வயலிற் றிண்வயவர் தம்மகத்தில்
அஞ்சாமை தோன்று மளகையே—செஞ்சோதி
வண்ணச் சடையார் மறையவர்வாழ் தில்லைநடம்
பண்ணச் சடையார் பதி. (84)

திங்களுத லார்கரமுந் தீம்பழனச் சேறிடமும்
அங்கடக மூரு மளகையே—மங்கைபாற்
றாதிரவிற் கொண்டான் றுழாய்நாறு மம்படைத்த
மாதிரவிற் கொண்டான் மனை. (85)

வாம்பரிசூழ் மன்னர் மறுகுகளும் வண்டுகளும்
ஆம்பன் மதம்பா யளகையே—தேம்பியுல
கஞ்சுங் கடுக்கையா லள்ளியுண்டான் றேம்பிழிந்து
விஞ்சுங் கடுக்கையான் வீடு. (86)

மானந்தி வாமத்து மன்னிளைஞர் சூழ்மறுகும்
ஆனந்தி மேவு மளகையே—வானந்தி
மின்னுங் கடகத்தான் மெய்ப்பரமன் சிற்சபையின்
மன்னுங் கடகத்தான் வாழ்வு. (87)

பம்புநெடுங் கோபுரமும் பார்த்திபர்கோட் டேணிகளும்
அம்புநிலை மேவு மளகையே—வம்புசெறி
மாறுக்கு வந்தார் மதில்பொடித்தார் பால்வெள்ளை
ஏறுக்கு வந்தா ரிடம். (88)

காரம் பரித்தார் கடையுமட வார்தனமும்
ஆரம் பரப்பு மளகையே—சூரன்பல்
கொய்தபாரந் தீர்த்தார் குலவுசடை யார்நாகம்
எய்தபாரந் தீர்த்தா ரிடம். (89)

கஞ்சனநே ருங்கதுப்பார் கண்ணிற் செறிபொழிலில்
அஞ்சனமே யாரு மளகையே—பஞ்சனகப்
பஞ்சா னனத்தான் பரந்தாம னேத்தறியாப்
பஞ்சா னனத்தான் பதி. (90)

வெஞ்சாபம் வீட்டுதலால் விண்ணுமண்ணு மேத்துதலால்
அஞ்சா றடுக்கு மளகையே—மஞ்சாரை
துன்னுமறைக் காட்டினர் சொற்கடந்த வம்பலப்பேர்
பன்னுமறைக் காட்டினர் பற்று. (91)

நம்பநடுச் சொல்வோரு நல்லார் புறவடியும்
அம்பணநே ராகு மளகையே—சம்பதியாய்க்
கல்லா லடியுற்றார் கானவனைப் பார்த்தன்கை
வில்லா லடியுற்றார் வீடு. (92)

நந்தா விறைகாமு நாரியர்கள் வாள்விழியும்
அந்தா மரைநே ரளகையே—சந்தாண்டு
வேர்ப்பா னடுக்குறைந்தார் வீடுதொறுஞ் சோறிரந்த
பார்ப்பா னடுக்கும் பதி. (93)

வஞ்சமிலா யோகியரு மங்கையர்த மென்னடையும்
அஞ்சங் கடக்கு மளகையே—பஞ்சமுகம்
ஆறு ரிருக்கு மளவறியாப் பாதர்கை
மானு ரிருக்கு மனை. (94)

தாபந் தவிர்த்தார்க்குந் தாகமிகக் கொண்டார்க்கும்
ஆபந்தங் காட்டு மளகையே—நீபமலர்க்
கந்தனுக்குத் தந்தார் களித்தளித்த தந்தைகதி
யெந்தனுக்குத் தந்தா ரிடம். (95)

கும்பமுலை யார்விழியுங் கோவைமணிச் சிற்றிடையும்
அம்பரமே யாகு மளகையே—நம்பிமணஞ்
சிந்த மறுத்தார் திருவடிக்கா ளாயவன்பர்
பந்த மறுத்தார் பதி. (96)

செம்பொற் பசும்பெயர்த்துஞ் செப்பீன் வளையடுத்தும்
அம்பலவ ஞடு மளகையே—கம்பலமாந்
தந்தா வளத்தர் தமனியவி லேந்தண்ணல்
நந்தா வளத்தர் நகர். (97)

மெத்தமெலிந் தார்தாத்தும் வேதியர்க ளங்காத்தும்
அத்தமப யங்காட் டளகையே—சுத்தநெடுஞ்
சங்கை யிடத்தான் றவராசர் போற்றுமலை
மங்கை யிடத்தான் மனை. (98)

வரம்பயிலு மின்னர் வடிவுந் தொடையும்
அரம்பைநிக ராகுமள கையே—சரம்பயின்மீன்
தங்குஞ் சரித்தார் தலைவி தனைமணந்தார்
எங்குஞ் சரித்தா ரிடம். (99)

வண்டாயர் முல்லைதனில் வான்வளர்ந்த பொற்றளியில்
அண்டர் தொழுவா ரளகையே—தொண்டுபுல
கைக்குழையார் மாலையார் மைக்கண்டர் நீளரவப்
பைக்குழையார் வாழும் பதி. (100)

திருச்சிற்றம்பலம்.

அளகைச் சிலேடை வெண்பா முற்றிற்று.

உ
சிவமயம்.
மகாகணபதயே நம:
திருச்சிற்றம்பலம்.

அளகை வெண்பா அந்தாதி.

காப்பு.

தேவிற் பொலியளகைச் செம்மன்மே னுயடியேன்
பாவிற் பொலிதருவெண் பாச்சொல்ல—நாவிலயன்
றேவிநிதம் வாழவருள் செய்யுமே பெய்யுமத
மாவினடிச் செந்தா மரை.

கந்தாடு முக்கட் கடகளிறென் னுள்ளத்தே
வந்தாளும் வீரை வனமென்னும்—நந்தா
அளகையுமை பாகற்கோ ரந்தாதி வெண்பாத்
தளைவகுத்துப் பாடிடவே தான்.

நூல்.

தாமரைவாழ் நான்முகனுஞ் சங்கத் திருமாலுங்
காமருவு நாட்டரசுங் காணரிய—தேமருவு
பொற்பார் பொழிலளகைப் புண்ணியனர் பூம்பதச்சீர்
கற்பாய்நெஞ் சீதே கடன். (1)

கடமாவின் றோலுரித்துக் கம்பலங்கொள் வார்நீள்
படமாடும் பாம்பா பரணர்—நடமாடி
அம்பலத்தே நிற்பா ரளகேச ரென்கொடிய
வம்பறுத்தே யீவார் வரம். (2)

வரத மிடக்கரத்து வாழ்வாகு மிப்பால்
சுரதமொழி யெந்தாய்க்குச் சொந்தஞ்—சரதமப்பா
லோடுண்டு நேர்பலிக்கிங் கொற்றைமா டுண்டுவில்வக்
காடுண்டு வேறேது கைத்து. (3)

கைத்தமலர்த் தாரான்றன் கன்னி தனைமணந்து
பைத்ததமிழ் நாடாண்ட பாண்டியனார்—மைத்தகுழற்
பெண்மாயப் பிச்சறுத்துப் பேதையுடன் வீரைநின்று
கண்மாயச் சிக்கறுத்தார் காண். (4)

காணக் கிடைக்காத காபாலி தாட்கமலம்
பூணக் கிடைத்தனவென் புன்றலைக்குத்—தாணுதனிச்
சேவேறி தீவண்ணச் செம்மலள கேசரந்நாள்
மாவாகிக் கூப்பிட்ட மாற்கு. (5)

மாலிருக்குங் காணு வாதவனைக் கல்லாதேன்
பாலிருக்கு நெய்யென்னப் பாவிப்பேன்—நாலறுத்துக்
கற்று ரளைநெய்போற் காண்பார்வீ ரையவருள்
பெற்றார்க்குச் சொந்தமந்தப் பேறு. (6)

பேறுதந்தை தாளெறிந்த பிள்ளைக் களித்தார்கை
மாறுகொண்ட கோக்கு வழங்கினார்—வேறுகொண்டு
கைம்மலரிட் டானைக் கருக்கினார் வில்வவனச்
செம்மலுக்கி தென்ன திறம். (7)

திரம்பெற்றீர் வேதன் சிரங்கொய்து நல்ல
வரம்பெற்றீர் தொண்டர்பா லுண்டே—மறம்பெற்றீர்
கைவளைகொண் டார்மகனைக் காய்ந்தளகை வீராவென்
கைவளைகொண் டென்பெற்றீர் காண். (8)

காணக்கண் டந்தாய் காந்தந்தாய் பூக்கொய்ய
ஆணிப்பொன் னம்பலத்தே யாடிநின்றாய்—வீணுங்
குழைத்துநாட் போக்கினே னார்க்காலி வீரை
தழைத்தபரா நின்றாள் சரண். (9)

சரண கமலந் தழைதூர்த்த மாணி
மரணம் பிழைத்தவா வல்லைக்—காணத்தை
நேர்செய் தளகை நிமலன்பா னின்னெஞ்சே
போர்செயம னண்மைகுன்றிப் போம். (10)

போவா ரடியிற் பொடிபூசி வாழ்நெஞ்சே
தேவாரங் கேட்டுகந்த செல்வத்தை—நாவார
ஆழ்த்துருகி யைந்தெழுத்தை யோதிக் கரங்குவித்து
வாழ்த்தி யளகை வலம். (11)

வலங்கொண்டார் தம்பிறவி மாற்றுவா ரங்கைக்
கலங்கொண்டு மாதாருங் கற்பின்—பலங்கொண்ட
தீரனென் னுள்ளஞ் சிறந்தவுமை யாள்கணவன்
வீரனல் வில்வவன மே. (12)

மேவினித முள்ளுடைந்து வெங்கூற்றை யுங்கடந்த
காவிவிழி யார்தனத்தைக் காதலித்து—பாவிநான்
நெஞ்சழுத்தங் கொள்ளாம னீதயைசெய் வாயளகை
மஞ்சழுத்துஞ் செஞ்சடையா வந்து. (13)

வந்திப்பார் வேண்டும் வரமளிக்கும் வந்தித்துச்
சிந்திப்பார் பேறெவனுன் செப்புவேன்—வந்திப்பார்
காணுரே காணுவரெங் கண்ணுதலார் வீரைவனம்
பேணுரே மாறிப் பிறந்து. (14)

பிறக்கவரந் தாதா பிழைபொறுத்துப் பேதைக்
கறக்கருணை காட்டியெந்த னண்ணல்—மறக்கிரியை
வில்லுருவா யேந்தும் விகிர்தாவெல் லாம்வல்லாய்
புல்லுருவாய் வில்வவனம் போந்து. (15)

போந்து புரம்பொடித்த புண்ணியனுர் தீநஞ்சம்
மாந்துந் திறலாளர் மானேந்தி—சார்ந்த
அடியார் குடிகெடுக்கு மண்ணலார் வீரைக்
குடியாளர்க் கேயாங் குடி. (16)

குடிக்கிரண்டு நாழிவரி கொண்டறங்கள் காத்த
முடிக்கிரிரா சன்மகளு மோகப்—பிடிக்கங்கை
நங்கையுண்டு செல்வருண்டு நம்மளகை யுண்டுகுறை
எங்கையுண்டு வீரர்க் கினி. (17)

இனிக்குங் களிதரு மேமாக்கு மூன்று
கனிக்குஞ் சுவையதிகங் காட்டுங்—தனிக்கருவி
ஏங்களகை யெம்மா னிறைகுனித்த பொற்பாதப்
பூங்கமலத் தேனுட் புகுந்து. (18)

புகுந்து திரும்பாது போமா றறியேன்
மகிழ்ந்துறவு கொண்டெய்த்தேன் மானே—நகுந்தலைபூ
மாலையளித் தார்சூடு மன்னரள கேசரிடம்
மாலையளித் தேகு மனம். (19)

மனமான புன்குரங்கே வாவாழ்வாய் நிற்குத்
தினமானஞ் சொல்கின்றேன் றேவர்க்—கினமான
பத்தரடி வேட்டிறுகப் பற்றிப் பிடியளகைச்
சுத்தரடி காட்டுஞ் சுகம். (20)

சுகம்விடுத்தேன் வஞ்சரிவர் சொன்மறந்தார் பாலிற்
சுகம்விடுத்தேன் வந்திலர்காண் டோகாய்—மகங்கெடுத்து
மாமன் றலையறுத்தார் மாவளகை செல்விரைவிற்
காமன் றனையெரிப்பார் காண். (21)

காணா திருக்கலையுங் கள்வர்மே லாசைவைத்துப்
பூணா திருக்கலையும் போக்கினாள்—நாணாமல்
ஆவா கிடந்துயிர்தேய்ந் தாளே குடிலைசொல
வாவா வளகைச் சிவா. (22)

சிவாயநம வென்றொருகாற் செப்பினாற் கோடி
திவாவிளைத்த கன்மங்க டருந்—தவாதுபல்கால்
ஓதிற் பணியணிதந் தும்பர்கோன் வீரேசன்
கோதில் பணியியற்றுங் கூர்ந்து. (23)

கூடிக் களித்தமனை கொஞ்சுமகார் சுற்றமெலாந்
தேடிப் பணம்படைக்கிற் றேக்கவுண்டு—நாடிமிகப்
பந்தமென்பார் தீர்ந்தாற் பலநிந்தை சொல்வரென்றுஞ்
சொந்தமுளான் வீரையனச் சேர. (24)

சோதிக்க நான்றரமோ சூழ்ச்சிகொண்டு மால்பிரமன்
வாதிக்கச் சோதிமய மானவா—நீதிக்கோன்
றல்லாது காணே னளகையரா வேறேதுஞ்
சொல்லாது தாதா சுகம். (25)

சுகம்பெற்று ரின்பவரி தோய்ந்தார் திரும்பா
அகம்பெற்று ரன்புபெற்று ரந்தோ—அகம்பெற்றுப்
பெற்றபே றென்னமனப் பேயேவில் வாரண்பம்
உற்றானுர்க் கன்பா யுறை. (26)

உறையிருக்குஞ் செஞ்சடையு மும்பருக்கா நஞ்சக்
கறையிருக்குங் கந்தரமுங் காமர்—மறையிருக்குந்
தாள்காட்டி வெள்விடைமேற் றையலொடும் வந்துகடை
நாள்காப்பாய் வீரையிலண் ணு. (27)

நாவிக்கல் கொள்ளுமந்த நாட்டுணையார் புன்னெஞ்சே
காவிக் கயல்விழிதன் காதலனைச்—சேவிக்க
வித்தாரம் வேண்டாம் விடாய்த்துருகி வீரைபுகாச்
செத்தால் வராவிரைவிற் றேர். (28)

தேர்நின் றணிகாட்டுஞ் செல்வத் திருவீதிக்
கார்நின்ற மூரிக் கராசலம்பெய்—நீர்நின்று
சேருக்குஞ் சாக்கைவலஞ் செய்வார் கொடும்பிறவி
நீருக்கு நெற்றி நெருப்பு. (29)

நெருப்பான மேனிதனை நீலிபுணர்ந் தென்றும்
விருப்பாகக் கொஞ்சுவதென் விந்தை—யுருப்பாதி
காமம் பெருக்கிக் கனறணித்தாள் போலுநிதஞ்
சேமந் தருவீரா செப்பு. (30)

செப்புத் தனமுஞ் சிலைநுதலு மைக்கண்ணுந்
துப்புக் கனிவாயுந் தோய்ந்தமயில்—பொற்புற்றுள்
இந்தக் கனிபோ லினிக்கிடைக்கா வீரேசா
சிந்தைக் கினியாளைச் சேர். (31)

சோராதே வில்வவனஞ் சீமானைப் போற்றிமலம்
போராதே சிற்றின்பம் பேணுதரு—னோராகும்
புத்தமுதம் விட்டுப் புறத்துமலந் தேடலொக்குஞ்
சித்தமிது வுண்மை தெளி. (32)

தெளியப் பலபலநூல் சிக்கறுத்துக் கூறும்
அளியைப் பெருக்கியுல காக்கு—மெளியர்க்
கெளியானை வஞ்சமுளார்க் கெட்டானை வீரைத்
தளியானை யப்பரமாச் சார்ந்து. (33)

சாற்று மறைப்பொருளைத் தாணுவாஞ் சங்கரனைக்
கூற்றுக் குமைத்தபதக் கோமானை—நாற்றிக்கும்
போற்று மளகைப் புராரியைநா வேவழுத்தி
வேற்றுமல பந்தத்தை வெட்டு. (34)

வெட்டியபட்ட, பிள்ளையுண்ட வீரைவனத் தீர்பன்றிக்
குட்டிசுட்ட தென்ன கொடுமைநாண்—கெட்டிகெட்டி
வில்கிழிய வெய்தவொரு வேடரிட வுண்டுருசி
மல்கியது நல்ல மதி. (35)

மதியாச் சலந்தரனை வாட்டினார் கையில்
விதியார் தலையெடுத்தார் வீரைப்—பதியார்
சிறுவிதிக்கு மாட்டுச் சிரந்தந்தார் தீங்கர்
மறுவிதிக்கு மாட்டுமுதல் வர். (36)

வன்னப் பரிவருவார் மாறடிக்குத் தோடருவார்
மன்னப் பணிமுடிமேன் மண்ணெடுப்பார்—தின்னத்தான்
பிட்டுக்குக் கையேந்தும் பித்தரள கேசான்பர்
கட்டுக்கு நெஞ்சங் கரைந்து. (37)

கரையாதோ தீவண்ணங் கண்டக்கா னெஞ்சே
பரையாளும் பாகப் பரமன்—நரையானிற்
றுன்பந் துடைக்கவருந் தோன்றலள கேசன்பால்
அன்பாக மாகு மளை. (38)

அளைதிருடிக் கட்டுண்ட வாச்சிமகன் வெள்ளை
வளைதருநை மாயன்கண் வைத்துத்—தழைமலர்த்தா
ளேத்தியநாட் சக்கரமொன் றீய்ந்தவள கேசரெங்கள்
கோத்திரத்துக் கெல்லாங் குரு. (39)

குருமூல நாட்குதிரை கொண்டுவந்தார் வீரைத்
தருமூலத் தேயிருந்தார் தந்தார்—கருமூலஞ்
சுட்டறுத்து நித்தச் சுகக்கடலின் மூழ்கிமலக்
கட்டறுத்து நித்தமுறக் கால். (40)

காட்சிக் கெளியன் கயவருக்கு மாசேயன்
மாட்சிக் களவகன்ற மாதேவன்—ஆட்சிகொண்ட
பாண்டிப் பழம்பதியான் பாலிப்பான் வீரையிற்போய்
வேண்டிக்கொ ணெஞ்சமே வீடு. (41)

வீடுந் தனமும் வெளிமயக்காங் கைவிட்டே
ஆடுந் தியாகரடிக் கன்பு செய்வாய்—கூடுவிட்டால்
எப்பிறவி கூட்டுவனோ வேழைநெஞ்சே வீரைமுதற்
றப்பிலிபூந் தாளே சரண். (42)

சரணந் தரவந்தேன் சங்குங் கலையுங்
கரணமுங்கொண் டாய்வில்வக் காடா—கிரணக்
கலையேனுந் தாமூன்றுங் கைக்கொண்டிங் கன்னை
யலையாமற் செல்வே னகம். (43)

அகந்தன்னை வீரை யமருமைகோன் வாழ
வுகந்தன்றே கைக்கொடுத்தே னுண்மை—சகங்கடிந்து
திண்மைத் திரிபத்திச் செப்பிலிட்டு என்புருக்கி
எண்ணெயதா வார்த்துவிளக் கிட்டு. (44)

இட்டடியார் பாற்சேட மேற்றுண் டிருக்கநிதி
வட்டமுலை பாகா வழங்காயா—நட்டமென்னே
கொங்குதேர் வாழ்க்கை குளறுவாய்க் கிங்கரிதென்
சங்கார வீரையிலெந் தாய். (45

தாயிற் கருணை ததும்பியதே நின்னினைந்த
நாயிற் கடையேற்கு நல்குமோ—சேயிவர்ந்த
ஆரைசுற் றும் வீரை யழகாவுன் பொன்முடியிற்
பாரையிட்ட வேடுவர்தம் பால். (46)

பால்வாணி யஞ்சுகணை பட்டுமனம் வேறுனள்
நூல்வாணி யஞ்சுகவிந் நோய்தீரு—மோல்வாய்ந்த
துள்ளல் கிழித்தாற் றுயரேகா வீரைநகர்
வள்ளல் கிழித்தார் வரின். (47)

வறுமைப் பிணிபோக்கி மாதரையி லென் றுஞ்
சிறுமை கழித்தின்பஞ் சேர—நறுநுதலோர்
அர்த்தங்கொண் டாடு மளகேசா நல்லருள்செய்
கர்த்தனே நீயே கதி. (48)

கதிகாட்டும் வீரையிலெண் காற்சரப மொன் று
திதிகாட்டு மாயநர சிங்கக்—கதிவீட்டிக்
கொத்திப் பிளந்துநின் று கோலபயி ரூட்டணைக்க
நத்திக் களிக்கு நனி. (49)

நனிமாண்ட கீர்த்திகொண்டவர் நல்லவர்நீர் முன்னங்
கனிவேண்ட வந்தவயா க்கண்டு—கனிவாகித்
தாயாய் மருத்துவஞ்செய் தாயன்றே வில்வவனம்
மேயாநின் மேன்மை விரித்து. (50)

விளக்கிருக்கத் தீத்தேடும் வீணு னீயென்
னுளத்திருக்கத் தேயமெலா மோடி—இளைத்தயர்ந்தேன்
அப்பா வளகை யறக்கொடிபா காவருளே
தப்பா தறியுந் தரம். (51)

தாக்குடையு மென்பணியுந் தாழ்சடையுந் தாங்கி
வரக்காமுங் கொண்டளகை வாழ்வீர்—சிரக்கண்
ஒருத்திக் கிடமுமையாட் கோரிடமற் றெம்பெண்
இருத்திக்கொள் வீரெங் கினி. (52)

இனியஞ்சு பூவம்ப னென்செய்வான் வீரைத்
தனியஞ்சு பூவிழியர் தாயே—இனியஞ்சல்
காரோதி நங்கடவக் கன்னிமணங் கூடவருந்
தேரோதை முந்துமிதோ தேர். (53)

தேர்வார்க்குந் தோரார்க்குந் தீப்பசிக்குச் சோறுதருஞ்
சீர்வார்த்த சாக்கைநகர்ச் செல்வமோ—நீர்வார்த்த
வையைமணற் சோறட்ட வைதிகன்பால் வாங்கியுண்டாய்
கையைவிடா தேனோ கலம். (54)

கலத்தைத் திருடிக் களவொளிக்கச் சொந்த
நிலத்தைக் கொடுத்தகதை நிற்கக்—குலப்பழியாய்க்
கோவணமுன் கொண்டகதை கூறவற்றோ வீரைநகர்க்
காவலனு ரேதொழிலோ காண். (55)

காணக்கண் கூசுமவர் கட்டழகென் சொல்வனடி
வீணுக்கு வாதம் விளம்பாதே—பாணற்காப்
பாடினு ருள்ளம் பறிகொடுத்தேன் வீரைதனிற்
கூடினு ரென்னைக் குலைத்து. (56)

குலைத்தலைமா வின்கீழ்க் குடியிருந்தா ரோர்பெண்
முலைத்தலையின் மையறின மூழ்கிக்—கலைத்தலையிற்
பாரையடிப் பட்டுமொரு பைங்கிளிமே லாசைவைத்து
வீரையடிப் பட்டார் விதி. (57)

விதிக்குத் தலையிடுசெய் வேளுக்கு மென்றன்
துதிக்குத் தலையளிசெய் தூங்கற்—பதிக்குமொழிற்
றந்தையா யேழைக்குத் தாய்தந்தை யாயளகை
வந்தசிவ னருள்செய் வார். (58)

வாரிக் குழன்முடித்து வஞ்சவலைக் கட்படுக்கும்
நாரியர்க்குத் தொண்டுசெய்த நாட்போது—மாரியனே
தஞ்சா யளகைத் தலம்புணர்ந்தாய் சாதமறுத்
துஞ்சேற நெஞ்சமதி லுன். (59)

உண்ணாது பிச்சைக் குழன்றீ ருமதருமை
எண்ணாது வீரை யிறைவரே—பெண்ணாவாள்
பாகம்பற் காட்டும் பலிக்கெழுந்த கோவச்சோ
சோகம்பற் றுதபா ரசொல். (60)

சொல்லாமற் சொல்லிமுனந் தோன்றாப் பொருள்விளங்கிக்
கல்லாலின் கீழிருந்த கற்பகமே—வல்லாளர்க்
கூட்டியபே ரானந்தத் தோர்சிறிது நாயேற்குங்
காட்டியருள் வீரைநகர்க் கண். (61)

கண்ணார்கூப் பிட்டலைந்தார் கஞ்சமுத றேடிபெய்த்தார்
திண்ணர்கூப் பிட்டலைந்து தேடாமல்—வண்ணமணிக்
கண்ணைப் பறித்தெளிதே கைக்கொண்டா ரென்னளகை
வண்ணப் பரியிவர்ந்த வா. (62)

வந்துமன் கண்டகனு வாம்பொருளை மாமணியைச்
சிந்துருஞ் செக்கர்முடிச் சின்மயத்தை—நந்தூரும்
பூம்பழன வீரைநகர் புக்கிருந்து சிந்தித்தாற்
போம்பழமைப் பொல்லாப் புனே. (63)

புனைவார்பொல் லாப்புலித்தோல் போர்ப்பார்கை வேழ
நனைவா ரதனெடுத்து நாகஞ்—சினையாமை
யோடென் பணிந்துபலிக் கூர்திரிவார் வில்வவனத்
தேடிவைத்தா யாசைமக ளே. (64)

ஏவாக்கி மாலைமலை யிட்டட்டார் புன்னரியை
மாவாக்கி னாளகை வந்துதமிழ்ப்—பாவாக்கி
மாதவத்தோ ருள்ளத்தே வார்ந்தோடு தேன்மலர்த்தா
ளோதவத்தை போக்கிடவன் புற்று. (65)

உற்ற படிநா னுரைப்பன்கேள் புன்மதியே
பெற்றமூர்ந் தாளகைப் பெம்மானார்—சுற்றமொடு
தாயிலார் தந்தையிலார் தாந்தனிய ரண்டமெலாங்
கோயிலாக் கொள்வார் குணம். (66)

குணத்தான்மிக் காபளகைக் கோமானை மின்னே
மனத்தார்நான் சூட்டமனம் வைத்தேன்—கணத்தீ
வணக்கோலஞ் செய்தார் வாராமையாற் பாவி
மணக்கோலஞ் செய்தான் மதன். (67)

மதமூற்றுங் குஞ்சரப்பேர் வாழ்வு தரினும்
பதமேற்க விட்டாலும் பாரிற்—சதமாய
நீற்றிலன்பு நின்னடியார் நேயமுந்தா வில்வவனு
போற்றிதண்டைத் தாளம் புயம். (68)

புயந்தழுவு மாலையிலெம் பொன்மாலை வைத்தாள்
அயர்ந்தழுது வாடுகிரு ளந்தோ—பயந்தந்தை
தாளையெறி வார்க்கன்றித் தாராரோ பூங்கமுகில்
வாளைபாய் வீரைக்கோ மான். (69)

மான்பிடிக்கச் சென்றதிரு மாலறியா முத்தரிவர்
கான்பிடித்த வீரையின்கீழ்க் கானவர்கோன்—முன்பிடித்து
மோகித்துப் பாரையினன் மொத்த முடித்தழும்ப
ராகித் துதிக்கவிருந் தார். (70)

ஆரே நிகரென்பா ரந்தோகஞ் சுண்டவுன்றன்
சீரோத வேதந் திகைக்குமே—வீரேசா
வேதன் றலையுண்டுன் மென்கரத்திற் பூந்தாளில்
ஓதந் துயின்முன்க ணுண்டு. (71)

உண்டா ரெனப்பலவா ருேதுகதை யுண்டுறக்கங்
கொண்டா ரெனவொன்றுங் கூறுதே—யுண்டுறங்கிச்
செத்துப் பிறக்கின்ற தெய்வங்க ளேத்தளகை
அத்தனைவைக் குங்கரிய தால். (72)

ஆலுதளம் பாதென்ற வாப்தமொழி பேணுதென்
ஏலும் வகையா லிறுமாந்தாய்—சாலப்
பழிப்பார்க ணல்லோர்கள் பாழ்மனமே யோய்ந்து
கொழிப்பாற்றும் வீரைவணங் கு. (73)

குக்குடங்கை யேந்துங் குமரேச னைப்பயந்தார்
திக்குடையார் வீரைச் சிவனார்தாள்—மற்கடம்போற்
பெட்டுப் பிடித்துருகிப் பேய்மனமே தொல்லைவினை
சுட்டுத் திகழிதுவே சூள். (74)

சூழ்ச்சி முடித்தழும்பர் சொல்லிவைத்த வாகமங்கள்
ஊழ்ச்சிக் கறுக்க வுரைத்ததே—வீழ்ச்சிகொண்டிங்
கிவ்வுடல்போய் மாயாமு னென்மைத் தவம்பேணிச்
செவ்வழியி னெஞ்சே திரி. (75)

திரிலோக முந்தருவார் செங்கமல வாழ்வும்
அரிலோக முந்தருவா ரன்றிக்—கரியாடை
கட்டியராப் பூணக் கயிலைதரு வார்வீரை
எட்டியடி வைப்பார்க் கிறை. (76)

இறைவளைக்கோர் பாகந்தந் தேர்வளைத்தார் கண்டங்
கறைவளைத்தார் வில்வவனங் கண்டே—பிறைவளைத்த
வேணியா வென்றுநைந்து விம்மிமலர்த் தாளதனைக்
காணியாக் கொண்டுசாக் கை. (77)

சாக்கைதனில் வீரைத் தருவிருந்த தேனையள்ளித்
தேக்கவுண்டு மாது திகைத்தாளான்—மேக்கதனிற்
சூட்டிவா மாயாமுன் றேழியுமை நாயகனைக்
கூட்டிவா செய்வான் குணம். (78)

குணங்கேட்க வேண்டாங் குலத்திலுமை யொப்பாள்
பணந்தானு முண்டுயர்ந்த பாவை—மணந்தளகை
வந்திருக்கச் சற்று வலங்கொடுப்பீர் வேறேதுந்
தந்திருக்க வொப்பேந் தக. (79)

தகத்தருவர் காமத் தழலவித்து நித்தம்
மகத்தழலை மூட்டி வளர்ப்பார்க்—குகப்பணியுந்
தோலுடையு முக்கண்ணுஞ் சோமன் றவழ்முடியும்
மால்விடையும் வீரையில்வாழ் வார். (80)

வாவாரங் கொண்டகமே வந்தளகைச் சோதிதனைப்
பாவாரங் கொண்டுசெங்நற் பாளஞ்செய்—மூவா
முதலையடி யார்வைப்பை முத்திவிளை வித்தைச்
சிதலையற நன்னாவே செப்பு. (81)

செப்பலரி தன்றளகைச் செம்மலே செப்புமா
தப்பின்றி நிற்றலரி தாமன்றே—யொப்பிலா
அப்பா வரசே வறிந்தபடி நிற்கவரந்
தப்பாது தந்தருளெந் தாய். (82)

தாயலுத்தா ளூட்டித் தனையலுத் தேன்பிறந்து
பேயலுத்த தின்றுதின்று பெம்மானே—நாயெரியுஞ்
சுட்டலுத்த வீரைச் சுகிர்தவினி யேனுமிரங்
கெட்டுணையா னாலுமெந்தை யே. (83)

என்றா னிவர்பேசா தேயிருந்தா ரேடிவில்வக்
கான்றான மாக்கொள் கருணையார்—நான்றானும்
நீக்கத் தகாதவுயிர் நிற்கமற்றெ லாமவர்க்கே
போக்கக்கண் டார்மனந்தான் பொன். (84)

பொன்னிற் றிகழொளியே பூமணமே காட்டத்தின்
மன்னுநெருப் பேததியின் வாய்த்தநெய்யே—துன்னுமணிச்
சோதியே யென்றளகைத் தோன்றாத் துணைதனைமால்
கோதியே வாழ்த்திநிதங் கூறு. (85)

கூறுபட்டு மொன்றாய்க் குலவுதிருக் கூத்தர்வெண்
ணீறுபட்ட மேனி நெருப்பானார்—சேறுபட்ட
செங்கழுநீர் சூடுந் தியாகரள கேசரடிப்
பங்கயமா முச்சிப் பணி. (86)

பணிந்தே னடிதாழ்ந்து பன்னாட்செய் தீமை
தணிந்தே னொருமாலை தான்செய்—தணிந்தேனான்
வஞ்சவெளி யாயொளியாய் மன்றினட மாடிநின்ற
கஞ்சத்தை வீரைநகர்க் கண்டு. (87)

கண்டு பிணிவாட்டிக் கைத்தவுடல் காமனெத்துத்
தொண்டுசெய்து நின்றநண்டச் சோழற்குப்—பண்டமுதம்
உண்டவர்க்கு மெட்டா வொருவீடு தந்தருணற்
பண்டிதனூர் வீரைப் பரன். (88)

பரமாகி யேபரிசு பாதகத்துக் கீந்தார்
சிரமாலே சூடிநடஞ் செய்தார்—வரவேதம்
பாடின ராடிப் பலியிரந்தார் வில்வவனங்
கூடின ரென்பணியுங் கொண்டு. (89)

கொண்டு கருவூர்க் குடியிருப்பை யேமாற்றித்
தண்டமதாய்க் கேவலத்தைத் தந்தாரென்—றூண்டுகொண்டே
யாளாக்கித் துன்ப மறுத்தளகை மேயவம்மான்
மீளாப் பிறப்பின் வலன். (90)

வலனழிந்தாள் வீரை வனம்வந்து பேதை
கலனிழந்தாண் மெல்லமளி காண—மலரப்பீ
தாகொடிய வென்பா ளலமறுவாள் பூங்கொன்றை
தாகொடியை யாளத் ததி. (91)

ததியறிந்து காக்குந் தயாபரனே கங்கை
மதியணிந்த செஞ்சடையெம் வள்ளால்—சதியணிந்த
கஞ்சக் காவளகைக் காபாலி யென்வினையின்
வஞ்சக் கரவொழிக்க வா. (92)

வாவந்து பூங்கை வளைதருவாய் சோர்ந்தகுழல்
பூவந்து நாறப் புனைந்திடுவாய்—சேவுந்தித்
தோற்றியலே நஞ்சுண்ட தோன்றலள கேசமதி
யூற்றியநஞ் சுண்டச் சொழி. (93)

ஒழியாக் கவலையினு ளுள்ளுடைந்தே னெந்தாய்
கழியாது நல்லருடான் காட்டி—யழியாத
ஆனந்தந் தந்தென்னை யாட்கொள்வாய் முன்னைவினைப்
பானந்த வீரைப் பதி. (94)

பதியாகி யண்டப் பரப்பெல்லாங் கூடிக்
கதியாகி யெவ்வுயிருங் காப்பான்—றதியாரும்
நெய்யென்னத் தன்னைமறை நேடவொழித் தெம்மளகை
அய்யென்ன நின்ற வரன். (95)

அரம்பொருத வேற்க ணழகியுமை பாகன்
வரம்பொருவி லாது வழங்கி—யரந்தைதனைப்
போக்கினே சம்புணர்ந்துள் புக்கிருந்தான் வீரைவளர்
வாக்கினே ரில்லா மணி. (96)

மணியோசை காட்டியிதோ வந்தன்றே யாமா
அணியோதி வாடுமிக வந்தோ—பணிவோடு
சீரிருக்கும் வெண்குருகே சென்றோடி வீரைமாத்
தூரிருக்கும் வீரருக்குச் சொல். (97)

சொல்லக் கடவேனோ தோலாத மாயைதனைக்
கல்லக் கடையேற்குங் காட்டுமோ—கல்லைப்பெண்
காட்டினார் தேடளகைக் காமாரி செங்கமலத்
தோட்டினார் பொற்றாட் டுதி. (98)

துதித்துச்செம் மாந்துனது தொண்டரையே நாளும்
மதித்துச் செயலற்று வாழக்—கதித்துணையே
அப்பா வளகை யரசேபுன் னாய்தனக்குத்
தப்பா தளிப்பாய் தரம். (99)

தரமும் பெருவாழ்வுந் தந்தாட்கொண் டன்பு
விரவும் படியருள்செய் மேன்மைப்—பரசிவமே
அண்ணாவீ ரேசா வளகேசா வில்வவணா
தண்ணாரும் பூம்பதமுந் தா. (100)

திருச்சிற்றம்பலம்.

அளகை வெண்பா அந்தாதி முற்றிற்று.

உ

சிவமயம்.

மகாகணபதயே நம:

திருச்சிற்றம்பலம்.

அளகைப்

பதிற்றுப் பத்துப் பதிகம்.

காப்பு நேரிசை வெண்பா.

உதித்திச்சித் துண்டுறங்கி யோயா தளகைப்
பதிற்றுப்பத் துப்பதிகம் பாடத்—துதித்தேனன்
ஆனணத்துக் கெட்டா வரும்பொருளா மைந்துகர
வாரணத்துப் பூந்தாண் மலர்.

வேறு.

பதுமாச னத்திமக னெருமாம தற்சிறுமை
படவேபொ டித்தகுரு பரனாம்
பனிமாம திச்சடைய ரிடமேவி நித்தமுறை
பரைநாரி யத்தையருண் முதல்வோனே
முதுமாத வக்குறவர் கனிபால டுத்துமயன்
முதிராவி ளைத்தவுன திளையோனும்
முகமாறு பெற்றருக வடிவேல னுக்குமனை
முயலாமு டித்ததனி விறலோனே
சதுமாம றைப்பொருணி யறிவாயெ னக்குயிர்நீ
சகமாகி யெப்பொருளு முறைவோனே
சகசால வித்தைதனை நிகராகி மித்தையுறு
சடவாழ்வை நத்திமன மலையாதே
இதுமாத வப்பெருமை யெனநான்ம கிழ்ச்சியுற
வினிதான பொற்சரண மதுதாராய்
இருதேவ ருக்கருளு மளகாந கர்த்தளியி
லிபமாமு கத்துவளர் பெருமானே.

நூல்.

தாண்டகம்.

அரியானை யடியவர்கட் கெளியான் றன்னை
அம்பலத்தி னடித்தானை யயன்மால் யார்க்குந்
தெரியானைத் திசையுடுத்த செம்ம றன்னைச்
சேவேறும் பெருமானைச் சிற்றவேழத்
துரியானை யொப்பில்லா வரவோன் றன்னை
யுமைகோனை யுலகனைத்தும் புணர்ந்து நின்ற
கரியானை யளகைநகர் மேயான் றன்னைக்
காணாதே வீணாளாக் கழித்தே னனே (1)

ஆனமரும் பெருமானை யமரர் வாழ்வை
யாலால முண்டிருண்ட கண்டத் தானைத்
தேனமரும் பைங்கொன்றைத் தாரான் றன்னைத்
தேரூர்ந்த வாரூரெஞ் செல்வன் றன்னை
ஊனமரும் வெண்டலையிற் பலிதேர் வானை
யுமைகோனை விசும்பளந்த வொருமா வீரைக்
கானமரு மளகைநகர் மேயான் றன்னைக்
காணாதே வீணாளாக் கழித்தே னனே. (2)

இந்துதவழ் சடைமுடியா விறைவா வென்றும்
ஏகம்பத் தொருமாவா ழேகா வென்றுஞ்
சிந்துரத்தோல் போர்த்தாடு சீமா னென்றுந்
திருக்கில்லார் சிந்தைகுடி கொண்டா யென்றும்
உந்திநெடு மால்விடையொன் றுகந்தா யென்றும்
உமைகோனே யென்றயரா துளறியேங்கிக்
கந்தமலி யளகைநகர் மேயான் றன்னைக்
காணாதே வீணாளாக் கழித்தே னனே. (3)

ஈமத்தி லெரியாடி யடலை பூசி
யெண்டோளிற் றலைமாலை யேந்து மீசன்
நாமத்தான் மலங்கழுவிப் பொறிகண் மாய்த்து
நானிலம்பே யென்னவொன்றி னட்டங் கொண்ட

வூமர்க்கே யுறவாகி யுண்ணின் றோங்கும்
ஓங்காரத் தனிப்பொருளை யுமையாள் கோனைக்
காமற்கா யளகைநகர் மேயான் றன்னைக்
காணுதே வீணுளாக் கழித்தே னேனே. (4)

உன்னருந்திக் கண்ணனை மால்கண் ணனை
யூன்காட்டி மாறுகொண்ட வொருகண் ணனைத்
தென்னவனைத் திருவால வாயான் றன்னைத்
திருமுடிமேன் மண்சுமந்த தேவ தேவை
உன்னமனத் தமையாவெள் விடையான் றன்னை
உமைகோனை யூர்பேரொன் றில்லா தானைக்
கன்னல்விளை வயலளகை மேயான் றன்னைக்
காணுதே வீணுளாக் கழித்தே னேனே. (5)

ஊகத்தார் சூடிமதி யரவுஞ் சூடி
யூரேற்க வானேறு மொருவா வென்றும்
நாகத்தார் தொழுமரசே நாதா வென்றும்
நடுவிழியான் மதற்பொடித்த நம்பா வென்றும்
ஊகத்தா ருள்ளிருக்கு மோதீ யென்றும்
உற்பவநா சந்திரித்த வுமையாள் கோனைக்
காகத்தா வென்றளகை மேயான் றன்னைக்
காணுதே வீணுளாக் கழித்தே னேனே. (6)

எண்ணரிய பெருந்தேவ ரங்கம் பூண்ட
வெம்மானைச் சிறுமான்கன் றேந்து வானை
நண்ணலர்தம் புரங்கரித்த நக்கன் றன்னை
நாதாந்த வெளியுருவாய் நண்ணுஞ் சோதி
அண்ணறனை யாரணங்கண் டறியா தானை
அந்திவண்ணத் தானையுமை யர்த்தத் தானைக்
கண்ணனயன் றேடளகை மேயான் றன்னைக்
காணுதே வீணுளாக் கழித்தே னேனே. (7)

ஏதமறுத் தொருமாமன் றலைகொய் திட்ட
ஏந்தலென்றும் மழுவங்கை யேந்தீ யென்றும்
கோதமனார் பாழி குலைத்தா யென்றுங்
குமான்றன் குருதையென்றுங் கோடீ ரத்தில்

ஓதமணி கங்கைவைத்த வும்பா வென்றும்
உமைகோனே யென்றென்று முருகிப் பூந்தார்
காதமணந் தருமளகை மேயான் றன்னைக்
காணுதே வீணுளாக் கழித்தே னுனே. (8)

ஐயருளப் பகைவாட்டி வெள்ளோ டேற்ற
வாரியனை யவர்மனைக்கற் பளந்து காட்டி
மெய்யருளும் வித்தகனை வீரை மூலம்
மேவியவெஞ் சிவக்கொழுந்தை வேடர்க் கின்பங்
கையருளுங் கற்பகத்தைக் கனியைத் தேனைக்
காமாரி தனையுமையாள் கணவன் றன்னைக்
கையருளம் புகாவளகை மேயான் றன்னைக்
காணுதே வீணுளாக் கழித்தே னுனே. (9)

ஒன்ருகி யிரண்டாய்முப் பொருளாய்த் தோற்றி
யுலகளிக்குங் கத்தவென்று முயிரி னேடும்
என்ருகி மதியாகிப் பூத மைந்தாய்
எட்டுருக்கொள் சித்தவென்று மீசா வென்றும்
அன்ருலின் கீழிருந்த வமலா வென்றும்
ஐயவென்றுங் கையனுமை யத்தா வென்றுங்
கன்ருத சீரளகை மேயான் றன்னைக்
காணுதே வீணுளாக் கழித்தே னுனே. (10)

அறுசீர்ச் சந்த விருத்தம்.

கரியகுழற்கய னிகர்விழியுத்தமி கவுரியிடத்துறவும்
அரியயனச்சவி பூரவிறைபொற்புலி யமரருமற்றெவருந்
துரியநிலைக்கறி வரியதிருச்சபை தொழமகிழ்வுற்றயரும்
அரியபதத்திரு நடனமெனக்கரு ளளகைநகர்ச்சிவமே. (11)

கடலளவிற்கடு கெனவுணுமுத்தம கடமுனிவற்கருளுங்
குடநிகரொத்தணி வடமலையொத்தெழு குவிமுலைதத்தைமொழித்
தடமகளற்புத மணவழகெய்த்துழ றமியனெனக்குமருள்
அடன்மலிபொற்பொறி திகழ்புரிசைத்திரு வளகைநகர்ச்சிவமே. (12)

சகடுருளொத்தவி நிலனசையுற் றுழ றனையனெனைப்பொருதும்
பகடுநடத்தொர னனிசெய்துயர்க்கெதிர் படவிடலுத்தமனே
முநடுதொடுத்துரு ளிரணியனற்சுதன் முனமருளச்சுதனை
அகடுகெடுத்தரு ளணிபழனத்திரு வளகைநகர்ச்சிவமே. (13)

மகவினைவிப்பிரர் நெறிமுறைவித்திய மறைமொழிகற்றுவளர்
சுகம்வினவிக்குறை நிமிரநிரப்புபு சொலுமுறையிற்பிறழா
துநமதுயிர்த்தவ னனமுலகுற்றவ னுறைதமருக்குரையா
அகமகிழற்புத வனமிடைதுற்றிய வளகைநகர்ச்சிவமே. (14)

அமரருமுற்றிக லசுரருநத்தெறி யலைகடையுற்றவநாள்
திமிரமிகுத்தெழு கடுவையமைத்தொரு திரணமெனப்பருகா
வெமரையளித்தரு ளெனவடிபுக்குழ லிமையவருக்கபயம்
அமரவளித்தென வருள்வையெனக்குந லளகைநகர்ச்சிவமே. (15)

புதையிருளிற்கம லையின்மறுகிற்புகழ் புணரடியிட்டறனேர்
தகைதருமைக்குழ றுனியையகற்றிய தனியபணிக்கெதிராச்
சுதையினினித்தெ ளமுதுகுமுத்தமிழ் சொலவதுபெற்றுருகும்
அதையுநினைக்கினி னருளைவிரிப்பரி தளகைநகர்ச்சிவமே. (16)

மழவிளமைச்சுத னறவுமிளைத்தக மலைவதுனக்கறமோ
பழவினைமொத்திய பதிதனைநச்சிரு பதமலரைத்தருவாய்
முழவுறழ்பொற்புய வரகதற்பர முதல்வமலர்க்கணையெய்
அழகனைநெற்றியி னழல்கொடுசுட்டவெ மளகைநகர்ச்சிவமே. (17)

வனமலிபொற்சடை முடியுதிரப்புனல் வழிதரவட்டவினைக்
கனன்மெழுகொத்துள முருகிநினைக்கரு மரியமகக்கதியவ்
வனசரனுக்குத வியநினதொப்பறு வளன்மைவழுத்துவதோ
அனமகிழ்விற்பெடை யணையுமலர்த்தட வளகைநகர்ச்சிவமே. (18)

நடிமதுரைப்பெரு வணிகர்தனித்தெரு நணுகிவளைத்தறவும்
இடுகிடைமுத்தலை யிளையமுலைச்சிய ரிதுவிலைபெற்றிடெனக்
கடிநிறையொக்குமி தெனவதுகைக்கொடு காவளையிட்டவெம
தடிகணுமச்செய லரிதரிதற்புத வளகைநகர்ச்சிவமே. (19)

யுவதிதனித்துறை யுவளகமுற்றனே யுனதெணமுற்றுவதோ
அவனியிலிப்படி யுளதுகொல்பொற்கொடி யவணலநிற்கிசைவேற்
குவளேவிழிச்சியை மணவினைமுற்றியெ வொளன்முறையுத்தமனே
யவதியெனித்தனே யிருவருனக்குள ரளகைநகர்ச்சிவமே. (20)

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

கருத்திலகா தம்புரியும் பாவை யார்தங்
கண்வலேயிற் சிக்கியவர் கனிவாய் மாந்தி
விருத்தியளித் தறிவுடையார் கைத்து நீத்த
விழுமநிறை பாழ்ங்குழியை வீட்டின் பாமென்
றருத்திகொடு கழிமயக்குற் றலேந்த பேயன்
அண்ணுனின் னடிபேணே னளகை யம்மான்
பருத்தியங்க வருங்காலற் கஞ்ஞ்சு கின்றேன்
பாலற்குக் கொடுத்தபதம் பாலிப் பாயே. (21)

மலத்திலுறுங் கிருமியினுங் கடையேன் றுட்டன்
வன்மனத்தன் வழக்கறியேன் வல்லார் மேன்மைக்
குலத்தினர்த நேசமிலேன் குணமொன் றில்லேன்
கோமானம் பலத்தாடுங் கூத்தா வெந்தாய்
அலத்தகச்சிற் றடியுமை யா ளர்த்தங் கொண்ட
அரசேவெள் விடைப்பாகா வளகை யம்மான்
பலத்தினட வருங்காலற் கஞ்ஞ்சு கின்றேன்
பாலற்குக் கொடுத்தபதம் பாலிப் பாயே. (22)

வஞ்சகர்த முறவுகொடு மகிழ்வ தல்லான்
மயக்கறுத்த தொண்டர்குழு வதனிற் சேர்ந்துன்
செஞ்சரணப் பகடுபற்றிப் பவமா வாரி
செலுத்தறியேன் கற்றூணிற் றிணியன் றீயன்
அஞ்சலென்பார் யாருமிலே யாசே நங்கை
யரைசேர்ந்த முழுப்பொருளே யளகை யம்மான்
பஞ்சநகத் தெழுங்காலற் கஞ்ஞ்சு கின்றேன்
பாலற்குக் கொடுத்தபதம் பாலிப் பாயே. (23)

சகடுதைத்தா னயனென்பா ரிருவர் தேடத்
தழலுருவா யோங்கியண்டந் தாவி நின்ற
விகடமத கரியுரித்த விமலா செக்கர்
விரிசடையு முக்கண்ணும் விரிநீர் ஞாலம்
அகடமைத்த காதலியோ டாடுங் கூத்தும்
அடிமலருங் காண்பன்கொல் லளகை யம்மான்
பகடுகைத்த கொடுங்காலற் கஞ்சு கின்றேன்
பாலற்குக் கொடுத்தபதம் பாலிப் பாயே. (24)

பாராதி யண்டமெலா நீயே யாகப்
பார்த்துருகிப் பத்திசெயும் பண்பா ளர்பாற்
சேராதே நாள்கழித்த தீனன் கண்டாய்
செய்வகையொன் றறிகில்லேன் செத்தே னந்தோ
வாராருங் குவிமுலையோர் பாகா மூவா
மருந்தேதீங் கனியளகை வளரு மம்மான்
பாராதே காலனெனை வஞ்சந் தீர்த்துப்
பாலற்குக் கொடுத்தபதம் பாலிப் பாயே. (25)

சித்தசனைப் பொடித்தளித்த திறலோ யென்றுந்
திரிபுரசம் மாரவென்றுஞ் சித்தா வென்றும்
வித்துருமச் சடையாதி விமலா வென்றும்
விண்ணவர்நா யகவென்றும் விகிர்தா வென்றும்
அத்தவென்றும் மலைமகளோ டாடி யென்றும்
அறைந்துருகே னன்பில்லே னளகை யம்மான்
பத்தமிது கொடுங்காலற் கஞ்சு கின்றேன்
பாலற்குக் கொடுத்தபதம் பாலிப் பாயே. (26)

அலையிலகப் பட்டதுரும் பென்ன மாழ்கி
யரசேநின் பொன்னடிக்கன் பில்லா நாயேன்
மலையிலிருந் துருண்டாலு நஞ்சப் பாம்பின்
வாய்மடுத்துக் கொன்றாலும் வஞ்சந் தீரா

விலையில்லா வருமணியே யுமையோர் பாதி
வேதியனே யளகைநகர் மேய வம்மான்
பலையிலுயி ருண்காலற் கஞ்சு கின்றேன்
பாலர்க்குக் கொடுத்தபதம் பாலிப் பாயே. (27)

மாசநரர் தொடுகடல்சூழ் வையத் தாசை
மாதர்மே லாசைமற்றும் மாழை யாசை
ஆசகலத் தினைத்துணையுங் கைவிட் டில்லேன்
ஆகொடிய னருட்கடலே யன்னே யப்பா
காசகலு முத்தமுலை பாகா நீலக்
களக்கறைபா வளகையம்மான் கால காலா
பாசகரக் கொடுங்காலற் கஞ்சு கின்றேன்
பாலற்குக் கொடுத்தபதம் பாலிப் பாயே. (28)

கலைவளைத்துப் புரமெரித்த கடவுள் நின்பொற்
கழற்கொருகை நீரேனுங் கமழ்பூ வேனும்
இலைதழைபா யினுமிடுமா றுளது கொல்லோ
ஏகம்பா விறையிமய மலைப்பொற் பாவை
முலைவளைத்த மணிமார்பா வயன்மால் யார்க்கும்
முன்னவனே யளகையம்மான் முக்கட் சோதி
பலைவளைத்த கொடுங்காலற் கஞ்சு கின்றேன்
பாலற்குக் கொடுத்தபதம் பாலிப்பாயே. (29)

சேயூரு மளகைநகர்ச் செல்வா நின்றன்
திருவடிப்போ தடியன்முடி சேர்ப்ப தென்றோ
வேயூருந் தோளியுமை பாகா சோதி
மேனியனே வெண்ணீற்றாய் வெங்கூற் றஞ்சிப்
பேயூரும் பெருவெளியின் வளியே போலப்
பேதுற்றே னுதரித்தாள் பெரும யானம்
பாயூரு மிடையாரைக் காய்ந்தார்க் கீய்ந்தாய்
பாலற்குக் கொடுத்தபதம் பாலிப் பாயே. (30

கலி விருத்தம்.

வீடும் பணியு மின்பொன் பிறவுந்
தேடும் படிநாள் செலவா யினவாற்
பாடும் பணிதா பரிவிற் பொதுவில்
ஆடுங் கழலோ யளகைக் கரசே. (31)

நினதே ருனிநைந் துநெகிழ்ந் துருகா
மனனு கியவல் லகன்மீ தணியா
ருனதா ளரவிந்த முதிக் குமதோ
அனகா வமலா அளகைக் கரசே. (32)

சாதந் தவிருந் தனிமா தவமும்
வேதந் தொடர்நின் னடிமேல் விழைவும்
நீதந் தருள்வாய் நெடுமா மதில்சூழ்
ஆதம் பரமா வளகைக் கரசே. (33)

கமரிற் பயமாக் கடையே னுடலச்
சுமையைக் கழியப் படுமோ முமலத்
திமிரத் தளையைக் களைவாய் திறலோய்
அமரர்க் கதிபா வளகைக் கரசே. (34)

நீரும் மரவும் நிலவும் புயலுந்
தாரும் புனையுஞ் சடிலத் திறையே
நாருன் பதமே னணுகி னெனக்கிங்
காரும் நிகரோ வளகைக் கரசே. (35)

உஞ்சக் கரைசே ருனதாள் விழைவுஞ்
செஞ்சொற் கவிசொல் திறனுந் தருவாய்
கஞ்சக் கரமா துமையாள் கணவா
அஞ்சக் கரமா வளகைக் கரசே. (36)

பணியா மருளன் பதகன் னெனினுங்
கணியா கயிலைக் கலின்வா ழமுதே

திணியா னமனே சிலையுந் தகுமா
லணியா யமர்வா யளகைக் கரசே. (37)

சைவந் திகழுஞ் சமயத் துறவும்
மெய்வெண் பொடிகண் மணிமேல் விழைவுங்
கைவந் திடநீ கருதாய் கருதாய்
ஐவந் தனமா வளகைக் கரசே. (38)

துப்பார் முமலச் சுழிபட் டெளியேன்
இப்பார் நசையி லிடைந் தனைமார்
செப்பார் தனமுண்டு திகைக்க விடேல்
அப்பார் முடியெம் மளகைக் கரசே. (39)

வான்கா தருகை வரதா விடைமேற்
றேன்கா முறுசெஞ் சொலிபா கழுமாய்
நான்கா ணுறுமோர் நலநா ளுளதோ
ஆன்கா தரவா மளகைக் கரசே. (40)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மானிளங் கண்ணி கங்கைமா தொருபெண் மணிமுடி யிருக்கவு மற்றோர்
மீனிகர் விழிமா துமையிடப் பாகம் விளங்கவு மருணையில் விடனுய்த்
தேனினைப் பழித்த மொழியணங் கொருத்தி தேடுவா னளகையிற் செம்மல்
கூனிள மதியந் தரித்ததே வெங்கள் குலதெய்வ மாகுமா மனமே. (41)

கண்டதே காட்சி யுண்டல்பே ரின்பங் கழிதலே முத்தியென் றுரைக்கும்
மிண்டர்தம் பாழ்த்த மலஞ்செறி யகமாம் வெறுந்தடம் புகாதரோ வுண்மைத்
தொண்டர்தம் போத வெறிகம ழகமாந் தாமலர்த் தடம்புகுந் தாடுங்
கொண்டலங் கண்டத் தளகைவாழ் சுரும்பெங் குலதெய்வ மாகுமா மனமே.

விளக்கரு திருக்கக் குழிதனில் வீழ்ந்து மெலிவர்போன் மெய்ம்மைநூல் கற்றுங்
துளக்குறுஞ் சமயத் துகள்படி வாரிற் றொடக்குறு வகைதடுத் துண்மை
யளக்கராஞ் சைவ சமயநன் னெறிதந் தாண்டகோ வளகைவா ழமலன்
குளக்கணன் மதனை யெரித்ததே வெங்கள் குலதெய்வ மாகுமா மனமே. (43)

ஆழியைப் பிடித்தா னயன்முதற் றேவர்க் கரியவன் றென்றமிழ்க் கூடற்
பூழியற் குரிமை மருகனு யுலகம் புரந்தவ னிருவர்பாக் கேட்டு
வீழியிற் படிக்கா சளித்தவ னளகை வீரசே கரனமர் முடித்துக்
கோழியைப் பிடித்தான் றந்தைகா ணெங்கள் குலதெய்வ மாகுமா மனமே.44

மூப்பிறப் பில்லான் ஞேற்றமொன் றில்லான் மொழிமுதன் மூன்றுக்கு மெட்
ஆப்பிலும் வீரை யடியிலு மன்ப ரகத்தினுந் தோன்றியாட் கொள்வான் [டான்
காப்பசுந் தோகை நடம்பயி லளகைக் கடவுள்கா மாரியெம் பாண்டிக்
கோப்பெருந் தேவி தலைவனு ரெங்கள் குலதெய்வ மாகுமா மனமே. (45)

நத்தணி கரத்த ஞன்முக ஞக நாட்டா சிமையவர்க் கெட்டா
எத்தனெண் டோள னளப்பருந் தொழில்செ யிறையவ னகந்தொறு மிரக்கும்
பித்தனுப் பில்லான் றிருவள ரளகைப் பிஞ்ஞகன் பிறப்பிலிப் பெம்மான்
கொத்தலர் கொன்றைச் சடையனு ரெங்கள் குலதெய்வ மாகுமா மனமே. 46

பஞ்சரக் கிளியைப் பூவையைப் பழித்த பான்மொழிப் பாவையோர் பாகன்
செஞ்சரண் டந்தெஞ் சிறுமைதீர்த் தாண்ட தேசிக னம்பலத் தாடி
வெஞ்சமர் வேண்டுஞ் சலந்தரற் றடிந்த வித்தக னளகைவாழ் விமலன்
குஞ்சர முரித்த பரமனு ரெங்கள் குலதெய்வ மாகுமா மனமே. (47)

பாலமேன் விழியான் மலரெறி மதனைப் படுத்தவன் பாரையான் மோதி
மூலமேற் றழும்பு செய்தவே டுவற்கு முழுத்தனிக் கருணைதந் தாண்டான்
தாலமே லன்பர் வேண்டுவ வளிக்குஞ் சங்கர னளகைவாழ் சம்பு
கோலமே யாகிக் குருளைகாத் தவனெங் குலதெய்வ மாகுமா மனமே. (48)

தன்றிருத் தாதை தாளற வெறிந்த தண்டிக்கு மகற்படுத் தாற்றும்
வென்றிசே ரமல வீடருள் பரமன் விண்ணவர் தமக்கெலா மேலோன்
மன்றிலா னந்த நடந்தருங் கூத்தன் மாசிலா மணியள கேசன்
குன்றில்வா ணீல கண்டனு ரெங்கள் குலதெய்வ மாகுமா மனமே. (49)

முண்டகந் தவிசி லுறையு நான்முகனை முகுந்தனைப் புலவர்தங் கோவை
யண்டரைத் தன்குற் றேவலிற் படுத்தாங் கருளுப காரிகண் ணப்பர்
கண்டகப் பறித்த கடவுளோ டேந்துங் காபாலி யளகைவாழ் கர்த்தன்
குண்டலிக் கெதிர்நின் றூடிய முதலெங் குலதெய்வ மாகுமா மனமே. (50)

தாண்டகம்.

சங்கலைக்குந் திரையாழி யாடை வைப்போர்
சந்தத்தே ராம்பதுமந் தாங்கா நிற்கும்
மங்கலச்சொ லந்தணனார் பாக னாகும்
மணிமார்பத் திருமாறன் வையம் பாகும்
செங்கமலக் காமலையோர் சிலையா யேந்துந்
திரிபுரத்திற் றீமூட்டிச் சிரித்த வந்நாள்
அங்கலப்பொற் பணியாக்கி யரவஞ் சூடும்
ஆதியா னாளகை யாத்த னார்க்கே. (51)

நாலையுந் திருமறையும் பதுமக் கோவும்
நாட்டமுறுந் திருமுடிமே னாந் தோன்றும்
பாலையும் பனிமதியு மாவுந் தோன்றும்
பைங்கொன்றைத் தார்தோன்றும் பசும்பு ரேன்றும்
நூலையுஞ் சிற்றிடைமா னொருபாற் றோன்றும்
நுதலிற்றீ விழிதோன்று நொச்சி சூழ்ந்து
ஆலையுந் தருவீரை மூலந் தோன்றும்
ஆதியா னாளகை யாத்த னார்க்கே. (52)

பழகரிய வல்லரவு மேனக் கொம்பும்
பலதேவ ரங்கமும்பொற் பணியாம் புல்லின்
அழகியதோ லரைக்குடையா மன்றி யானை
யதளுடன்மே லழுகெறிக்கு மகிலங் காப்பான்
இழகியதண் டயாவிருக்கு மகத்தி லென்றும்
இரந்துபலி யேற்குமோ டிருக்குங் கையில்
அழகியுமை யிமையமயில் வாமங் கூடும்
ஆதியா னாளகை யாத்த னார்க்கே. (53)

மைப்படியு மிலைவேற்கண் மாதோர் பாதி
வண்ணமணி வண்ணத்தின் மயங்கி யொன்று
யிப்படியி லிரவுபக லிணக்கங் கொண்ட
தேய்ப்பவடி வங்காட்டி யின்பந் தேக்கும்

செய்ப்படியுங் காளத்தித் திண்ணனூர் காற்
செருப்படியுங் கற்பகத்தார் செறித்த தாரும்
அய்ப்படியும் வரைமார்பி லாரு மெங்கள்
ஆதியா னூளகை யாத்த னூர்க்கே. (54)

கீளார்ந்த கோவணமும் பின்னை கேள்வன்
கிரியாகிக் காணரிய கேடி ருட்கோர்
வாளாரும் பாதுகையு மாவும் வாக்கும்
மற்றனந்த மறையாகு மன்னன் பர்க்கே
கேளாய வடிகளிவர் கேளா ரென்னிற்
கிருத்திமமாம் பேய்க்கணமாங் கெழுமி நாளும்
ஆளாய வெந்தமக்கோ ரரிய வைப்பாம்
ஆதியா னூளகை யாத்த னூர்க்கே. (55)

வடித்ததனி வேலேந்து முருகன் னென்றும்
மதநீரான் மலங்கழுவி மாயா வின்பம்
படித்தலநின் றருளவல்ல கணேச னென்றும்
பரந்தபுகழ்ச் சுதரிருவர் பகர்தற் குண்டாம்
முடித்தழும்ப ரென்னமதி தவழுஞ் செக்கர்
முடியிற்குத் துண்டபுண்ணு முருகார் வீரை
அடித்தலத்தின் முளைத்தெழுந்த வந்தி வண்ணத்
தாதியா னூளகை யாத்த னூர்க்கே. (56)

பாவேறும் பலதேவர் பரவுந் தண்டைப்
பதந்தோன்றுங் கூற்றுதைத்த பண்புந் தோன்றுந்
தூவேறு பொடிமலிந்த தோளுந் தோன்றுஞ்
சொன்னவரை வில்லாக்குந் தூப்புந் தோன்றும்
நாவேறு பாரதிதோ ணயந்தான் மற்றை
நாரணனுந் தேடனின்ற நம்ப னெங்கோன்
ஆவேறும் பசுபதிதீ யங்கை யேந்தும்
ஆதியா னூளகை யாத்த னூர்க்கே. (57)

தளவுநகைத் துவரிதழுங் கயற்கண் ணீலி
தானறஞ்செய் மனைக்கிளத்தி தனய ரென்பார்
களவுதனிற் பெண்டிருடி யிளையோன் மூத்த
கான்முளையோ சப்பாணிக் கடமா வாகும்
உளவறிந்தா ரகங்கடொறும் வாழ்வார் மூதூ
ரொற்றிவைத்தார் வேறினியென் னேடொன் றுண்டாம்
அளவிறனிப் புகழ்விரித்து மறைகள் பாடும்
ஆதியா னாளகை யாத்த னூர்க்கே. (58)

கடியிருக்குஞ் சனிப்பாகங் கமழும் பங்கிற்
கள்ளிருக்குங் குரவமலர் கமழுங் கையிற்
றுடியிருக்குந் தொடியிருக்கு மரைமேற் புள்ளித்
தோலிருக்கும் பட்டாடை துலங்கு மெய்யிற்
பொடியிருக்குங் களபமுஞ் சேறு பூசும்
பூமலரு மதின்மணமும் போல்வார் வீரை
அடியிருக்கு மணிகண்டப் பெருமா னெம்மான்
ஆதியா னாளகை யாத்த னூர்க்கே. (59)

வலத்தயனூர் மாதங்க வடிவந் தோன்றும்
வாமத்தின் மானீல வடிவந் தோன்றுங்
கலத்தரவஞ் சிரமாலை கலந்து தோன்றுங்
கவின்றருமுச் சுடர்நின்ற கண்க டோன்றுந்
தலத்தடவெண் கிரியெடுத்த விலங்கை மன்னன்
றடமார்பு படவூன்றுந் தாள்க டோன்றும்
அலத்தகச்சிற் றடியுமையோர் பாகந் தோன்றும்
ஆதியா னாளகை யாத்த னூர்க்கே. (60)

கலி விருத்தம்.

பளகறுமா வதனமுதற் பண்ணவற்கு மிளஞ்சேயாங்
குளகனறு முகவற்குங் கோதில்லாத் தந்தையிவர்
வளைகையுமை யாள்கொழுநன் வழுக்குறுமென் புன்சொல்லும்
அளகைநக ரிறையேற்றே யாண்டதுமோ ரற்புதமே. (61)

சங்கரியம் பிகைபாகர் சங்கரம் பலநாதர்
பொங்கரவம் பணியாளர் புரிசடையம் புலிபாளர்
வெங்கரியி னுரியாளர் வேதநடந் தருதாளர்
அங்கணரெம் மளகேச ராண்டதுமோ ரற்புதமே. (62)

கப்பரையோர் கரமேவுந் தாமுண்ணூர் பலியேற்பார்
அப்பரையா ளொருபாக ரளகைவா ழாதியரன்
ஒப்பறையா வுழவாரப் பணியாள ஞேங்கியசீ
ரப்பரையா ளடிகளெமை யாண்டதுமோ ரற்புதமே. (63)

தத்தைமொழி மடவார்பொன் றரைநசைகொண் டுழல்வேனை
மித்தையெனும் படிகாட்டி மெய்நெறிசென் றுய்யும்வணம்
நத்தையுழும் வயலளகை நாகர்கோ னயந்தெம்மை
அத்தையினுந் தயைகாட்டி யாண்டதுமோ ரற்புதமே. (64)

மகங்கைவரும் பெருவேள்வி மாய்த்தகந்தைச் சிறுவிதியை
முகங்கைவர வசமாக்கி முனிவகற்றுங் கமையாளன்
சகங்கைமல ரிட்டேத்துஞ் சரணியனு மளகையரன்
அகங்கைநெலி யெனவெம்மை யரண்டதுமோ ரற்புதமே. (65)

சாயமல முனையாது தன்னருள்செய் யளகையமான்
தீயவிலங் கயர்கோனைச் செகுத்தளித்த திறலாளி
பாயமணர்க் கழுவேற்றும் பாவலனுர் தமிழ்மறையால்
ஆயமல வடிகளெமை யாண்டதுமோ ரற்புதமே. (66)

தித்திமித்தி யெனவாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பத்திநெறி பழகாதே பாழ்க்கிறைத்த பதிதனையும்
நத்திநிதந் தவிசொருபுன் னுய்க்கிடுமோ றெனவருளி
அத்திபுனை யளகையரா னுண்டதுமோ ரற்புதமே. (67)

நல்லமணந் திகண்முடியி னறுமலருந் திரைநீரும்
வில்லமரும் வெண்பிறையு மிலைந்தாடுந் தனிமுதல்வன்
பல்லகமும் பலியேற்கும் பசுபதிதீ வணனளகை
அல்லமர்கண் டத்தமல னுண்டதுமோ ரற்புதமே. (68)

சோரர்முப் புரந்தியச் சிரித்தபிரா னுமைபாகன்
போரானை யுரிபோர்த்த புண்ணியனு ரளகைநகர்
ஊராளுஞ் சிவபெருமா னூர்விடையொன் றுகந்தேறும்
ஆராருஞ் சடையனெமை யாண்டதுமோ ரற்புதமே. (69)

சங்கேந்துந் திருமாலுந் தாமரைவாழ் நான்முகனும்
எங்கோவே யென்றேத்து மிறைவனலெ நஞ்சுண்டான்
வெங்காலன் றனையட்ட வீரனுமா பதியளகை
அங்காமற் பொடித்தபிரா னுண்டதுமோ ரற்புதமே. (70)

தாண்டகம்.

தாக்கணங்கு திகழ்மருமத் தானை வேதன்
 றனையாண்ட சங்கரனைச் சயிலப் பாவை
வேய்க்கணங்கு தருந்தோளி பாகத் தானை
 வேதியனை வேதமுடி மேலா னனைப்
பேய்க்கணங்கள் சூழநட மாடு வானைப்
 பெம்மானை யளகைநகர்ப் பித்தன் றன்னை
யாக்கணமா கிலுமுருகிப் போற்று தாரை
 அம்மநாங் கண்டளவி லஞ்ஞ்சு மாறே. (71)

இனவளையும் புலிநகமுங் கவடி கோத்த
 வெழிற்றுருங் கொக்கிறகு மரியின் கோடும்
மனவுமணிந் தொருவேடு வச்சி சூழ
 வனசரனுப் பார்த்தனொடு மற்போர் செய்த
சினவரவக் கச்சானை யளகை மேய
 செம்மறனை யுள்ளிருத்துந் திருத்தொண் டர்க்கே
அனவரத மிட்டுண்ணு வகத்தார் தம்மை
 அம்மநாங் கண்டளவி லஞ்ஞ்சு மாறே. (72)

புலியூரும் புத்தூரும் புயங்க மூரும்
 புற்றிருக்கு மாரூரும் புணர்ந்த தேவை
அலியூருங் கையானை யமரர் வாழ்வை
 அம்பலத்திற் கூத்தாடு மாசைத் தண்ணம்

புலியூருஞ் செஞ்சடையிற் புவனந் தாங்கும்
புண்ணியனை யளகைநகர்ப் புனிதன் றன்னை
அலியூரு மள்றுமுய வேத்தா தாரை
அம்மநாங் கண்டளவி லஞ்ஞ்சு மாறே. (73)

பற்பதத்தைப் பத்திவலைப் பட்ட வானைப்
பண்ணவனைப் பணிலமுழும் பழனச் சாக்கைச்
சிற்பரத்தைச் சின்மயத்தைத் தேவ தேவைத்
திருக்கில்லாச் சிந்தைதனிற் செழித்து நின்ற
கற்பகத்தைக் கண்மணியைக் கதிக்கோர் வித்தைக்
கற்பமெலாங் கடந்துநின்ற கயிலை வாழ்வை
அற்பகத்திற் கொடுமலரா லருச்சி யாரை
அம்மநாங் கண்டளவி லஞ்ஞ்சு மாறே. (74)

மாலையய னைத்தோற்றி வானு டைய்ந்து
மற்றிறைமை தந்தாண்ட மன்னை! வேத
நூலைவிரித் தாகமங்கள் விளக்கி யாற்கீழ்
நோற்றிருந்த குருமணியை நவலருந் தீம்
பாலையதிற் படுநெய்யைப் பாகைத் தேனைப்
பசுபதியை யளகைநகர்ப் பரமன் றன்னை
ஆலயத்தை வலஞ்செய்யா வாக்கை யாரை
அம்மநாங் கண்டளவி லஞ்ஞ்சு மாறே. (75)

ஆடல்புரி யம்பலந்தென் னருணை கச்சி
யானைக்கா வவிமுத்த மாரூ ராடற்
கூடல்பரங் குன்றுப்ப னூரா டானை
குற்றாலங் கொடுங்குன்றம் புத்தூர் கானை
எடகம்பூ வணஞ்சுழிய லெழினெல் வேலி
இராமேசம் புனவாயி லெந்தம் வீரை
ஆடகநேர் சடையானைப் போற்று தாரை
அம்மநாங் கண்டளவி லஞ்ஞ்சு மாறே. (76)

வாசகமு மனமுருகிக் கற்றூர் வாய்க்கு
மணந்தருசீர்க் கோவையுமிம் மன்னோர் தங்கள்

பாசமறுத் திடவல்ல மூவர் பாவும்
பளகறுத்துப் பயின்றளகைப் பாமற் பேணி
ஈசனவ னெல்லார்க்குந் தந்தை தாயாய்
யினமாகி நிற்பதறிந் தெழுத்தைந் தோதி
ஆசகல வெண்பொடியை யணியா தாரை
அம்மநாங் கண்டளவி லஞ்ஞ்சு மாறே. (77)

உருவிலியை நகுமாமை யுருவத் தாரா
யூனமிலா மனையறஞ்செய் தொத்தாள் கற்பிற்
றிருவினெடுஞ் சேய்களொடுஞ் செல்வத் தோடுந்
திறம்பாத பெருவாழ்விற் றிளைத்தா ரேனும்
மருவறுத்து மனந்திருத்தி வாய்மை காத்து
மாலயனு யுருத்திரனுய் மன்னும் வீரை
அருவுருவத் தம்மான்ருட் கன்பிலா ரேல்
அம்மநாங் கண்டளவி லஞ்ஞ்சு மாறே. (78)

தோலடிக்குங் கொடுஞ்சமரத் துரோணம் பற்றிச்
சுளித்தொருவன் றருமடிக்குந் தோமி லானன்
பாலடிக்குங் கல்லடிக்கும் பைந்தார் வேம்பன்
பாண்டியன்கைக் கோலடிக்கும் பரிந்தி வானைச்
சாலடிக்குஞ் சாதிமலர்ப் பணைசூழ் சாக்கைச்
சங்கரனைச் சம்புதனைத் தனிமா வேத
ஆலடிக்கும் புணர்ந்தானை யமர்ந்தேத் தாரை
அம்மநாங் கண்டளவி லஞ்ஞ்சு மாறே. (79)

அந்தகனைச் சந்திரனை யயனை வேளை
அடியானு முகிரானு மழற்கண் ணுனும்
பந்தமறத் தடிந்தின்பம் பாலித் தானைப்
பாணிதனிற் படைசுமந்த பரனை முன்னஞ்
சந்தமறைப் பொருளுரைத்துச் சலந்தீர்த் தானைச்
சாக்கைநகர் மேயானைத் தமரை வேண்டி
அந்தமிரந் திடுவானைப் போற்ரு தாரை
அம்மநாங் கண்டளவி லஞ்ஞ்சு மாறே. (80)

கலிநிலைத் துறை.

போதி னாயகன் புயல்வணன் றருவிடப் பொருவில்
சோதி யாயவன் றெண்டருக் கெளியவன் றேரகை
பாதி மேனியன் பசுபதி யளகைவாழ் பாமன்
ஆதி நாயக னலதுவே றில்லைகா ணகமே. (81)

கடிவை யையமே கனல்விழி காமனைக் கருக்கும்
முடிவை யோர்குவை முதனடு வீறிலா முதனம்
மடிவை மாற்றிவீ டளிப்பவன் வில்வமா வனத்தில்
அடிவை யிச்சக மடிமைகாண் வஞ்சறுத் தகமே. (82)

கருவி னித்தமுங் களைத்தனை மலத்தளை கயக்க
வெருவி யெய்த்தனை விளம்புவ னுய்குமா விதங்கேள்
கருவி மெய்த்தவர் கண்டது கைவிடாய் கருணை
அருவி யொத்தது வீரைவா ழுமுதுகா ணகமே. (83)

பிறத்தல் யாதினும் பெருந்துய ரறிதிநீ பிறந்தால்
இறத்த றிண்ணமா லென்செயு மளகைவா ழீசன்
நிறத்த சேவடி நேயமே கொள்கநின் றுயர்க்கோர்
அறத் தணிக்குவா னாகுமற் றில்லைவே றகமே. (84)

பொருளு மாதரும் பூமியு நமதெனப் புணர்ந்தே
இருளு மாயையி லிடருழன் றனையினிப் போதுந்
தெருளு மாறருள் செயவல தெய்வநம் மளகை
அருளு மாபதி யாமவற் சரண்புகா யகமே. (85)

சிவந் தமர்க்கருள் சேவடி யூன்றியே சிந்தித்
துவந்து நின்றனை யுருகினை யெளிதரோ வுனக்குப்
பவந் துரந்தனை யஞ்சலை யளகையிற் பாமன்
அவந் துறந்துவீ டளிப்பாற் பெறுதிநீ யகமே. (86)

மிடைந்த வேணியன் விண்ணவன் றடனை விரும்பா
துடைந்த வீணர்த முறவினை யொளித்தியே லுய்ந்தாய்

கடைந்த வேல்விழி காதல னுறவினைக் கடுகி
அடைந்து வேண்டுவை யளகையம் பதிதனி லகமே. (87)

நஞ்சு மாதவ னுன்முக னிந்திர னுகர்
தஞ்சு மாபதி தாவெனத் தரியலர் புரத்தைத்
துஞ்சு மாறழற் சுட்டவ னித்தமா கியவெழுத்
தஞ்சு மாசையொ டனுதினஞ் சிந்தைசெ யகமே. (88)

நார மார்சடை நம்பியன் பற்றவர் நாடிற்
றூர மாகுவன் றெண்டருக் கெதிருறுந் துணையாஞ்
சேர மானிடைச் செம்பொன்யா சித்தவன் வீரை
ஆர மானமக் கவனலா தில்லைவே றகமே. (89)

மாவ ணத்தனும் போதனுந் தேடியுங் காணாத்
தீவ ணத்தன்முற் கூடலிற் சித்தனுய் வந்தோன்
பூவ ணத்தனெ மளகைவாழ் புனிதனுட் படுத்தும்
ஆவ ணத்தனந் தோன்றருந் துணையறி யகமே. (90)

போற்றித்தாண்டகம்.

தேனமரும் பைங்கொன்றைத் தாமஞ் சூடுஞ்
செஞ்சடைவா னவபோற்றி சிவனே போற்றி
கூனமரும் பிள்ளைமதி தரித்தா னந்தக்
கூத்தயர்குன் றேபோற்றி கோவே போற்றி
மானமருந் திருநோக்கி யொருபான் மன்னும்
வடிவுடைநா யகபோற்றி வரதா போற்றி
ஆனமரும் பெருவாழ்வே யரசே போற்றி
யளகைநக ரம்மானே போற்றி போற்றி. (91)

காரணமுங் காரியமுங் காட்டு மாகிக்
கதித்தபரம் பொருள்போற்றி கதியே போற்றி
பூரணமும் புற்பொருள் மானுய் போற்றி
புவனங்க ளீரேழுந் தந்தாய் போற்றி

ஏரணமு மின்னியலு மெழுத்து மாகி
எண்ணில்சமை யம்புணர்ந்த வீசா போற்றி
ஆரணமு மாகமமு மானுய் போற்றி
அளகைநக ரம்மானே போற்றி போற்றி. (92)

வெய்யவனைச் சந்திரனை யமரர் தம்மை
மேவலரைத் தண்டஞ்செய் வீரா போற்றி
உய்யவெனைத் தடுத்தாண்ட கருணை போற்றி
உத்தமசிற் பரபோற்றி யுயிரே போற்றி
துய்யசெழும் பாலேகற் கண்டே தேனே
தோளாத செம்மணியே சுடரே போற்றி
அய்யர்மனைப் பலியேற்கு மத்தா போற்றி
அளகைநக ரம்மானே போற்றி போற்றி. (93)

சோதிநகு வெண்டலையு மமா ரென்புஞ்
சூடுதயா பரபோற்றி தொல்லோய் போற்றி
ஓதியினு ருள்ளுணர்வா யுறைவாய் போற்றி
ஓங்காரப் பொருள்போற்றி யொன்றே போற்றி
காதிநமன் றனைப்புரந்த காலா போற்றி
கருணைவா ரிதிபோற்றி கடவுள் போற்றி
ஆதிநடு வீறில்லா வாசே போற்றி
யளகைநக ரம்மானே போற்றி போற்றி. (94)

பாரூரா வரவணியா பால்வெண் ணீற்றாய்
பசுபதிநா தாந்தநடம் பயில்வாய் போற்றி
நீரூரா நெடுஞ்சடையா நெற்றிக் கண்ணு
நித்தநிரா மயபோற்றி நிமலா போற்றி
தேரூராப் புரம்பொடித்த செல்வா போற்றி
சிலையாக்கிச் சிலைவளைத்த திறலோய் போற்றி
ஆரூரா வணிகயிலை யண்ணு போற்றி
அளகைநக ரம்மானே போற்றி போற்றி. (95)

கங்கைவெண் பிறைமுடித்த கடவுள் போற்றி
கடமாவின் ரேருரித்த கர்த்தா போற்றி
சங்கையறுத் தரும்புலவர் கலகந் தீர்த்த
தமிழறியெங் கோபோற்றி தலைவா போற்றி
செங்கைதனி லபயமொடு வரதங் காட்டுந்
திருச்சிற்றம் பலபோற்றி செம்மால் போற்றி
அங்கைதனின் மழுவேந்து மரனே போற்றி
அளகைநக ரம்மானே போற்றி போற்றி. (96)

பொன்னேபொன் னொளியேபொற் பணியே போற்றி
புலியனைத்துங் கரியாகிப் புணர்ந்தாய் போற்றி
மன்னேகண் மணியேவின் மணியே போற்றி
மலையமுதை மணந்தொருபால் வைத்தாய் போற்றி
கன்னேரென் மனமுருக்கி யாண்ட நீல
கந்தரசுந் தரபோற்றி கபாலி போற்றி
அன்னேமன் னியகருணை யப்பா போற்றி
அளகைநக ரம்மானே போற்றி போற்றி. (97)

நெய்யாருங் கழுவேந்தி யமர ரங்கம்
நிரைத்தாடும் புயபோற்றி நீதா போற்றி
மெய்யாமெய்ப் பொருள்விரித்த விகிர்தா ஞான
வித்தகசிற் சுகவடிவே வெற்பே போற்றி
செய்யார்ந்த தீங்கரும்பே யமுதே யுள்ளிற்
றித்திக்குங் கனிரசமே தெவிட்டாத் தேனே
அய்யாசெம் பவளநிற வண்ணா போற்றி
அளகைநக ரம்மானே போற்றி போற்றி. (98)

இருவரக னிலம்பிளந்துங் ககனத் துற்றும்
எட்டாத சுடர்போற்றி யேகா போற்றி
குருவடிவா யாலிருந்த கோலம் போற்றி
குணவெற்பே சிவஞானக் கொழுந்தே போற்றி

பெருவரையைப் பெயர்த்தானைப் பிழைத்துக் காத்த
பேரருளின் றிறம்போற்றி பித்தா போற்றி
அருவமுமற் றருவுருவு முருவுங் கொண்ட
அளகைநக ரம்மானே போற்றி போற்றி. (99)

திருவேயெங் குலவாழ்வே தேவ தேவே
திகம்பரவம் பலநடஞ்செய் சித்தா போற்றி
யுருவேநல் லுணர்வேயென் னுயிரே போற்றி
யூரொடுபே ரேதுமிலா வொன்றே போற்றி
கருவேயக் கருமருந்தே கதியே போற்றி
காமருபூங் கழல்போற்றி கருணை போற்றி
அருவேபே ரண்டமுழு தானாய் போற்றி
அளகைநக ரம்மானே போற்றி போற்றி. (100)

திருச்சிற்றம்பலம்.

அளகைப் பதிற்றுப் பத்துப்பதிகம்
முற்றிற்று.

உ
சிவமயம்.
மகாகணபதே நம:
திருச்சிற்றம்பலம்.

அளகை யலங்காரம்.

காப்பு.

அளகை யலங்கார மானேறி பாற்கே
பளகறுத்த செந்தமிழாற் பாடக்—களகமிவர்
சிந்துரமே யைந்துகரச் சிற்பரமே யற்புதமே
தந்துதவு வாய்நின் சரண்.

வேதப் பனுவல்சொல் வித்தகன் பொன்மலை வில்லிநட
வாதத் தவன்வரை மாதிடத் தான்புகழ் வாழ்த்திமணச்
சீதப் பொழிலள கையலங் காரத்தைச் செப்புவன்யான்
போதத் தனியுருப் போதகச் சீரடி புந்திவைத்தே.

நூல்.

திருவா ரணிகலைச் செல்வியைச் சேர்ந்துறை சீரளகை
மருவா ரணியிட மன்றுஞ் சிவாவன்பு வைத்தொருநா
ளிருவா ரணிமுலை பாற்சந்து சென்றுநி னின்னருளைக்
கருவா ரணிமயக் குற்றே னெளிதிற் கழறவற்றே. (1)

தீங்கரும் பைத்தக வட்டுக் கனிரசந் தேனுமளாய்ப்
பூங்கரும் பைத்தினை மாவிற் கலந்துண்டல் போலவின்பந்
தாங்கரும் பைத்தலை மீதிற் புவிதொழுந் தண்ணளகைக்
கோங்கரும் பைத்தன மொத்தாண் மணாளனைக் கூடுநெஞ்சே. (2)

நல்லாரை மேற்கதி நாட்டு மளகை நகரிறைபோற்
சொல்லாலுஞ் சொல்ல வொருதெய்வ முண்டுகொ றாணிபெய்தும்
வில்லார்ந்த வன்கணை தூவியும் பட்டனன் வேளுயிர்கள்
எல்லாந்தம் போக மிழக்கக்கல் லாலி லிருந்த வன்றே. (3)

மூலங்கல் லாவியர் கைப்பாரை யிட்ட முடித்தழும்ப
ராலங்கல் லாரொரு நால்வர்க் கருளிய வண்ண லுமை
வேலங்கல் லார விழிபாதி மெய்யனெம் வீரையான்
சீலங்கல் லாதவ ரென்றோ நரகைத் தெறிப்பதுவே. (4)

வில்லாக்கி னார்மலை வில்வா ரணியர்பெண் மெல்லடியாற்
கல்லாக்கி னார்தொழுங் காபாலி கங்கை கமழ்முடியிற்
புல்லாக்கி னாடிச் செந்தா மரையைப் புனைந்துதமிழ்ச்
சொல்லாக்கி னாரல்ல வோமுத்தி வீட்டிற் சுகிப்பவரே. (5)

பார்ப்பதி பாதி பகிரள காநகர்ப் பண்ணவனப்
பார்ப்பதி பாரப் பனிச்சடை யானுருப் பண்புகண்ணே
பார்ப்பதி பாழ்மன மேசர ணும்புயம் பாடுநநா
பார்ப்பதி பாதக மட்டின்ப வாரியைப் பாலிப்பனே. (6)

செந்தா மரைமக ரக்கட லாதெளி சிந்தைகடப்
பந்தா மரைமல யாவிசும் பாவெம் பசுந்தரையா
அந்தா மரைமழக் கன்றேந்து கைய ரளகைவெற்பிற்
செந்தா மரைமல ராவா ழிடமித் திருமகட்கே. (7)

மணிதாங் கலைதரு மாதோ குலிசன் மணமகளோ
அணிதாங் கலைதரு வாரோ வனங்க னருந்துணையோ
எணிதாங் கலைமன நம்பா ரகச்சிற் றிடையணங்கோ
அணிதாங் கலைமதி வேணியன் வீரை யணிவரைக்கே. (8)

பலவா னவந்திகழ் பாடல மாதிய பாதவங்கள்
பலவான வந்தர மேவு மளகைப் பகட்டுரிக்கம்
பலவா னவவிமை யோர்தொழு பங்கய பாதநல்லம்
பலவா னவமணிப் பாச்சொல்ல வெற்கருள் பாலிப்பயே. (9)

கடியப் படியறு வன்னுநந் தும்பை கலாமதிதண்
முடியப் படிகட மூதூ ரளகையை முன்னினர்மால்
கடியப் படிறறு மாபோ லிவர்கடைக் கண்மலரும்
அடியப் படிபுணர்ந் தென்னு ருயிர்ப்பரி வாற்றியதே. (10)

கைமா னிடங்கொண்ட வீரைப் பிரான்மலர்க் காலிலன்பு
வைமா னிடங்கு வலையத் தரிதுணர் வாய்மனமே
பைமா னிடங்கரப் பாழ்ங்குழிக் காழ்த்துமப் பார்வையரைக்
கைமா னிடங்கவின் மெய்யன்மெய்ப் போதங் கழறுவனே. (11)

மடத்தத்தை யின்மொழி யீர்காயுந் தென்றலை மாமலையங்
கடத்தத்தைச் செய்வகை காணீ ரினிமதற் காய்ந்தவர்கல்
வடத்தத்தை யானவர் வில்வா ரணியர் மலைவளைத்தே
அடத்தத்தை மாலை கொணர்வீரென் மையலை யாற்றுதற்கே. (12)

கல்லாரம் மாவடு வொக்குங்கண் ணார்தமைக் காதலித்துக்
கல்லாரம் மாயையைச் சிந்தித் தருங்கதி காட்டுநன்னூல்
கல்லாரம் மானிடர்க் கந்தோ நிரயங் கனிரசமோ
கல்லாரம் மாமுலை பாகா வளகைக் கருப்பொருளே. (13)

இலங்கையி லாய மலையா னளகை யிறையரக்கன்
இலங்கையி லாய மலைபச்செற் றுன்றெழு மேந்தலெங்கும்
இலங்கையி லாய மலையிடத் தான்புக லின்றியெங்கும்
இலங்கையி லாய மலைக்காட்டுங் கூற்றுறி னென்றுணையே. (14)

கருவைக்கண் டன்ப ருழலா தருளுப காரியெற்கும்
பெருவைக்கண் டன்பதந் தந்தா னளகைப் பிரான்வரையில்
உருவைக்கண் டண்டரும் போற்றும் பதாம்புய வோவியமித்
திருவைக்கண் டன்றுவந் தானன்ப னுற்றவுந் தீரனன்றே. (15)

கோலஞ்சு மாமல ரான்சம்ப ராரியைக் கொன்றருள்கோ
பாலஞ் சுமந்த பரயோகி வீரைப் பசுபதிகண்
வேலஞ் சுகச்சொல்லி பாகனெம் மான்றண்டை மேவுமலர்க்
காலஞ்சு மாறந் தகன்றன்னை வாட்டுங் கருதுநெஞ்சே. (16)

காட்டம் பரிக்க வருவான்முற் கூடற் கடிநகரில்
ஓட்டம் பரிக்கண் வருவான் றிகைக்கவிட் டோர்தனிவிற்
பூட்டம் பரிக்கண்ணி வாரா தொளித்த புராரிமணம்
வேட்டம் பரிக்கண்ணி னுட்கிடந் தந்தாண்ட வீரையனே. (17)

அம்பணி யாரமி லட்டுக மொக்கிய வத்தியத்தன்
அம்பணி யாரமி லேந்தாடு மீச னளகைவெற்பில்
அம்பணி யார மிளிர்ங்குழ னின்க ணணையதென்கை
அம்பணி யார மிகைத்தொகு மானிங் கடைந்தனவே. (18)

செஞ்சாந் தணிதட வார்முலை மாமலைச் செல்வியெந்தாய்
மஞ்சார்ந்த மென்குழன் மாதுபங் காளனை வள்ளறனை
நஞ்சார்ந்த கண்டனை வீரையம் மானையுண் ணுட்டியெழுத்
தஞ்சா வோதுவ ரன்றே பிறப்பை யறுத்தவரே. (19)

தோளிலங் காரப் பசுங்கொன்றை வேட்டுச் சுகம்விடுத்தேன்
வாளிலங் கார வனமுலை யாயினும் வந்திலனெந்
நாளிலங் காரக நாட்ட னருள்வ னடுச்சொலவும்
ஆளிலங் காரணம் யாதோ வளகையி லண்ண லுக்கே. (20)

திருகுவன் கோட்டுக் கடாவரும் பாதக தீப்புலிபோல்
அருகுவந் தாருயிர் கொள்வைகொ னின்ற னருந்தலையைத்
திருகுவன் வீரை நகரார்க் குனைப்பலி செய்துயிரைப்
பருகுவன் றாக்கிய தாண்மனத் தேந்தினன் பாலிக்கவே. (21)

குந்தங்கை வைத்தலை மாற்றிரிப் பானனை கோலவரி
தந்தங்கை வைத்த விடப்பாகன் வீரைத் தடஞ்சிலம்பில்
நந்தங்கை வைத்தவிர்ப் பீர்கடன் மேலங்கை நன்கமைத்தீர்
விந்தங்கை வைத்திடி னீரே யகத்தியன் மெல்லியரே. (22)

போர்தந்த மாமத வேழத்தின் மத்தகம் போற்பொலிந்து
வார்தந் தகன்றிரு மாந்தெழுங் கோல வனமுலைக்கே
நேர்தந் தகங்குழை யாதருள் வீரை நிமலவெந்தாய்
சீர்தந் தமுதிடை மான்பாதி மெய்கொண்ட கேடிலியே. (23)

சென்றந் தரங்கொடு தொண்டர்தம் வீட்டிற் சிறுவனையே
கொன்றந் தரம்புணர்ந் தோர்கதி நாட்டிய குன்றவில்லி
என்றந் தரமறி யார்கடைச் செல்லா திருக்கவருள்
மன்றந் தாந்திகழ் வாணு வளகை வளரொளியே. (24)

ஏற்றுக் குகந்த வயிரா வணத்த னிமந்தருவெண்
கீற்றுக் குழவி மதியாண்ட வேணியன் கேழ்கிளர்ந்த
மாற்றுக் குயர்ந்தபொன் மாமணிச் சோதியன் மாவிரதி
கூற்றுக் குமைத்தபொற் றாட்பணிக் கேவீரை கூடகமே. (25)

முடிச்சிட்ட வார்வலை வீசித் திருமண முன்னொருநாள்
முடிச்சிட்ட வாவலை யம்பணி வீரை முதல்வமதி
முடிச்சிட்ட வாவலை யம்பிறைக் குங்கண்ணி மோகந்தழீ
முடிச்சிட்ட வாவலை யேன்மார னம்படை முந்துமின்னே. (26)

முத்தந் தருநகை யார்மயக் குற்று முயங்கியறப்
பித்தந் தழைத்துக் களிகின்ற போதுநின் பேர்மறவேன்
நித்தந் தமிழ்சொலி வாணர்கள் வாழ்த்தொலி நீள்கடலின்
சத்தந் தனையடக் கும்மள காநகர்ச் சங்கரனே. (27)

கோடும் பிறையுந் தனித்தேவ ரங்கமுங் கோலவெள்ளைக்
கோடும் பிலம்புக்க நாகா பரணமுங் கொக்கிறகுங்
கோடும் பிறங்க வணிகூத்தன் வீரைக் குடியனென்றன்
கோடும் பிணியவிழ்த் தான்சுக வாரி குளித்தனனே. (28)

அஞ்சக் கரந்துணித் தானங்கி யும்ப லதளுடுத்தான்
அஞ்சக் கரந்துனும் வேனங்கை பாத னடிவணங்கி
அஞ்சக் கரந்துணை வேண்டரிக் கீந்த வளகையரன்
அஞ்சக் கரந்துகள் காட்டுநெஞ் சேநம னுற்றலையே. (29)

அயிரா வணத்தனைச் சேரற்குப் பாவறைந் தாசைகொண்ட
அயிரா வணத்தனை யாரூர னைப்பண் டடிமைகொண்ட
அயிரா வணத்தனை வில்வா ரணியனை யம்பைகொண்ட
அயிரா வணத்தனைச் செற்றானைப் போற்றுமி னுசைகொண்டே. (30)

முன்னம் பலிக்கு வருவானை யெண்ணி முலைபசந்தாய்
மன்னம் பலிக்கு வலையம்வைத் தாயென் மதியுனக்கே
தென்னம் பலிக்கு ளறும்வீரை யெத்தன் செயலறியாய்
இன்னம் பலிக்குமென் றேபசந் தாயுட லேந்திழையே. (31)

பாம்பணிந் தம்பலத் தாடுங் க்ருபாகரன் பாண்டியன்பை
வேம்பணி மாலைய னம்பரத் தூசினன் வேதமுதல்
காம்பணி தோளிபங் காள னளகைக் கடவுளுக்கே
நாம்பணி செய்குவம் போதியென் னோடுமிந் நாண்மனமே. (32)

செத்துப் படிமிசை வாழ்விழந் தார்கோடி தீப்புகுந்தார்
மத்துப் படுதயிர் போலலை பேய்மதி வாவளகைத்
தத்துப் படுபுலித் தோலுடுத் தானையெஞ் சங்கரனைக்
கொத்துப் படுமலர்க் கொன்றைச் சடிலனைக் கூடுதற்கே. (33)

கூரம்பு தைத்த வழிசோரி கக்கிக் குளிறிவிரைந்
தீரம்பு தைத்த மொழியணங் கேது மிருங்குழலை
நேரம்பு தைத்தகல் வாயூற்று குஞ்சர நேர்ந்ததுண்டோ
ஆரம்பு தைத்த நகைபாதி வீரை யணிவரைக்கே. (34)

பால்வண்ண நீறணி வானம் புயன்வலம் பற்றவிடம்
மால்வண்ணங் காட்டிய மாமுதல் வில்வ வனப்பரமன்
நீல்வண்ண மாகளத் தான்பத்ம பாத நினைந்துருகாய்
நால்வண்ண மாகும் புருடார்த்தம் வேண்டி நனிநெஞ்சமே. (35)

அரசும்ப லூர்பவ னாரண னாரண னண்டரெல்லாம்
பரசும் பழமலை யானையெம் மானைப் பணிக்கடவின்
முரசும் பயிலள காநகர் வீரனை முன்னியென்றன்
சிரசும் பணிந்தன வாற்கே டிலையினிச் சீரிதன்றே. (36)

சேலிற் றிகழ்விழி யார்கட மாமுலை சேர்ந்தகன்ற
மாலிற் றியங்கி மயங்க விடேலுனை வாழ்த்துநல்லார்
பாலிற் றிரியவும் பாப்புனைந் தேத்தவும் பாலிபைங்கல்
ஆலிற் றிகழள கேசா கடையனை யாதரித்தே. (37)

சுரும்புக் கமர மதுவார்க்கு மென்குழற் றோகையுயிர்
விரும்புக் கமழ்தட நாமிங் கிருவரு மேவிலுன்றன்
அரும்புக் கமல முலைகண்டு வாடுமி வைந்தருக்கீழ்
இரும்புக் கமல ரளகையின் மீள்வ விறைவரைக்கே. (38)

மணக்குந் திருப்புய மாலே கொடாயழு மாதுமையை
மணக்குந் திருப்புகழ் சேரள கேச மலரயனுர்
மணக்குந் திருப்புணர் மாலறி யாய்விழு மண்ணிலுடல்
மணக்குந் திருப்பு மனத்தார்க்கை யென்னில் வசைசொலுமே. (39)

ஆறலேக் குங்கள்வர் பாற்புக்கு வாடு மவரையொத்துப்
பேறலேக் கும்மைவ ரால்வாடி நெஞ்சம் பிழைததும்பி
மாறலேக் கும்நிக ராயுழ லேழையை மாவளகை
ஆறலேக் குஞ்சடை யானெடுத் தாண்டதொ ரற்புதமே. (40)

புன்னகத் தாரம் புனேவாள் கிராதர் பொலங்கொடிதன்
மன்னகத் தாவம ரேசா சிதம்பர வாணமகிழ்ந்
தென்னகத் தாகித் திருக்கறுத் தாட்கொள்வ தென்றுகொலோ
பன்னகத் தாரணி மெய்யா வளகைப் பசுபதியே. (41)

சித்தம் பலத்துமெ யன்பர்த முள்ளத்துஞ் சேல்விழிமான்
முத்தம் பணித்த நகையாளொ டாடிய முத்தனித்தன்
நத்தம் பணிக்குழை யான்வில்வ மாவன நாதனின்றென்
சித்தம் பணித்துத்தன் ருெண்டரு ளாக்கினன் செப்பரிதே. (42)

துயரா மணிதரத் திங்களும் பொன்னுடல் சுட்டெரிப்ப
அயராமன் மைவிழி சோரும் மலரணே யஞ்சிடுமான்
சயராமன் றன்றுதி யேற்ற னளகைச் சடாதரன்பா
லுயரா மலகிரி பாடுவண் டீரித்தை யோதுமினே. (43)

கோவணங் காட்டிக் கதிகூட்டு நாயகன் கூடறனிற்
பாவணங் காட்டிய பாவலன் றேன்றுப் பழம்பொருள்பூ
மாவணங் காட்டி மணவாளன் வீரை வனத்தனென்பு
பூவணங் காட்டிய பூதா வில்லியைப் போற்றுநெஞ்சே. (44)

விருப்பா யசமிவர் வெந்தழற் கண்கொண்டு வேளடர்த்தோன்
நெருப்பா யசந்தந்து முப்புரஞ் சுட்டரு ணித்தனெற்குக்
கருப்பா யசந்தரு மோவறி யேன்கதி காட்டிடுமோ
திருப்பா யசம்பொலி வான்றே டளகைச் சிவன்செயலே. (45)

பொல்லேனை வேதங்கள் போற்றித் தெரித்த புகனெறியில்
நில்லேனை மாமய றாற்றிக் கதியி னிறுத்து நன்னூல்
கல்லேனை யாண்டுமு னேரேனத் தேடிய கான்மலர்க்கே
சொல்லேனை வண்டமி ழென்று னளகைச் சுகிர்தனன்றே (46)

செந்திக் குமாரனைத் தந்தா ரளகைத் திகம்பரற்கே
வந்திக் குமாரன் வதைப்பப் பசந்துடன் மண்ணுகிலள்
வெந்திக் குமாரம் புனைகிலள் பஞ்சணை மேவுகிலள்
அந்திக் குமாரப் பொழிவள்கண் ணீரென் றறையணங்கே (47)

கோடீர மீதுபொற் கொன்றையுந் தும்பையுங் கூன்மதியுஞ்
சேடீர வாரியுஞ் சேர்த்தாடு கூத்தனைச் சித்தனைக்கண்
டாடீர மாஞ்சொல்லி பங்கனை வீரை யமரரசை
நீடீர மாக்கித் துதிக்கப்பெற் றேனிந்த நீணிலத்தே (48)

மும்மலக் கமலந் தரித்துணர் வாருக்கு முன்னகட
விமலக் கமலந் தருவா ரளகை வியன் சிலம்பில்
அமலக் கமலந் தருமா கடலங்கை யள்ளியநீர்
நிமலக் கமலந் தருகடங் கைவிட னீதியன்றே (49)

கொன்றுகொன் றெக்களித் தந்தோ பலிகொளுங் கூளிகளை
என்றுநின் றின்பந் தருபா மாத்தொழு மேழைமையீர்
மன்றுதுன் றும்மணி கண்டங்கன் டொல்லைவில் வாரணியஞ்
சென்றுசென் றென்றிரண் டற்றேறங்கு சோதியைச் சிந்திமினே. 50

பாலத் தனல்விழி யான்மதற் சுட்ட பரமரத்தை
கோலத் தடமுலை செம்பாதி நித்தர் குடமெடுத்த
மாலத்த ரத்த வளநாட ரத்தர்கல் வாங்குமத்தர்
வேலத்த ரத்த ரளகேச ரெம்பா விரும்பத்தரே. (51)

மாதங் கனையுகி ராற்கிழித் தானை மலைமயிலாம்
மாதங் கனையிடம் வைத்தாண்ட வீரை வனப்பரமன்
மாதங் கனைகடல் வந்தார்த்த நஞ்சுண்ட வள்ளலொரு
மாதங் கனைத்துரித் தான்சரண் கூற்ற மனத்ததுவே (52)

இடைக்கனத் தந்தரு மென்றெண்ணி மாதர்தொய் யில்லெழுதார்
இடைக்கனத் தந்தரு முத்தவெண் மாலிகை யேன்பரித்தீர்
இடைக்கனத் தந்தரும் வீண்பழி யேகுமி னீதணியாள்
இடைக்கனத் தந்தரும் வில்வா ரணியத் திறைவரைக்கே (53)

இலங்கை யிராவணன் ருேள்முறித் தான்பலி யேற்றமகத்
திலங்கை யிராவணந் தேயுவைச் செற்ற விறையளகை
யிலங்கை யிராவண மூர்வா னமன்கடை யேற்றடுபோ
ரிலங்கை யிராவணச் சூலேவி மாய்ப்ப னிடர்தனையே. (54)

ஆடெடுத் தானம் பலந்தன்னின் மாத ரகத்திரக்க
வோடெடுத் தான்மறைக் கோட்டெடுத் தானுரை பொற்றிவைத்
மாடெடுத் தானொரு மான்பிடித் தான்வில்வ மாவனமாங் [தான்
காடெடுத் தான்றனை யோவிழைந் தாயடி கண்மணியே (55)

கல்வா ரணிமுலை காந்தளஞ் செங்கை கணைவிழியாஞ்
செல்வா ரணிகுழ றீங்கரும் பாமொழிச் செந்திருமான்
எல்வா ரணிமினி யேங்கத் தளர்ந்துயி ரெய்த்தனள்காண்
வில்வா ரணிபுணர் வீரா விரைந்துயிர் மீட்டருளே. (56)

நீறிட்ட மேனியர் வீரையில் வீரை நிழலருகே
தாறிட்ட பச்சிளம் புண்டாங்கி மாமலை தந்தநங்கை
கூறிட்ட வண்ணமுந் தேங்குங் கருணையுங் கொண்டுநின்றூர்
ஆறிட்ட வேணிகண் டாருச் சுகக்கட லாடுநெஞ்சே. (57)

வரையோ தனம்படைத் தேன்விம்மி யோங்கி மதர்க்குமன்ன
வரையோ தனஞ்சம்பு செல்லா மதனெய்ய வல்லனல்லன்
வரையோ தனஞ்சலித் தாள்வந்து கூடி மருவுமென்றே
வரையோ தனஞ்சுண்ட வில்வா ரணியற்கு மாதரசே. (58)

சிரமா தவம்புரி வார்க்குமெட் டாதகல் சின்மயமைச்
சிரமா தவவலிச் செந்தூான் றந்தை திருக்கழலுஞ்
சிரமா தவன்மதி யாக்கிய நாயக தேமலர்த்தே
சிரமா தவன்பணி வில்வா ரணியச் செழுஞ்சுடரே. (59)

மெய்யிற் றழலை யிறைத்தம் புலிசுடா வேழமொரு
கையிற் பரித்தைங் கணைதூவ மாரனெங் கன்னியந்தோ
செய்யிற் படுகுழல் சோர்ந்தாவி தேங்கின ணீதயவு
செய்யிற் பழியுனைச் சேரா வளகைச் சிவக்கொழுந்தே (60)

அந்தி யிருந்த நிறத்தா ரளகை யானுரவிற்
குந்தி யிருந்தளை யுண்டான் பரவிய கூத்தனையே
சிந்தி யிருந்தவ மாற்றிக் கடுந்துயர் சிந்தகமே
வந்தி யிருந்தமிழ் சொல்லிக் கருணை மழைசிந்துமே. (61)

கனகந் தரவிம வான்மகள் காதல கைச்சிலைநாண்
பனகந் தரமரி யப்பிட் டெரித்த பாவளகை
மனகந் தரமிலி மாரன் குவளை மலரையுடல்
கனகந் தரவெயி னுண்டுகொ லின்னுயிர் காரிகைக்கே. (62)

அவரஞ் சிவந்தக வுந்திரு மார்பனெ டண்டரயன்
அவரஞ் சிவந்தா வஞ்செய நஞ்சமு தாக்கியமே
லவரஞ் சிவந்த பதமென் வினையா மயத்தையரா
வவரஞ் சிவந்தங் கவனெழுத் தைந்து மகநினையே. (63)

வேமனம் பாலனம் வேம்பாகி நைந்துடன் மெய்மறந்து
காமனம் பாலனங் கண்டுளி சிந்திக் கலையிழந்தாள்
சோமனம் பாலனஞ் சுண்டா னளகைச் சுடர்வரையில்
நீமனம் பாலனஞ் செய்யூர வான்புகழ் நின்றனக்கே. (64)

இருவிக் குறும்பைம் புனங்காத்த வள்ளிபை யேக்றவால்
மருவிக் குரும்பை முலைதோய்ந்த வள்ளலை மாமுகனை
அருவிக்கு நேரளி யூற்று முமையை யளகைவளர்
குருவிக்கு மோட்சங் கொடுத்தாண்ட நாதனைக் கூடுநெஞ்சே (65)

அஞ்சக் காத்தன் றனக்கு மரிதறி யாய்மயிலே
அஞ்சக் காத்தலை மாவெய்த வூர்த மம்பினடல்
அஞ்சக் காத்த னடுங்கத் தலைகொய்த வத்தனெங்கோன்
அஞ்சக் காத்த னளகையம் மான்ற னணிவரைக்கே. (66)

குன்றம் புயமலை யூரர் பிழைத்தார் குறியொருபால்
மின்றம் புயமழ லைக்கிளி யாள்புணர் வீரைநகர்
நின்றம் புயத்தனித் தூற்றும் பிறைத்துயர் நீக்கவிரா
என்றம் புயமலர்ப் பான்றெருலைப் பான்வந்திங் கேழையரே (67)

பாரத் தனத்தி பணக்காரி வீரைப் பழங்கிழத்தி
தாரத் தனத்தி தமிழ்நாட் டாசி தனைமணந்தான்
பாரத் தனத்தி புனைவா னிவனும் பணமுடையான்
ஆரத் தனத்தி வருவார் பலரினி யையமின்றே. (68)

திருமாலை யன்புல வன்முதற் றேவர் தினம்பரவத்
தருமாலை யன்பவ ளத்தட மேனியன் சாக்கையரன்
கருமாலை யன்பர் தரத்திற் பொடிப்பான் கடுக்கைமலர்
மருமாலை யன்பணி வான்பதஞ் செல்ல வழித்துணையே. (69)

கம்பளங் கந்து கடமா வுரியர் கவினினைந்து
கம்பளங் கந்துக மென்முலை யேங்கினள் காண்கடுக்கை
கம்பளங் கந்து கடுத்தாட் கிரத்தல் கடனளகைக்
கம்பளங் கந்துக மாடல்செய் யாதளி காட்டனையே. (70)

மாந்திக் கனியளித் தொருமா தரசின் மயக்கமறுத்
தேந்திக் கயிலை மலைதந்த நின்னரு ளெண்ணியெந்தாய்
நாந்திக் கறிகிலன் வந்தடைந் தாற்குறை நாடிமனச்
சாந்திக் கழைத்திரு வென்னுய்கொல் வீரைத் தனிப்பொருளே. (71)

ஆலால முண்டந்த நாட்டே வரைக்காத்த வாதிவலப்
பாலால முந்துடி யுங்கன்று மானிடப் பாணிவைத்தான்
சீலால முங்கொன்றை யுந்தங்கு வேணிக் கிரிசனொரு
காலால முந்தம் பலத்தாடி வீரை கதியெமக்கே. (72)

ஏகம்பத் தானை மலையான் மருகனை யேழிசை சொன்
மாகம்பத் தானை யளித்தானை வீரை வளர்மணியை
நீகம்பத் தானை யுரித்தானைப் போற்றி நெகிழ்ந்துருகிச்
சோகம்பத் தானை மனமே விரைந்துட றுஞ்சுமுன்னே. (73)

துப்புக் குடந்தரு மாலய னண்டரைச் சூழ்சுடரைத்
தப்புக் குடம்படு சூலிவில் வாரண்யன் சைலமதில்
செப்புக் குடமுலை மாஞெரு காளைபின் சேர்ந்ததுண்டோ
வெப்புக் குடம்படு கானந் தவத்துறை வேதியரே. (74)

கல்லாக் கயவர்தம் பாற்புக விட்டிடல் காழியர்க்குப்
பல்லாக் களித்த பரமா வெளியர்வைப் பாநிதியே
வில்லாக் கனக மலைகுழைத் தாயுயர் வீரையரா
நல்லாக் கமேதந் திரப்பார்க் கிடவா நல்கரசே. (75)

கண்டீர வம்மிடை யாம்பல்செவ் வாய்முலை கல்விழிமான்
கண்டீர வம்மொழி யார்குழி மோகக் கடல்விழுந்தென்
கண்டீர வந்தி யெவர்தோய்வர் தூசு கழுவியிடுக்
கண்டீர வந்தாடும் வீரையி லின்பக் கடலினுக்கே (76)

பட்டிதந் தெச்சிலு முண்பா ரணையிற் பசப்பியரைப்
பட்டியுங் காட்டுவ ரந்தோ கொடுவினைப் பாவிகளப்
பட்டிகள் பாசக் கடருண்டி யின்பப் பரவைப்புகப்
பட்டிநின் ருமரைத் தாடா வளகைப் பசுபதியே. (77)

அத்தத் தனந்தழு வும்மயன் காணு வளகையனென்
சித்தத் தனந்தழு வக்குழை யான்பொடி செய்தமதன்
நத்தத் தனந்தழு வித்துளைத் தான்கணை நான்குமுன்றன்
முத்தத் தனந்தழு வேமாவி நீல முடித்திடுமே. (78)

ஆகொற்ற மானைச் செற்றுயுன் றெண்டினை யாற்றரியார்
சோகொற்றி யாடுஞ் சுடுகாட் டனலஞ் சுடுவதற்கோ
கோதொத் துடலச் சுமையெடுத் தார்வீரைக் குன்றவில்லி
பாகொத் தினிக்கும தோதீ நரகமப் பாதகர்க்கே (79)

சென்னியைத் தொட்டவ ளோதினந் தேங்குவள் சேர்த்தணைத்த
பன்னியைத் தொட்ட பரவைத் துறைவன் பதியில்விட்டாய்
வன்னியைத் தொட்ட வளகேச சாலவுன் வாழ்வுநன்றெங்
கன்னியைத் தொட்டனை யெவ்வா று காலங் கடத்துவளே. (80)

தெண்ணீர் வளைத்த புவியாண்ட மன்னருஞ் செல்கைகண்டாய்
எண்ணீர்மை யற்றிடை யேழைநெஞ் சேதனத் திற்றரையில்
புண்ணீர் வடிக்கு மடமாதர் போகத்திற் புக்கழியேல்
கண்ணீ ரொழுக்கள காநகர்ச் சம்புவைக் காதலித்தே. (81)

கைவாங்கி நாலு மறைபுகழ் வன்னி கடன்முளைத்த
மைவாங்கி நாகர் தொழவைத்த வீரை மணிமிடற்றோய்
வைவாங்கி நாட்சுமந் தாளரு ளீர்மதன் வந்துகரும்
பைவாங்கி நாலுப்யு மோசிலை வாணுதற் பைங்கொடியே. (82)

நெஞ்சத் திடரி லகந்தையென் பாதவ நீண்டுவஞ்சம்
விஞ்சப் பெருக்கிக் கவடுகண் மூடின வீரையரன்
அஞ்சக் கரமெனும் வாளா லறுத்துய ரன்புவித்திப்
புஞ்சக் களைபறித் தேன்வளர்த் தேன்சிவ போதத்தையே (83)

ஒருமூலங் கல்வி முடியிற்புண் செய்தார்க் குடற்பிணியுங்
கருமூல முங்கெடுத் தின்பந்தந் தாண்டருள் கண்மணியே
திருமூல நாட்பரி மேல்வந்த சேவக சித்தமறைக்
கொருமூல மேவீரை யுண்மூல மேயரு ளுத்தமனே. (84)

கானவன் செய்தவம் யாரே செயவலர் கத்தமுடிக்
கூனவன் காட்டவு நீமகங் காட்டினை யூர்ந்துமாக்
கானவன் பச்சிலைக் கும்பூ வளித்தனை கைப்பிடித்த
மீனவன் மைமல ரிட்டா லெரித்ததென் வீரையனே. (85)

கொல்லுங்கண் ணரவம் ஞாயிறும் பட்டது கோட்சவரர்
வெல்லுங்கண் ணரவஞ் சாராம லின்றெம் விருந்தருந்திச்
சொல்லுங்கண் ணரவம் நேருமை கோன்வீரை சூழ்ந்துபின்பு
செல்லுங்கண் ணரவங் கையாற் றொழுதுந் திருநகர்க்கே. (86)

சிந்திக்கு மாமன நாவாழ்த்து மங்கை சிரம்பணியுந்
தந்திக்கு முன்னின்ற சாரங்க பாணிகண் டாளிவிட்டு
வந்திக்கும் வந்தனை யேற்றுழி யீய்ந்த வரதனிலை
தந்திக் குவலயந் தாரா னளகையிற் சம்புவையே. (87)

ஏரார் பசுங்கிளி வாய்ச்செம் பவள விளங்குயினற்
சீரா ரழகிநின் றெவ்வரி னெல்கிய சிற்றிடையாள்
வாரார் தனத்தி யுனக்கேற்ற பெண்ணிங்கு வாவளகை
வீரா கரும்புணக் கைகூலி யும்பெற வேண்டுவரே. (88)

முத்திக்கு வித்தம் பரமா யகன்ற முதலடியார்
பத்திக்கு வேண்டும் படிதோன்றி யாளும் பசுபதிதாள்
சித்திக்கும் வீரை நகர்மேவி வஞ்சந் திரித்துமனுக்
கத்திக் குவியெழி னுவே பழவினைக் கட்டறற்கே (89)

அச்சங் கெடுத்தவ ரோடிணங் கென்று கம்முரைத்தார்
அச்சங் கெடுத்தவர் வேதனை வீரை யணிவரையில்
அச்சங் கெடுத்தவ ரண்ணலஞ் சேலென் றடர்கரியின்
அச்சங் கெடுத்தவர்க் கன்றியென் னுர்ப்ப தணிமுரசே. (90)

அரைச்சோம னுர்சடை யர்ள காநக ரண்ணலன்பர்
வரைச்சோம னேர்முலை தொட்டார் வருடி மகிழ்வளித்தென்
அரைச்சோ மனையவிழ்த் தாரணைத் தார வமயத்தினீர்
கரைச்சோ மதங்கி கணைக்க ணிமைத்தன காணிதுவே. (91)

காதாடு பாம்பனைக் கைகூப்பு வீரையிற் கண்டனங்கன்
வாதாடு மாறுரை யூரலர்க் கேங்கி வசமழிந்தாள்
சூதாடு கொங்கையைத் தொட்டணைப் பாயென்று சொன்மறுத்தால்
தாதாடு கொன்றையந் தார்வாங்கி வாவெழிற் றுதியின்றே (92)

சிட்டரைக் காணினன் னெஞ்சே யவர்மலர்ச் சேவடியைத்
தொட்டரைக் காற்கன்ன லேனுங் குழைந்து தொழுபுலியூர்
நட்டரைக் கான்வீரை நாதரைச் சிந்தித்து நாள்கழியாத்
துட்டரைக் காலன் றமர்தமைக் கைத்ததி தூரமில்லே. (93)

பொன்னிலங் காதரங் காட்டுநம் பூவை புணர்வடிவும்
இன்னிலங் காவல்செ யண்ணல் வடிவு மியல்பளகை
மின்னிலங் கார்முடி யாரரு ளாலிவர் மேயமணக்
தென்னிலங் காபுரி செற்றுனைத் தேவியைச் சேர்தருமே. (94)

கலைக்கஞ்சு கட்செவி யின்பட நேருங் கடிதடத்துக்
கிலைக்கஞ்ச மென்சுழிக் கந்தர மாகு மிடைக்கு மலை
முலைக்கஞ் சுகமொழிக் காம்பற்செவ் வாய்ச்சியர் மோகவிழி
வலைக்கஞ் சிலமள கேசனஞ் சக்கரம் வாய்த்ததுவே. (95)

காமனம் பாகங் கருக்கித் துளைக்கவெங் கன்னிமயங்
காமனம் பாகங் கனியுங் கசந்துடுக் காமலுறங்
காமனம் பாகங் கராவென்று மாழ்கிக் கதறிவில்வக்
காமனம் பாகங் கவினுநின் மாலையிற் கண்வைப்பளே. (96)

முத்தந் தருமுலை மெய்ப்பாதி வித்தக முப்பொருளாய்
நித்தந் தனித்த பொருளா யசைவற நின்றுதொழில்
நத்தந்த நாயக தொண்டருள் ளம்பயி னுண்மலர்த்தாட்
பித்தந் தனையனுக் காமாறு செய்வீரைப் பிஞ்ஞகனே. (97)

மலையாத வன்றிலுங் தென்றலுங் கங்குலு மாரனம்பும்
மலையாத வன்றிங்க ளம்பகன் பாற்கொன்றை வாங்குதிரு
மலையாத வன்றின மேத்தள கேசன் மறுக்கிலெதிர்
மலையாத வன்றிருக் கோருடை தொட்டீர்த்து வாமயிலே (98)

மானிடங் தீச்சுடர் வைத்துகந் தாடிய மன்னவில்வக்
கானிடங் கொண்ட கருணை கராவுன் கழலளித்திவ்
வூனிடந் தின்ப முறவைப்ப யோகரு வூரிலின்னும்
மானிடந் தான்றரு வாயோ வுரைத்தி மனக்கருத்தே. (99)

சீனறு தாய்முலை யுண்ணத் தாராதயர் தீர்மனமே
பானறு தீஞ்சொல்லி பாகன் கயிலைப் பனிமலைக்கோன்
வானறு செஞ்சடை வைத்தவ னம்பல வாணினித்தன்
தேனறு பூம்பொழில் சூழள கேசன் றிருவடியே. (100)

திருச்சிற்றம்பலம்.

அளகை யலங்காரம் முற்றிற்று.

உ

சிவமயம்.

மகாகணபதே நம:

திருச்சிற்றம்பலம்.

அளகை யுமை யந்தாதி.

காப்பு.

தாமரைக்கு நேராஞ் சதங்கைப்பொற் றுடருவான்
மாமறைக்கு மேலா மலைமயிலைக்—கோமளையை
அந்தாதி யில்லா வளகையுமை யைப்போற்றி
அந்தாதி சொல்லவைங்க ரன்.

வாரண ஞானன் காண விறைசெவி வார்குழைவெள்
வாரண ஞானன் மன்னு மளகை வளருமையாம்
வாரண ஞானன் றங்கையந் தாதி வழுத்துதற்கு
வாரண ஞானன் பங்கயத் தாளெம் மனம்வருமே.

நூல்.

பூமக ளம்பணி மேனடித் தானுந்தி பூத்தவன்சேர்
நாமக ளம்பணி மேவு மளகையி னரிதமிழ்க்
கோமக ளம்பணி கோமான் வாமங் குலவுகுயிற்
றுமக ளம்பணி பூங்குழ லாளடி சார்ந்துயுமே. (1)

உய்யும் படியருள் செய்வா ளுமையவ ளுந்தமிரு
கையும் படிந்து தலைமேற் குவித்துக் கழல்வணங்கி
மெய்யும் படியும் புனன்மொக்கு ளாமால் விரைந்துதவஞ்
செய்யும் படிறறுத் தின்றேவில் வாரண்யஞ் சேர்ந்திருந்தே. (2)

சேலோ கருங்கு வளையோ மயிலுறை சேவகன்கை
வேலோ கணையோ விரிகட லோவடு வோமின்றே
ஆலோ வமுதோ வறிகிலன் யாதோ வறைதிநின்கண்
மாலோ டயன்மறை நின்றேத்தும் வீரையின் மாதரசே. (3)

அரைசேர்ந்த பட்டுடை யார்பால தாகி யயர்ந்துகொங்கை
வரைசேர்ந் திளைத்த மனமே தொலைத்தென் வழிவருவாய்
தரைசேர்ந் திலையுமை வீரைப் பிராட்டியெந் தாய்தருவாள்
விரைசேர்ந்த தாரணி விண்ணோர் தொழும்வெள்ளி வேதண்டமே (4)

தண்டந் தவிப்பற வேபங் கயத்தா டருமுமையாள்
தண்டந்த வெண்ணகை யாள்வா ழளகைத் தலந்தனைநத்
தண்டந்த மில்புகழ் சொல்லித் துதியந் தகன்புரியுந்
தண்டந் தவிர்த்தும்பர் மேவுஞ் சிவபுரி சார்வதற்கே. (5)

சாகாதி யுண்டுடன் றன்னை வருத்தித் தனிவனம்போய்த்
தேகாதி யைந்தவித் தானு முமையடி சிந்தைவைத்து
மாகா திபர்தொழும் வில்வா ரணியம் வணங்கிலரேல்
ஏகாதி பத்தியஞ் செய்மட வாளரு ளேதவர்க்கே. (6)

ஏதந் தகன்றுய ரிம்மா னிலமுண்ட வேந்தலருள்
சாதந் தருமயன் றுயகட் டாக்கிலன் றூர்மணந்தான்
காதந் தருமள காநகர் வாழுங் கயற்கணிநற்
போதந் தருமுமை பொற்பாத சேவை புரிந்திடினே. (7)

நேயத் தளகையை நேர்ந்துமை யாம்பிகை நீலிநந்தந்
தாயத் தரினுந் தயையுடை யாளன்பு தான்பெறலாம்
மாயத் தனுமனை வாழ்க்கையி லெய்த்த மயக்கறுத்திக்
காயத் தலைமையிற் சூழுநெஞ் சேதொண்டு காதலியே. (8)

காட்டிருந் தானுமெ னந்தக ஞேலை கடுகிவரும்
நாட்டிருந் தானுமெ யன்பருக் கஞ்சுவ ஞுன்முகன்றன்
ஓட்டிரந் தானுடன் மேவு மளகை யுமைபுகழைக்
கேட்டிருந் தாற்சுக மாகுநெஞ் சேபகைக் கேடிலையே. (9)

ஏதோ வனிதயர் பொல்லாத மாயப்பித் தேறிநைந்தேன்
காதோடு வாள்விழிக் காரிகை பேயனுன் கான்முளைகாண்
வாதோது வாயலை மாயா வருட்குண வாரிதியே
தீதோவ நல்லருள் செய்தா ளளகைத் திரிபுரையே. (10)

திரிபுரை சங்கரிக் கன்னியர் மையலைத் தீர்த்தலையிற்
றிரிபுரை சங்கரிக் கும்மள காநகர் செல்லுமினத்
திரிபுரை சங்கரி நேருந் தனம்பகஞ் செங்களங்கட்
டிரிபுரை சங்கரி பாதாம் புயத்தொண்டு செய்வதற்கே. (11)

தக்கோலங் கூட்டுந் துவர்க்கா யிலையுண்டு தான்மயங்கி
மிக்கார்தங் கைப்பொரு ளொப்பத்தம் போகம் விளைப்பவர்பா
லெக்காலு மிம்மியு மீயா தளகை யிறைவிதொண்டிற்
புக்கா தரித்தவர் செல்லார் நமன்றன் புரத்தினுக்கே. (12)

புரம்பொடித் தார்சிறு புன்னகை யான்மலர்ப் பூங்கணைவேள்
புரம்பொடித் தார்குளக் கண்கொண்டு கைகொண்டு பூந்தவிசான்
சிரம்பொடித் தாருள் செய்வதென் றுயர் சிறுவருறுந்
தரம்பொடித் தாளத் தகாதோ வளகையிற் சங்கரியே. (13)

சங்கரி பூசிக்கச் சக்கர மீய்ந்தவர் தாமெளியர்
பொங்கரி பூணுவ ரென்பணி கொள்ளுவர் போயிரப்பர்
வெங்கரி பூங்கம் பளர்வீரைக் காட்டக மேவிநிற்குச்
சங்கரி பூம்பட் டுடையிரந் தாரெங்கு சாற்றுவையே. (14)

சாற்றுவை சாக்கை யுமையாம் பிகைபுகழ் தாழ்ந்துபதம்
போற்றுவை வேலனைப் பெற்று ளருள்பெறப் போற்றிவினை
மாற்றுவை கற்பிகம் வேண்டாந் தொடர்ந்தென் வழியிலரும்
பேற்றுவை யாசை மடநெஞ்ச மேசல்ல பெற்றியிதே. (15)

பெற்றேன் பெறற்கரி தாயவெப் பெற்றியும் பெற்றவல
மற்றே னகங்களிப் பெய்தின ளுண மாட்ந்ததியாப்
பொற்றேன் மலைவளர் பூங்கொடி வீரைப் புராதனிதாட்
குற்றேவல் செய்யத் தமியே னிதயங் கொடுத்தவன்றே. (16)

கொடுத்தவ ராக்கல் வளைத்தார்க் கிருமணங் கூடியநாள்
கொடுத்தவ ராக்கலில் வைக்கத் திருப்பதங் குற்றமற்ற
கொடுத்தவ ராக்கல் குணமா லளகை குறுகியன்பு
கொடுத்தவ ராக்கற் பணிசெய்து மெய்த்தவங் கூடுநெஞ்சே. (17)

கூத்தாடி நாடகத் தைப்பழிப் பார்கரங் கூப்பிநின்றேத்
தாத்தாளம் போடுவ ராடுவர் பாடித் தமைமறப்பர்
காத்தா ளுவையென்பர் கண்டெக் களிப்பர் கரைந்தழுவர்
ஆத்தா ளளகை யுமையடித் தொண்டர்த மன்பெளிதே. (18)

எளிதே பயன்றரு மிவ்வுடல் வாய்ப்பரி தேழைநெஞ்சே
ஒளிதேங்கி மாயுமு னன்ருற்றி மோக்க முறவுன்னுதி
அளிதே மலருண் டிசைபாடு சோலை யளகையுமை
தளிதேம்பு வார்மலர்க் கோதைநிற் காக்குமித் தாரணிக்கே. (19)

தாரணி வார்குழற் றையல ரின்சொற் றனையரகந்
தாரணி வான்பொருள் யாதோ வரிதுமை சங்கரிவாழ்
தாரணி வான்படுக் கும்மள காநகர்ச் சார்ந்துதுதித்
தாரணி வாழுவர் தேவேந்த்ர லோகந் தனிலினிதே. (20)

இனிவருந் தேகமி யாதோ வறிகில னேற்றடுத்து
நனிவருந் தூயவர்க் கிட்டுண்ண வீரையி னுரியருள்
முனிவரு மன்னரு முன்னுவ பொன்னுன் முடியுமென்று
கனிவருஞ் சொன்மணி வாசகங் கூறுவ காதலித்தே. (21)

காதலித் தார்பெறு வார்கதி வேடன் கருப்புவில்லிற்
காதலித் தார்முல்லை மாநீலம் பஞ்சிற் கணைநிகராங்
காதலித் தார்கை தொழுதேத் துவாள கைப்பதிபோய்க்
காதலித் தார்க்குழ லாரணங் கேபென்று கான்மலரே. (22)

மலரோதி மம்பயில் செய்சூழும் வில்வ வனத்துமையாம்
அலரோதி தாடொழுப் பெற்றூர்க்கு வீடு மணித்துநல்லார்
சிலரோதி பெற்றனர் நெஞ்சே மலவலி தீர்தலுண்மை
பலரோதி வைத்த நெறிநின்று சிந்தனை பண்ணனன்றே. (23)

பண்ணப் பலபகல் வேண்டும் பிறவறம் பாழ்த்தகொலை
எண்ணப் படாதழ லுய்க்குமென் றந்தோ வெழுதிவைத்தார்
கண்ணப்பர் செய்கொலை காதலித் தேர்ந்தினர் காணளகை
வண்ணப் பசுங்கிளி நின்னுதன் வீரன் வழக்குநன்றே. (24)

வழக்கன்று கூறியொ ராவணங் காட்டி மணங்கெடுத்தார்
உழக்கன்று பொற்சுமை சோனுக் காவண முய்த்திரந்தார்
மழக்கன்று மான்விழிப் பேதைநின் ருதை மநஞ்சிதைத்தார்
சழக்கன்று கொல்லவர் நட்பள காநகர்த் தற்பரையே. (25)

தற்பரை யம்பிகை யம்மை சிவையுமை சத்திபரை
பொற்பரை யன்மக ளாரியை நாரி புராதனிதாட்
கற்பரை யானவி நாடிவைத் தேத்துமி னல்லலறச்
சிற்பரை யந்தரி வில்வா ரணியத்திற் செல்லுமின்றே. (26)

செல்லேத் திமிரத் தளேந்தாய் கியகருஞ் சேட்டெருமை
பல்லேத் திறந்தழற் கண்ணூற்ற வுய்த்தெதிர் பாய்புலிபோல்
எல்லேத் தினந்தவ ராவரு கூற்றனுக் கேதுசெய்வீர்
ஒல்லேத் திருவளர் வில்வா ரணிபத முன்னுமின்றே. (27)

இன்றே குணுகுணங் கண்டுகை விட்டன மோளகை
சென்றே முமையடி சேவைசெய் தோமயல் சிந்திவிட்டேம்
என்றே புளுகுவ ரோமாற்றி வெளவுவ ரீரமின்றிக்
கொன்றே யருந்துவர் போவார் நரகக் குழியினுக்கே. (28)

குழிக்கே தலேவகஞ் சோற்டு நாடு குலவரைக்குக்
கிழிக்கோ வணமுண்டு மாநிலப் பாயுண்டு கேளுமையாம்
பிழிக்கே தகைமணஞ் சூழள காநகர்ப் பேதையுண்டு
கழிக்கே வலந்தரு வாண்மற்றி யாதினுவங் காதலின்றே. (29)

இன்றே யகிலமோ ரேழும்பெற் ருக்கி யிறைவனிடம்
நின்றே தொழில்செயு நீலியம் பாலிகை நிற்குணிபொற்
கன்றேறு காந்தட் காவல்லி வீரைக் கடப்பிடிபோல்
ஒன்றே யெனநின்ற தெய்வங்கண் டானுரை யுண்மைநெஞ்சே. (30)

நெஞ்சே கவலேகொள் வாயலே யாருனே நேர்வருமை
தஞ்சேகொண் டண்டருக் கெட்டாத பொன்மலர்த் தாளிருத்தி
யுஞ்சே களித்துந லின்பம் பருகினே யூழ்துறந்தாய்
அஞ்சே லினியெவைக் கும்போக மோட்ச மரிதலவே. (31)

ஏவிற் பொலிவிழி யாரேவ லூதிய மென்றருங்கை
மாவிற் பொலியு நிலவாழ்வுங் கற்பக வானரசும்
பூவிற் பொலிவு மலைவாழ்க்கை யுந்தரும் போய்ப்பணிமின்
தேவிற் பொலிந்த வுமைவாழும் வீரை செகத்தவரே. (32)

செகந்தந்த நான்முகற் கென்னன்றி செப்குதுஞ் செங்கையொன்று
முகந்தந்த வாரணந் தந்தா ளளகை முதல்வி தொண்டிற்
ககந்தந் தணிகர ணங்களுந் தந்துநல் லாற்றறந்தான்
மகந்தந்த செஞ்சொற் கலைவாணி நாயகன் வாழியவே. (33)

வாழ்வாக் குவைசிலர்க் கந்தோ சிலர்க்கு வயிற்றினுக்குக்
கூழ்வாக் குவைசிலர்க் கென்னே யிரக்கக் குவலைபத்திற்
ருழ்வாக் குவைசிலர் தாமோ தனையரெந் தாயளகை
யாழ்வாக் குமையணங் கேநிலம் பூத்தவர் யாரவரே. (34)

யாரவர் தாய்தந்தை சுற்றமுண் டோவிலம் யாங்ஙனநற்
சீரவர்க் கென்னை யிடும்பிச்சை யேற்றுணுஞ் செல்வனறி
பேரவர்க் குப்பேதை வீரனென் பார்வீரை பேணினுநல்
நாரவர் பால்வைத்த னன்றே யிமய நறுநுதலே. (35)

நுதலைப் பொருத்த விழிகொடுந் தீயினி நோக்கிலொன்று
திதலைப் பருத்த முலையாரைக் காய்தி தினகரப்பேர்
முதலைப் பரித்த விழிகனற் றுந்தீ முதல்வனுந்தி
புதலைப் பொருத்த குழல்வீரை புக்குப் புணர்ந்ததென்னே. (36)

என்னே ரமுமுனை யேவேண்டி நின்றவென் னேக்கறுக்க
நன்னேர மென்னோ மோவறி யேனித நாடிபெற்றேன்
அன்னே யுமாபரை யானந்த வல்லிநல் லாதரஞ்செய்
பொன்னே மணியே யளகையின் மேவிய புத்தமுதே. (37)

தேவ ரவிந்தழி யாதவர்க் காக்குந் திருவளகைத்
தேவ ரவிந்தனு மாலுந் தொழுமுதற் றேவிவெண்ணத்
தேவ ரவிந்தங் களங்கண் பகமுகச் செல்விதருந்
தேவ ரவிந்த மெனவர மேற்கவென் செங்கையுண்டே. (38)

செங்கைக் கிடுவளை விற்று ரிடந்தனைச் சேர்ந்தசெல்வி
அங்கைக் கிளிவள ரானந்த வல்லி யழகிமலை
மங்கைக் கிடுமிறை யாமனம் போக்கினன் வாழ்வுதந்து
கங்கைக் கிளையளித் தாள்வீரை தன்னிற் கடையனுக்கே. (39)

கடையருக் கேதென்ப தில்லைத்தென் பாண்டியன் கன்னிவெள்ளை
விடையருக் கேவல் புரிவார்க் கமைத்ததவ் வீடுகண்டாய்
மிடையருக் கேயற வேண்டி லளகையை மேவிநெஞ்சே
தொடையருக் கேபுனை வாடா மரையடித் தொண்டுசெய்யே. (40)

தொண்டாய பொள்ளலி னீரு மலமுஞ் சொரிந்துவிழும்
பண்டார மாமிக் குரம்பையைப் பேணிப் பயன்சிறிதுங்
கொண்டா யலையினி யேனு மளகைக் குமரியெந்தாய்
கண்டாய மென்மொழி சிற்றடிக் கேயிடு கைமலரே. (41)

மலராத னன்மகன் பாலைவர் தூதாகி மாய்த்தவரி
மலராத னன்மக வானும்பர் வேலை மதித்தவந்நாள்
மலராத னன்மக ளத்திட் டவனிட மங்கையுன்வாய்
மலராத னன்மகற் கேச்சல்ல வோவீரை வாழுமையே. (42)

உமையோல மென்றடி புக்கணை வீருற வாகிநின்று
நமையோதி தந்தளிப் பாள்வில்வ மாவன நாரிபெருஞ்
சுமையோ திரிபுரை சுந்தரி நீலி துரந்தரியாய்
அமையோக நாயகி யாரணி காவென் றறைவதுவே. (43)

அறைகொட்டி யேங்கலன் றேமுறை நின்ற னடிக்கமலம்
முறைகொட்டி யேங்கன் முறையோ வசதியென் முல்லைவனம்
நறைகொட்டி யேங்களிக் கூட்டு மளகையி னுரிநலம்
பறைகொட்டி யேங்குங் கடைநாளி லோசெய்வை பார்ப்பதியே(44)

பதியுமை வேண்டும் பரகதி கூட்டும் படியிலிம்மை
நிதியுமை வாகனன் போலாக்க முந்தரு நேயமிக்கு
நதியுமை மேகமு நாகமு மூர்சடை நாயகன்பால்
வதியுமை யாம்பிகை சேவடி வீரையில் வந்தகமே. (45)

அகமே துயர மழித்துத் தினமகி ழாக்குவள்பொன்
நகமே யெனுமுலை நாரியர்ப் போற்றியி நாள்வரையிற்
சுகமேது கண்டனை பொல்லா மயக்கந் தொலைத்தளகை
மகமே தருமுமை செம்பஞ் சடிக்குச்செய் வந்தனையே. (46)

வந்தனந் தங்கயன் மாலிந் திரனரி வான்மதியம்
வந்தனந் தன்சுடர் வன்னியு மாலமும் வானவரும்
வந்தனந் தந்தேத் துமையாம் பிகைசரண் மாவளகை
வந்தனந் தந்தரம் போற்றுவர் சேருவர் வானகமே. (47)

வானவர் கோன்மக வான்பழி தீர்த்தவர் மானிடத்தர்
கானவர் கோன்மக வாகா தளித்த கடவுணை
யானவர் கோன்மக ளங்கயற் கண்ணி யளகைநகர்
போனவர் கோன்மக ரத்துயங் கார்நமன் போரிலையே. (48)

இலையிற் படுமறல் போனிலை யின்றியெ னேழைநெஞ்சம்
வலையிற் படுமொரு மானெனத் துழல்வது மங்கையுமை
சிலையிற் படுநுத றேர்ந்திலை ஞேயந் திகழளகை
மலையிற் படுமுலை மாதே கதியினி மற்றுமுண்டே. (49)

உண்டே யுபாயந லூணமக் குற்ற துமையினிரு
தண்டேன் பொழிந்தன்ப ரூட்டும் பதாம்புயந் தாங்கிநித்தந்
தொண்டே புரிகுவஞ் சண்டனுங் கஞ்சனுந் தோமாமுந்
தண்டே யெனும்படை யுந்தொட் டிடாரிலை சஞ்சலமே. (50)

சஞ்சல மேயுட லென்பதற் கையமென் சஞ்சலமே
சஞ்சல மேகிற் சுமந்திம மிடடுத் தழல்வளர்த்துச்
சஞ்சல மேற்றெளிப் பாரது கண்டுந் தனுவினசைச்
சஞ்சல மேன்றெழு வாயோட்டும் வீரை தழைத்தமின்னே. (51)

மின்னே ரிடைமட மானார் மயலின் மெலிந்தவரைப்
பொன்னே மணியே யெனப்புனைந் துன்புகழ் போற்றறியாக்
கன்னேர் மனத்தனுக் குண்டுகொ லோகட் கருணைவெள்ளம்
அன்னே யமரர் சிகாமணி வீரையி லாரணியே. (52)

ஆரணி நாம வபிராமி வாமி யமலையுமை
நாரணி நாயகி யம்மை பகவதி நங்கைசிவை
காரணி நாரி கவுமாரி தேவி கவுரியையை
பூரணி நாதற் கொருதுணை வீரைப் புராந்தகியே. (53)

தகியேல வார்குழற் சங்கரி சாம்பவி சாமநடச்
சிகியே யளகையிற் சிற்பரை யேவினைத் தீத்திரளை
யகியேறு செஞ்சடை யம்பல வாணனெத் தாடுமிந்து
முகியேக நாயகி நிற்பூம் பதந்துணை மும்முலையே. (54)

முலையே ழிசைதரும் பால்வாக்கு நோக்களி மொண்டுருக்கும்
விலையேறு முத்தொளி வெண்ணகை காட்டும் விமலைதனைப்
புலையேக வேத்தித் தொழுதள காநகர் போந்தவர்சம்
உலையே றியகரும் பொன்னிற் படுதுளி யொக்குமன்றே. (55)

ஒக்கு மளகை யுமைசேவை யாற்பகை யூழ்த்தலின்றிக்
கைக்குந் தனத்தி னுலகீர்கொள் காதலொண் கண்சிவந்து
பைக்கும் படநடப் பாம்பிரை யாயதன் பற்கிலக்காச்
சிக்குங் கயச்சிறு பாம்பிரை தேடுந் திறந்தனையே. (56)

திறந்தனை போலுப சாரஞ்செய் தன்பு திளைத்தமுதை
யறந்தனைப் பேணி யளித்துண்மி னுதுலர்க் காக்கநில்லா
மறந்தனைப் போக்கிநல் வாழ்வளிப் பாள்வில்வ மாவனத்தாள்
இறந்தழிந் திவ்வுடல் வெண்சாம்ப ராமுன மிற்கடையே. (57)

கடையனென் றுலுங் கதிகாட்டு நின்பூங் கழல்விழைந்தேன்
மடையனென் றுலு மகவுகண் டாய்மலை மாமயிலே
யிடையனென் றுனருந் தங்கைவில் வாரணி யென்னப்பனுஞ்
சடையனென் றுயின னன்றுன முக்கண்ணி தாதலையே. (58)

தலைப்பார வெண்பிறை சூடிபொற் கூடற் சமணருயிர்
குலைப்பான் றமிழ்மறை கூறிய காழியர் கோன்பசிக்கு
முலைப்பா லளித்தபெண் முத்தமிழ் வீரை முதல்விநறும்
பலைப்பான் மொழியரு ளாயேலென் செய்குவன் பாவமிதே. (59)

பாவந் தனந்தந் திளைத்துப்புன் பாவையர் பான்மயங்கிப்
பாவந் தனந்தந் துதியோது மானிடர் பாவமென்னே
பாவந் தனந்தந்த மின்னிடைச் சங்கரி பார்ப்பதிதாட்
பாவந் தனந்தந்து வீரைபுக் காக்கிலர் பாதகரே. (60)

பாதகங் கைத்தவர்க் கில்லைகண் டாயகம் பாணிரயம்
மோதகங் கைத்தலத் தானை முருகனை முன்பயந்தாள்
போதகங் கைத்தட மானுமை யாம்பிகை பொன்னடிக்கே
சீதகங் கைத்தள மிட்டேத்தி வீரையைச் சேர்ந்துமன்னே. (61)

மன்றாடு கூத்தன் மணவாள னாரொற்றி மாமலையாந்
தன்றாதை தாயிரும் பேய்க்கணஞ் சுற்றந் தனையரிலோ
வொன்றானை தாதைக் குபதேசி மற்றவ னெண்டொடிக்கிங்
கென்றா டசதிக் குரைப்பதென் வீரையி லென்னனையே. (62)

அனையா யெனைப்பெற் றனுத்தவர் கோடிக் கதிகமின்ப
மனையாளு மக்களுங் கோடியிற் கோடி மகிதலத்திற்
சினையாமை பங்கயத் தேதுயில் வீரைச் சிவையயனும்
நனையா ரிருந்தொடைக் கூற்றுஞ் சலித்தனர் நல்கருளே. (63)

நல்லா யுடற்சுமை வேண்டே னுனது நளினபதத்
தல்லாதொ ராதர மில்லைகண் டாயுமை யாரணங்கே
கல்லா தவன்றனக் கில்லையென் றால்வினைக் காட்டினிடைப்
புல்லாய்ப் பிறக்கும் படியா கினுமருள் பொற்கொடியே. (64)

கொடியே றியகலி செய்கொடுந் தீமை குலைத்தருளுன்
அடியே துதிக்கு மடிமையன் றோகுண வார்கலியே
கொடியே றியமதிற் கூடற் கவுரியர் கோன்மனைதன்
மடியேறி முத்தந் தருவாயளகை மடமயிலே. (65)

மயிலேந் தியகுகன் வள்ளிக் கிசைந்தவன் வானவர்கோன்
அயிலேந் தியகான் றாயண்ட மெல்லா மகடமைத்தாய்
வெயிலேந் தியபழ மூதூ ரளகை விமலைமழக்
குயிலேந் தியமொழி நின்னாத னெங்கள் குலகுருவே. (66)

குருவாகி வந்து மலவேர் பறித்துக் குணமளிக்கும்
பெருவாரி நஞ்சுண்ட பித்தனைக் காமுறும் பேதைவரந்
தருவா ளழியலை நெஞ்சே யளகைத் தலம்வணங்காய்
யுருவாகி மாதரை மேவா திருக்கு முணர்விதுவே. (67)

வேயாருந் தோளியர் மேலாசை கேடு விளைக்குமன்றி
நோயாருங் கண்டவ ரேசுவர் கைப்பொரு ளேன்மைகுன் றுந்
தாயாரும் பெண்டிருந் தள்ளாப் பெரும்பகை சாக்கைநகர்ச்
சேயாருஞ் சிற்பரை பாலாசை வைத்துத் திரிமனமே. (68)

மனக்குரங் கேகடற் பார்தாண்டி யெய்த்து மயங்கியுமை
சினக்கும் படிதிரி வாய்வில்வ மாவனஞ் சேர்கிலைபா
லுனக்கு மெனக்கு முறவே தினியலை யோகெடுவாய்
கனக்குந் தனத்தி கருணும் பகங்கொடு காண்பதென்றே. (69)

காண்பது வீரையிற் காமாட்சி நின்னுருக் கண்டுமுடி
பூண்பது சிற்றடிப் பொற்று மரைமலர் பூவையுன்மேன்
மாண்பதம் பாடுவ னல்லா தயர்ந்தும் மறித்துழன் று
வீண்பழி சேர்சிறு தெய்வந் தொழேனுண்மை மின்னிடையே. (70)

மின்வண்ணத் தாழ்சடை வீரைப் பிரானிட மேவிநிற்கும்
பொன்வண்ணத் தாமரைப் பூம்பதத் தாய்புவி பூத்தழித்துத்
தன்வண்ணத் தாக்குந் தயாபரி யேழை தனையுவந்து
நின்வண்ணத் தாள்வைக்கு நன்னாளெந் நாளோ நிரஞ்சனியே. (71)

சனிப்பாக வேணி யரன்கா தலியுமை சாக்கைநகர்ச்
சனிப்பா கலைக்கு மதமா முகன்குகன் றாய்நமது
சனிப்பா கரத்தைத் தகர்ப்பா ளகிலந் தனிற்கொடிய
சனிப்பா கமுங்கெடுப் பாளன்பு செய்திடிற் சத்தியமே. (72)

சத்திநி பாதர் தமக்கரு ளாயொன் று தான்றருவாய்
சத்திநி பாதந் தருமந்த நாள்வீரைச் சங்கரனார்
பத்திநி பாதந் தருநீ றணிந்துன் பதந்தொழுது
பத்திநி பாதமி லைந்தெழுத் தோதும் பரிசதுவே. (73)

பரிசாரு நாளையென் ருர்வாய்மை காக்கப் பலநரியைப்
பரிசா ருளைப்பரி யாத்தந்த தாந்தமிழ்ப் பாண்டியன்கைப்
பரிசாருங் காணவன் றேற்றதெற் றிற்குன் பதியையினிப்
பரிசாரும் வேணி யெளியனென் பார்வீரைப் பைங்கிளியே. (74)

கிளியா ரணம்பயில் வீரை வனம்வளர் கேகயமோர்
ஒளியா ரடற்சிங்க மட்டவெண் காற்பு ளுடன்மருவிக்
களியானை யைப்பெற்றுக் காட்சிதந் தேகிற்குங் கண்டவர்கள்
அளியாடு பூங்குழ லெந்தா யுமையருட் கானவரே. (75)

ஆனவ ரைவரக் காக்கச் செருக்களத் தன்றுதுணை
தானவ ரைவரை வில்லா லழித்தவர் தங்கையுமை
கானவ ரைவரை வில்லாக் கதியுய்த்த கானளகை
போனவ ரைவரை வென்று ரவர்பெரும் புண்ணியரே. (76)

புண்ணிய ருக்கு மணியாடை பொற்பணி போதநல்குங்
கண்ணிய ருக்கு மணிவா ளுமைவளர் கானளகை
நண்ணிய ருக்கு மணிநகை யாள்புகழ் நாடினர்க்குக்
கண்ணிய ருக்கு மணிநாதன் றங்கை கருணையுண்டே (77)

கருணை சமுத்திரக் கண்ணித னன்பரைக் காதலித்து
மருணச மாக்கி வரந்தரு மூர்புன வாயிறில்லை
தருணை சயத்தல மாங்காசி காஞ்சி தனிமதுரை
அருணை சலந்திரு வையாறு டொக்கு மளகையதே. (78)

அளகைச் சிவையுமை யானந்த வல்லியொத் தண்டினர்தம்
பளகை யறுத்துச் சுகபோக நல்கும் பாமதுண்டோ
உளகைத் தனமென மாறுத பேரின்ப மூட்டுவிப்பாள்
அளகை யுயர்த்தவ னுத்தாளை யேத்தி யடைதிநெஞ்சே. (79)

அடையைப் பறித்துண்டு பொல்லா விலங்கின மார்வனம்போய்ச்
சடையைப் புனைந்தன ளீர்கின் றுடலந் தனைவருத்தி
அடையப் படுவதெ னெல்லாந் தருவளை னன்னையருள்
மடையைத் திறந்தவள் வாழ்வீரை நல்வனம் வந்தவர்க்கே. (80)

தவர்க்கே கருணந் தருமுமை யாம்பிகை தன்னைமறந்
தவர்க்கே தகிலந் தனைச்சத்தி செப்பனந் தன்னினினைந்
தவர்க்கே தவமுற்று மானசை விட்டட ருன்வளைந்து
தவர்க்கே புரையுமுன் விரைபுங் காற்றுந் தவந்தனையே. (81)

தவந்தன்னைக் காக்கும தில்லாரை யந்தோ சதுமுகன்கண்
சிவந்தன்னைக் காக்குவ னுருக் கொடும்பவந் தீரவென்றுற்
பவந்தன்னைக் காக்கு மரிதங்கை விரைப்பொற் பாவைபடி
யுவந்தன்னைக் காக்கு மரியென்று போற்றி பொழித்திடுமே. (82)

ஒழித்துக் கயவ ருறவைநல் லார்கட மோடிணங்கிச்
செழித்துத் தலைக்கொண்ட சைவநன் னூல்கற்றுத் தீச்சமயம்
பழித்துத் திரிபுரை பாசாங் குசையுன் பதக்கொண்டினுள்
கழித்துத் திரிய வருள்வா யளகையெங் கண்மணியே. (83)

மணிதந்த நாக முலையாம்பல் செவ்வாய் வடுவகிர்கண்
மணிதந்த நாக மருங்காலைச் சொல்லியம் மாதரசம்
மணிதந்த நாக மகள்பூம் பதம்வினை மாய்க்குநெஞ்சே
மணிதந்த நாக மலர்தூவு விரையில் வஞ்சறுத்தே. (84)

வஞ்சம்பொய் வாதிட மின்றிச் செறிந்த மனத்தனுக்குன்
றஞ்சம்பொய் யாமற் றருவா யிருமறை தானறியாக்
கஞ்சம்பொய்ப் பாதவத் தேனாட்டும் விரைக் கடம்பயிலும்
அஞ்சம்பொய் யார னுடன்மேவும் வல்லி யருள்சுரந்தே (85)

சுரந்தந் தமணர்செய் சூழுற்ற பாண்டியன் றுன்பமொழிச்
சுரந்தத நீறணி வித்தாற்குப் பாறந்த வுத்தமபா
சுரந்தந்த வாரணச் சோற்குத் தந்தார் றுணைவியருள்
சுரந்தந்த வீடு தருவாட் கிடம்விரைத் தொன்னகரே. (86)

தொன்னக ரம்பணி மாறவ ரிட்டுத் துகள்படுத்தார்
பன்னக ரம்பணி யாரந் தரித்த பரன்கயிலை
மன்னக ரம்பணி வேணியன் வாம மயிலளகை
மின்னக ரம்பணி தந்தா ளெனக்கும் வியப்பிதுவே. (87)

வியப்பா மிரவிலன் ருரூ ஞக மெலிந்தெனதா
வியப்பா தளரா தருளென்னச் சந்தொரு மின்னகமே
வியப்பார் சடைமுடி யோன்செல்ல நாணுது வீரையிலோ
வியப்பாவை நின்னு புரத்தா ளிசைந்து விரைந்ததுவே. (88)

விரையாரும் பூங்குழன் மஞ்ஞைசெங் காலன்னம் வீரைமுதல்
மரையாரு மண்டல மாக்காமற் காத்து வரமளித்து
நிரையாரும் வெண்டலை மாலைய னின்று நிலவுவெள்ளி
வரையாரும் வாழ்வு தருநெஞ்ச மேசெய்வை வந்தனையே. (89)

வந்திக் குகந்துபிட் டுண்டசொக் கேசர் மனைமைநன்னு
வந்திக்குஞ் சென்னி வணங்குங் குறையிலை மாவளகை
வந்திக்கும் பாசமு மேந்தும் பராசத்தி மங்கலையு
வந்திக் குவலையம் போற்றத் தருவணல் வானரசே. (90)

வானவ ராகந் திருக்கா யிரன்புவி மாதுபுணர்
வானவ ராகந் திசைமுகன் காணு மழவிடையோன்
வானவ ராகந் தருகொன்றை மாலி மனையளகை
வானவ ராகந் திகழ்பதத் தேயன்பு வைமனமே. (91)

மேதக்க தெய்வமற் றில்லை மஃவுண வேகவிகள்
சூதக் கனிபிழிந் தூட்டும் பொழிலிற் றுளிக்குமது
சீதக் கழனியிற் செந்நெல் வளர்க்குந் திருவளகைக்
கேதக்க ஞர்மகள் போனம் பவத்தைக் கெடுப்பதற்கே. (92)

கெட்ட மருங்குற் சிலைநுத லார்தமைக் கிட்டியவ
ரிட்ட மருண்டினைத் தேன்கடை யேனினி யென்னசெய்வேன்
நட்ட மரும்புலி யூரம் பலந்தரு நாதனிடந்
தொட்ட மருங்கொடி நீபுகல் வீரையிற் சுந்தரியே. (93)

சுந்தரன் சொற்றமிழ் மாலைக் குளங்கனி தோன்றனஞ்சார்
கந்தரன் வீரைக் கபாலி நித்தன் கடம்பவனச்
சுந்தரன் வாமந் துலங்கனப் பேடையென் சொல்லுகந்தாள்
எந்தரன் நாய்க்குத் தவிசிட்ட வாகுறை யின்றெனக்கே. (94)

எனக்கோதை வில்வி யிடத்தா யளித்தனே யேழ்பிறப்புங்
கனக்கோதை யேகல்வி கற்றநல் லார்சொற் கருதிவில்வ
வனக்கோதை நின்னச்சி வந்தனன் தீரா மலம்பொடித்தென்
றனக்கோதை யார்கலி நேரும் பவத்தைத் தணித்தருளே. (95)

அரும்பாத வாயரென் றுலும் பரிபுர மார்கழலை
விரும்பாத வீணரென் றுலு மமலை விமலையுமை
பெரும்பா தகந்தொலைப் பாள்கூடன் மேவிய பித்தன்மனை
திரும்பாத வீடுந் தருவா ளளகையிற் செல்லுமினே. (96)

செல்வா ரணிகுழ றீங்கரும் பேமொழி செங்கயல்கண்
கல்வா ரணிமுலை மானுர்த நேசங் கசந்தொருகாற்
பல்வா ரணந்திரி வீரையில் வேதம் பரவுமெங்கள்
வில்வா ரணிபத முச்சியிட் டார்முத்தி மேவுவரே. (97)

மேவுந் திருவருள் மெஞ்ஞானஞ் சித்திக்கும் வெண்சலசத்
தேவுந் திருமக ளுங்குடி கொள்ளுவர் சீதரன்வெண்
மாவுந் திருநிதி வானவன் பங்கயன் மற்றெவர்க்குஞ்
சாவுந் திருமலர்த் தாட்டா யளகையைச் சார்ந்தவர்க்கே. (98)

சாந்தரைக் காக்கத் துசமேந் தளகைத் தலைவியைச்செம்
மாந்தரைக் காற்கன்ன லேனுந் தொழார்வஞ்ச மங்கையர்பாற்
போந்தரைக் காகுங் குழிவீழ்ந்து நைந்து புலவுறும்பா
ழாந்தரைக் காகி யழிவரென் றேசொலு மாரணமே. (99)

ஆரணி பூமே லயனு ரணன்றெழு மம்மைசெகத்
காரணி பூதப் படைகு ழளகைமுக் கண்ணியுமை
நாரணி பூதர நங்கையெந் தாய்மறை நாடரிய
பூரணி பூம்பதம் போற்றுங்கள் சேருவள் பூமகளே. (100)

திருச்சிற்றம்பலம்.

அளகையுமை யந்தாதி முற்றிற்று.

உ

சிவமயம்.

மகாகணபதே நம:

திருச்சிற்றம்பலம்.

அளகை
உமையம்மை பிள்ளைத்தமிழ்.

விநாயகக் கடவுள் துதி.

அம்பொன்மணி மகுடமுடி யமரா வதித்தலைவ
னல்விமல ரம்போருகன்
அரியினறி துயில்கொண்ட மாறிசைக் கடவுளர்க
ளாதிமறை வல்லமுனிவர்
உம்பர்நா ருரகரிடர் தீர்த்துப் பரானந்த
வூற்றதாங் கருணைமதநீர்
ஊற்றிவிளை யாடியுயிர் தழையவரு மைந்துகர
வும்பன்முக னைத்துதிப்பாந்
தும்பிமுர லளகவயி ராணிமட மேவாது
தோய்ந்தெனைப் புரந்தவாணி
துங்கநற் பூமாது முனிவர்பன் னியமெழிற்
சுரநர மடந்தைநல்லார்
அம்புவிழி யாவமட மங்கையர்க ளேன்பிழைத்
தன்புசெய வருளுமமலை
அளகைநகர் தழையவள ரழகியெம் மன்னையுமை
யம்மைசொற் றமிழ்தழையவே.

காப்புப் பருவம்.

திருமால்.

கார்கொண்ட வண்ணமல ரளகமுஞ் சோடசக்
கலாமதி நிகர்த்தமுகமுங்
கருணைபொழி யுங்கயற் கண்களும் படைமதன்
கைச்சிலையை மானுநுதலுங்

தார்கொண்ட பொற்குவ டிரண்டுநாற் றோள்களுந்
தந்தொத் திளைத்தவிடையுந்
தாட்கமல முங்கொண்டெ னிதயபீ டிகைமருவு
தையலுமை யைப்புரக்க
சீர்கொண்ட வாச்சியர் கலையெடுத் துரியிலளை
திருடியுண் டடியுண்டமால்
திருநாத னச்சுத னனந்தசய னன்சவுரி
சீதரன் பஞ்சாயுதன்
நேர்கொண்ட பரமபத நாதனண் டந்தொறும்
நீக்கமற யாவுமேவி
நின்றுகாத் தருணறிய பைந்துளவ மாலையணி
நீலப் பசுங்கொண்டலே. (1)

சிவபெருமான்.

அமுதநிலவுவெண் மதியமணியர வணியமிளிர்தரு செஞ்சடைக்காட்டினர்
அமரரயனரி முனிவரருமறை யறியவரிதெனும் விஞ்சைமுற்றூக்கினர்
அமலநிறைசுக நறவமொழுகுத ணளியமலரடி யன்பரைக்கூட்டினர்
அழலினிழுதென மன நுளுருகுறு மடியரினமதி லென்றனைச்சேர்த்தவர்
கமலமலர்வயல் புகலிநகர்வரு கடவுள்கவுணிய ஞெண்டமிழ்ப்பாட்டினர்
கருதிவழிபடு மவருளனுதினங் கருணைவழிதர நின்றசிற்காட்சியர்
கடையனுளமதி லெழுதவரியதொர் கவிஞெடருண்மிக வொன்றுதற்சாட்சி
கனகசபையிடை நடனமிடுமிரு கமலமலரடி யுள்ளம்வைத்தேத்துதும் [யர்
குமுதமளிமுரல் குவளைதளவணி குமிழொடழகிய பங்கயப்பூத்திகழ்
கொடியதெனமலை யரையனிடம்வரு குமரிதிரிபுரை சுந்தரப்பார்ப்பதி
குலவுமணியக டுளைதலறவரு குகனைமுதலிய பன்மகப்பூத்தவள்
குழைபொடமர்புரி மகரவிழிகொடு கொடியமலவிரு ளைணந் துகப்பார்த்தவள்
அமாருததியை மதனமதுசெயு மளவிலெழுவிட முண்டவர்க்காத்தவள்
அலையில்வளைதரு தரணிமணிவட மலையுமலைமூலை யம்பிகைச்சீர்ப்பொலி
அரியபலவள மதுரையரசிபெண் ணமுதினணிமுலை யுண்டறத்தேக்கினள்
அமலையழகிய கவுரியெனைவழி யடிமைகொளுமுமை யம்மையைக்காக்கவே

விநாயகர்.

கழைமத னுருவைப் பொடிசெயு நிமலன் கழன்முடி சூடிநிலா
விழைவொடு பணியத் திருவருள் புரியும் விழியுமை யாடுணையாம்
மழைமத கரியுக் கிரவடி விறைவன் மறைநட மேவியதாள்
பிழைதப வருளிக் கடையனு ளுறையும் பிரபுவி நாயகனே. (3)

சுப்பிரமணியர்.

ஆறுதலைப்பர மேசனளித்தரு ளாறுதலைப் பெருமாள்
ஆழ்கடலிற் றுயி லுரணனுக்குயி ராமருகப் பெருமாள்
ஆரணனைச்சிறை மேவநிறுத்திய வாதிமலைப் பெருமாள்
ஆடகமைக்கிரி ராசபௌத்திர னுமுருகப் பெருமாள்
வீறுதலைக்கவி வாணனைமுற்சிறை வீட்டியநற் பெருமாள்
வீசுதமிழ்ப்பொதி காசலனுக்கருள் வேதகசிற் பெருமாள்
மீதலமுற்றடு சூரனுரத்தயில் வேல்விடுபொற் பெருமாள்
வேதமுடித்தலை யாடுமலர்ப்பதம் மேவுசிரத் தணிவாம்
வேறுதிறப்படு மாறுமதத்தவர் மேவுந்தற் கரியாள்
வீடுவிருப்பொடு தேடுமுளத்தவர் வேணதளித் தருள்வாள்
வீசுதிரைக்கட லாடையுடுத்திய மேதினியிற் பெரியாள்
மேதிமுகத்தவ னுவிகுடித்தடல் வீறியசிற் பரையாள்
மாறுதலைப்பவ வாரிகடத்திடும் வாரிசநற் புணையாள்
மாதவருக்கக மாறுதலைச்செயு மாகிரியிற் பயில்வாள் [யாள்
மாமணிவைத்தெழு கோபுரமொய்த்தொளிர் மாவளகைப் பதி
மாமறையுட்பொரு ளாமுமையுத்தமி மானையளித் துறவே. (4)

விபூதி.

ஆதிபராபரை மீனவிலோசனி யாயிம னேகரியை
ஆடகமாமலை ராசகுமாரிகிர் பாகர நாயகியை
ஆரணிவாரிச நாரணிபூஜித வாரமு தானவளை
ஆரளகாபுரி மானளகாநக ராளுமனேன்மணியை
மாதரசாழிமு ராரிசகோதரி மால்விடை யானிடமார்
வாலைபவானிந காயுதவாகினி வார்சகன் மோகினியை
வானவர்மானிட ராதுலர்மீதுறு மாகரு ணுநிதியை
மாதுமையாளைசு கோதபவாழ்வினை மாவரு ளேசெயுமால்
மேதகுதேவர்க ளாகியதோதின் வேதனெர் சாரதியாய்
மேருசராசன மாகவுநாணெடு வீறுகொள் வாசுகியாய்

வீயிவர்மாறெருடு வாளியெனுவடு மேலவன் மூவகையாம்
மேவலர்மூவர்கெ டாவகைசாடிய வேளையி ஞாழல்வாய்
வாதையிலாவிளை வாகியுலாவலை வாரிதி யூடெழுமோர்
வானமுதாகியு லோகவசிகர மாகிம ஞோதமாய்
மானநிராமய மாகிசிவாகர மாகிசு பாகாமாய்
மாமறைபோரா ஆவ பூதிய தாயொளிர் மாசில்வி பூதியதே. (5)

உருத்திராக்கம்.

திதிகருபுத்திர ரிகலைவிளைத்தொரு சிறையிடை வைத்திடவே
தெளிவறுமச்சுர ராகரதற்பர சிவசிவ நிற்கபயம்
கதியுளம்வைத்தரு ளெனமுறை யிட்டுழல் கணமொரு ருத்திரனுர்
கறுவியுதிர்த்தெழு தாளமுளைத்தெழு கண்மணி யைத்தொழு
மதியமுகத்திரு மலையின்முலைச்சியை மழலை மொழிக்கிளிமை [வாம்
மலையரையற்கொரு மகளைமிகுத்தொளிர் மணியை யனப்பெ
அதிசயமெத்திய வளகையினித்திய யமலையை மைப்பிடியை[டையை
அகிலஜகத்திர ளுதவுமைமைத்தின மருளொட ளித்துறவே (6)

திருமந்திரம்.

திருவார்மங்கலை யெமையாள்சுந்தரி செகமா தம்பிகையைச்
சிறையார்வண்டின நறைதேரும்பொழில் செறியா மைந்தளகை
மருவாநின்றரு ளுமையாளந்தரி மலைமா தங்கியையே
மணிதாழுந்திரை யெனநாளுந்தப வளையா நின்றிடுமே
தெருளாரும்பல மறையோதுப்பர சிவமா யைந்தொழில்செய்
சிவையாயம்பர நிறைவாயைந்துரு திகழா நின்றெளிரும்
அருளானந்தம துதவாநின்றெம தகமா மம்புயமேல்
அணையாநந்தவி லனமாநின்றுல வசபா மந்திரமே. (7)

இலக்குமி.

பாவலர்க்குநிதி யாவணத்துதவு பாவலர்க்குரிய பாவையை
பாணிசைத்துளிகள் கூடுமைத்தளக பாரிமைக்கவு மாரியை
ஆவன்மிக்கவடி யார்கள்பக்கமுறை யாதியைச்சுகு மாரியை
ஆதரிப்பளள காநகர்ப்பதியெ மாயியைப்பரை நாரியை

கோவலர்க்குநல வாழ்வளித்துமழை கோவெடுத்துநிரை காத்தவன்
கோதறுத்ததமிழ் வாணருக்குவழி கூடியெய்த்துடலம் வேர்த்
தேவகிக்கினிய பாலனுக்குரிய தேவியுத்தமிபொன் பூத்தவள் [தவன்
தேடுமுத்துமரை நாடிநித்தமருள் சேயபொற்றளமன் னூட்டியே.

கலைமகள்.

வடமலைமிசைவட தருவடியருநிழன் மறைநெறியருள்குரவன்
மனமதுநெகிழ்தர யிருமலைதனைநிகர் மணிவடமலைமுலையாங்
குடமுதவுறுமரு ளுமையினைவரைதரு கொடியினையருளமுதைக்
குலமதிமரபுறு கவுரியனுதவிய குழவியையருளுகவே
மடலவிழ்சததள முளரியிலுறைதரு மறையவன்முகமலரில்
வதிதருமடமயி றனதடியவர்பெற மடமறுகலையருளுந்
தடநிகர்புகழ்விரி தருகுயிலெழின்மிகு தவளவெணகையன்னம்
தயைபுரிகலைமக ளெனதுயிரெனவளர் தளிரியலொருமின்னே.

துர்க்கை.

மாருடு வடஉவயை முடிதகர வடியிட்டு வடியிட்ட சூலமேவி
வாகைபுனை கொற்றிகொற் றவைசிங்க வாகினி மாறங்கை யமரிவிந்தை
பாருடு வாட்கண்ணி யையைசுந் தரிசூலி பாலைக்கி ழத்திசமரி
பகவதியெ னுந்துர்க்கை யாமுய்ய வந்தவள் பண்புற்று நின்றுகாக்க
சேருடு செங்களத் துடற்குறைக் கவந்தங்கள் செங்குருதி மூழ்கிவெறிநேர்
திந்திமிதி யென்றுகுதி கொண்டாட வேறுட்ட சேய்தனை யளித்தமாதா
நீருடு பொன்மேனி வீரசே கரனிடம் நின்றருள் சுரந்தெனுள்ளம்
நேசித் துவந்தாடு மாமயிலை யளகைதனி னித்தமுறு பூவைதனையே.(10)

பலதேவர்.

தவளமதாசல நடவியுலாவரு தருணசு ராதிபனுஞ்
சலசமன்வேதனெ டமரர்கணாதிபர் சதுரத போதனருஞ்
திவளுதிவாகர ரமுதநிலாமதி திசைவரு பாலர்களுஞ்
செழுமுகமாதர்க ளெழுவருமாதியர் திருவரு ளேபுரிவார்
பவளசடாதர னொருபுரமார்தரு பரமகல் யாணியினை
பரைசிவகாமியை யுபாபிராமியை பகவதி வாலைதனை
குவளைவிலோசனி மகளிர்சிரோமணி குளிர்முக யாமளையை
குருகனமேதுயி றடவளகாநகர் குலவுமை யாடனையே. (11)

செங்கீரைப் பருவம்.

தகரக் கருங்குழற் றையலா மேனையொர்
தவக்கொடி யெடுத்தணைத்துத்
தமனியப் பாவையிற் காலிற் கிடத்திவின்
டவழ்கங்கை நீர்கொடாட்டிப்
புகரிலா மேனியிற் றாசொற்றி விரையொழுகு
புகையிட்டு முச்சியூதிப்
புவியினைத் தொட்டிட்டு நெற்றியிற் குங்குமப்
பொட்டிட்டு நீறுபூசி
மகாவிழி மையிட்டு மஞ்சணீர் சுற்றிமணி
மார்பிடை மதாணியிட்டு
மடிவைத்து முத்தாடி மழலையமு துண்டுகனி
வாற்சுரந் தினிதினூட்டச்
சிகாமுலை பருகியிரு வினைகடிந் தருள்குழவி
செங்கீரை யாடியருளே
சிவைகவுரி யுமையளகை வளருமா கதவல்லி
செங்கீரை யாடியருளே. (1)

கொள்ளுமொரு முத்தரிச் செஞ்சிலம் போலிடக்
கொஞ்சுறு சதங்கையேங்கக்
கொலுசரை வடஞ்செறியு மாடகச் சூடகங்
குலவுமணி வாகுவலயம்
ஒள்ளிய சரப்பளிப தக்கமொடு ரத்னமூக்
குத்தியுந் தமனியப்பொன்
ஞேலையுங் கொப்புமிட் டழகுதரு சுட்டியு
முச்சியிற் றிருத்திமாரு
துள்ளிறும் பூதன்னை கொள்ளவொரு தாண்மடித்
தொருதாளை நீட்டியுந்தி
யூன்றியிரு காமலர்கண் மேற்றலை யெடுத்துமை
யுண்டகண் ணோக்கிமுறுவற்
றெள்ளமுதம் வீசுங் கலாமதி முகத்தம்மை
செங்கீரை யாடியருளே.
சிவைகவுரி யுமையளகை வளருமா கதவல்லி
செங்கீரை யாடியருளே (2)

பண்ணாரு வரிவண்டு விளரிமுர லும்மடற்
பங்கயக் கோயில்வைகும்
பவளவா யன்னமும் பனுவன்மொழி யஞ்சிறைப்
பைங்கிளியு மிருபாலுறத்
தண்ணாரு மதுமலர்ப் பொழிலுலவு மரகதச்
சாயற்க லாபமயில்போற்
றவிசிற் கிடந்தரிய தாளுதைந் தொருசெல்வி
தண்கரமு கிழ்த்துமயலால்
எண்ணாரு வுயிர்களயர் வுறுதலைக் கண்ணுறீஇ
யெழில்வாய் குவித்தரற்றி
எச்செயலு நம்பரம சுகலீலை யென்றுளத்
தெண்ணியுண் மூரலிக்குந்
தெண்ணாரு வண்டுளவ மாலையற் கிளையைநீ
செங்கீரை யாடியருளே
சிவைகவுரி யுமையளகை வளருமர கதவல்லி
செங்கீரை யாடியருளே. (3)

முருகவிழ் கடுக்கைமலர் மாலிகைக் கோடீர
முதலைப் பிரிந்துபன்னாள்
முன்னிவரை யண்ணல்பா லமுதப் பசுங்குதலை
மொழிமக வெனப்பிறந்து
வருகருணை லீலாவி னோதத்தெ மையனை
மணந்துயிர்த் தொகுதியாவும்
மணியுதர நோவா துயிர்த்தந்த முதல்வர்க்கு
வன்னியென நாமநிறுவிப்
பொருகடற் புவியிலன வரதமுண் ணுமுலைப்
புணரிளங் கன்னியாகிப்
பொற்புற்ற வற்புதக் கிழவிவழி யடியரைப்
போகசா கரமடுக்குந்
திருகவின் குடிகொண்ட பச்சிளம் பெண்பிள்ளை
செங்கீரை யாடியருளே
சிவைகவுரி யுமையளகை வளருமர கதவல்லி
செங்கீரை யாடியருளே. (4)

விண்பட்ட பொற்சிகர வேதண்ட கோதண்ட
வீரன்மார் பப்பொருப்பின்
மேற்கழை யெனும்புருவ வார்சிலை குனித்தரி
விழிக்கணை முடுக்கிவிட்டு
புண்பட்ட வம்மேனி குளிரமணி வெம்முலைகள்
புல்லிமய றீரவொற்றிப்
பூவிதழ் விரிந்தசெங் குமுதவா யமுதம்
புகட்டியுப சாந்திசெய்து
தண்பட்ட சண்முகத் தனையனைப் பெற்றுவைச்
சத்திவடி வேலளித்துத்
தருகட் குறட்பூத சேனைதுணை கொண்டுசூர்த்
தனிவேட்டை யாடவிட்ட
தெண்பட்ட வண்டமிழ்ப் பாண்டிப் பெருந்தேவி
செங்கீரை யாடியருளே
சிவைகவுரி யுமையளகை வளருமர கதவல்லி
செங்கீரை யாடியருளே. (5)

வேறு.

மலரழ கியமுக மதியா டுறசெவ் வாய்நகை முத்தாட
வளரொளி விடுதிரு நுதலணி யாடுற மகரக் குழையாட
குலநவ மணிவட மாடுற வுச்சிக் கொண்டை யசைந்தாட
கொங்கை மலைப்பொறை யாலிடு கிடையோர் கொடியி னசைந்
விலைகித ராமணி மேகலை யாடுற மென்கா லணியாட [தாட
விரைசெறி மஞ்சரி யாமென மரகத மேனி குழைந்தாட
அலகறு புவனச ராசர மாடிட வாடுக செங்கீரை
அம்பிகை மாதள காநகர் மேவுமை யாடுக செங்கீரை. (6)

வண்டுகள் கிண்டி விருந்தய ரும்புய வானவ னின்றுட
மலரய னெடுநில னுழுதுண் செங்கண் மாலு முவந்தாட
தெண்டிரை நங்கை ததும்ப வாரொடு திங்களு முறவாட
செம்பவ ளத்தொளிர் வேணியு மோரெண் டிக்கும் விரிந்தாட

தொண்டர்க ளஞ்சலி செய்ய மலர்த்தா டுக்கி மகிழ்ந்தாடுஞ்
சுந்தர மாநட ராசர் நினக்கெதிர் தொந்தோ மென்றாட
அண்டினர் தீவினை விண்டு சுகம்பெற வாடுக செங்கீரை
அம்பிகை மாதள காநகர் மேவுமை யாடுக செங்கீரை. (7)

வேறு.

கலைதெரி புலவர்த முளவய னந்துக ரும்பே மஞ்சுருங்
கனவரை புயவரை தழுவிய பிடிதரு கன்றே சங்கேறும்
அலைமிசை துயில்பவ னுடன்வரு மிளையவ ணங்கே சிந்தூரம்
அணிநுத லழகியெ னுளமதி லெழுதரு மன்பே செந்தேனே
உலைவறு கயிலையி னுறைதரு மிறையொடு மொன்று மென்றேதும்
உலகினி லிலையொரு பொருளென வடிவுகொ ளுந்தா யிந்தேயுஞ்
சிலைநுத லயில்விழி மலைமுலை யுமையவள் செங்கோ செங்கீரை
திருவள ரளகையில் வளருமொ ரிளமயில் செங்கோ செங்கீரை.

வேறு.

வானசு ராதிப னுதிய ரேவலு வந்தா ளுங்கோமான்
வாரம தார்மன மேயொரு கோயிலின் வந்தா ளுஞ்சீமான்
பானுநி லாமதி தேயுவி லோசன பைந்தா ரன்பாளன்
பாமரர் நாடரி தாமிகு சீர்மலி பண்சேர் பொன்றாளன்
ஞானக லாநிதி மோனப ராபர னந்தா மன்றாடும்
ஞானியி னோடுகு லாவிய தோதக நங்கா யன்பாளுந்
தீனத யாபரி ஞானம னோன்மணி செங்கோ செங்கீரை
தேசிக மாளக காநகர் மாதுமை செங்கோ செங்கீரை. (9)

வேறு.

மாதர்கள் சூடா மணியே குயிலே மயிலே செங்கீரை
மாதவர் கோடா மனதுறை யொளியே மரையே செங்கீரை
பாதக னேவா தனுதின மருளிய பரையே செங்கீரை
பாவலர் நாவா முமுதகு மொழிகொள் பசுவே செங்கீரை

பூதர மாதா மணிமுலை பருகிய புயலே செங்கீரை
போதமர் வேதா நாரண னரியதொர் புகலே செங்கீரை
சீதள தாதா டியகுர வணிகுழல் செங்கோ செங்கீரை
சீர்தரு மாவா ழளகையி லுமையவள் செங்கோ செங்கீரை.(10)

தாலப் பருவம்.

தென்பான் மலையக் குறுமுனிக்குந் திருவார்
கயிலைக் கொருமுதற்குஞ்
செழுமா மறையுட் பொருடெருட்டித் தினையார்
புனத்துக் குறமாதின்
பொன்போல் வடிவத் தெழினோக்கிப் புனமா
மயிலே பொற்கொடியே
பொன்னே மின்னே புத்தமுதே பூவாய்
பாவா யெனமாழ்கி
அன்பால் வணங்கி யனப்பெடையே யணியார்
முலைச்செண் டிரண்டுமெனக்
காடத் தருதி யெனக்கெஞ்சு மாறு
முகப்பைங் குழவிதனைத்
தன்பா லணைத்துத் தாலாட்டுந் தாயே
தாலோ தாலேலோ
தனதன் வளஞ்சே ரளகைநகர் தழைத்த
வுமையே தாலேலோ. (1)

செழிய கமலத் திசைமுகற்குஞ் செங்கண்
மாற்குந் தேடரிய
செல்வப் பெருஞ்சீர்த் திருவாளன் றேவி
யிமயப் பொருப்பரையன்
வழுவின் மதலாய் வெள்ளிமலை வாழ்வே
யரம்பை மாதரொடும்
வன்பற் றுறுசி மாட்டியரா மாரு
வன்பின் வழியடிமைப்
பழுதில் திருவும் வாணியுஞ்செம் பதுமத்
துணைத்தாட் பணியியற்றப்

பரந்த கருணை நோக்களித்துப் பண்பா
ரினிய தமிழ்ப்பாண்டி
தழைய வளையாக் கோல்பிடித்துத் தனிமை
புரந்தாய் தாலேலோ
தனதன் வளஞ்சே ரளகைநகர் தழைத்த
வுமையே தாலேலோ. (2)

செய்ய துகிர்ப்பூங் கொடிபடருஞ் செம்பொற்
கிரியிற் பான்மதியந்
தெளித்த நிலவு கலந்தழகு செய்தா
லொத்த திருமேனி
அய்ய னிடப்பா கங்கலந்த வம்மே
கொம்மை முலைப்பாவாய்
அகில மனைத்து மவனுருவென் றறையா
கமச்சொ லளப்பாள்போற்
பொய்யில் கருணை விழியொருகாற் பொத்திக்
காட்டி விளையாடும்
பொற்பூங் கொம்பே மறையறியாப் பூந்தாட்
கமலப் புத்தமுதே
தய்ய லடியார் நினைத்தவெலாந் தருவாய்
தாலோ தாலேலோ
தனதன் வளஞ்சே ரளகைநகர் தழைத்த
வுமையே தாலேலோ. (3)

தங்கண் மனக்கற் பனையுலகைத் தாமாக்
கண்டு பேதைமயற்
றளைப்பட் டுழல்வார் தமையுன்றன் றமர்க
ணோக்கிச் சிரிப்பதுபோற்
பொங்கு மதமா வெண்படிகப் பொருப்பிற்
றனது நிழல்காணுப்
புகறன் னினமென் றேமாக்கும் புன்மைக்
கிரங்கி நகுதலென

அங்கண் விசும்பை யளந்துநின்ற வணியார்
வெள்ளை மணிமாடம்
அனந்தா னந்த மாய்க்கிடக்கு மாக்கைப்
பயன்சேர் சாக்கைநகர்
தங்கும் பவளத் திருவாயென் றுயே
தாலோ தாலேலோ
தனதன் வளஞ்சே ரளகைநகர் தழைத்த
வுமையே தாலேலோ. (4)

வெண்பா லமுதக் கடறிரண்டு மிளிர்வ
கடுப்ப வெண்ணிலவு
விரிக்குங் கைலைப் பொருப்பின்மிசை வேத
வடிவக் கல்லாலின்
உண்பா லமுதந் துறந்திருந்த வொருமா
யோகி நினைதொறுநின்
றுள்ளத் தலத்தி லெழுந்தூறு மூற்றே
மணியே யோவியமே
பெண்பா லமுதே கருணைவழி பெருவா
ரிதியே மலையரையன்
பெற்ற பிடியே மடக்கொடியே பேதைக்
கருளும் பெருமாட்டி
தண்பா ருலக மணிவயிற்றிற் றருமா
மதலாய் தாலேலோ
தனதன் வளஞ்சே ரளகைநகர் தழைத்த
வுமையே தாலேலோ. (5)

வேறு.

கருமச் செறிவுகொ ளுடலொடு முலகியல் கனவுக் கொருநிகராங்
ககனத் துறுகரு நிறமென வழிவுறு கவினைப் பெறுமயலாம்
அருமைத்தனிமறை கழறிய வொருபொரு ளமைவிற்கொளுமறவோர்
அகநத் தியதென மடமலி கடையன தகமுற் றொளிர் மயிலே

ஒருமைக் கதிமுளை யெனுமல ரடிதிக ழொருதற் பரசிவையே
உவணப் பரிகட வரியயன் மகபதி யுணர்தற் கருமுதலே
தருமக் கொடிகயல் விழிகவு ரியன்மகள் தாலோ தாலேலோ
தவளத் திருநகை யளகையின் வளருமை தாலோ தாலேலோ.(6)

மழையைப் பொருமத கரிகளு வந்துயர் மதுரக் கழைமுறியா
வழியத் தனிரச முடன்வரு மிளமுனி மகிழப் பெரிதுதவும்
உழையைத் தருவிழி மடநல மகளிர்க ளுதிரத் தாளமதை
உலையிட் டருசியி னடுமிகு வளமலி யொருநற் கிரிநகராள்
இழையிற் றுவளிடை யவள்குற மகளடி யிரவிற் பரிவுகொடே
எனையுத் தமியரு ளெனவடி பணிகுக னிறைவற் கிருமறையே
தழையத் தருகுரு பானருள் மலைமகள் தாலோ தாலேலோ
தவளத் திருநகை யளகையின் வளருமை தாலோ தாலேலோ. (7)

வேறு.

மடையிற் குடவளை குமுறக் களிகொடு வாரா வோராதே
மழமைக் குழவியி தெனமெய்ப் பரிவொடு மாறு தூறுறுய்
வடவைச் * செருவழி பயமத் தடநிறை வாலே பானீராய்
வனசக் கிளிபயின் மருமத் தரிமயல் சூழ்போ யீதாமே
இடமெற் கெனவளர் நலனுற் றகல்வய லேகா வாகாயே
இனிமைப் பயிர்பல தழையப் பலனுறு மோரார் சீரேறுங்
தடமொய்த் தவிர்வள வளகைப் பதிமயில் தாலோ தாலேலோ
தடைசெற் றெனதுள முறையொப் பறுமுமைதாலோ தாலேலோ.

மனதிற் களிமிகு நிதியப் பொதியருண் மாதார் பூமாதும்
மயலைத் தெறுகலை யடியர்க் குதவுவி தாதா நாமாதுங்
கனகத் தனிமலர் சொரிகற் பகநிழல் வாழ்வார் கோமாதுங்
கருணைக் கயல்விழி யெமைமெய்ப் பணிகொடு காவா தோதாதே
எனவுற் றடிதொழு தயலிற் பரவுற வோரார் சீமாதா
இசையெற் கொருபணி தயைவைத் தருளென வேறார் தாதாவாங்
தனதொத் தவர்கழல் வருடத் தருபவள் தாலோ தாலேலோ
சதுர்மிக் குறுதமி ழளகைப் பதியுமை தாலோ தாலேலோ (9)

---

* செருத்தல்—செரு வென த்திரிந்தது.

வேறு.

கருணையங்கட லழிவிலொண்பொருள் காழீ வாழ்சேபாங்
கவுணியன்கொள வமுதுசிந்திய காரே பாராயே
வருணமென்கிளி வடிவிசுந்தரி வாமீ பான்மீதே
வளருநந்தன னயனொடண்டர்கள் வாழ்வே சீமாதா
அருணையங்கிரி யமலரன்புறு மாதீ மாதேவீ
அமலையந்தரி யழகியந்தண ராரூர் மேயாளே
தருணமங்கலை யருள்விளங்குமை தாலோ தாலேலோ
தமிழ்மணங்கம ழளகையம்பிகை தாலோ தாலேலோ. (10)

சப்பாணிப் பருவம்

நீர்கொண்ட தரணியி லுயிர்ப்பயிர்க டழையவரு
ணின்றூற்று கமலசரணி
நித்யகல் யாணியிம வானிருகண் மணியாகி
நித்தியா னந்தநல்கிக்
கார்கொண்ட குழலிநிறை கற்பினுண் மேனைதன்
கைவளர் பசுங்கிள்ளையாய்க்
கவினுற்று நாடொறும் வளர்ந்திரு செவிக்கமுது
கைப்பவின் குதலைவார்த்துச்
சீர்கொண்ட வுச்சித மடித்தல மிருந்தொளிசெய்
செம்பொற் கலத்திலிட்ட
தீம்பதமு நறுநெயு மணத்தநற்
சுவையகறி தேன்பாற் குழம்பளாவித்
தார்கொண்ட குரவர்வா யூட்டுசிறு கையினற்
சப்பாணி கொட்டியருளே
சங்கரிப வானியுமை யளகைவா ழானந்தி
சப்பாணி கொட்டியருளே. (1)

முதலிறுதி யில்லாத பரவெளியில் வித்திலா
முளையாகி யங்குரித்து
முதலாகி யோங்கார மாய்மன்னி வேதன்மால்
முக்கட்பி ரானைநல்கிச்

சுதமுற வருட்கடைக் கண்ணோக்கி யுலகைமுத்
தொழில்செய்க வென்றோராணை
சொற்றிறைமை தந்துவெண் முத்தமா லிகைகவுத்
துவமக்க மணிமாலையும்
உதவிவெள் ளாடைபொற் றாசுமடல் சேர்ந்தபுல்
லுரியும் பரிந்தளித்தே
ஒப்பறு நெடும்பாச மாழிமுத் தலையவே
லுதவிமூ வுலகுமற் றுஞ்
சதமுறவளித்தநின் பங்கயக் கையினாற்
சப்பாணி கொட்டியருளே
சங்கரிப வானியுமை யளகைவா ழானந்தி
சப்பாணி கொட்டியருளே. (2)

தினகர னழுங்கிமன மானமிக் கூர்தரத்
திங்கண்மர பிற்பிறந்தே
செயமுர சறைந்தொரு கயற்கொடி யெடுத்தடற்
றிக்குவிச யம்புரிந்து
வனமருவு மடலைவெண் பொடிபூசி யிளமாதர்
மனைதொறும் பிச்சையேற்று
மத்தப் பெரும்பித்த னெனவுலவு சொக்கற்கு
மணமாலை சூட்டிமகிழ்வாய்க்
கனகமணி யரியா தனத்திடை யிருத்திமைக்
கடலுடை யுடுத்தஞாலங்
காக்கும் படிக்குரிமை தந்துசெங் கோறந்து
கமழ்சடையின் முடிகவிழ்த்துத்
தனகனக மாதிவா கனமுதவு கையினாற்
சப்பாணி கொட்டியருளே
சங்கரிப வானியுமை யளகைவா ழானந்தி
சப்பாணி கொட்டியருளே. (3)

பனிநிலவு குருமதியோர் வன்கம்ப மாகவெண்
பாற்கட றாழியாகப்
பரூஉநெடு முடிச்சயில மத்திட்டு முடவுடற்
பாம்புதாம் பாகவீக்கித்

தொனியெழ மதித்தநா ளகிலாண்ட மன்பதைகள்
சோகித்து மோகித்தவண்
டுளவணி முகுந்தனய னுகண்ட லன்னமரர்
துஞ்சிடா தெமையளிப்பாய்
இனியவரு டந்தெந்தை யேயோல மென்றலற
வேழுலகு மிருள்பரப்பி
யெரியிற் சினந்தவிட முண்டவர் களந்தொட்
டிருத்திமிக் கழகுசெய்தே
தனியமணி கண்டனென வபிதான மீய்ந்தபெண்
சம்பாணி கொட்டியருளே
சங்கரிப வானியுமை யளகைவா ழானந்தி
சப்பாணி கொட்டியருளே. (4)

சுபாகரத் தொனிதருந் தமருக முயர்த்தபொற்
றொடிக்கையிற் றோற்றமுறையுந்
தோலாமெ யன்பருக் கீனபய வாதமார்
சுடர்க்கரத் தாலளிப்பும்
அபாவமுற் றிடவுலக மாரழ லெடுத்துவிளை
யாடுகை யாலழிப்பும்
அனவாதம் வீசிநாற் றிக்குங் கவித்தமல
ரத்தத்தி னுன்மறைப்புஞ்
சபாநடு வெடுத்தவம் புயப்பொற் சதங்கையணி
தாளினு லருள்புரிகையுஞ்
சந்தத மமைத்தெங்கள் சங்கரன் றிருச்சபை
தனிலேறி யாடனேக்கிச்
சபாசனந் தந்துனிரு கைத்தாள மொற்றல்போற்
சப்பாணி கொட்டியருளே
சங்கரிப வானியுமை யளகைவா ழானந்தி
சப்பாணி கொட்டியருளே. (5)

வேறு.

பூகமொ டேடக மாமது ரந்தரு புறமுட் கனிகதலி
புதுமது வார்கழை யோங்கி நிமிர்ந்தெப் புடையினும் வளைதருதல்
மாகசு ராதிப ருண்ண வளங்கொடு வந்தெதிர் கோடலுறும்
வழியென நிலவள காநகர் மேவுமை மாதும னேன்மணியே

பாகமு தேயென வோதுறு மழலைப் பைங்கிளி நால்வேதம்
பழகிய நெறியிற் பொருள்பல கூறிப் பஞ்சர மெனவாழுங்
கோகன நேர்செங் காந்தட் கைகொடு கொட்டுக சப்பாணி
குருகொலி யரைவட மணியொலி நிகரக் கொட்டுக சப்பாணி. (6)

வேதவ ரம்பறு சூர னிடுஞ்சிறை மேவி மெலிந்தனம்யாம்
விரைசெறி மலரடி யலதொரு கதியிலை வினைதப வருளெனவே
பாதக சூரன தாவி தணந்துடல் பாறொடு பேயுண்டு
பருகிக் குருதிப் பரவையுண் முழுகிப் பாடி மகிழ்ந்தாட
மேதகு செங்கள மேவி யடுந்திறல் வேல்விடு செங்கையான்
விரிதரு புகழ்மக பதிமகண் மணமயர் வேடணி காசலனுங்
கோதறு குமரன் றாயள கைத்தே கொட்டுக சப்பாணி
குருகொலி யரைவட மணியொலி நிகரக் கொட்டுக சப்பாணி. (7)

மிளிர்நவ மணியி னிழைத்தர மகளிர் வெஃகும் பெருவாழ்வார்
மெல்லிய லார்வாழ் கூடந் தெற்றிகண் மேனாட் டியகதலிக்
கிளர்செம் மணியின் கனியைப் பவளக் கிஞ்சுக வாயாற்பைங்
கிள்ளைகள் கோதி வருந்தி மரக்கா கெழுமிய பைவாழை
விளைதரு கனிகண் டீதுங் கற்பனை மேவிய தெனமருளா
வெருவி யயற்கண் மறுபுல முண்டுள் வியந்தம ரும்பொழில்
குளிர்மதி தவழு மளகையின் மின்னே கொட்டுக சப்பாணி [வாய்
குருகொலி யரைவட மணியொலி நிகரக் கொட்டுக சப்பாணி.

வேறு.

மறவி நினைப்பென வுளமதின் மொய்த்தம றுட்பாச
வலைதனி லுற்றனு தினமுமி ளைத்தம னத்தேனுங்
கறைதபு சிற்சுக மதுவிளை பொற்கழ லைப்பாடக்
கழிமடன் மிக்கவெ னுளமதி லுற்றருண் மெய்த்தாயே
அறமுணர் மெய்த்தவ ருணர்வி லுதித்தம டப்பாவாய்
அகில சகத்திர ளுதவி யளித்தவ ருட்டேவி
தறுகண ருக்கறி வரியவள் கொட்டுக சப்பாணி
தமிழள கைப்பதி யுமையவள் கொட்டுக சப்பாணி. (9)

வேறு.

மலைதரு மானே மதிமுக மயிலே கொட்டுக சப்பாணி
வடிதரு தேனே வளரொளி மணியே கொட்டுக சப்பாணி
புலைதெறு வாளே புலவர்க ளறிவே கொட்டுக சப்பாணி
புவனப வானி புகழ்மிகு மரசீ கொட்டுக சப்பாணி
உலைவறு தேவே யுவமையில் பொருளே கொட்டுக சப்பாணி
ஒருமையி னுய்வா ருளமுறை யுமையே கொட்டுக சப்பாணி
குலைதபு மாரூர் நெறியருள் கொடியே கொட்டுக சப்பாணி
குலவிய தேசா ளளகையி னமுதே கொட்டுக சப்பாணி. (10)

முத்தப் பருவம்.

ஒளிகொணவ மணிமகுட முடியரச ரிருபுடையு
முடுவின மெனுவிருப்ப
வொப்பற்ற திங்களிற் சதகோடி யாதபர்க
ளொளிசெயரி யாதனத்தில்
அளிகொண் டிருக்குமல யத்துவச மன்னவ
னகத்தில்வாழ் வுற்றபேடை
அன்னமாம் பொன்மாலை தன்மடியி லொருசுக
மமர்ந்தென விருந்துபொம்மல்
நளிகொள்வெண் டாளமுலை பருகிவிளை யாடியொரு
நாவல ருரைத்தவாய்மை
நாட்டுறுந் தகைமையிற் குழலும்யா ழுங்கைப்ப
நறுமல ரொழுக்குதேன்போற்
குளிர்கொண்ட மழலையமு தூற்றுநின் பவளநேர்
கொவ்வைவாய் முத்தமருளே
குடவளைகள் குளிறளகை மாதுசீ மாட்டிநின்
குமுதவாய் முத்தமருளே. (1)

உம்பருறை யுலகமு மயிரா வணத்திருந்
துலாவரு சுரேசனுலகும்
உலகின்ற முளரிமறை யவனுலகு மமுதுதவு
முததிவளர் மாயனுலகுஞ்

செம்பொனள காபுரியு மெந்தமள காநகர்ச்
சீர்பெற்றி டாமைவெள்கிச்
செறியுயி ரொழித்துமா னங்காத்தல் போலுகத்
தீமூழ்கி வெந்திறப்ப
இம்பாழி யாதுவள ரந்தநக ரம்புரந்
தெமையடிமை கொண்டவுமையாம்
இறைவிமா தங்கியா னந்திநா தாந்தவெளி
யின்பநட மாடுமயிலே
கொம்பரின்மே யன்பரு ளிருந்துகூ வுங்குயில்
கொவ்வைவாய் முத்தமருளே
குடவளைகள் குளிறளகை மாதுசீ மாட்டிநின்
குமுதவாய் முத்தமருளே. (2)

பேரின்ப வெள்ளப் பெருக்கா றடுத்தொளி
பிறங்குமொரு முத்திநகரிற்
பேச்சற்ற மோனவித் திடைமுளைத் தாயிரம்
பெருமைபெறு கவடுபோக்கி
ஓரின்ப நறவொழுகி விதிவிலக் கெனுமரிய
வொண்மலர் மலர்ந்துண்மையாம்
உபதேச மாவாக் கியக்கனி கனிந்துலக
முய்ந்திட வளர்ந்துநிற்குஞ்
சீரின்ப வுருவநிக மாகமாந் தச்செழுந்
தேவதரு விற்பொலிந்தே
திருநிறைந் தழகொழுகு சிவநாம கீர்த்தனச்
செஞ்சொலா மழலையூற் றுங்
கூரின்ப மரகத மடப்பசுங் கிள்ளைநின்
கொவ்வைவாய் முத்தமருளே
குடவளைகள் குளிறளகை மாதுசீ மாட்டிநின்
குமுதவாய் முத்தமருளே. (3)

மறைமுதற் கலைகள்பல நினையன்றி யொருதெய்வ
மற்றில்லை யென்றுரைக்கும்
வாய்மையுண ராதவர்த முளமெனக் கலங்கியுணர்
வாருள மெனத்தெளிந்து

கறையுலக வாழ்க்கையிற் பெருகியுங் குறுகியுங்
காலங் குடைந்தாடுவார்
காயமதி லூற்றவெம் பாவங் கழீஇயவர்
கருத்திற் கிசைந்தசுகமே
நிறைவுற வளித்துவான் கங்கைமுத லாற்றிற்கு
நீள்சுவைத் தொருபிந்துவால்
நிகழக் கொடுக்குமின் றேனுறு சூழ்குன்றை
நித்தன்மா யூரமுருங்
குறைவிலறு முகனையருள் குமரியம் பாலிகை
கொவ்வைவாய் முத்தமருளே
குடவளைகள் குளிறளகை மாதுசி மாட்டிநின்
குமுதவாய் முத்தமருளே. (4)

வேறு.

சித்தத்துவகைப் பெருக்கெய்திச் சிமையவிமயப் பொருப்பரசுந்
திருமாதனைய மேனையெனுஞ் செவிலித்தாயுந் தென்பாண்டிக்
கொத்தம்புரக்குஞ் செழியர்குலக் கோவுங்கனக மாலையெனுங்
கோமாமகளு மழைத்தழைத்துக் கொடுத்தமுத்தங் கொளுமாதே
பெத்தக்கயிலைப் பெருமாற்கும் பேதைக்கருளுந் தந்திமுகப்
பிள்ளைதனக்கு மாறுமுகப் பெம்மான்றனக்கு முதவுறுநின்
முத்தம்பயிலும் பவளவாய் முத்தந்தருக முத்தமே
முற்றுமுலையா யளகைநகர் முதல்வீமுத்தந் தருகவே. (5)

கடல்வாழிப்பி பகமுடும்பு கதலிவனசஞ் செழும்பூகங்
கரும்புநாகஞ் செஞ்சாலி கடமாமதிய மாவின்பல்
குடவால்வளைஞெண் டோடுகரா கொண்மூமாத ரெழிற்கண்டங்
குளிர்வேய்களிறு கேழன்மாக் கோடுதருவெண் முத்தமெலாம்
மடவார்ப்பணியா மறிஞர்விலை மதிப்பான்றி யொளிதேயும்
மறுவுண்டாமா லதுபணியல் வாழியுன்றன் மாமறையின்
முடிவாமழலைக் கனிவாயான் முத்தந்தருக முத்தமே
முற்றுமுலையா யளகைநகர் முதல்வீமுத்தந் தருகவே. (6)

பாவாணருக்கின் னருள்சுரந்து பரந்துமலர்ந்த கற்பகமே
பரமானந்தத் தேனூற்றும் பைம்பொற்கொம்பே பான்மதியே
சேவார்கொடிய ருளத்தினடஞ் செய்யுமயிலே தீங்கரும்பே
திரண்டபாகே தெள்ளமுதே திருவேமறையின் றெளிபொருளே
மாவார்குயிலே மரகதமா மணியேமயதீர் மனவிளக்கே
மாருப்பிறவிப் பிணிதீர்க்கு மருந்தேயின்ப வாரிதியே
மூவாமுதலே மலையரையன் முத்தேமுத்தந் தருகவே
முற்றுமுலையா யளகைநகர் முதல்வீமுத்தந் தருகவே. (7)

வேறு.

உளமல விருளற வளவறு தயைபுரி யுத்தம சிற்பரையே
உகமுடி விலுமழி வறவள ரற்புத வுச்சித கற்பகமே
வளமலி நிலமதின் மதிமா பருண்மிக வைத்துவ ளர்த்தவளே
மறைமுத லழகெனு முத்தியை மனதிடை வைத்தும திப்பவ
பளகறு மறைசொலி யயனரி யவர்பணி பத்மப தத்தவளே [ளே
படியுறு மகிடன தொருதலை யயில்கொடு பற்றிமி தித்தவளே
முளரியை நிகரடி யெனதகம் வைத்தபெண் முத்தம ளித்தருளே
முதுதவர் துதிபுரி யளகையின் வளருமை முத்தம ளித்தருளே.

வேறு.

அலையெறி கடன்முர சதிர்தர வருமத னடுநுதல் விழியத்தன்
அவனிப ரொடுசுர ரெவர்களு முபவர மருளுறு மொருசித்தன்
கலைமதி யொடுபட வரவலர் விரவிய கமழ்திரு முடிமத்தன்
கமலையி லொருபர வயினக மிருள்வரு கருகரு மிகுபித்தன்
உலைவறு கயிலையி னிலவிய பரசிவ வுவமையி லொருமுத்தன்
உளமதில் வளரிள மயிலெம திடர்களை யொருமுத லுலகிற்றண்
தலையளி புரிபவ ளளகையி னுமையவள் தருகநின் மணிமுத்தம்
சதுர்மறை யொடுதமிழ் பரவுறும் வடிவினள் தருகநின்
[மணிமுத்தம் (9)

வேறு

அடியரச்சம் மறவளிக்கு மமலைமுத்தந் தருகவே
அமுதுகுக்குங் கயல்விழிப்பெண் ணரசிமுத்தந் தருகவே
கொடியதக்கன் மகமழிக்குங் குமரிமுத்தந் தருகவே
குலமறைச்செம் பொருள்விரிக்குங் குடிலைமுத்தந் தருகவே

கடிமலர்ப்பங் கயபதத்தன் கருணிமுத்தந் தருகவே
கடமுலைச்செங் கரவளைப்பொன் கவுரிமுத்தந் தருகவே
சடிலமுத்தன் மனதுருக்குந் தருணிமுத்தந் தருகவே
தமிழ்மணக்கும் மளகைநத்துங் கலைவிமுத்தந் தருகவே. (10)

வருகைப் பருவம்

கொந்துலவு நறுமலர்ச் சோலைவிளை யாடிவரு
குழவிப் பசுந்தென்றலுங்
குமுதநா யகனமுத மூற்றுவெண் மதியமுங்
கொய்ப்பனி மலர்ப்பாயலுஞ்
சந்துமகி லுங்களப முங்குங்கு மச்சேறு
தானுமணி யணியாடையுந்
தருசுக மெலாமிதற் கொவ்வாது மக்கண்மெய்
தருசுகங் காண்மினென்றே
பந்தா மிகுத்தகட் கடைகாட்டி யோவியம்
பயின்றெனத் தளர்நடைப்பொற்
பதம்பெயர்த் தோடிவா வென்பார்கள் பேதமைப்
பான்மைகண் டுண்ணகைத்து
வந்திருங் குரவர்களி கொள்ளமடி விளையாடு
மானிளம் பிடிவருகவே
வனமருவு மளகையுமை யெமையடிமை கொண்டமா
மரகதக் குயில்வருகவே. (1)

செம்பொனுல கத்தமா ரிம்பருல கத்துநார்
சீர்மாத வத்தருரகர்
செய்தவப் பயனெருங் குதவுறாஉ மாமணப்
திருமல்கு பந்தாதனில்
அம்புயமே லந்தணன் மணச்சடங் காற்றநீ
ரச்சுத னெடுத்தெமையன்
அங்கையிற் பெய்திளங் கன்னிகை யுமக்குரிய
ளாமென வளிப்பவறவோன்

செம்பஞ் சனிச்சமல ரடியெடுத் தம்மியிற்
சேர்க்கவிளை நாணிநெல்கிச்
சிறுகொடியி னிலனேக்கி யெங்கள்பர மேட்டிகை
சேரப் பிடித்துவசுநீள்
வம்பவிக ளிடுமோம குண்டமுக் கால்வலம்
வந்தமா மயில்வருகவே
வனமருவு மளகையுமை யெமையடிமை கொண்டமா
மாகதக் குயில்வருகவே. (2)

பாவருந் தென்பாண்டி நாட்டரசி யாளென்று
பணிபடு மலர்க்கைதாங்கிப்
பங்கயச் செல்வியும் பாரதியு முன்செலப்
பல்லாண்டு புலவர்கூறச்
சாசன முயர்த்தகஞ் சுகிமாத ரோடுபுகழ்
சாற்றுமா கதருமேவச்
சந்தமறை சொல்லியந் தணர்வாழ்த்த வதிர்முரசு
சலராசி போன்முழங்க
அராவெனும் பாதலத் தரசரொடு விண்ணரச
ரவனியா ளரசர்மருவி
அன்பினெடு சுவாகதம் பேசிமகிழ் வாகிநின்
னடிமலர் வணங்கிநிற்க
மாராளமென் ஞெருநடை நடந்துவான் கொலுவிற்கு
வந்தமா தரசிவருகவே
வனமருவு மளகையுமை யெமையடிமை கொண்டமா
மாகதக் குயில்வருகவே. (3)

துன்னியப ராகநுண் டுளியையோ ராயிரந்
தொடுகூறு செய்தமைத்துச்
சுருதிபுக லந்தண னகண்டமா முலகினைத்
தோற்றுவித் தருளமணியார்
பன்னகவி ராசனெடு முடியிற் பரிப்பவெண்
பாலாழி மாலளிப்பப்
பரந்தெழுமு காந்தவன விற்சுட்டு ருத்திரப்
பண்ணவனன் னீறுபூசிப்

பொன்னிலவு தாழ்சடை விரித்துவெறு வெளியிலே
புரிநடங் கண்டுவந்து
பூரித்து மாரியிற் கருணைபொழி விழியளம்
போருகச் சிற்றடிப்பெண்
மன்னியவி காரமற நின்றவோங் காரிசிவை
வாலையந் தரிவருகவே
வனமருவு மளகைநயுமை யெமையடிமை கொண்டமா
மாகதக் குயில்வருகவே. (4)

வேறு.

மானேவருக மலைபாடு மயிலேவருக மாகதமா
மலையேவருக வானோர்கண் மணியேவருக மனக்கினிய
தேனேவருக வமுதநறுந் திரளேவருக திரண்டுவளர்
திருவேவருக வானந்தத் திரையேவருக செகநிறையும்
ஊனேவருக வூனுளுறை யுயிரேவருக வுயிர்தொறுஞ்சேர்
உணர்வேவருக உணர்வினுட்கா ணொளியேவருக வொப்பில்லா
வானேவருக வளகையரன் வாமக்குயிலே வருகவே
வஞ்சமொழித்தார் நெஞ்சகம்வாழ் வன்னக்கிளியே வருகவே (5)

திருவேவருக மெஞ்ஞானத் திகழ்வேவருக வுபநிடதச்
சிகையேவருக தீந்தமிழின் றெளிவேவருக செஞ்சோதி
யுருவேவருக மறையறியா வொளியேவருக வொளிபரப்பும்
உவரீவருக பேரின்ப வூற்றேவருக வுயர்கடவுட்
டருவேவருக மலையரையன் றனையைவருக திருமாற்கோர்
தங்கைவருக யெமக்குரிமைத் தாயேவருக வலர்ந்தமலர்
மருவேவருக வளகையரன் வாமக்குயிலே வருகவே
வஞ்சமொழித்தார் நெஞ்சகம்வாழ் வன்னக்கிளியே வருகவே (6)

பதியேவருக பசுபாசப் பகையேவருக வரியதவப்
பயனேவருக விருள்சீக்கும் பகலேவருக பழமறையின்
விதியேவருக மெஞ்ஞான விளக்கேவருக முத்திவிளை
வித்தேவருக வருந்தவத்தோர் விருந்தேவருக வெமையளிக்குங்

கதியேவருக வருள்பழுத்த கனியேவருக நவநிதியக்
கடலேவருக கயவருளங் கரந்தாய்வருக கலைகொழிக்கும்
மதியேவருக வளகையரன் வாமக்குயிலே வருகவே
வஞ்சமொழித்தார் நெஞ்சகம்வாழ் வன்னக்கிளியே வருகவே (7)

வேறு.

வாரணிபூண்முலை வருகவேபரை வாலைமனோன்மணி வருகவே
மாதுசிரோமணி வருகவேதிரு மந்திரரூபிணி வருகவே
தாரணிவார்குழல் வருகவேசிவ சங்கரார்பங்கினள் வருகவே
தருணவசீகரி வருகவேமகி டாசுரசங்கரி வருகவே
கோரணிவேல்விழி வருகவேமிகு கோமளரூபிணி வருகவே
குங்குமமார்பிணி வருகவேயனு கூலதயாநிதி வருகவே
ஆரணிநாயகி வருகவேயுமை யம்பிகைசாம்பவி வருகவே
ஆதிசவுந்தரி வருகவேயள காநகர்மங்கலை வருகவே (8)

வேறு.

அருணகிரணமணி மிளிருமகுடமுடி யணியுமிளவரசி வருகவே
அணியதரளமணி யருவிசொரியுமலை யனையமுலையமலை வருகவே
கருணையுததியினி னிலவிவளருமிரு கயலொண்விழியினவள் வருகவே
கருதுமெனதிதய மலரினடனமிடு கவுரியிமயமயில் வருகவே
தருணமருள்புரிய வருதியெனவுருகு சரணரயிலமுதம் வருகவே
தகைமையுறுமமர ரணியுமணிமுடிக டழுவுசரணருள வருகவே
வருணமுளரிமலர் வதியுமவள்பரவு மகிமையுடையவுமை வருகவே
மலர்கண் மருவுபொழி லளகைநகரில்வளர் மதுரமொழிமழலை
[வருகவே. (9)

வேறு.

அமலை மதுரை யரசன் வழுதி யருளுமதலை வருகவே
அளிகண் முரலு முளரி வதன வழகிவருக வருகவே
குமரி புவனை கவுரி நறிய குவளைவிழியள் வருகவே
குலவு கயிலை யிறைவர் மருவு கொடிமின்வருக வருகவே

இமய முதவு களிய பசிய விளமென்மயினி வருகவே
யெமையு மருளி யடிமை கொளுமெ மிறைவிவருக வருகவே
மமரின் வலிகண் முறிய வுதவு வனசசரணி வருகவே
வரத வளகை வளரு மதியம் வருகவருக வருகவே. (10)

அம்புலிப் பருவம்.

அரிமுதல் சுரர்க்கமுத முதவுவாய் நீயிவ
ளரற்குவா யமுதமுதவும்
அங்குவளை நண்புகொண் டிடுவைநீ யிவண்முளரி
யங்கரக் குவளைகண்பாம்
விரிதரு கலாமதி யெனப்படுவை நீயிவள்
விளங்கிய கலாநிதியளாம்
விண்ணிடையு லாவருவை நீயிவ ளகண்டபர
வெளிதனி லுலாவந்திடும்
பரிதியொடு கூடுவைநீ யிவளென் றுநிடொளிய
பரமனொடு கூடல்புரியும்
பனிமல்கு வெண்முத்த முதவுவா யிவளரிய
பவளவாய் முத்தமுதவும்
அரியவுமை யளகைவா ழானந்த வல்லியுட
னம்புலீ யாடவாவே
அத்திரியி ராசன்மக ணித்யகல் யாணியுட
னம்புலீ யாடவாவே. (1)

வனேசடை யிருப்பைநீ யிவளெம்பி ரானுடன்
வாமபா கத்திருக்கும்
வண்கலை யுடுத்திடுவை நீயிவளு மொண்டுடி
மருங்கின்மே கலையுடுக்குங்
கனேகட லுதித்தவனீ யிவள்பரா னந்தமாங்
கலிதனி லுதித்தகுபூவி
கஞ்சமுகிழ் விப்பைநீ யிவளுமா கங்கையென்
கஞ்சமுகிழ் விக்குமன்றிச்

சுனைதனுறு பைங்கூழ் வளர்ப்பைநீ யிவளகில
தொல்லுயிர்ப் பயிர்வளர்க்குந்
துன்னமிர்த சொருபனீ யிவளும்ப ராதரச்
சுகவமிர்த ரூபியதனுல்
அனையவுமை யளகைவா ழானந்த வல்லியுட
னம்புலீ யாடவாவே
அத்திரியி ராசன்மக ணித்யகல் யாணியுட
னம்புலீ யாடவாவே (2)

கண்டுனை யிறைஞ்சாத கன்னியரு மிவளைமுக்
காலுந் துதித்திறைஞ்சுங்
காலிட் டுனைத்தேய்த்த சீலமார் தேவனிவள்
கஞ்சவடி தஞ்சம்புகும்
உண்டுரக முமிழுமுச் சிட்டநீ யிவளொருவ
ருண்ணப் படாதவமுதம்
உலகதனை வலம்வருவை நீயிவள் பதாம்புய
மும்பர்கள் வலம்புரிகுவார்
மண்டமுத வாரியிற் கடைபட்ட வுன்னையிவள்
வாவென் றழைப்பவின்னும்
வாரா திருப்பதுன் குறைமதியி னுற்கொலோ
வஞ்சமோ வறிவிதென்னே
அண்டர்க ளிறைஞ்சளகை யானந்த வல்லியுட
னம்புலீ யாடவாவே
அத்திரியி ராசன்மக ணித்யகல் யாணியுட
னம்புலீ யாடவாவே (3)

கவினுரு வழிந்துநரை கொண்டகூன் கிழவனீ
கன்னியா குமரியிவள்காண்
கயரோக முற்றுடல் வருந்திடுவை நீயிவள்
கடும்பிறவி நோயகற்றுஞ்
சிவகங்கை முன்றில்காத் திடுவைநீ யிவள்கடைத்
திருவாயி லும்பர்காக்குந்
தீராத மாசுண்ட வுருவனீ யகளங்க
சிற்பாசொ ரூபியிவளாம்

புவனம் பரப்புகதி ருடையைபகி லாண்டமும்
பொற்கதிர் விரிக்குமிவள்காண்
பூர்வத்தி லுன்குலஞ் செய்மா தவப்பயன்
புவனியுனெ வாவென்றனள்
அவனிவள மோங்களகை யானந்த வல்லியுட
னம்புலீ யாடவாவே
அத்திரியி ராசன்மக ணித்யகல் யாணியுட
னம்புலீ யாடவாவே (4)

குறைமதி தவிர்க்கலாங் கயரோக மாற்றலாங்
குமரிமுக மதியாகலாங்
கூனுட லகற்றலா மாரியற் கிழைத்தமா
கொடும்பழி பிழைத்துய்யலாங்
கறையினை யொழிக்கலா மாவிற்கு நெஞ்சங்
கலங்காது வன்மையுறலாங்
கருணையங் கடல்குடைந் தாடிமகிழ் வெய்தலாங்
காயசித் திகளுமுறலாம்
மறையவன் வகுப்பெலா மொருகுடையி லாளலா
மற்றுமறை தேடியறியா
மாமணிச் சோதிதவ முடிநிழலி லானந்த
மலைமீ திருக்கலாமால்
அறைகழலி யெம்மளகை யானந்த வல்லியுட
னம்புலீ யாடவாவே
அத்திரியி ராசன்மக ணித்யகல் யாணியுட
னம்புலீ யாடவாவே (5)

வேறு.

நறுமலர் விரிதரு நிதிவளர் கற்பக
நாடருள் செய்திடவோ
நளினமெல் லணைமிசை யுறைதரு திசைமுக
னலம தளித்திடவோ
குறுகலி லாவெதிர் மாறுனெ ளாவின்
கொண்டல் வளந்தரவோ
குறைவறு பெருவள னளகைக் கிறைமை
கொடுத்திட வோவல்லால்

இறுதியு முதலுமி லாதுநி றைந்தபே
　　ரின்ப மளித்திடவோ
　யாதுகொ லோவறி யோமறு வற்றவ
　　சிருபுடை பலர்சிறக்க
மறுவுள வுனையே வாவா வென்றனள்
　　வாவம் புலிவாவே
　வளமலி யளகையி னுமையுட னுடிட
　　வாவா வம்புலியே (6)

காமனை நீறுசெய் வானழல் சிந்திய
　　கண்ணுத லிவள்கணவன்
　கனகனை மார்பு பிளந்துயிர் சிந்திய
　　கண்ணனு மிவளண்ணன்
மாமயி லேறிய சூடு கந்தனி
　　வனிதைக் கிளமைந்தன்
　மகிட முகன்றலை படவடு கன்னியி
　　மங்கைக் கொருதங்கை
தேமரு வுள்ள நினைத்தன் முடித்திடு
　　சிவகண மிவள்படையாம்
　தேவி முனிந்திடி லாற்றுகி லாயிது
　　செப்பின மிப்போதே
மாமதி கொண்டு பிழைத்திடு வாயேல்
　　வாவம் புலிவாவே
　வளமலி யளகையி னுமையுட னுடிட
　　வாவா வம்புலியே. (7)

பரிவொடு தாய்தரு பான்மணம் வீசிய
　　பச்சை யிளங்குழவி
　பணிமொழி செவ்வி திருந்துகி லாவொரு
　　பாலகி பெண்பிள்ளை
தெருவிடை சிற்றி லிழைத்துத் தொடலைசெய்
　　சின்னஞ் சிறுகன்னி
　திகழ்தரு நங்குல முற்று வளர்ந்திடு
　　செல்வி யிளம்பேதை

யுருநிழல் கண்டு மருண்டு பிடித்திட
வோடு மடப்பிடியென்
றுன்னி யிருந்து விடேலிம வான்மக
ளுள்ள முனிந்தனளேல்
மருவுல கதிலொரு கதியிலை விரைவினில்
வாவம் புலிவாவே
வளமலி யளகையி னுமையுட னுடட
வாவா வம்புலியே. (8)

வேறு.

வயதுசென் றுநரை திரைமுதிர்ந்துடலும்
வளைவுகொண்டுதளர் கிழவனுய்
வலியழிந்துமிக வறிவழிந்துகடை
வழியநொந்துழலு மனிதனும்
கயலைவென் றவிவள் விழிசுரந்துபொழி
கருணைமண்டுகடல் குடைவனேல்
கடிநறுங்குழல்கள் சரியமுன்கையொலி
கனகபைம்பொன்வளை சிதறியே
மயன்முதிர்ந்துகலை யவிழநைந்துமன
மருகியுண்டுயிர்கொ லென்னவே
வலமழிந்துருகும் வரமடந்தையருள்
வதியுமங்கசனின் வருவனுல்
அயர்தியம்புலியி வமையம்வந்துபய
னடையவம்புலிநீ வருகவே
அளகைநின்றவுமை தருவண்மொண்டுவா
மடையவம்புலிநீ வருகவே (9)

வேறு.

அருணையங்கிரி வடிவுகொண்டொளி
ரவனிடந்திகழ் கிழவிகாண்
அமலையந்தரி யரிவைசுந்தரி
யமரியஞ்சொலி யழகிகாண்

கருணையங்கடல் கவுரிசங்கரி
கனகமென்கொடி மதுரையாள்
கவுரியன்றரு குமரியம்பிகை
கலையணங்கொடு கமலையாள்
தருணமங்கைய ரடியிறைஞ்சுநர்
தமதுமங்கல நிலைபெறத்
தனிவரந்தரு முமைவிரும்பின
டயைநிறைந்தவ ளளகையாள்
வருணவம்புலி வருகவென்றனள்
வருகவம்புலி வருகவே
வரைவின்மங்கலை வருகவென்றனள்
வருகவம்புலி வருகவே (10)

அம்மானைப் பருவம்

ஒருகுணமு மில்லாத நிற்குண சொரூபத்தி
லொருமுக்கு ணங்கள்வருவித்
தொன்றின்மும் மூன்றாக வொன்பது குணங்கள்பின்
னுளவாம் படிக்கியற்றி
திரிகுண விசிட்டதன் மாத்திரைகள் பூதங்க
டேகபோ கங்களாக்கித்
திகழ்கின்ற பசுபாச பந்தவினை வர்கின்ற
செகசால வித்தையாற்றிக்
கருவில்வரு தனுகரண புவனபோ கங்களைக்
கண்மாய மிட்டொளித்துக்
கண்டமி லகண்டபர வெளியிற் றிருப்பெருங்
கருணைவிளை யாடல்கூறும்
அருளொழுகு மரிமதர்க் கெண்டைத் தடங்கணு
யம்மானை யாடியருளே
அகிலம் பெறுந்தள்ளை யளகையிற் சிறுபிள்ளை
யம்மானை யாடியருளே (1)

செய்யபவ ளக்கா னிறுத்திவெண் ணித்திலத்
திரண்மணிப் பந்தரிட்டுத்
திகழலங் காரபொற் ரோரண மமைத்தீறில்
செஞ்சுடர்த் தீபமேற்றித்
துய்யபூ ரணகும்பம் வைத்துவெண் பாலிகை
தொகுத்துநென் முதலவித்திச்
சும்மைதரு வாத்திய முழங்கபல் லாண்டுபலர்
சொல்லிமறை பாடியாட
வய்யகங் களிதூங்கி யுய்யமகிழ் விற்கொண்ட
மாமணந் தன்னிலன்பாய்
மஞ்சத் திருந்தெந்தை யொருமுத விலக்காக
மாந்தளிர் விரற்கையேந்தி
அய்யன்மேற் பூச்செண் டெறிந்துவிளை யாடல்போ
லம்மானை யாடியருளே
அகிலம் பெறுந்தள்ளை யளகையிற் சிறுபிள்ளை
யம்மானை யாடியருளே (2)

குளிர்தரள மாணிக்க நீலமர கதமணிகள்
கொண்டொழுங் காவமைத்துக்
கோலஞ்செ யம்மனைக ளொன்றோடு மொன்றுவிசை
கொண்டோடி வருதனோக்கிற்
றளிரிய னமதாசி தலைவற் பிரிந்துளந்
தளருமாற் றனியகற்றச்
சம்புவறி யானலன் னுயினும் யாஞ்சென்று
சந்திறுத் தகனுமென்னக்
களிநடைய வன்னங்கள் செங்கிள்ளை மைமணிக்
கரியகுயில் பூவையணுகிக்
கயிலைமலை மேவிநின் சந்நதிக் கிம்பர்வரு
காட்சிதனை மானுமம்மே
அளிவளர் தொழும்பானு போகப் பராவமுத
மம்மானை யாடியருளே
அகிலம் பெறுந்தள்ளை யளகையிற் சிறுபிள்ளை
யம்மானை யாடியருளே. (3)

விம்பமதி முகமாட வாயிதழ் துடித்தாட
வெண்முறுவன் முத்தமாட
வில்லொத்த நுதலாட மகரவிழி யாடமணி
மேகலை புலம்பியாடக்
கும்பமுலை யாடமணி யாரவட மாடவேய்க்
குங்குமத் தோள்களாடக்
கொடியிடை துவண்டாட வாயிரங் கதிர்விடுங்
குழையாட முடியுமாடச்
செம்பத மெடுத்தெந்தை யம்பலவ னுடனடு
செல்விமா தேவிநாரி
சிவைசத்தி யையையயி ராணிசாம் பவிகவுரி
சின்மயா னந்திவடிவி
அம்பவள வாய்க்கிள்ளை வைத்தாடு கையினு
லம்மானை யாடியருளே
அகிலம் பெறுந்தள்ளை யளகையிற் சிறுபிள்ளை
யம்மானை யாடியருளே. (4)

சத்துவ குணத்தினல் வெண்மையு மிராசதத்
தன்மையாற் செம்மைநிறமுந்
தாமதப் புணர்வினுற் கருமையுங் கொண்டுருகு
தனிமனஞ் சார்ந்துநாளுஞ்
சித்துவிளையாடனீ செய்தென்ன நகைநீழல்
சேர்ந்துவெண் மணியதாகிச்
செங்குமுத வாயித ளடுத்தொளி ததும்பியுயர்
செம்பவள வண்ணமாகி
மைத்தடங் கட்பார்வை யானீல மணியாகி
வான்புகழ் மடுத்துநிற்கும்
மாமணிச் சோதிதிக ழம்மானை யாங்காண
வண்டுவள ரங்கையேந்தி
அத்தரொரு பான்மேவி நித்தமயல் செய்யுமயி
லம்மானை யாடியருளே.
அகிலம் பெறுந்தள்ளை யளகையிற் சிறுபிள்ளை
யம்மானை யாடியருளே. (5)

சேண்படு குலைக்கமுகு மம்பரந் தொடுநெடுந்
தென்னையும் பொழில்வளைத்த
தீஞ்சுளை வருக்கையுங் கதலியுங் கன்னலுந்
தேம்பில்கு பற்பறருவும்
ஏண்பட வளைந்துகா வற்படையி னிறைதரு
மெங்கடன் சாக்கைநகரில்
எழிறிரண் டனையமட மாதரா ரொருமாசு
மின்றிப் படாததங்கள்
மாண்படு முலைக்கிணை படாயென் றடித்தோட்ட
மருகல்கண் டம்மானைதன்
மலர்க்கர மெடுத்துவிளை யாடாம லாச்சியர்கள்
வார்முலைச் செண்டுகொண்டா
டாண்பிள்ளை யாமிடை மதிப்பிள்ளை பின்னவணி
யம்மானை யாடியருளே
அகிலம் பெறுந்தள்ளை யளகையிற் சிறுபிள்ளை
யம்மானை யாடியருளே. (6)

குடவளைகள் வயிறுளைந் தீன்றவெண் மணியினற்
குலவொளிய செம்மணியினற்
கோலந் தருங்கரிய நீலப் பசுங்கலாற்
குயின்றவம் மனைகணின்கைத்
தடமல ரெடுத்தொளிரன் முக்கட்பி ரானையுஞ்
சங்காழி யண்ணறனையுஞ்
சலசமல ரோனையு மருட்புதல்வ ராகமுன்
றந்தக மகிழ்ச்சிபூத்து
மடலவிழ் மலர்க்கர மெடுத்துவிளை யாடுதலை
மானுமஃ தன்றிவையம்
வகுத்தளித் தழித்திடுமோர் முக்குணங் களையுமத
மாமுகப் பிள்ளையுண்ண
அடற்கவள மாவெடுத் தீதலையு மொக்கநின்
றம்மானை யாடியருளே
அகிலம் பெறுந்தள்ளை யளகையிற் சிறுபிள்ளை
யம்மானை யாடியருளே. (7)

வேறு.

கதிர்விடு மம்மனை யொளிமணி கதுவிக் கமலக் கடவுளனங்
 களிதரு மயிலி னிலவுற வூர்ந்தெங் கந்தனு லாவரலும்
விதிர்வுகொ டன்ன முறையிட மேனுள் வினவினை யஞ்சியயன்
 வேள்சிறை வைக்குமெ னுவயர் காலையின் வெண்டா மரையன்னம்
முதிர்சுவை பழகிய மொழியே யருளென முருகனை மடிவைத்தே
 முத்தி கொடுத்துப் புரியிள நகையான் முன்போ லனம்வெளிற
அதிமகிழ் கொள்ளுங் கலைமக ளோடு மாடுக வம்மனையே
 ஆதி சவுந்தரி யளகையி னுமையவ ளாடுக வம்மனையே. (8)

வேறு.

பொன்னம் பலமணி களனெடு மாடிய போதவிளம்பிடி யாடுகவே
 பூமகள் சேர்திரு மாலொரு சோதரி பூவைநிரஞ்சனி யாடுகவே
சின்னஞ் சிறுகுற மகளடி சூடிய தேவருளுந்தனி யாடுகவே
 தேவிந காயுத வாகினி மாமுத றேடியசுந்தரி யாடுகவே
மன்னன் றமிழிறை மகள்கரு ணாகரி மாதரசம்பிகை யாடுகவே
 மாதர்சி காமணி வாலைம னோன்மணி மான்விழிமங்கலை யாடுகவே
அன்னம் பயினடை யாசித யாநிதி யாடுகவம்மனை யாடுகவே
 ஆரண காடரு மாதள கேஸ்வரி யாடுகவம்மனை யாடுகவே. (9)

வேறு.

அத்திநிகர்க்கணி யுத்தமசிற்பரை யம்மனையாடுக வம்மனையே
 அம்பரவிம்பசி தம்பரநாயகி யாடுகவம்மனை யாடுகவே
அத்தியளித்தபெ ணித்தியவித்தகி யம்மனையாடுக வம்மனையே
 அச்சமறுத்தெமை நச்சியளித்தமி னாடுகவம்மனை யாடுகவே
அத்திதரித்தவர் சித்தமுருக்குவ ளம்மனையாடுக வம்மனையே
 அங்கையின்மென்கிளி தங்கியமங்கலை யாடுகவம்மனை யாடுகவே
அத்திமகற்பெறு மத்தமதப்பிடி யம்மனையாடுக வம்மனையே
 அச்சளகைப்பதி யிச்சையுமைக்கொடி யாடுகவம்மனை
 [யாடுகவே. (10)

நீராடற்பருவம்.

புரிதரு மழுக்கா றவாவெகுளி யின்னுத
பொய்யொடு புறங்கூறுதல்
போதந் தகர்க்குமது பிறர்மனைப் போகமருள்
போக்குகொலை யாதிபலவாய்த்
திரிகரண வாயில்வரு குற்றங் கடிந்திலகு
சிவபக்தி வாரியானோர்
தேக்கித் திளைத்துக் களித்துக் குளித்தாடு
திருவருட் கடலாகுநீ
புரிசடை நெடுந்துகிற் கொடிபடரு மலையிலாப்
பூரண னந்தவெள்ளப்
புதுப்புணரி நீந்திவிளை யாடுமா போலநாற்
பொருணிலவு முலகமோம்பி
விரிதிரை கொழித்துவரு மதுநதிக் கரைபொரூஉம்
வெள்ளநீ ராடியருளே
வேடற்கு வீடுதவு வீரனளை கைக்குமரி
வெள்ளநீ ராடியருளே. (1)

கொண்டல்வள ருஞ்சிமய மால்வரை யுதித்தகிற்
கோடுமண நாறுசாந்தின்
குறடுகுஞ் சாமருப் பீகையான் பான்மதங்
குளிர்முத்த மணிகள்வாரித்
தெண்டிரையி னூற்புறஞ் சிதறிவன மாவிகைகள்
சோரப் புனைந்துமுழ்குந்
தெரிவையர்க ளணிகலவை குங்குமங் கழீஇக்கொண்டு
சென்றலை சுருட்டுமுந்நீர்ப்
பண்டுறும் புலவையற மாற்றித் திருத்திநற்
பரிமள மளித்துவிரவிப்
பசியநற வூட்டிமா விகைசூட்டி மெய்நலம்
பருகியுற வாடியுவகை
விண்டுகளி கொண்டாடு மதுநதிக் கரைபொரூஉம்
வெள்ளநீ ராடியருளே
வேடற்கு வீடுதவு வீரனளை கைக்குமரி
வெள்ளநீ ராடியருளே (2)

மலைபெறுங் குமரியொரு வடிவிநா மெஞ்ஞான்றும்
வாமத்தி ருக்கநெடுமா
மாணிக்க மலையனைய தேவைமா தவர்கண்மறை
மன்னுசிவ ராசயோக
நிலைபெறுந் துறவியென வேத்தித் துதிப்பரிந்
நியதிதனை மாறுசெய்வான்
நின்மலன் றாழ்சடைக் காட்டிற் கரந்துறையு
நீலியிவ ளென்னநெஞ்சம்
உலைவுகொண் டூடிய பிணக்கறுத் துக்கங்கை
யோடுறவு கொள்ளல்போல
உன்புகழ் வடித்தூற்று செந்தமிழ்ச் சாரமோ
டொத்துப் பரந்துபெருகும்
விலையின்மது வார்ந்துவரு மதுநதிக் கரைபொரூஉம்
வெள்ளநீ ராடியருளே.
வேடற்கு வீடுதவு வீரனள கைக்குமரி
வெள்ளநீ ராடியருளே. (3)

தேசவிர் சொரூபசிற் சத்திநின் சுரிகுழல்
திருவதன நோக்கமுறுவல்
செவ்வாய் களங்கொங்கை யங்கைகொப் பூழல்கு
றிரள்கணைக் கால்புறங்கால்
நேசம் பெறுதுவமை காட்டிச் செருக்கன்மன
நோராது சாடுமாபோல்
நின்னிரு பதாம்புயப் பணியாளர் தொடர்புறீஇ
நின்றிடும் பரிசின்மேவிப்
பாசொளிய சைவலங் கோகனக நீலமணி
பான்முத்த மாம்பல்பணிலம்
பகர்சகோ ரங்காந்தண் மலர்சுழி யாப்பணம்
பருவரா லாமைதள்ளி
வீசிக் கிளர்ந்தொழுகு மதுநதிக் கரைபொரூஉம்
வெள்ளநீ ராடியருளே
வேடற்கு வீடுதவு வீரனள கைக்குமரி
வெள்ளநீ ராடியருளே. (4)

திருவருள் சுரந்தரி பரந்துலவு சேல்விழிகள்
சேப்பவெண் முத்திழைத்த
செம்பவள வாயிதழ்க் குமுதமலர் வெளிறவளி
தேங்குழல் சரிந்துதேம்பக்
குருவளர்பொன் னரிமாலை மணிமாலை மோட்டிளங்
கொங்கையிற் புரண்டாடமின்
கொடியிற் றுவண்டிடை யசைந்தாட வாணியொடு
கோகநகை யயிராணிமற்
றுருவநல மடமாதராயங்கள் பின்றொடர்ந்
தோடிவிளை யாடவெள்ளத்
தொருதுறையின் மூழ்கிமற் றொருதுறை யெழுந்துமகி
ழூட்டியெம் வினைகளோட
மிருகமத வண்டலிடு மதுநதிக் கரைப்பொரூஉம்
வெள்ளநீ ராடியருளே
வேடற்கு வீடுதவு வீரனள கைக்குமரி
வெள்ளநீ ராடியருளே. (5)

வேறு.

பொருனைத் திருநதி மதுரைத் தனிநதி பொன்னிப் பெயர்நதியும்
புனிதப் பகிரதி யமுனைப் பெருநதி பொற்பார் சரஸ்வதியும்
அருமைக் குமரியொ டகிலப் பலநதி யன்பிற் பணிபுரிய
அகநத் தியபர சுகமெய்ச் சிவநதி யாடு மடப்பாவாய்
இருமைப் பயனுன தருளிற் றடையற வெளிதிற் பெறுமடியார்
இதயத் தலமதி னிலவுத் தமவுமை யெனுநித் தியபரையே
பொருமித் தனுமது நதியிற் கரைபொரு புதுநீ ராடுகவே
புளகப் பெருமுலை யளகைத் திருமகள் புதுநீ ராடுகவே. (6)

மகவற் புதபர சொருபத் திடைவரு மகரக் கடலுலகம்
மனுமுற் பலபல வுருவிற் றிரிவுடன் மருவிக் கடைமுடிவில்
இகலற் றொருமுத லடியிற் புகலுற லெனமொய்த் தலைபரவி
இவற்சிற் சிறுதிவ னுரையொப் பறுகுமி ழெனவுற் றிடைமாறிச்

சகநத் தினிமையொ டிளகிக் குளிர்கொடு தனதொப் பறுமயமே
தகவிற் கொடுபடி பவருக் கிணையறு தவமெய்ச் சுகமருளும்
புகறற் கருமது நதியிற் கரைபொரு புதுநீ ராடுகவே
புளகப் பெருமுலை யளகைத் திருமகள் புதுநீ ராடுகவே. (7)

வேறு.

பாலோ களிமிகு தேனோ சுவைதரு பாகோ வமுதாமோ
பலமோ கனலின் ரசமோ வெனமொழி பயிலோ விப்சுகமே
நீலோ வடனெடு வேலோ வலையெறி நீரோ வடுவாமோ
ஸ்ரீமிரோ வடிகணை யதுவோ வெனவரு ணிலவோர் விழிமயிலே
ஆலோ திரைகடல் சூழ்மா நிலமுத வானு வகடாயே
அமரா டியசிறு குமரே சனையருள் ளனமே நலகுயிலே
மாலோ டுடன்வரு தோகா யமுநிவர் மாநீர் நதியாடே
வளமா ரளகையி னுமையா ளெனுமயின் மணிநீர் நதியாடே (8)

ஞானு கரனிடை மேவா வளவறு நானு வழியாகி
நவைதீர் முடிவினி லொருநீர் மையினுற நவமார் சமையம்போல்
வானு றிடைநெடு மாலா யுபிர்தொறு மாரு வுணவாகி
வாநீ டியமுடி மலைமே லொழுகியி மணிநீ ருலகதனில்
நானு விதநதி யோடாழ் தடமடு நாகார் சுனையாகி
நளிகூ ரலையெறி கடனீ ரொடுதுனி நணுகா வதன்மயமார்
வானு றதுநிகர் தேனு றிடைவரு மாநீர் தனிலாடே
வளமா ரளகையி னுமையா ளெனுமயின் மணிநீர் நதியாடே (9)

வேறு.

பொன்னே மணியே பொற்பாவாய் பூவாய் புதுநீ ராடுகவே
புயலே மயிலே குயின்மொழியே புனிதை புதுநீ ராடுகவே
மின்னே யொளியே பற்பலவாய் விரிவாய் புதுநீ ராடுகவே
விழைவா ருளமே யுறைமதியே வெளியே புதுநீ ராடுகவே
மன்னே மறைவாழ் சிற்பரையே மாதா புதுநீ ராடுகவே
மலரே மணமே யற்புதமே மானே புதுநீ ராடுகவே
அன்னே யுமையே யளகைநக ராசீ புதுநீ ராடுகவே
அருளே தெருளே குணமலையே யாடுக புதுநீ ராடுகவே. (10)

ஊசற்பருவம்.

ஆதியா மலமாயை யாவுமீன் றிராப்பக
லற்றவெளி வீட்டினிற்பே
ரறிவெனுந் தலைவனொடு கூடாது கூடிவரு
மானந்த போகமகவைச்
சோதியார் மணித்தாம் பசைத்துநான் மறையாய
தோழியுப நிடதமாகுந்
தொட்டிலிட் டின்னமுத மேயருட் பாமல்கு
சுவையேசை தன்யவடிவே
பேதியா நிலையமே ஞானவொளி யேயுலகு
பேரின்ப மூழ்கவருளிற்
பிழைபடா தாடுக வெனக்களித் தாட்டுமா
பெற்றியிற் புகழ்விரித்துப்
பூதியா காயமட மாதர்க ளசைத்தாட்டு
பொன்னூச லாடியருளே
பூவையள காநகர்ப் பாவையுமை யம்மைநீ
பொன்னூச லாடியருளே. (1)

மருவுமூ லாதார மேவுகுண் டலிசத்தி
வடிவாகி வாணியாகி
மன்சுவா திட்டான மணியிற் பிறந்துபின்
மணிபூர கத்தினிடையோர்
திருவுமா யோங்கிமற் றநாகதந் தன்னிலே
செய்யருத் திராணியாகித்
திகழ்தரு விசுத்தியின் மகேஸ்வரிய தாகிவண்
டேசுற்ற வாஞ்ஞைதன்னில்
அருவமா யுருவுமும னோன்மணிய தாகிநே
ரார்பிரம ரந்திரத்தில்
அரியசிற் சத்தியாய்த் துவாதசாந் தத்திலோ
வானந்த ரூபமயமாய்ப்
பொருவிலா துயர்பரா சத்தியா யாளம்மை
பொன்னூச லாடியருளே
பூவையள காநகர்ப் பாவையுமை யம்மைநீ
பொன்னூச லாடியருளே. (2)

நாமநர லைப்புவியொ ரேழேழு கோத்துவமை
நாடருசி ரண்டம்யாவும்
நாணுளு நீயமைத் திடுமருமை நோக்காது
நடுவுநிலை சிறிதுமின்றித்
தோமறுநன் முத்தொழிற் கத்தா வெனும்பெருமை
தூக்காது கோல்புரக்குந்
தோகைமலை யரையன்மக ளென்னுது பேதையிற்
றுணிவுகொடு மத்தபித்தன்
காமதக னப்பரன் சுட்டெரித் தெதிராடல்
கண்டுமுனி வின்றிநகையே
காட்டிமுன் போலண்ட கூடங்க ணிறுவியணி
கண்டுவிளை யாடல்கூரும்
பூமருவு பொற்ருட் பிராட்டியங் கயற்கண்ணி
பொன்னூச லாடியருளே
பூவையள காநகர்ப் பாவையுமை யம்மைநீ
பொன்னூச லாடியருளே. (3)

பூதமுத ளுதவரை யோதுதத் துவமதாம்
பொருப்பின்மே லேறியுணர்வாம்
புருடனெடு குளிகையுண் டருள்விரவி வஞ்சவெளி
புக்குநின் ருனந்தமாஞ்
சீதவா நாடியெம் பவப்பிணிச் சூடெலாந்
தீர்த்திரண் டற்றுநிற்குஞ்
சிற்பரா னந்திசிவ பெருமாற் கபின்னமாஞ்
சிற்சத்தி நிற்பத்திசெய்
சாதன முணர்ந்தபரி பக்குவர்க் கவர்வினைத்
தளையறுத் தொருமைவீடாந்
தனிமகங் கைக்கனியி னூட்டுமா சலராசி
தையன்மலை யோவியப்பெண்
போதவடி வானபரை நாரிகௌ மாரியே
பொன்னூச லாடியருளே
பூவையள காநகர்ப் பாவையுமை யம்மைநீ
பொன்னூச லாடியருளே. (4)

உலகம்வே றதையுணரு நாம்வே றெனக்காணு
மொருசாக்ர மதனிலொருவன்
உடல்கூறு கொண்டசற் சத்தியாய்க் கானனீ
ரொத்ததுல கென்றுகாணும்
அலகிலா நின்மலக் கனவினிற் சிற்சத்தி
யாகியா காயமலராம்
அகிலமென நன்றுகா ணிராமய சுழுத்திதனி
லானந்த சத்தியாகி
இலகுபணி யாவுமா டகவுருவ மாதல்போ
லெல்லாமெம் மயமதாகும்
மென்றுநிட் களதுரிய நிலையிற் பராசத்தி
யெனநின்று மாரியெர்த்துப்
பொலிகருணை யொழுகுதிரு விழியுடை மடப்பிள்ளை
பொன்னூச லாடியருளே.
பூவையள காநகர்ப் பாவையுமை யம்மைநீ
பொன்னூச லாடியருளே. (5)

ஆழியி லுதித்துவெண் ணில்வூற்று பான்மதிநி
னன்பன்முடி யேறியூர்தல்
அல்லாம னின்முகத் துறவாட லெண்ணியோ
வாலவாய்ச் சொக்கரருள்சேர்
பூழியர்கண் மூதாதை நிற்குமற் றதுவாதல்
புந்திவைத் தருளியோதான்
புவியிலவன் மரபோங்க நின்றுணு முலையமுது
பொன்செய்மணி வள்ளமேந்திக்
காழிமழ லைக்கீய்ந்து கூடல்வர விட்டனைகொல்
கவுமாரி யரவியுய்த்துக்
கதிகூட்டு மெய்ச்சைவ சமையப் பெருந்தேவி
காமாட்சி வாமாட்சிபொற்
பூழிதிகழ் செஞ்சரோ ருகமலர்த் தாட்கன்னி
யொன்னூச லாடியருளே
பூவையள காநகர்ப் பாவையுமை யம்மைநீ
பொன்னூச லாடியருளே. (6)

ஒன்று யிரண்டாகி மூன்றாகி யைந்தாகி
யோதரிய வெட்டுருவமாய்
உயிராகி யிருகிலம தாய்ச்சரா சரமாகி
யோதநீ ருவரியாகிக்
குன்றாகி வனமாகி மலரின்மண மாய்நாங்
கோள்களாய் நாள்களாகிக்
குருவாகி யருளொழுகு கோனாகி யம்பலக்
கூத்தாடி மறையின்முடிவாய்
நன்றாகி யல்லவா யிவைகளுக் கயலாகி
நடுநின்று சாட்சியாகி
நாதங் கடந்தபரி பூரணம தானவொரு
நாயகற் குற்றதுணையாய்ப்
பொன்றாத திருவருட் டிருமேனி கொண்டமயில்
பொன்னூச லாடியருளே
பூவையள காநகர்ப் பாவையுமை யம்மைநீ
பொன்னூச லாடியருளே. (7)

சற்சத்தி யாந்தெய்வ குஞ்சரியை யானந்த
சத்தியாங் குறமாதினைத்
தன்னதிரு பாலும்வைத் தொப்பில்சிற் சத்தியாந்
தாரைநெடு வேலெடுத்து
நற்சுத்த மாயையுரு வாயமயி லூர்ந்துமுந்
நான்குபுய மாறுவதனம்
நாட்டிமா வாக்கியப் பொருள்விரித் தெந்தைக்கு
நல்குமொரு குரவனை
கொற்சுத்த சைதன்ய சிவசுப்ர மண்யனைக்
குமரனைக் கந்தவேளைக்
குன்றைநா யகனையறு முகனைமடி வைத்தாடு
கோகிலமெ னுள்ளமேவும்
பொற்சத்தி யாதிசிவ போகசுந் தரவல்லி
பொன்னூச லாடியருளே
பூவையள காநகர்ப் பாவையுமை யம்மைநீ
பொன்னூச லாடியருளே. (8)

பாரவரு பெருஞ்சோதி யம்பலக் கூத்தனுர்
படிவமா மாகமஞ்சொல்
பஞ்சக் கரத்தினிலை யுணரிற் சிகாரமொரு
பரமனு மருள்வகாரம்
புராதனப் பசுவாய வான்மா யகாரமாம்
புரிதரு திரோதநகரம்
புணர்மல மகாரமா மீதுசித் தாந்தநெறி
புந்திவைத் தன்பினெண்ணி
இராகம தறுத்தரிய மோனங்கொ ளன்பர்த
மிடர்களைந் திரவுபகலொன்
றில்லாத வீடுதவு நல்லாய் கயற்கண்ணி
யிச்சைமுத லைஞ்சத்தியாம்
புராதனி விசாலாட்சி யானந்தி பகவதீ
பொன்னூச லாடியருளே
பூவையள காநகர்ப் பாவையுமை யம்மைநீ
பொன்னூச லாடியருளே. (9)

தேமேவு கொன்றைமலர் மாலிகைக் கோமள
செக்கர்வான் சோதிவீர
சேகா னிடத்தில்வா ழானந்த வல்லியுயர்
செந்தமிழ்ப் பாண்டிநாடாள்
மாமேவு வழுதிகுல மணிவிளக் கேயிமய
மலையரசி யாதிபரையே
மாறிலா முத்திமுத லெங்கள்குல தெய்வமே
மறைதேடு நீலமயிலே
காமேவு பொன்னகரின் மின்னூ ராடிமகிழ்
காடிசோ பனங்கள்பாடக்
கருணைபொழி திருமுகமு மபயவர தந்திகழ்
காங்களுந் தண்டையார்க்கும்
பூமேவு செஞ்சரண முங்காட்டி யாளம்மை
பொன்னூச லாடியருளே
பூவையள காநகர்ப் பாவையுமை யம்மைநீ
பொன்னூச லாடியருளே. (10)

திருச்சிற்றம்பலம்.

அளகை உமையம்மை பிள்ளைத்தமிழ் முற்றிற்று.

உ

சிவமயம்.

மகாகணபதே நம:

திருச்சிற்றம்பலம்.

சித்திவிநாயகர் மாலை.

இது

புதுவயல்

திருவாளர், நா. அ. அண்ணாமலைச்செட்டியார்

கனிஷ்ட குமாரர்

சண்முகச் செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்றது.

யுவ வருடம் ஆவணி.

1935.

உ

சிவமயம்.

மகாகணபதே நம:

திருச்சிற்றம்பலம்.

சித்திவிநாயகர்மாலை.

காப்பு.

வித்தக சித்தி விநாயகநின் முண்மலர்க்கே
பத்திசெய்து நித்தம் பரவசமாய்—முத்தமணித்
தாராக நாக்கமழுந் தண்டமிழ்ப்பா மாலையொன்று
நேராக யாக்கமன நில்.

நூல்.

திருவுறை மார்பனன்ன வூர்தியன் றேடவன்னித்
திருவுரு வாகிநீண்ட செம்மல்சே யெளியனேற்குன்
திருவடிப் போதிலன்பு சிறக்குமா செய்துண்ணின்று
திருவளித் தாள்வாய்சித்தி யைங்கரத் தேவதேவே. (1)

பருப்பத மயிலுமுக்கட் பரமனும் பாந்தசீர்த்திப்
பொருப்பதி லுலாவந்தோர்சார் புணர்ந்தவோங் காரந்தன்னை
மருப்பலை மதமாவாக வரமனத் தமைக்கவந்தோய்
திருப்பதந் தருவாய்சித்தி யைங்கரத் தேவதேவே. (2)

அடியனே னகட்டிற்றீரா தலைதந்த கொடுநோய்தீர்த்துப்
படியதி லின்பவெள்ளப் பரிசெலாந் தந்தாய்நின்சீர்
நெடியமா லயனுந்தேருர் நீசனெவ்வாறே வவ்லன்
செடிதவிர்த் தாளுஞ்சித்தி யைங்கரத் தேவதேவே. (3)

வையக மதனிலிந்த மானிட வாழ்க்கைதந்தாய்
ஐயநி னருட்கோரெல்லை யாண்டுமி லொன்றுவேண்டும்
மையறு மனமுந்தேக வலியும்வாய் மையுநின்றெண்டும்
ஐயசின் மயமாசித்தி யைங்கரத் தேவதேவே. (4)

வாடினே னல்லார்வஞ்ச வலைப்பட்டுக் களியாட்டெய்திப்
பாடினே னவர்சிருன்சீர்ப் பாட்டிலக்கணஞ் சொல்வாரை
நாடினே னல்லனந்த நாள்வருங் கூற்றற்கஞ்சித்
தேடினே னபயஞ்சித்தி யைங்கரத் தேவதேவே. (5)

ஆனந்த நடனச்சோதி யளித்தவா ரமுதேயண்ணு
வானந்தன் மருகாவென்றன் வல்வினை மாய்த்தாட்கொண்ட
கோனந்த மாதியில்லாக் குஞ்சரக் கன்றேதீனர்க்
கானந்தந் தருமாசித்தி யைங்கரத் தேவதேவே. (6)

கருமுடித் தவுணர்நாடு கருக்கியன் றிலங்கைவேந்தைச்
செருமுடித் தின்பங்காட்டுஞ் சீதரன் மருகாதிங்க
ளொருமுடித் தலைவன்மைந்தா வுயர்நல னுதவாயானைத்
திருமுடித் தலைவாசித்தி யைங்கரத் தேவதேவே. (7)

வான்பதந் தரினும்பூமேல் வாழயன் பதந்தந்தாலுந்
தேன்பயி றுளவமாயன் சேர்வுதந் தாலும்வேண்டேன்
ஊன்பட ருடற்கேதேடி யோய்ந்தன னுனதுபொற்று
ளாம்பதந் தருவாய்சித்தி யைங்கரத் தேவதேவே. (8)

பாறுசூழ்ந் தள்ளியுண்ணப் படுகளத் தசுராவி
கூறுசெய் துண்டவொற்றைக் கொம்பணி தம்பிரானே
பேறுமா தரையிலாக்கிப் பிணக்கறுத் தின்பந்தாராய்
ஆறுசேர் சடையாசித்தி யைங்கரத் தேவதேவே. (9)

செல்லொரு வடிவுற்றென்னச் சிவந்துகண் கறுத்துக்காலன்
பல்லொளி ரதரங்கவ்விப் பகைத்துவன் பாசம்வீக்கி
அல்லத ரீர்க்குமந்நா ளஞ்சலென் றபயங்காட்டிச்
செல்லதீர்த் தாள்வாய்சித்தி யைங்கரத் தேவதேவே. (10)

தானெனு மமகாரத்திற் றருக்கிய சனகனுய்யப்
போனகம் வேண்டியுண்டாய் புணரிசூழ் புவியிலார்க்குந்
தானந்தந் தருளுஞ்சுத்த சைதன்ய வடிவேயாண்டும்
ஆனந்தந் தருவாய்சித்தி யைங்கரத் தேவதேவே. (11)

புயல்படு கரத்தநிற்பூங் கழற்றுணை போற்றாதாரந்
துயல்வரு முலையாராகந் தோய்ந்தற விளைத்துச்சோம்பிப்
பயலமிழ்ந் துழலுநாயேன் பாதக னெனினும்பாரம்
அயலறி யேன்காண்சித்தி யைங்கரத் தேவதேவே. (12)

பத்திர மலர்கடுவிப் பத்திமை யோடுநின்றாள்
நித்தியந் தொழுவார்பொல்லா நீசரா னாலுமந்த
உத்தம ருறவுவேண்டு முன்னடித் தொழும்புவேண்டும்
அத்திமா முகனேசித்தி யைங்கரத் தேவதேவே. (13)

பொருக்கெழாச் சலதிபோலும் புணர்ந்தவன் பவத்திலாழ்ந்து
திருக்குடை யவனானத்தைத் திரிக்குநா ளெந்தநாளோ
கருக்குழி கடத்தியிந்தக் கடையனைக் காத்தலுன்றன்
திருக்கரு ணையதாஞ்சித்தி யைங்கரத் தேவதேவே. (14)

ஆலத்தை நிகர்த்துப்பேழ்வா யனல்சிந்து கட்கடாவிற்
சூலத்தைப் பரித்துப்பாசந் தொட்டுறாங் காலற்கஞ்சேன்
காலத்தைக் கடந்தாய்நின்றாள் காதலித் தரணஞ்சூழ்ந்தோர்
சீலத்தைக் கண்டேன்சித்தி யைங்கரத் தேவதேவே. (15)

நாய்நரிக் குணவாமிந்த நாறுட லோம்பிநாளுங்
காய்பசிக் கறம்பேணாதுன் கன்மனக் கடையன்கண்டாய்
பேய்கறித் துண்ணவொன்னார் பிறங்குடல் பிளந்தவொற்றை
ஆய்மருப் புடையாய்சித்தி யைங்கரத் தேவதேவே. (16)

பண்டருந் தமிழ்ப்பாவல்ல பாவல ருள்ளிட்டேத்துந்
தண்டையந் தாட்கேமாந்து தவிக்கின்றே னனையர்சேயைக்
கண்டக னெனக்கைவிட்டுக் கடிவரோ கருணைக்குன்றே
அண்டர்கள் பரவுஞ்சித்தி யைங்கரத் தேவதேவே. (17)

நாரணன் பிரமன்றேடு நாயக வான்மபோத
பாரண வறிவானந்த பரமகல் யாணவென்பால்
மாரணந் தருநாளுன்றன் வடிவுகண் டுய்ப்பவந்தாள்
ஆரண முதலேசித்தி யைங்கரத் தேவதேவே. (18)

முத்திக்கண் வைப்பாயன்றி முனிபவந் தருவாய்மன்றிற்
றத்தித்தோ மெனவோர்தண்டைத் தாளெடுத் தாடிமைந்தா
உத்திப்பாம் பரைக்கசைத்த வொருவனின் செயருனன்றே
தித்திக்கு மமுதேசித்தி யைங்கரத் தேவதேவே. (19)

சேண்டரு தேவர்க்கெட்டாத் திப்பிய சோதிநல்லார்
காண்டகு மணியேமுக்கட் கரும்பினில் வடித்தசாறே
தாண்டவ பரமாகீதந் தருசொலி மைந்தாவென்னை
ஆண்டவா ரமுதேசித்தி யைங்கரத் தேவதேவே. (20)

நாவினு லுனதுநாம நவின்றுகை மலர்தாளிட்டு
மேவினு ளுஞ்சைவ மெய்ந்நெறி யொழுகல்வேண்டும்
பூவினன் முகன்மால்போற்றும் புண்ணியா புரங்கடோறும்
ஆவினு யகனேசித்தி யைங்கரத் தேவதேவே. (21)

மறியரி வடிவேற்கண்ணி வல்லபை மணுளாவீரேழ்
செறிபொழி லளித்துக்காத்துத் தீப்பவ வன்பர்சிந்தைக்
குறிவழியொழுகி யாட்கொள் குஞ்சர வதனுகல்லாச்
சிறியனை யாட்கொள்சித்தி யைங்கரத் தேவதேவே. (22)

மாவலி பாவிரந்த மாறிரு மருகாநின்பூஞ்
சேவடி பற்றிவீடு சேருமா நெறிதந்தென்னுட்
பாவனை யாகிமற்றோர் பரம்புண ராதுகாத்தாள்
தீவடி வழகாசித்தி யைங்கரத் தேவதேவே. (23)

என்பெலா முருகிக்கண்ணீ ரிறைத்தழு தழுதுவிம்மி
அன்பனு னுவதென்றோ வடியவ ராக்கைபோக்கித்
தன்பதாம் புயத்திற்கூட்டுந் தற்பரா சமயாதீதா
தென்பரா கஞ்சேர்சித்தி யைங்கரத் தேவதேவே. (24)

எந்தைநீ மைந்தன்யானே யிடர்ப்படிற் சிரியாரன்றே
அந்தமு முதலுமில்லா வாரண முதலேபூவில்
வந்தரி யுதகம்வானம் மண்முதற் பலவாய்த்தோன்றும்
சிந்துர வதனசித்தி யைங்கரத் தேவதேவே. (25)

முக்கனி தயிர்பால்கன்னல் முதிரவல் கடலையெள்ளுந்
தக்கபல் பண்ணிகாரந் தந்துசாத் திகம்புணர்ந்தே
அக்கமோ டறுகுதூர்த்து னடியருச் சித்தல்வேண்டுஞ்
செக்கரஞ் சடையாசித்தி யைங்கரத் தேவதேவே. (26)

கல்லார்க்குத் தூரமாகிக் கற்றவர்க் கணித்தாய்நிற்கும்
பொல்லாத மணியேநின்னைப் புகழுமா றெவனோநாயேன்
வில்லார்க்கு நுதலார்தந்த வேட்கையுட் டிளைத்துநொந்தேன்
அல்லாகிப் பகலாஞ்சித்தி யைங்கரத் தேவதேவே. (27)

பாலமேல் விழியாசெந்திப் படிவநா யகனேபாகம்
ஏலவார் குழலார்கூட விருநிலம் பூத்தகன்னி
கோலமார் தரவணைத்துக் குலவுமோர் கோலங்காட்டாய்
சீலவா ரணமேசித்தி யைங்கரத் தேவதேவே. (28)

முன்னமோ ரவுணன்றன்னை முறுக்கிய முறையின்வஞ்சந்
துன்னிய கூற்றனுற்ற றுலைத்தெனை யஞ்சேலென்பாய்
நின்னடிக் கடிமைசெய்யு நின்றமர்க் கடிமைபூண்டேன்
அன்னிய னலன்காண்சித்தி யைங்கரத் தேவதேவே. (29)

முத்தவெண் ணகையாராம்பன் முகைநிக ரதரமாந்திப்
பித்தளைந் துழலுநாயேன் பெரும்பிழை யுடையனேனும்
உத்தம மறந்ததுண்டோ வுனதுசெம் பதுமத்தாளை
அத்தனே யரசேசித்தி யைங்கரத் தேவதேவே. (30)

முன்னநான் முகனையீன்ற முளரியங் கண்ணனங்கை
மன்னுபே ராழியுண்ட வள்ளலென் பவவெவ்வாழி
தன்னையு முண்டாற்கோடி தருமமுண் டன்றித்தாழ்வோ
அன்னையே யப்பாசித்தி யைங்கரத் தேவதேவே. (31)

வண்டாட்ட மலர்த்தேனுண்ணு மலப்புழுப் போல்வாரந்தோ
பண்டாட்டம் பயில்வோன்மைந்த பரமய னுண்டென்றெண்ணிக்
கொண்டாட்டங் கொள்வார்செந்திக் கும்பிவாய் மடுப்பத்தேங்கித்
திண்டாட்டங் கொள்வாரேனோ வைங்கரத் தேவதேவே. (32)

கோங்கரும் பனையகொங்கைக் கோதையர் மயற்பட்டழ்ந்தோ
ஏங்கிநின் றழிகுவேனை யேந்துத லறமன்றுமோ
மாங்குயிற் குதலைதந்த வாரண முகத்தாயின்சொற்
றீங்கரும் பனையாய்சித்தி யைங்கரத் தேவதேவே. (33)

காவரும் புகண்மலர்ந்து காவிலா தொழுக்கிவண்டர்க்
கேவரும் புகழவூட்டு மிதழ்விரி கமலத்தாளோய்
நாவரும் புகழேபாடி நவையறு மன்பெனுள்ளத்
தேவரும் படியாள்சித்தி யைங்கரத் தேவதேவே. (34)

வண்டர்கள் புனைந்தசெந்தா மரைப்பதந் தொழவுநின்றன்
றொண்டர்க டொண்டுசெய்து தொடக்கறுத் திடவுந்தொல்சீர்ப்
பண்டருங் கிளவிநாரி பாலகா வரமொன்றீவாய்
அண்டர்கள் பரவுஞ்சித்தி யைங்கரத் தேவதேவே. (35)

சித்தசன் கணைக்குங்கூற்றன் செயற்குமா ளாகியுற்ப
வித்தசன் மங்கள்போதும் விடாய்தணித் தெல்லாமான
கத்தசன் மார்க்கந்தாராய் கழலிணைத் தொண்டுதாராய்
அத்தசன் மதனேசித்தி யைங்கரத் தேவதேவே. (36)

தெய்வதம் பரவாவீணர் செய்தவக் கடையர்பாற்போய்
பொய்வனம் புக்குவாணுள் போக்குறு தறிவானந்த
மெய்வழி காட்டிமோன வித்தகங் காட்டியன்பு
செய்வகை காட்டாய்சித்தி யைங்கரத் தேவதேவே. (37)

சிந்தனையுன் கஞ்சத்தாள் சேர்த்தில னெனினுமுள்க
சிந்தனை போற்பரிந்து செய்யுநின் கருணையென்பாற்
சிந்தனையதே கைமாறென் செய்குவல் குடக்கூத்துச்செய்
சிந்தனை யாண்டசித்தி யைங்கரத் தேவதேவே. (38)

பிறையெயி றிலங்கநக்குப் பெய்மலர்க் குஞ்சிதாழக்
கறைதிகழ் கோட்டுப்பேழ்வாய்க் கடாவரு காலன்றூதர்
உறைகழித் தொண்வாடாக்கி யுயிருண்ப ரந்தோவல்லே
அறைகழ லளித்தாள்சித்தி யைங்கரத் தேவதேவே. (39)

மத்துறு தயிர்போலுள்ள மாழ்கனீ யறியாய்கொல்லோ
பித்தர்த மதலையாலப் பித்தநின் றனக்குமுண்டோ
வித்துரு மத்துமேனி மெய்ப்பரஞ் சுடரோநாய்மேற்
சித்தம்வைத் தாள்வாய்சித்தி யைங்கரத் தேவதேவே. (40)

வன்னச்செப் பெனுமுலைச்சி வடிவிமா தங்கியுண்கண்
பன்னச்சப் பணிரோல்குற் பாவையெந் தாய்குறப்பெண்
முன்னச்செம் புனத்துமாவாய் முருகற்கங் குதவச்சென்ற
சின்னச்செம் பதந்தாசித்தி யைங்கரத் தேவதேவே. (41)

தித்திர ளன்னமேனிச் சிற்பரா சிறியேனுளும்
நாத்திகங் கடிந்துநாவா னமச்சிவா யத்தையோதக்
காத்திர மாயதென்கைக் கவின்செப மாலைகாட்டாய்
ஆத்திக ரணியேசித்தி யைங்கரத் தேவதேவே. (42)

என்னுயிர் போலயாண்டு மிடையறு தென்கரத்தின்
மன்னிய வக்கமாலை வழுவிய தெவனீதேருத்
தன்மையு முளவோவஞ்சந் தனையொழித் தஃதீவேதச்
சென்னியி னடிக்குஞ்சித்தி யைங்கரத் தேவதேவே. (43)

நிச்சலு மயர்ந்துவாட னியதியோ விறையுந்தாளேன்
பொச்சமி லன்பர்போற்றும் புண்ணியா வுன்பாலன்பு
வச்சனீ துண்மைநின்றுண் மறந்தறி யேன்காணேழை
அச்சம தறுத்தாள்சித்தி யைங்கரத் தேவதேவே. (44)

மெய்ந்நெறி பிழைத்தார்வேத விழுப்பொரு ளுனைமறந்தார்
பொய்ந்நெறி யுலகப்பித்தர் புல்லிய நேசமாய்த்தாள்
உய்ந்நெறி காட்டுமேலோ ருறவுகொண் டுக்கவுண்ணோர்
தெய்வமே யமலசித்தி யைங்கரத் தேவதேவே. (45)

நெடியவிர் புலாலுண்வாழ்க்கை நீசரா னுலும்வெள்ளைப்
பொடியணிந் துன்பாலன்பு பொருந்தின ராயினந்த
அடியவ ரடிசுமக்க வருளுதி மறைகடேடுஞ்
செடியபங் கயத்தாட்சித்தி யைங்கரத் தேவதேவே. (46)

கடலையும் பயறும்பாலும் கனிகளும் பெம்மாற்கிட்டுப்
படலைசெம் பதுமஞ்சாத்தேன் பத்தரி னடித்தேனந்தோ
நடலைதீர்த் தாளனின்ற னல்லருட் கியல்பேயையா
அடலைகொண் டாடுஞ்சித்தி யைங்கரத் தேவதேவே. (47)

சிற்பர முதலாயாவுஞ் செறிந்தண்டம் புணர்ந்தநீயே
அற்பவா மயத்தின்மண்ணி லரிசனத் தகன்றநூறேர்
சிற்பர்செய் சிலையினின்று திரிதரு நிலைதேர்வார்நின்
அற்புதந் தேர்வார்சித்தி யைங்கரத் தேவதேவே. (48)

கானந்தங் கானல்வேட்டுக் கடுவெளி திரியுமான்போற்
பேனந்தங் கறல்சூழ்வைடப் பித்துறீஇ யிளைத்தேனுயேன்
கூனந்தங் குழையர்தந்த குஞ்சர வதனுவேட்டெற்
கானந்தந் தருவாய்சித்தி யைங்கரத் தேவதேவே. (49)

அக்கணி யமலர்தில்லை யம்பல வாணர்பாகம்
புக்கணிந் தாடுநீலப் பூவைதேட் டாயமாவே
கைக்கணி யாகமாலை கட்டுவார் குழுவிற்சேர்ப்பாய்
அக்கணி யரசேசித்தி யைங்கரத் தேவதேவே. (50)

தேனமர் துளவத்தாரோன் திசைமுக னறியானின்ற
மானமர் கரத்தானீன்ற வரத வையகம்பழிக்க
நானமர்ந் திருந்தேன்கூற்ற னுட்டுக்கு விருந்தாயந்தோ
தீனனே யணைத்தாள்சித்தி யைங்கரத் தேவதேவே. (51)

மாதவம் புரிவார்கோடி வந்தித்து வாழ்வார்கோடி
நாதவம் புவிமேனிற்க நாயரு ளெண்ணிவந்தேன்
சாதவம் புதிகடக்கத் தம்பிரானினது தண்டைச்
சீதவம் புயந்தாசித்தி யைங்கரத் தேவதேவே. (52)

சாதியுங் குலமுமில்லைத் தைவமொன் றில்லைமேலோர்
ஓதிய வனைத்தும்பொய்யென் றுணர்வுகெட் டுளறுந்துட்ட
வாதியர்க் கொருமருந்தீ வரகண பதியாய்வந்த
ஆதியம் பரமாசித்தி யைங்கரத் தேவதேவே. (53)

நாராண னுய்யவாணி நாயக னுய்யவெள்ளை
வாரண னுய்யவிந்த வையக முய்யநஞ்சம்
பாரணஞ் செய்தசிமான் பசுபதி மைந்தாவென்றேன்
தீரண மறுத்தாள்சித்தி யைங்கரத் தேவதேவே. (54)

மாங்குயிற் குதலைக்கோவை வாச்சிய ரிருபான்மன்னி
ஓங்குற வடிமைக்கின்ப வூற்றெழ வாகுவூர்ந்தே
பாங்குவந் தருளாய்கொல்லோ பன்னெடுங் காலமெண்ணித்
தேங்குத லறமோசித்தி யைங்கரத் தேவதேவே. (55)

கொட்டுப்பற் பலநாள்வெட்டிக் கூர்மழுங் கினவாய்க்கூடை
தொட்டுப்பட் டினியர்போலத் தோன்றியம் முதியாளிட்ட
பிட்டுப்பெட் டுண்டபித்தன் பிள்ளையாம் பெருமதீமை
அட்டுப்பொற் பதந்தாசித்தி யைங்கரத் தேவதேவே. (56)

முத்தனே முதல்வாயானை முகப்பரம் பொருளேயைங்கை
அத்தனே யபயங்காட்டி யச்சந்தீர்த் தாள்வாயையா
கத்தனே களைகண்வேறு கண்டிலேன் காக்கவல்ல
சித்தனீ யன்றோசித்தி யைங்கரத் தேவதேவே. (57)

பொற்பரா வண்ணமாரற் பொடித்ததே வளித்ததேவா
அற்பரா வார்கணேச மறுத்தும்ப ரன்புசெய்யும்
பற்பரா கத்தாணேசம் பற்றுமா கருணைகாட்டாய்
சிற்பரா னந்தசித்தி யைங்கரத் தேவதேவே. (58)

பொன்னைமா நிலத்தைமாதர் போகத்தை நம்பிமாயா
தென்னையாண் டருளல்வேண்டு மிரப்பவர்க் கிடுமாறென்று
தன்னையே தஞ்சம்புக்க தமியனுக் குதவல்வேண்டும்
அன்னையே யப்பாசித்தி யைங்காத் தேவதேவே. (59)

சீதச்செங் கழுநீர்சூடுந் தியாகரோர் பாகம்பெற்ற
மாதச்செம் பவளவாய்ப்பெண் மணிதிக ழுதாம்பூத்தோய்
வேதச்சென் னியினடித்த வித்தகா விதியண்டத்த
தீதச்செம் பொருளேசித்தி யைங்கரத் தேவதேவே. (60)

உபயம குணத்தாயார்க்கு முபயமே செய்வாயெய்த்தார்க்
கபயமோ டருளுங்காட்டி யருளுவை மறைகளுன்றன்
உபயமென் சரணங்காணு தோவிட வொளித்தாயன்றே
அபயமே நிறைந்தசித்தி யைங்கரத் தேவதேவே. (61)

வஞ்சகர் மனத்துச்சேரா வள்ளலே வடிவியெந்தாய்
அஞ்சொலி மைந்தா தீனர்க் கருமருந் தனையவப்பா
பஞ்சரம் படுத்தகிள்ளைப் பார்ப்பென மயங்குகின்றேன்
அஞ்சலென் றருள்வாய்சித்தி யைங்கரத் தேவதேவே. (62)

கோடரம் விற்றசித்தன் கூடனு யகனேக்கூடும்
நீடரம் பொருதவேற்க நீலிக்கு மைந்தாநெஞ்சம்
பீடர மாக்கொண்டேழை பிழைதவிர்த் தாளலென்ரு
ஆடர வசைத்தசித்தி யைங்கரத் தேவதேவே. (63)

முப்பாம் பொருளாயார்க்கு முதல்வனுய் மூலமாகிச்
செப்பறு மறைகடேருச் செல்வமே சிவமேயென்னை
ஒப்பற வாண்டநின்சீர்க் குளதுகொல் கைமாறுன்றே
அப்பனே யதிபாசித்தி யைங்கரத் தேவதேவே. (64)

தம்மைநேர் சரணம்பற்றுந் தமியனுன் றவிப்பதேயோ
இம்மையின் பங்கள்வேண்டு மிலையென விரப்பார்க்கென் றுஞ்
செம்மையே யளிக்கவேண்டுந் திருவளந் திகழுவேண்டும்
அம்மையே யப்பாசித்தி யைங்கரத் தேவதேவே. (65)

மானமே யுயிர்கட்கெல்லா மன்னுபூ டணமென்பாரால்
யானதை யவாவிநெஞ்ச மழிதா லறியாயோதான்
ஏனழி கின்ருயஞ்ச லென்றரு ளமலானந்த
தீனாட் சகனேசித்தி யைங்கரத் தேவதேவே. (66)

வித்தக பாமானந்த வேதகி தத்தமெய்மை
யுத்தம ருளத்தினீங்கா வொருபரம் பொருளேயேழைக்
கித்தரை வாழ்வுமேலை யின்பமுந் தருதல்வேண்டும்
அத்தவா னந்தசித்தி யைங்கரத் தேவதேவே. (67)

நீடிய கருணைகாட்டி நித்தவா னந்தமூழ்க
வாடிய பயிர்க்குமேகம் வழங்குமா திருவைக்காட்டி
நாடிய வெளிதிற்கூட நல்லருள் செய்வாயையா
ஆடிய மலர்த்தாட்சித்தி யைங்கரத் தேவதேவே. (68)

பந்தமும் வீடுங்காட்டும் பரமகல் யாணவேத
வந்தித சரணமூக்கண் வரதவோங் காரரூபி
சுந்தர கணேசசெம்பொற் சோதிநாயக வான்போற்றுஞ்
சிந்துர வதனசித்தி யைங்கரத் தேவதேவே. (69)

குயின்மொழி புனங்காவல்செய் குறத்திதா டஞ்சம்புக்க
மயின்மிசை யெழுமாகந்த வள்ளன்முன் வந்தமேலோய்
வெயின்மணி கொழிக்குமுந்நீர் வியனுல களித்துத்தீய்க்குஞ்
செயன்மலி யரசேசித்தி யைங்கரத் தேவதேவே. (70)

ஆட்டொரு தாளெடுத்த வம்பல வாணர்பாகம்
வேட்டபைங் கிள்ளைதந்த வேழமா முதலேவீடு
கூட்டொரு மணியேயென்னுள் குலவிய கருணைக்குன்றே
தீட்டிய புகழ்சேர்சித்தி யைங்கரத் தேவதேவே. (71)

தவமயர்க் கெளிதாயல்லார் தமக்கரி தாகிப்பூமேல்
நவமய வாடல்காட்டு நாதநா தாந்தச்சோதி
பவமயம் போக்கிமுத்திப் பயன்றரும் பொருளேமேலாஞ்
சிவமய மாகுஞ்சித்தி யைங்கரத் தேவதேவே. (72)

உமாபதி மன்றுளாடு மொருமுதற் கியாங்கள்யாண்டுந்
தமாலமன் னடிமையென்னச் சாற்றுமெஞ் சைவம்பேணும்
உமாபதி சிவம்போலன்ப ருள்ளமே கோயில்கொண்ட
சிமாசல வடிவசித்தி யைங்கரத் தேவதேவே. (73)

அறப்பெருங் கல்விகற்றோ ரரிதரி தென்றமேலாம்
பிறப்பது பெற்றேனெக்கல் பிதாகுரு மாதாநீயான்
மறப்பவ னல்லனின்னை மறந்துமற் றொன்றுபேணேன்
சிறப்பனிர் னருடாசித்தி யைங்கரத் தேவதேவே. (74)

கஞ்சத்தி லுறைமின்னுதன் கடவுளர் நாதன்வெள்ளை
அஞ்சத்தி லமருநாத னனைவர்க்கு நாதனெங்கோன்
தஞ்சத்தி னிகமாந்தஞ்சொ றற்பரன் விகடசக்ரன்
அஞ்சத்தி புதல்வன்சித்தி யைங்கரத் தேவதேவே. (75)

தோளுகந் தாடுவார்தந் தொழிற்கொரு துணையாய்வாமப்
பாலுகந் தாடுமஞ்ஞை பயந்தகுஞ் சாவிநோதா
சேலுகந் தாடுமைக்கட் சிறுமிய ரிருவர்கொங்கை
ஆலுகந் தாடுஞ்சித்தி யைங்கரத் தேவதேவே. (76)

ஒப்படி கட்கிங்கெவ்வா றுரைக்குவ துவமையில்லோய்
இப்படி யென்கோநின்னை யிருவிசும் பென்கோமேனி
அப்படி யென்கோமுற்று மருவென்கோ வுருவனென்கோ
செப்படி ரவியேசித்தி யைங்கரத் தேவதேவே. (77)

கண்ணனுர் காணுவஞ்சக் கள்வர்தீ வண்ணச்சோதி
வண்ணனுர் திருக்காளத்தி மலையுளார் மறங்கைக்கொண்ட
திண்ணனு ரெச்சிலுண்ட சிவன்மக னுரேயெங்கள்
அண்ணனு ராகுஞ்சித்தி யைங்கரத் தேவதேவே. (78)

சித்தநின் பாலதாகுஞ் சிறந்தவுன் புகழ்நாபேசும்
எத்தராஞ் சமயப்பொக்க ரிசைத்தபன் னெறியுமெள்ளி
உத்தம சைவம்பேணு மொருநெறி கிடைக்கப்பெற்றேன்
அத்தநா னுய்ந்தன்சித்தி யைங்கரத் தேவதேவே. (79)

கள்ளாதி தோடமைந்துங் கடைப்பிடித்தந் தத்தோர்கல்
தள்ளாதுன் பணிமேலிட்டான் றராபதியா னனென்றுல்
வள்ளாலுன் பெருமையாரே வகுப்பவர் வரையாதீயுந்
தெள்ளாரு மமுதேசித்தி யைங்காத் தேவதேவே. (80)

வெயர்வைவித் தண்டம்பைநால் விதத்திலுற் பவமாஞ்சீவர்க்
குயர்வுதாழ் வென்பதத்த மூழ்த்திற னுதவிமூடும்
அயர்வுதீர்த் துணர்வுநல்கு மாகமஞ்சொற் றுய்நின்பொற்
செயல்செய்வார் யாரேசித்தி யைங்காத் தேவதேவே. (81)

கடமுனி கரகநீத்தங் கவிழ்த்தயி ராணிகேள்வன்
படுமலர்ச் சோலைகாத்த பகவநான் படுமாறென்னே
உடமைகொண் டொறுத்தாலந்தோ வுரைப்பன்யார்க் குவமையில்
திடமுறவருள் வாய்சித்தி யைங்கரத் தேவதேவே. [லோப்

மாதவம் புரியேன்வஞ்ச மனத்தன்சீ ரகத்தர்பாலிற்
போதர வில்லேன்கல்விப் போக்கிலே னெனினுநின்றன்
சீதவம் புயத்தாட்கன்பு செய்குவ னுண்மைகண்டாய்
ஆதர வளித்தாள்சித்தி யைங்கரத் தேவதேவே. (83)

தாயவள் காட்டுமாறுத் தலையளி காட்டியின்பந்
தோயவென் றன்னையாண்ட சொற்பதங் கடந்தகோவே
பேயன்செய் கைமாறென்னே பெய்மழை யாதும்வேண்டா
சேயசிற் பரமாசித்தி யைங்கரத் தேவதேவே. (84)

வந்தனங் கோடிதந்தேன் மலர்புரை திருத்தாளுக்கே
இந்தன மெடுத்தார்பிள்ளை யிரங்குதன் மரபென்றெண்ணி
வந்தனன் வஞ்சந்தீர்த்து மகிழ்சிறந் தோங்கச்செய்வாய்
சிந்தன கருணைச்சித்தி யைங்கரத் தேவதேவே. (85)

காட்டுமா கருணைகாட்டிக் கதியிடங் காட்டிச்செம்பாச்
சூட்டுமா மலர்த்தாள்காட்டித் துதிகொண்டு பணியுங்கொண்டு
நாட்டுமா வாழ்க்கைதந்து நனிமகந் தருவாயாவும்
ஆட்டுமா வரசேசித்தி யைங்கரத் தேவதேவே. (86)

தெளிவிலா தடியேன்செய்த தீங்கெலாம் பொறுத்துத்தேங்கி
விளிவுறு தாண்டஞான வித்தகா வேதநாதா
எளியரைத் தேடித்தேடி யிணங்குவா யின்பந்தேக்கி
அளியரு முதலேசித்தி யைங்கரத் தேவதேவே. (87)

பானல்செவ் குமுதங்கோங்கு பார்வைவாய் முத்தக்கொங்கை
மானவந் துள்ளம்புக்கு வஞ்சிப்பார் நேசமந்தோ
கானல்செல் வழியடைக்குங் கல்லென்ப கண்டுகைத்தேன்
தீனபந் தெனுமாசித்தி யைங்கரத் தேவதேவே. (88)

மறப்பிலே னினதுநாமம் மன்னுட லாதிமூன்றுந்
திறப்பட நினக்கேதந்தேன் செம்பொரு ளுணர்த்தல்வேண்டும்
பிறப்பது தருமேற்சைவம் பேணுமா பிறப்புவேண்டும்
அறப்பெருங் கருணைச்சித்தி யைங்கரத் தேவதேவே. (89)

சிந்தித மறைகட்கெட்டாச் சின்மய வடிவேநின்னை
வந்திதே டியமகன்போல் வறிஞன்கை நிதியேபோலப்
புந்தியில் வைத்தெக்காலும் போற்றுவன் புன்மைபோக்காய்
அந்திநேர் சடையாசித்தி யைங்கரத் தேவதேவே. (90)

மாவுக்கு மார்பந்தந்த மாலுக்கும் வாணிநேயன்
பூவுக்கு முதலாமந்தப் புனிதற்கும் புலவராண்ட
கோவுக்குந் திசையாளெண்மர் கோள்கதி ரனந்தகோடி
தேவுக்குந் தேவேசித்தி யைங்கரத் தேவதேவே. (91)

பூதமோ ரைந்துமைந்தும் பொறியைந்து மைந்துநான்குங்
கோதிலா வைந்துமேழுங் கூடிய முப்பானாறுய்
ஓதுதத் துவங்கடந்தா யுனைவழுத்திட வல்லேனே
சேதநீத் தாள்வாய்சித்தி யைங்கரத் தேவதேவே. (92)

கூடத்தன் குமாரகோட்டங் குலவிய குமானென்பார்
மாடத்த மலைமாதென்பார் மாலயற் கறியானென்பார்
கோடத்த னென்பாரின்ன கூற்றினுன் காகியொன்றாய்
ஆடத்த னீயேசித்தி யைங்கரத் தேவதேவே. (93)

ஆலமே யமுதாய்மாந்தி யந்தநா ளமரர்க்காத்த
பாலமேல் விழியார்தந்த படர்சடை மோலித்தந்திக்
கோலமே கோலமாற்குக் கொடுத்ததோர் விகடசக்ர
சீலமே திருவேசித்தி யைங்கரத் தேவதேவே. (94)

வல்லார்க்குஞ் செயல்களொன்று மாட்டார்க்கும் பொருள்களாய்ந்த
நல்லார்க்கும் பசுநூல்கற்று நவைபொறுத் துண்டுவாழும்
பொல்லார்க்கும் பொதுவாய்நின்ற புண்ணியன் புராரிதந்த
செல்லார்க்கு மதம்பெய்சித்தி யைங்கரத் தேவதேவே. (95)

மைவண்ணக் கோட்டுமாவாய் வழிபடு மடியார்பக்கங்
நைவண்ணங் காட்டித்தண்டைக் கால்வண்ணங் காட்டியென்பால்
உய்வண்ணங் காட்டிவேதத் துட்பொரு ளானுன்பூவில்
ஐவண்ணங் காட்டுஞ்சித்தி யைங்கரத் தேவதேவே. (96)

தத்துவந் தொண்ணூற்றுறுந் தாண்டியெப் பொருளுமான
சித்தசின் மயமேநின்சீர் செப்பரி தெனினும்பிள்ளை
கத்துபுன் மழலைபோலென் கவிசெவி சாத்தல்வேண்டும்
அத்தநித் தியமாசித்தி யைங்கரத் தேவதேவே (97)

அரிமத ரமர்க்கட்சித்தி யன்னையும் புத்திமாதும்
பரிவுட னிருபான்மேவப் பராவரு மாகுலூர்க்தே
கரிமுக வதனங்காட்டிக் கடையன்மேற் கருணைகாட்டித்
திரிதரா வருடாசித்தி யைங்கரத் தேவதேவே. (98)

சரணஞ்செம் பவளமேனித் தம்பிரா னுலகம்பூத்த
காரணவென் றலைமேல்வைத்த கமலமாம் விமலஞான
சரணநாஞ் சரணம்பொய்யாத் தண்ணருள் சரணந்தினர்க்
காரணமா யமர்ந்தசித்தி யைங்கரத் தேவதேவே. (99)

விருப்பொடு வெறுப்பில்சித்தி விநாயகா போற்றியன்பர்
கருப்பொடித் தண்டர்வெஃகுங் கதிதருங் கருணைபோற்றி
மருப்பொடித் துலகங்காத்த வள்ளன்மை போற்றிநாளுந்
திருப்பொலி யழகாநின்றன் திருவடி போற்றிபோற்றி (100)

திருச்சிற்றம்பலம்.

சித்திவிநாயகர்மாலை முற்றிற்று.

உ

சிவமயம்.

மகாகணபதே நம:

திருச்சிற்றம்பலம்.

புதுவயல்
கைலாசவிநாயகரந்தாதி.

இது

புதுவயல்

திருவாளர், நா. அ. அண்ணாமலைச்செட்டியார்

கனிஷ்ட குமாரர்

சண்முகச் செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்றது.

யுவ வருடம் ஆவணி.

1935.

உ

சிவமயம்.

மகாகணபதே நம:

திருச்சிற்றம்பலம்.

புதுவயல்
கைலாச விநாயகரந்தாதி.

காப்பு.

மதுவயற் செங்கெல் வளர்த்துப் பலவள மல்குநல்ல
புதுவய லைங்கைப் புனிதவந் தாதி புகல்வனுன்மேல்
விதுவயச் செஞ்சடை யான்மைந்த வென்னுள மேவியருள்
இதுவயம் பெற்றசொல் வாணர்தம் பாவொடு மெண்ணுதற்கே.

வள்ளைக் குழையுமை பாகங்கொள் வீரை வனப்பரமன்
கள்ளைத் தரும்பொன் மணக்கொன்றை சூடுங் கபாலியருள்
பிள்ளைப் பெரும புதுவை விநாயக பேயனுனை
யெள்ளத் தனையன்பு மில்லாம லென்சொல்லி யேத்துவனே. (1)

ஏத்தில னுத்தழும் பேறத் துதித்தில னெண்ணருஞ்சீ
ராத்திகர் போற்று மணியே புதுவய லாளியைங்கைப்
பார்த்திப னேயுனை யன்றிப் புகலிலை பாழ்வினையைத்
தீர்த்தருள் பாலியும் வாடும் பயிர்க்கொரு செல்லெனவே (2)

செல்கா லருந்தி யுடலோம்பு மாசுணந் தீயுழுவை
புல்வாய் மதகயஞ் சூழ்வனம் புக்குப் புனிதமுற்றுப்
பல்கா லுளத்தமைத் துன்று மரைப்பதம் பற்றுதவம்
நல்காய் புதுவைக் கயிலை விநாயக நற்றவனே (3)

தவனே யுலக சராசரம் யாவையுந் தந்தருள்செய்
பவனே புதுவயற் பாசாங் குசதர பண்ணவநா
ளவமே புரிந்துன் னடிக்கன்பி லாம லறிவழிந்தேன்
நவமே யுலவிய வண்டமெல் லாந்தந்த நாயகமே. (4)

நாயென்றுந் தன்னைவளர்த்தா னடிப்புக ணுடுமென்றே
தாயென்ற நீயன்றி யாரே துணைசெய் தாத்தரெந்தாய்
வேயென்ற தோளி வலலை மணுள வியன்புதுவைத்
தேயென்று நின்சர ணென்சிரம் வைப்பது செய்யவனே. (5)

செய்வினை யாவையுந் தீப்படு பஞ்செனச் செய்தருளோர்
கைமுக னேயான் கான்முளை யென்னிரு கண்மணியே
பொய்யரை வாதப்புரட்டரை நேசித்தல் போக்கியுன்பால்
மெய்யரைப் பேண வருள்வாய் புதுவை விழுப்பொருளே. (6)

விழுப்பொரு ளாகம நூலா ரணத்துதி மேவிய்தாள்
முழுப்பொரு ளேபுது வைநகர் வாழு முதலசுரர்
குழுப்பொரு மாருரு கொம்பொடித் தேந்திய குஞ்சரமே
விழுப்பொரு ளேது மறியேனை யாட்கொள வேண்டுமின்றே (7)

வேண்டன் மறுக்கா தளிக்கும் புதுவயன் மெய்ப்பொருளே
காண்டகு கண்மணி யேகதி யேகதி யின்முளையே
பாண்டவர் தூதரும் பங்கயத் தோனும் பாவுதில்லைத்
தாண்டவர் தந்த தனிமுத லேமுத்தி தந்தருளே. (8)

தந்தரி நேரிடை யம்பக வல்லபைத் தாய்தவவின்
னிந்தரி யம்பகன் றேர்கோத்த வச்சை யிறுத்தபரா
முந்தரி யங்கையி லாழியுண் டையந்த முதல்வவரந்
தந்தரி யென்வினை தன்னைப் புதுவயற் றற்பரனே. (9)

தற்பதந் தொம்பத மோடசி வாக்கியந் தள்ளினர்க்கு
முற்பதங் காட்டு முதலே யமரர் முடிமணியே
நற்பத வேழ முகனே புதுவய ணுயகநான்
னெற்பத ரொத்தயர்ந் தேனே யருள்செயிந் நேரத்திலே. (10)

நேத்திரங் காக்கு நிமைபோல நின்ற நினையரையாம்
மாத்திரைப் போதும் வணங்கில னூழின் வலியெளிதோ
சாத்திரஞ் சொன்ன சதுரா புதுவயற் றந்தியுன்று
ளேத்தினர்க் கேவல் புரிபவர் விண்ணு ளிமையவரே. (11)

இமையா சலமுத வும்பிடி பெற்ற திருமையுமெந்
தமையாளு முக்கட் டனிவா ரணமறை தன்னினுங்கண்
இமையார் பரவும் புதுவைத் தளியினு மென்னுளத்தும்
உமையாள் கொழுநன் புயாசல மீது முலாவுமன்றே. (12)

உலாவுங் கரிமுகத் தையா பனிமல ரொக்குநின்ரு
ளலாதிங்கு வேறு கதியிலை காண்டுன் பகற்றியருள்
பலாவுங் கதலியும் பைந்தேறல் வார்க்கும் பசும்பொழிலிற்
கலாபங்க ளேறி நடிக்கும் புதுவயற் காரணனே. (13)

காரோ வளமிகு கற்பக மோவெனக் காட்சிமிகுக்
தேரோங்கு மைங்கரத் தெந்தை நலானந்த மெறக்களித்தான்
தேரோடி நின்றணி செய்யும் புதுவயற் சிந்துரத்தின்
சீரோது வார்தமைச் சேரும் புகழ்மிகு செந்திருவே. (14)

திருமாதை மார்பிடஞ் சேர்த்தானை யண்டரைச் சித்தரைமற்
றொருமாதை நாவி லுடையானை யீரே ழுலகதனைத்
தருமாதை மெய்யுடைச் சங்கரன் மைந்தனைத் தண்புதுவை
யொருமா முகத்தனை புன்னுநெஞ் சேபவ மோயுமின்றே (15)

ஓயுந்தன் ருய்முலை வாய்வைத் தருந்த லுவர்க்கடலிற்
பாயுந்தண் ணீரெனத் தன்மய மாக்கிப் பதுமவடி
தோயுந் தகைமைதந் தாள்வான் புதுவயற் றும்பிமுகன்
காயுந் தகல்வினை நெஞ்சே யவன்புகழ் காதலித்தே (16)

காகத் துருவெடுத் தோர்மா முனிகைக் கமண்டலத்தை
வேகத் துடன்கவிழ்த் தண்டர் பிரானுக்கு வேட்கையறச்
சோகத் துறுமலர்ச் சோலை தளிர்க்கச் சுரந்தவருள்
மேகத்தை யொத்த புதுவை விநாயக வித்தகனே. (17)

வித்தந் தரும்பணை மாமுலை மாதர்தம் வேட்கையைமாய்
வித்தந் தரந்தொழு நின்பாத பங்கய மென்மனம்பா
வித்தந்த மார்தமிழ்ப் பாப்புனைந் தேத்த வியன்புதுவை
வித்தந் தரும்பர தாதா வருண்மழை மேகமொத்தே. (18)

மேகந் தனைப்பொரு தூற்றிடு மும்மத வேழமென்றன்
சோகந் தனைப்பொடித் தானுத நல்ல சுகந்தருமால்
நீகந் தனைப்புன மானுடன் கூட்டித னேயந்தனை
நாகந் தனைப்பொருஞ் சீரூர்ப் புதுவையி னுடுநெஞ்சே. (19)

நாடற் கரியவ னுன்முக னரணு னுகரெல்லாம்
பாடற் கரியமெய்ப் பாட்டால் வழுத்தும் பதபங்கயன்
ஆடற் கரிமுக வம்மான் புதுவய லாளியெம்மான்
தேடற் கரிய புகழ்பாடி நீமனஞ் செய்களியே. (20)

களிறே யெனமதங் கொண்டோய் விலாது கருத்தழிந்துன்
னளியேறு பூம்பதத் தன்புசெய் யாமலந் தோவமிழ்ந்தித்
தொளியேறு மாறுழன் ருகமஞ் சொற்ற துறைபிழைத்து
வளியேறு பஞ்சொத் தலேந்தேன் பருமுலே மங்கையர்க்கே (21)

மங்கையர் செங்குமு தத்தேனே மாந்தி மருண்டவர்தங்
கொங்கையைப் பொன்மலே யென்றேங்கி யல்குற் குழிவிழுந்து
சங்கையி லாத்துய ருற்று ரிணக்கந் தணப்பவருள்
புங்கை மணந்த பொழிசூழ் புதுவயற் புண்ணியனே, (22)

புண்ணியர் நின்றெழும் பாற்றிப் பெரும்புகழ் போர்த்துநின்றூர்
எண்ணியல் கற்றறி யாதிறு மாந்தன னேழையந்தோ
விண்ணியங் கிந்திரன் மானுன் முகன்றெழும் வித்தகமார்
திண்ணிய மாமுகத் தையா புதுவயற் றேசிகனே. (23

தேசிக நான்மறைக் கெட்டாப் பழம்பொருள் சீரணவுங்
காசியின் மாதவர்க் காத்த பராவுன் கழலடிக்கே
வாசிகை கொண்டு வழுத்தும் படிக்கு வரந்தருவாய்
தேசிக மார்சடைச் செல்வா புதுவயற் றெள்ளமுதே (24)

அமுதந் தருஞ்சொல்லி மைந்தனைச் சீர்த்தவெ னுருயிரைக்
குமுதந் தருங்கனி வாய்மாதர் நாதனைக் குஞ்சரத்தைக்
கமுகந் தாந்தொடு காச்சூழ் புதுவயற் கைக்கிரியை
அமுதந் தரும்பெரு வாழ்வையெப் போது மகநினையே. (25)

நினையே வழுத்துவ னின்புந் ழோதுவ னீக்கமறப்
புனையே டவிழ்மலர்ப் பொற்பதம் போற்றுவன் புந்திதனிற்
றினையேனு மற்றொரு தெய்வமெண் ணோன்வினை தீர்த்தருள்செய்
அனையே கசமுக வப்பா புதுவய லைங்கரனே. (26)

ஐங்கர னெங்கள் புதுவைப் பிரான்றண்டை யார்கழற்கே
கைங்கரி யஞ்செயுந் தொண்டரை யந்தகன் கைதொழுவான்
பைங்கம லத்திறைக் கும்பூவை வண்ணற்கும் பண்ணவர்க்கும்
நைங்கரன் போக்கு மொருகொம்ப னைத்தொழு நானிலத்தே. (27)

நானிலத் தேவரென் பார்ப்பார்செய் வேள்வி நயந்தவியுண்
வானிலத் தேவரை வாழ்விக்கு மாமுதல் வள்ளிதனைக்
கானிலத் தேவந்து கந்தற் குதவிய கைமலைக்கெங்
கோனிலத் தேமந் தருமா புதுவை குடியிருப்பே (28)

இருப்பும் விளக்கமு மானந்த முந்த மெழிலுருவாய்
மருப்பொன்று தாங்கிய மாணிக்கம் பாண்டி வளம்பதியிற்
றிருப்பொலி வீரை யணித்தாம் புதுவயல் சேர்ந்திருக்கும்
விருப்பும் வெகுளியு மற்றூர் தமக்கு வெளிப்படுமே. (29)

வெளிப்பட்ட வெண்ணகைக் கும்மாதர் நஞ்சொத்த வேல்விழிக்கும்
நளிப்பட்ட நாக முலைக்கும் படத்தை நகுங்குறிக்குங்
கிளிப்பட்ட கன்னலங் கீர்க்கும் புதுவைக் கிரிசரமே
வளிப்பட்ட பஞ்சிற் றியங்காம லாண்டுகொண் மாடிருந்தே. (30)

மாடேறி சாக்கை வளர்வீர சேகரன் மானிடன்வெண்
காடேறி யாடுங் கடவுண்மைந் தாசக காரணமெல்
லேடேறு நின்னூ புரவடி யேத்துவ னேழைகண்டாய்
வீடேறி யுய்வரந் தாதா புதுவை விநாயகனே. (31)

விநாயக னேக னனேகன் கருப்பொருள் விஞ்சையன்மான்
மனுதிகட் கெட்டா மறைநா யகன்றிரு வாளனெங்கோ
னெனுது பவத்தை யறுப்பான் புதுவய லேரம்பன்றன்
றனுதுரு வன்றிச் சகமிலை யாமிது சத்தியமே. (32)

சத்திதந் தாரிடைச் சாம்பவி மைந்தநின் ருட்கமலப்
பத்திதந் தாதரித் தொண்டமிழ்ப் பாவாற் பரவுநல்ல
புத்திதந் தாளெம் புதுவை விநாயக புங்கவமேன்
முத்திதந் தாளு மொருநாளும் வேண்டுமிம் மூடனுக்கே (33)

மூடனைப் பாழ்த்த வினைதேடி யெய்த்துழன் மூர்க்கனைப்புன்
பாடனைத் தும்பெறும் பாதகஞ் சேராது பாலித்தருள்
நாடனைத் துந்தொழு நம்பா புதுவை நகராசே
பீடனைத் தும்முனக் காமாறு தாமுத்திப் பேரின்பமே. (34)

இன்பமும் வீடும் பெறுவார் புதுவய லேகதந்தன்
றன்பத மன்புசெய் தாட்டிக ரோய்வின்முத் தாபமொழித்
தொன்பது வாய்க்கூரம் பையாசை நீக்கி யொருமைபற்றித்
துன்பந் தொடைத்துத் திரிவார் களித்துத் தொழவுலகே (35)

தொழுவா ரிடர்களை வானங் குசதரன் றெல்லைமறை
வழுவா நடம்பயில் வானவன் பொற்புது வைப்பரமன்
எழுவார் புயத்துக் கயமுதற் செற்ற விறையமலன்
மழுவாளி மைந்தனைத் தெண்டனிட் டேன்வினை மாய்ந்தனவே (36)

மாண்டா ரெலும்புந்தண் மத்தமுங் கொன்றையும் வாளரவும்
பூண்டா னளித்த புகர்மா முகத்தன் புதுவயற்றே
தூண்டா மணிவிளக் கெந்த மருந்தனந் தொல்வினையைக்
கீண்டா னினிவரு மந்தக னேலை கிழிபட்டவே. (37)

கிழியும் படிகிரி வேறெட்ட கந்தனைக் கிட்டிநவ்வி
விழிகுன்ற வாணர் மகள்மணங் கூட்டிய வித்தகதேன்
பொழியும் பொழில்வளைந் தோங்கும் புதுவயற் புண்ணியநல்
வழியொன் றெனக்கருள் வாய்கீர்த்தி துன்னும் வளர்மதியே. (38)

மதிநின் றிலங்கு சடையா னளித்தகை மாமுகவுன்
கதிநின் றிலங்கு கழலார்த்த பொற்பதங் காணவொட்டா
விதிநின் றிலங்குவ தென்னே வதனை விலங்கிடச்செய்
சுதிநின் றிலங்கு துதியார் புதுவயற் றாமணியே. (39)

மணியே மணியொளி யேசுட ரேயருள் வாரிதியே
யணியே யணிதிக ழாய்மல ரேபல வண்டரெலாம்
பணியேக தந்த வழகா புதுவயற் பண்ணவநான்
துணியே னுனைநிகர் தெய்வமொன் றுண்டென்று தோமறவே (40)

தோமரந் தண்டுகொ டந்தகன் காரும்ப றாண்டிபந்தோ
பேமரந் தையுற நீள்பாசம் வீசிப் பிணிக்கவிடேல்
பாமரன் றீங்கறுப் பாரெந்தை யேயெவர் பாலித்தருள்
காமரந் தண்ணளி யூற்றும் புதுவைக் கதிரொளியே. (41)

ஒளியே பழமறை நாணுளுந் தேடி யுணர்வரிய
வெளியே வெளியில் விளைசுக மேநித்த வீடளிக்கும்
அளியே யருமருந் தன்னவப் பாகதி யாருமிலைக்
களியேற வின்னரு டந்தாள் புதுவயற் கட்கரும்பே. (42;

கரும்பே யெனுஞ்சொல்லி னல்லார் தனந்தனைக் காதலித்துப்
பெரும்பேதை யாயிச் சகம்பேசி நின்றயர் பித்தனுக்குங்
கரும்பேயொ டாடிதன் காளாய் மதம்பெய் கரிவதன
தரும்பேறு முண்டுகொ லந்தோ புதுவைத் தனித்தனமே (43)

தனமே பெருக்கி மனைமாத ரின்சொற் றனையரொடும்
இனமாக வாழ்வதற் கெண்ணினை யெந்தையை யேரம்பனைக்
கனமாரு மெந்தம் புதுவய லாளியைக் கண்டுருகாய்
மனமே நமன்பகை யெவ்வாறு வாட்டுதும் வையகத்தே. (44)

வையகத் தோச் சிறுத்திள மான்மலை வல்லிபுணர்
ஐயகத் தேத்துகந் தான்சுத்த ஞானி யனவரதங்
கையகத் தேந்திய கூர்மருப் பானன்பர் காதலிப்பப்
பையகத் தேமந் தருவான் புதுவைப் பதியரசே. (45)

அரசாய புள்ளும்வெள் ளன்னமு முந்துவ ராரணத்தாற்
பரசா கமப்பொரு ளேபஞ்ச பாணி பழவினைக்கோர்
பரசா யுதமெறிந் தாள்கோடி புண்ணியம் பற்றுநிற்கின்
முரசார் கலியின் முழங்கும் புதுவயன் முன்னவனே. (46)

முன்னவ னெங்கள் குலமுழு தாண்டருண் முத்தனித்தன்
மன்னவர் சேகர மாந்தமிழ்க் கோவின் மகள்மணந்த
தென்னவன் பாலகன் றேவர் சிகாமணி தீவணத்தான்
பன்னவ மாதிர மோங்கும் புதுவயற் பார்த்திபனே. (47)

பாத்தந்த நாளிரந் தான்றந்த தந்தியைப் பாரளித்துக்
காத்தந்த மேதருங் கர்த்தனை வல்லபை காந்தனைச்சீர்
பூத்தந் தரந்தொழு மாகூர் புதுவயற் புண்ணியனைக்
கோத்தந்த மார்மல ரிட்டேத்து வாயன்பு கூர்ந்துநெஞ்சே. (48)

நெஞ்சேபொற் பீடம தாகத் திருவுள நேர்ந்திருந்தான்
செஞ்சே வலன்றுணை வன்கொடுந் தானவர்ச் செற்றபெம்மான்
மஞ்சே துயின்மணி மாடப் புதுவயல் வாணனுண்டால்
அஞ்சே லினிமனங் கூற்றுவ னாற்றுறும் மல்லலின்றே. (49)

அல்லும் பகலும் பொருடேடி மாதர்க் களித்துமுத்தி
செல்லுந் தனிநெறி விட்டேங்கு வேற்கொரு தீர்வுமுண்டோ
கல்லுங் கடமு நிகர்தனத் தார்தமைக் காதலித்துப்
புல்லுங் கசமுக வள்ளால் புதுவயற் புங்கவனே. (50)

புங்க வரஞ்சலி செய்பாத பங்கயன் பொன்மணிமா
தங்க வரம்பல தந்தாண் டடியரைத் தாங்குமுதல்
வங்க வரகிரி வாழ்வான் புதுவை வாதனெற்குத்
தங்க வரந்தடுத் தான்புகழ் கூறுஞ் சதுர்மறையே. (51)

மறையேக தந்த விறையோல மோலென்று வாழ்த்தெடுக்கும்
நறையேறு மென்மலர்ப் பாதா புலவர்க ளுயக்மே
துறையேறி வாளைக ளுள்ளுந் தடம்பல சூழ்புதுவைக்
கறையேறு கண்டன் மகனே யருள்செய் கடையனுக்கே. (52)

கடைபட்ட வேல்விழி யார்கடைச் சென்று கலங்கிமனம்
படைபட்ட மாவொத் தயராம லாண்டருள் பாலியெந்தாய்
முடைபட்ட வெண்டலை யேற்று னளித்த முதல்வசெம்பாத்
தொடைபட்ட தண்டையந் தாளா புதுவயற் சோதியின்றே (53)

சோதிக்க வோவந்த முண்டாய் சனகன்முற் றேன்றிமயல்
சேதிக்க வோவுண்மை தேற்றுதற் கோவறஞ் செய்யமழை
யோதிக் களந்திரு நாழியிட் டான்றந்த வுத்கமசம்
போதிக் களித்தனை யாள்வாய் புதுவயற் போதகமே. (54)

போதகத் தானனப் பொல்லா மணியைப் புலவர்புகல்
சேதகத் தாமரைச் சீரடி யண்ணலைச் சேவைசெய்வார்
பாதகத் தாழ்மலம் பேர்ப்பான் புதுவயற் பண்ணவனைத்
தாதகத் தாமல ரிட்டேத்து வார்வினை தானறுமே. (55)

தானந் தருமத மாவென்ற னுள்ளந் தனிற்றழைத்து
மானந் தரும்பெரு வாழ்வீய்ந்து சோக மறுத்தனவால்
ஊனந் தருந்துயர் மாய்த்துநல் லானந்த மோங்கியுய்ந்தேன்
கானந் தருஞ்சொல்வி சேயைப் புதுவையிற் கண்டவன்றே. (56)

கண்டனந் தாமரை கார்கருங் கூந்தல்பைங் கன்னலின்சொல்
மண்டனந் தாநடை யென்றேங்கி மாதரை வந்திக்கிலங்
கொண்டனந் தாது குளிறும் புதுவயற் குஞ்சரத்தாள்
கண்டனந் தாழ்வினை போக்கினம் வஞ்சகக் காடெறிந்தே (57)

காடெறி மள்ளரிற் றீதாம் பவத்தைக் களைந்துகதி
நாடெறி பத்தரிற் கன்மந் துடைக்கு நலமறியேன்
தோடெறிந் தாடிய கூத்தப் பிரானரு டோன்றலொரு
கோடெறிந் தாற்றுஞ் சமரா புதுவயற் கூடத்தனே. (58)

கூடத்த ரொன்றிறு மாந்தபுன் றேவரைக் கோள்வலிக்கும்
பீடத்த ரென்றெந்த ஞான்றுந் தொழேனுண்மை பேணுமுன்றன்
வேடத்தர் தம்மொடுங் கூடுவ னல்லது வேறறியேன்
பாடத் தரந்தரு வாயெம் புதுவயற் பாயமுதே. (59)

பாயச மொத்தசொற் பார்ப்பதி பாலனைப் பங்கயன்மால்
தீயசந் தீர்த்தருள் வானைப் புதுவயற் சின்மயத்தை
வாயச மாகிய வள்ளலை மெய்யன்பர் வைப்பையெண்ணி
மாயசம் போக்குந் துதிபாடப் பெற்றதென் மாதவமே (60)

மாதங்கத் தாமரை நேர்முகத் தார்த மயலகற்றி
மாதங்கத் தானய னிந்திரன் யார்க்கும் வரந்தருமோர்
மாதங்கத் தான்றந்த மைந்தன் புதுவயல் வாணனெந்தை
மாதங்கத் தானன் பூம்பதத் தேயன்பு வைமனமே (61)

வைவாய்ந்த வேலணி செங்கைக் குமரன் மணமுடித்தான்
பைவாய்ந்த பொற்படப் பாம்பரை யார்த்த பகவனிதம்
மெய்வாய்ந்த வேதங்க ளேத்தும் புதுவயன் மேவுமுகக்
கைவாய்ந்த வேழத் திருதா ளிறைஞ்சுவங் காதலித்தே (62)

காதரம் வைத்தங்கை நீர்பெய்து புல்லுங் கமண்மலரும்
ஆதரங் கொண்டிட் டருச்சிப் பவர்க்கில்லை யல்லல்கலை
மாதர விந்த மலர்மாது வாழ்புது வைப்பெருமான்
பூதர வில்லி புதல்வன் செந் தாமரைப் பூம்பதத்தே (63)

பூந்தா தவிழ்மலர்க் கொன்றையந் தாமப் புராந்தகனுங்
காந்தார மென்மொழிச் செய்யாள் கணவனுங் காவிறையும்
பூந்தா மறைவளர் புத்தேளும் போற்றும் பொருளென்பரால்
ஓந்தா ரகப்பொரு ளாகும் புதுவை யொருத்தலையே (64)

ஒருவாது பல்வள மோங்கும்புதுவய லும்பலடி
இருவா ரிசம்பிறப் பேழு மறுத்தும்ப ரேத்துமன்றன்
குருவாணை யீதைய மில்லைநெஞ் சேயன்பு கொண்டுகற்ப
தருவாகு மைந்து காத்தானை வாழ்த்துதி தாண்மதித்தே (65)

தாளந் தனநிகர் மின்னார் மயலிற் றவிக்குமெனை
யாளந் தரவிடை யாண்மைந்த னேதுணை யாருமிலை
காளந் தரும்பொற் பணியசைத் தாடுமெங் கண்மணியின்
னாளந் தகன்றுயர் தீர்ப்பாய் புதுவை நகரிறையே (66)

இறையோல மென்றடி புக்கார்க்கு வீடு மெளிதுதவும்
மறையோதி யந்தணர் வாழ்த்தும் புதுவயல் வாரணமே
குறையோது பச்சிளம்பிள்ளையைத் தள்ளுங் குரவருண்டோ
முறையே விரைந்துகை தந்தாண் டருளுவை முத்தவின்றே (67)

முத்தந் தருநகை வில்வா ரணிபுணர் முக்கணெழிற்
பித்தன் றருங்கை மலையாம் புதுவைப் பிரானைநெஞ்சே
நத்தந் தணுகுநெ லாமே யிருவினை நாடிநிதங்
கத்தந் தநன்வரி லென்செய் குவேனென்று கால்விழுந்தே (68)

காலா யுதக்கந்தன் முன்வந்த சித்திக் கணேசனொரு
சூலா யுதக்காரன் மைந்தன் புதுவயற் றும்பிதிரு
மாலா யுதக்கல முண்டான் சரண மனத்திலுண்டென்
பாலா யுதக்கணை செல்லாது கூற்றுவ பாரிடத்தே (69)

பாரிடந் தற்சூழ வந்தன்று பாண்டியன் பாவைதனக்
கோரிடந் தந்தவெல் லாம்வல்ல சித்தனுக் கோர்தனையா
சூரிடந் தானந்தந் தாராய் புதுவயற் றேன்றலென்றே
வாரிடந் தந்தன வல்லபை கோன்றனைவாழ்த்துநெஞ்சே (70)

வாழ்த்தச் சிகுவையும் வந்திக்கப் பாணியு மாண்பதத்திற்
றாழ்த்தச் சிரமுமுண் டஞ்சலை நெஞ்சகந் தண்புதுவை
வாழ்த்தச் சிறுத்த வரதாவென் றோர்தாம் வந்தியிடர்
ஆழ்த்தச் சிறுவிதி சேராது சேருந லானந்தமே (71)

ஆனந்த நாடக வம்பலத் தானரு ளண்ணலைங்கைக்
கோனந்த மாதியி லர்தமெஞ் ஞானக் கொழுந்தமலன்
பூனந் தமரும் வயல்சூழ் புதுவயற் பூங்கரும்பென்
ஊனந் தவிர்த்தடி யாரொடுங் கூட்டுவ னெப்பின்றியே. (72)

ஒப்பித் தனந்தந் தணிமீ திருத்தி யுளமுருகச்
செப்பித் தனங்கொள்ளை கொள்வார்த நேசந் திரித்தகத்தை
யொப்பித் தனந்தந் துதியோதி நல்லவ ரோடிணங்கித்
தப்பித் தனந்த வருடா புதுவைத்தந் தாவளமே. (73)

தாவளகா நகர்ச் சங்கரி மாதுமை சாம்பவிமைந்
தாவள மாமுலை மாமரு காதொண்டர் தம்மனமே
தாவள மாக்கொண்ட தற்பர வாரணன் றுன்றெழுமத்
தாவள மாகும் புதுவையம் மானடித் தாமரையே. (74)

தாமனே வாழ்வு தழைக்கும் படிவரஞ் சார்ந்துவஞ்ச
மாமனே வாதிட்டு மாய்த்தான் மருக மலர்சிதறிக்
காமனே வாட்டிதன் காளாய் மதம்பெய் கடகளிறே
பூமனே வாழ்மாப் பொலியும் புதுவயற் பூசுரனே. (75)

பூவந் தகிலம் புரந்தாலும் பண்ணவர் போற்றவெள்ளை
மாவந் தருஞ்சொர்க்க வானுளி னும்புது வைபுரந்த
தேவந் தரிமகன் சீர்பாடி யன்பு திளைத்துருகிப்
பாவந் தனந்தந் திடார்க்கேது மேலாம் பரகதியே. (76)

கதியுங் கதிதரு வானுங் காணங் கடந்ததனிப்
பதியுங் கயமுக னென்றே சுருதி பகருமற்றுல்
மதியுங் கதிரும் வணங்கும் புதுவயல் மாமணிதாள்
பதியுங் ககனம் பதிக்கு மூலகிரும் பாதத்தையே. (77)

தத்தைத் தனமொழி மாதிர நேரிரு தையலர்க்கி
தத்தைத் தரும்புய வம்மான் புதுவயற் றந்தியினந்
தத்தைத் தகவுடன் கண்டேத்தி னூர்க்கிருந் தாமரைப்ப
தத்தைத்தந் தாட்கொள்ளு மால்வாரு மெல்லீருஞ் சங்கையின்றே

சங்கையின் றேயுடல் சஞ்சல மென்பதிற் சண்டனங்கு
சங்கையின் மன்ன வருமந்த நாடுயர் தான்கொடும
சங்கையி னூர்துணை தாழ்மன மேயன்பு சார்ந்தரிகைச்
சங்கையின் றூனைப் புதுவையம் மானைத் தலைவணங்கே. (79)

தலைவளைக் கும்பணி பூண்டா னகுவெண் டலையணிந்தான்
மலைவளைக் கும்பயில் வல்லியத் தோல்புனை வள்ளன்மகன்
கலைவளைக் கும்படி கண்டென் மனத்தைக் கரைத்துறுகம்
பலைவளைக் கும்பயந் தீர்த்தான் புதுவைப் பதியரசே (80)

பந்தாடு முத்த முலையாரை வேட்டுப் பலபலவாய்
அந்தா டுதிக்கு மறிவிலர் நட்பை யகற்றுவையோ
கொந்தாடு சோலை மயிலாட வண்டுபண் கூறளகை
வந்தா டுடியிடை மைந்தா புதுவயல் வாரணமே. (81)

வாரணப் பார்தா மரைமுகை நேர்முலை வல்லபைசேர்
காரணப் பாமக ளுதனு மாலுங் கரங்குவித்தே
ஆரணப் பாவறைந் தேத்தும் புதுவய லிங்கரவெந்
திரணப் பாழ்நர கேற்றா தருளுதி சீபதியே. (82)

சீப்பிட்டு மன்னு மரம்பைக் குலமெனச் செய்திடவே
கூப்பிட்டு நன்மகப் பேறுதந் தாயிருங் கூடறனின்
மாப்பிட் டுகந்தவன் மைந்தா கசமுக வள்ளனிதங்
காப்பிட்டு வாழ்வுதந் தாள்காண் புதுவயற் கட்கரும்பே (83)

கட்போத வுண்டயர் வாரிற் றியங்கிக் கலவி செய்வார்
நட்போ தகவிலை நன்னெஞ்ச மேயந்த நாதனைத்
தட்போ தனந்துயில் செய்யும் புதுவயற் றந்தைதறு
கட்போ தகத்தனிக் காக்குவை பொற்பதங் கண்டுவந்தே. (84)

கண்ணுண்டு காணக் கரமுண்டு கூப்பக் கனியமனக்
கெண்ணுண்டு மானின்ற கன்றனை போற்றவுண் டெம்புதுவைக்
கண்ணுண்டு போக மதுநீத்து மாதரைக் காதலித்து
மண்ணுண்டு போவதற் கோவளர்த் தீருடன் மாநிலத்தே. (85)

நிலத்தைத் திருத்திப் பயிர்செய் யுழவரி னேர்ந்துமனத்
தலத்தைத் திருக்கிற் சரியாம லொப்பனை சார்ந்திருந்தாற்
கலத்தைத் திருடிதன் கான்முளை யார்க்குங் களைகணல்ல
பலத்தைத் திருமகள் சேரும் புதுவையிற் பாலிப்பனே (86)

பாலித்து மேன்மைப் படுத்துவ துன்பரம் பைஞ்சுமடு
கோலித் துவரெடுத் தான்மைந்த னேயன்பு கூர்ந்துநிதம்
ஆலித்து நின்கழல் போற்றுவ தென்பர மாகவரம்
பாலித்து வந்தருள் வாய்காண் புதுவைப் பரம்பொருளே. (87)

பொருவே தனைப்பொடித் தண்டரைக் காத்தருள் புங்கவபொற்
றிருவேறு மார்பன் மருகா குணாலய தீனனெற்கும்
மருவேத மாய்த்துப்புன் னுய்க்குத் தவிசிட்ட வாறருள்வாய்
தருவே சிகர்மரக் காசூழ் புதுவயற் றூரியின்றே. (88)

தாதா மகமினி யேனுஞ் சிறுவன் றயங்குதல்போ
தாதா மகபதி தன்மரு காமலர்த் தண்ணளிப்பா
தாதா மகவின் புயத்தா யளகைத் தளிரியன்மைந்
தாதா மகநிறைந் தோங்கும் புதுவயற் ருதிரியே. (89)

தாதாரும் பூங்குழன் முத்தாயர் நாயகன் றற்பரன்சி
ரோதாரும் பூம்பத முன்னுரு மந்தோ வுடல்கருகித்
தீதாரும் பூக நிரையப் பெருங்காணி சேர்வரந்தோ
போதாரும் பூங்கழல் பேணித் தினமுயப் போநெஞ்சே. (90)

போதந் தவாதருள் வானெம் புதுவயற் புண்ணியன்கை
மாதந்த வாரணத் தோல்போர்த் தவீரன் மகனுயர்சி
ரோதந்த வாரிச நாண்மலர்ப் பாதத்தை யுன்னினருந்
கேதந்த வாது நமர்காள் வினைத்தொட ரேதவர்க்கே. (91)

கேகயத் தாடி நடிப்பா ரகந்தனைக் கிட்டிநிதம்
ஓகையத் தாளத் தனத்தில்வைத் தேனே வுழன்றழிவீர்
மாகயத் தானன வள்ளல் புதுவயல் வாணனிரு
மாகயத் தாமரை நேர்பதத் தேயன்பு வைத்திடுமே (92)

வைத்திடு வாயக மேயன் பிறைமகன் மாணடிக்கே
பைத்திடு பாம்பரை யார்த்தானை யெண்ணிப் பழவினையைக்
கைத்திடு வாய்வளஞ் சேரும் புதுவயற் கர்த்தனுக்கே
கைத்திடு வான்பணி செய்வேண் டுவதருங் காதலித்தே. (93)

தேனே கனிரச மேகரும் பேயமு தேயுயர்பெம்
மானே கவின்றிகழ் மாமுகத் தாய்மத மத்தனந்தோ
யேனே களிமதங் கொண்டிளைத் தேனினி யென்னசெய்கேன்
கோனே கதிதரு வாயே புதுவயற் குஞ்சரமே. (94)

குஞ்சரக் கன்று திகழ்காத் தாயுமை கோமளையெங்
குஞ்சரக் கன்று விழியாண் மகன்பவங் குன்றிடப்போக்
குஞ்சரக் கன்று குறைமாதை வேட்கருள் கோபுதுவைக்
குஞ்சரக் கன்றுவந் தென்மனக் காட்டிற் குலாவியதே. (95)

குலாவருக் கைமத மத்தமுங் கொன்றையுங் கூவிளமும்
நிலாவருக் கைமணி நீருங் கமழ்சடை நித்தனருள்
பலாவருக் கைமது வார்க்கும் புதுவயற் பண்ணவவெற்
குலாவருக் கைமகி யுண்டான் மருக குலைத்தருளே. (96)

குலைக்குச் சிரம்வளைந் தாங்கயர்ந் தின்னற் குழுமியகம்
பலைக்குச் சிரம்வளை யாதருள் வீரைப் பசுபதிவெண்
டலைக்குச் சிரம்வளை யேந்திசென் னீர்பெய்த சம்புபுத்ரா
கலைக்குச் சிரவணஞ் செய்வாய் புதுவைக் கராசலமே. (97)

கராசலங் கொண்டந்த நாட்பகு வாய்கொடு கவ்வநின்ற
கராசலங் காத்தவம் மான்மரு காவுமை காதலசங்
கராசலங் காதிற் சடைவைத்த சங்கரன் கான்முளையைங்
கராசலங் கான்மலர் தாராய் புதுவயற் கைக்கிரியே. (98)

கிரியேனல் காத்த கிளிமான் குறத்தியைக் கேகயமாம்
பரியேறு சேவகன் வேண்டக் கொடுத்த பராபரன்கிம்
புரியேக தந்த புதுவைப் பிரானீ புறக்கணித்தாற்
றரியே னெருகண மேனும் விரைந்துசெய் தண்ணருளே. (99)

தண்ணப் பரிதுயின் மான்மே விரும்பதி தாமரையோன்
நண்ணப் பதிசொர்க்க நாடுந் தருந்தின நாடினர்க்குக்
கண்ணப்ப ரொத்தன்பு காட்டிப் புதுவயற் காதலித்த
வண்ணப் பசுங்கொடி மைந்தன்பொற் றுளை வளைமனமே. (100)

திருச்சிற்றம்பலம்.

புதுவயல் கைலாசவிநாயக ரந்தாதி
முற்றிற்று.

உ

சிவமயம்.

மகாகணபதே நம:

திருச்சிற்றம்பலம்.

பழநியாண்டவர்மாலை.

இது

புதுவயல்

திருவாளர், நா. அ. அண்ணாமலைச்செட்டியார்

கனிஷ்ட குமாரர்

சண்முகச் செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்றது.

யுவ வருடம் ஆவணி.

1935.

சிவமயம்.

மகாகணபதே நம:

திருச்சிற்றம்பலம்.

பழநியாண்டவர் மாலை.

காப்பு.

ஆம்பரிருத் தாளென் னகத்திருந்து காக்குமதான்
மாம்பழத்திற் காதரஞ்செய் வள்ளலாம்—பூம்பழநிக்
கந்தன்மேன் மாலை கழறுகேன் மாலையெலாஞ்
சிந்தமனத் தன்புபதித் தே.

மாலை பழநி மலைவேலற் காக்கவருள்
வாலைபுதல் வாமுன்ன வா.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பூமகள் கனக மலிந்தகற் பகத்தார்ப்
புலோமசை கலையெலாம் வல்ல
நாமக டினமும் பணிசெய வவர்க
ணடுவிருந் தருளுவா ளிமயக்
கோமக ளளித்த குமரநா யகபைங்
குறிஞ்சிவாழ் குறத்தியைத் தெய்வ
மாமக டன்னை மருவிவாழ் பழநி
மலைவள ராறுமா முகனே. (1)

ஆறிரு புயமுங் கருணையார் கண்ணீ
ராறுமோ ராறுமா முகமும்
நீறணி யகல மார்பமுங் காட்டி
நிணங்கமழ் நெடியவே லெடுத்து
நாறிய குழலா ரிருவர்பாங் குறநன்
னடந்தரு மஞ்ஞையை நடத்தித்
தாறுசூழ் கதலிக் காவளே பழநிச்
சண்முகா வென்முன்வந் தருளே. (2)

அருவுரு வாய நின்னைநீ யறிவித்
தாலல தறிவனோ வனந்தங்
கருவினி லூறிக் களைத்துமா பாசக்
கட்டுண்டு மட்டிலா தயர்ந்தேன்
ஒருவனே பழநி மலையில்வா ழமுதே
யொப்பிலா வும்பர்கட் கரசே
குருவுரு வாகி யென்னைநீ தடுத்தாட்
கொள்ளுதி கருணைவா ரிதியே. (3)

வாரிதி கடந்துந் தரைவலம் வந்தும்
மலைதிரிந் தருங்குகை நுழைந்துங்
காரிருட் கடுமுள் வனமெலாம் புகுந்துங்
கனமய லுழன்றபுன் மனமே
மாரியைப் பழித்த பன்னிரு கரத்து
வள்ளலைப் பழநிநா யகனை
ஆரியர்க் கமுதைப் போற்றுநா ளென்றோ
வரைக்கண மாகினு மமையே. (4)

அம்மையே யப்பா வருட்பெருங் கடலே
யடியவர்க் கெளியவா ரமுதே
இம்மையும் வீடுந் தருசுகா நந்த
வின்பமே யென்கண்மா மணியே
தம்மையே நேருஞ் சரணபங் கயமித்
தமியனுக் கருளுநா ளுளதோ
செம்மையார் மனத்திற் சேர்குகா பழநிச்
செல்வமே தெய்வநா யகனே. (5)

தெய்வநா யகபைங் கடம்பமா வனத்திற்
சென்றுமா தேவிதன் குறிப்பிற்
பொய்வழி யமணக் காடெறிந் தொளியார்
பூதியிந் நிலமெலாம் பரப்பி

மெய்வழிப் போத வெள்ளம்யாந் திளைப்ப
விட்டெமைப் புரந்தமா சைவத்
தய்வமே தவர்சூழ் பழநிமா மலைவாழ்
சச்சிதா னந்தநா யகனே. (6)

நாயக னுலகம் பூத்தமா முதல்விண்
ணுட்டவர் நாயகன் கமலை
நாயகன் பிரமன் போற்றுமா முருக
நாயகன் பிரணவப் பொருள்சொல்
நாயகன் றெண்ட ருள்ளம்வாழ் குமர
நாயகன் தெய்வகுஞ் சரிசேர்
நாயகன் வள்ளி நாயகன் பழநி
நாயக னெங்கணு யகனே. (7)

அகந்தனை வஞ்ச மாதிய விருள்சே
ராவகை தூய்மைய தாக்கில்
உகந்தனை யெனவந் தடிமைகொண் டிடர்செ
யுற்பவந் தொடைத்துமா ருகாச்
சுகந்தனைத் தருமா னெஞ்சமே கஞ்சத்
துணைப்பதந் தஞ்சநீ புக்கு
மகந்தனைக் காப்பான் மருகனைப் பழநி
வளருமா கந்தனைப் பரவே. (8)

பரவைசூ ழகிலப் பரப்பெலாம் பெறினும்
பாழ்மன மமைவுறு தந்தோ
விரவிவா னுலக வேட்கைகொண் டேங்கும்
விண்ணகப் படிவினு மதல
வுரகர்நா டாள வுன்னுமா லேங்கி
யோங்குமா தரங்கெடுத் தாள்வாய்
குரவவார் குழலங் கயற்கணுள் பயந்த
குமரமெய்ப் பழநியம் பதியே. (9)

பதியதா யெம்மை வழிவழி யடிமைப்
படுத்துநின் பெருமையும் பசுவாய்க்
கதியது வேட்டுக் களைத்துநின் றேங்குங்
கடையனேன் சிறுமையுங் கருதும்
மதியது தருவா யகண்டிதா கார
வரதசண் முகபல மறையுந்
துதியது புரியும் பழநியிற் காரணந்
தொடாருந் தோற்றமி றுணையே. (10)

துணையெனக் குன்னை யன்றிவே றிலைகாண்
சொற்பதங் கடந்ததோ ருணர்வே
கணைவிழிக் குறமான் பதமலர்ச் சரணங்
காட்டிநின் றேக்கறு கடம்பா
பணைமருப் பெருமை யூருமோர் காலன்
பகைகெடுத் தஞ்சலென் றருள்வாய்
இணையறுத் தயில்வே லெறிந்துசூர் மாய்த்த
வேகனே பழநிவா ழிறையே. (11)

பழனிவா ழிறையம் போருக மலர்த்தாட்
பற்றுமா தொண்டர்பற் றற்று
விழனிபா ழுடலைப் போற்றுமா றென்னே
விடுகபுன் மதிகடைச் சங்கத்
துழனிகா தடைப்ப தறிகிலா யந்தோ
தூயவர்க் கிட்டுணன் மனமே
கழனிதான் விதைக்கிற் பிற்பலன் காட்டுங்
காட்சியா மாறுமற் றின்றே. (12)

இன்றுகூற் றுவனா ரழைப்பினு மழைப்ப
ரென்றுணை யேழைநெஞ் செதிர்த்துச்
சென்றுகூற் றிறுத்து மாற்றுவை நொல்லோ
செத்தவர் கோடியிற் கோடி

அன்றுகூற் றுதைத்தான் றிருமகன் பழநி
யறுமுக னபயமீய்ந் தளிப்பான்
மன்றுகூத் தாடி மைந்தகா வெனப்பொன்
மலரடி யமைத்துநீ குழையே. (13)

குழையிடற் றொருகை நீரிடற் கரிதோ
குறுமுனி பாவிய குமரன்
உழையிடத் தமல னுதவுகாங் கேய
னொருசரண் பற்றிடா யகமே
பிழையிடத் துய்ந்து பெறலரும் பேறு
பெறுநுமாற் சரண்புகாய் பழநி
மழையிடக் காத்தான் சரவணோற் பவன்காண்
வல்வினை மாற்றுமா மருந்தே. (14)

மருந்தினைப் பொல்லாப் பவமறுத் தாள
வல்லசஞ் சீவியை யுமையாள்
குருந்தினைக் கல்லாக் கடையனே னுள்ளங்
குலவுசண் முகன்றனைக் குறிஞ்சிக்
கருந்தினைக் காவற் குறத்திபாற் றணவாக்
காதல்கொள் வேடனை யன்பு
பொருந்தினை மனமே பழநிமா மலைச்சீர்
போற்றிவாழ் வீடுனக் கெளிதே. (15)

எளியனான் சிறியன் கற்பிலாக் கடைய
னெனக்கொரு நிகரிலா தெய்த்த
களியனா னெனதென் றுழலுமா பித்தன்
கண்டன மெய்யெனக் களிப்பேன்
அளியனீ பெரிய னன்பர்பா லெளிய
னருமறைக் கரியன்வீ டுதவுங்
களியமா மயிலன் மைந்தனான் பழநிக்
கந்தவந் தினிதுகாத் தருளே. (16)

அருணிறை பழநி யப்பதாய் முலைப்பா
லருந்தியெய்த் திளைத்தன னந்தோ
இருணிறை பாசத் தளையறுத் தடிய
ரினத்தொடுங் கூட்டுவா யரசே
மருணிறை பித்தன் றனைத்தடுத் தாள
வல்லரார் மறைவடித் தெடுத்த
பொருணிறை வடிவே பரமகல் யாண
பூசுரா மாசிறே சிகனே. (17)

ஏகனே யுலக மெங்கணு நிறைவா
யெள்ளினெய் போற்கலந் தணுவிற்
பாகனே யெண்ணி லண்டமா யனுதிப்
பசுவதாய்ப் பதியுமாம் வள்ளி
மோகனே யயனைச் சிறைவிடுத் தாண்ட
முதல்வவிண் ணாண்டகோ மகடன்
பாகனே யெந்தாய் தந்தையாம் பழநிப்
பமரவார் கலிகடந் தோனே (18)

பமரநா டியபொற் கடம்பணி குழகா
பசுந்தமிழ்ப் பாவலர் நிதியே
குமரநா யகநின் னடிமைதோற் பாவைக்
கூத்தினைக் கடக்குநா ளென்றோ
அமரநாற் கவிதைப் புலவர்போ லேழை
யறைந்தபுன் சொல்லுகந் தருள்வாய்
சமரநா யகவே லெடுத்தவா பழநித்
தற்பரா வற்புத மணியே (19)

மணிதருங் கடலுங் கிரியும்வாய் புலர்ப
மகம்பல புரிந்தசூர் குடிப்பப்
பணிதருங் கற்ப நாடரு மேனைப்
படியுயி ரெலாந்தழைத் தோங்க

அணிதகுஞ் சுடர்வே லெறிந்தொரு விளையாட்
டயர்ந்தசே வகபழ மறையுங்
குணிறரு முரசு மார்க்குமா பழநிக்
குமரநா யகசிவக் கொழுந்தே. (20)

கொழுந்துறு கொடிநே ரிடைச்சிறு குறமான்
கோங்கினை யோங்கலைக் கடத்தை
யெழுந்திறு மாந்து பழித்தவெம் முலைக்கே
யேங்கிநின் றெழின்மல ரடிமேல்
விழுந்துமா தரசே யருளெனப் பழிச்சும்
வித்தகா வுன்பதாம் புயத்தே
அழுந்துமா தரந்தந் தாட்கொள்வாய் பழநி
யண்ணலே யடைக்கல நினக்கே (21)

அடைக்கலஞ் செந்தி லாண்டவா மற்றொன்
றறிகிலே னசுரரை யழிக்கப்
படைக்கலம் பரித்த பன்னிரு கரத்தாய்
பண்ணவர்ப் புரந்தநா யகனே
கடைக்கணு னுயே னுய்வகை நோக்கிக்
கருணைசெய் துனதுதாண் மலர்க்கே
தொடைக்கலம் புனைய வொருவரந் தருவாய்
தோன்றலே பழநிவாழ் சுடரே. (22)

சுடர்விடு மணியும் பூதியு மணிந்து
துகளினைப் போக்கிநல் லின்பம்
படர்தரு மெழுத்தைந் தாறுநன் கோதிப்
பத்தரிற் பயிறர வருள்வாய்
அடர்கொடு வினைப்பே யலைத்தநாள் போது
மண்டினர்க் காணமா மரசே
இடர்களைந் தன்று கீரனைக் காத்த
வின்பமே பழநிவா ழிறையே. (23)

இறையெவர் தமக்கு மறுமுகன் நந்த
னீசனார் கண்மணி முருகன்
கறைதிகழ் வேலன் கடம்பன் காகுத்தன்
கார்த்திகை மைந்தன்சண் முகனே
சிறைவிடுத் தயனை யாண்டசே யிளைஞன்
றிரிபிலான் குமரவே ளென்றே
மறைவழுத் திடநின் றோங்குசீர்ப் பழநி
வள்ளலே வள்ளிநா யகனே. (24)

வள்ளியோர் நின்னை வழுத்துவர் வடிவன்
வடிவிலா னிரண்டுமே கலந்த
தெள்ளியன் றேவ குஞ்சரி மணாளன்
சிற்பரன் சிவகுரு வனந்த
பள்ளியன் மருக னுலககா ரணனைப்
பற்றவ னென்னவஃ தறியேன்
அள்ளிலை நெடுவே லேந்திய பழநி
யப்பவெற் கறியுமா றருளே. (25)

அருட்பெருங் கடலே சிற்சுகோ தயமே
யம்பல வாணர்தங் கொழுந்தே
மருட்பெருங் கொடிய பித்தனைச் சலன
மாற்றியாண் டருள்கைநின் கடனே
இருட்பெரு வடிவத் தியாமனார் பாச
மெறிதாற் கஞ்சினே னெந்தாய்
தெருட்பெரு வடிவ வமலவா னந்த
சிற்பரா பழநிவாழ் தேவே. (26)

தேவர்க டேவன் சுத்தசாட் குணியன்
றிருப்பரங் கிரிவளர் முருகன்
மூவர்கண் முதல்வன் றோன்றலீ றில்லான்
முழுமுத லொருமைவீ டளிக்கும்
சேவக னுமையாள் பாலகன் பழநிச்
செம்மல்சீ ரடிதினம் பரவிப்
பாவகஞ் செய்வா யுறுதியீ தாகும்
பந்தம்விட் டுய்யலாம் மனமே. (27)

பந்தன முலைமா தரசிமான் மகள்சேர்
பண்ணவா பழநிநா யகனே
இந்தன மெரிபட் டாங்குநோய் வாய்ப்பட்
டேங்கின னறிகிலா யந்தோ
சந்தனப் பொழில்சூழ் பொதியமா முனிக்குத்
தமிழ்வழுத் தியகுரு நாதா
வந்தனங் கோடி யடிமைதன் றுயர
மாற்றியாள் சுகுணவாழ் வளித்தே. (28)

தேனினைப் பாகை யமுதினைப் பாலைத்
திரட்டிய கிளிமொழிக் குறப்பெண்
மானினைத் தேடித் தினைப்புனம் புக்க
வள்ளியோ யெண்ணிலாப் பவஞ்சேர்
ஊனினைப் பெருக்கி யுன்பதம் பேணு
தொதியென வளர்ந்தனன் கடையேன்
மானினைக் கூடிச் சென்றமான் மருகா
வரமருள் பழநிவாழ் மணியே. (29)

மணிதரு மிரண்டு நிதிதரு மூன்று
மதகயத் தூருமா வாழ்வோ
டணிதருஞ் சோறுங் கூறையு மளிக்கு
மன்றிவான் புரப்பவ ரேவற்
பணிதரும் படைத்தற் றொழிறரு மலைமேற்
பள்ளியுந் தந்துவெள் விடையோன்
அணிதருங் கயிலை யிடந்தரும் பழநி
யண்ணல்சண் முகனடிப் பூவே. (30)

தனியன்

ஆற்றுப் பெருக்கிற் றிளைத்தாட லாந்தின மானந்தமே
கூற்றுக் குமைத்தபெம் மானீன்ற கந்தனெங் கோன்பழநி
மாற்றுக் குயர்ந்தபொன் மானீன்ற வள்ளி மனோகரனைப்
போற்றிப் புனைந்தவிப் பாமாலை யோதுமின் புன்மைவிட்டே.

திருச்சிற்றம்பலம்.

பழநியாண்டவர் மாலை முற்றிற்று.

உ

சிவமயம்.

மகாகணபதே நம:

திருச்சிற்றம்பலம்.

கம்பை நான்மணிமாலை.

இது

புதுவயல்

திருவாளர், நா. அ. அண்ணாமலைச்செட்டியார்

கனிஷ்ட குமாரர்

சண்முகச் செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்றது.

யுவ வருடம் ஆவணி.

1935.

உ

சிவமயம்.

மகாகணபதே நம:

திருச்சிற்றம்பலம்.

கம்பை நான்மணி மாலை.

காப்பு.

நான்மணிமா லைமருக னம்பிகம்பை வேண்மீதில்
நான்மணிமா லைபுனைய நாயகனுந்—தோன்முகவன்
கந்தமலர்ச் செஞ்சரணங் கைகுவித்தேன் றந்தருள்வான்
செந்தமிழ்ப்பாச் சொல்லுந் திறம்.

நேரிசை வெண்பா.

கங்கை மதலை கமழ்சடையர் செம்பாதி
மங்கை மதலையென வாழ்முருகா—செங்கைத்
திருவேலா கம்பைநகர்ச் செல்வமே யன்னை
கருவேலை யான்கடக்கக் கா. (1)

கட்டளைக் கலித்துறை.

காமுரு காலை வயல்விளைக் குந்திருக் கம்பைமுரு
காமுரு காவென வோலமிட் டுன்கழல் காதலித்தேன்
காமுரு காயினுந் தீதட்டு வான்குடி காத்தனையே
காமுரு காருங் குழல்வள்ளி நாதநின் காறஞ்சமே. (2)

அறுசீர் விருத்தம்.

தஞ்சநீ யன்றி மற்றோர் சரணிலேன் றனைய னெஞ்சக்
கஞ்சமே விருதா ளூன்றிக் கடைக்கணித் தருளல் வேண்டும்
அஞ்சஞ்செம் பதுமத் தொட்டி லாடுதெண் டுறைநீர்க் கம்பைக்
குஞ்சரி பாகா செந்திக் குமரநா யகசெவ் வேளே. (3)

நேரிசை யாசிரியப்பா.

வேள்பட விழித்த விறலோ னொற்றைத்
தாள்பட மார்பிற் சமனை யுதைத்தோன்
பங்கய வண்ணல் பசுந்தலை யோடொன்
றங்கையி லேந்திப் பலிக்ககந் திரியுஞ்
சங்கர னென்காற் சரபம தாய்நர
சிங்கத் தனியடல் செகுத்த புராரி
வாரிதி நஞ்சம் வாரிக் குடித்துக்
காரிருங் கருமை கண்டத் தமைத்தோன்
நச்சர வப்பணி நாயகன் குடிஞை
வைச்சர வுஞ்சடை வாண்மதி வைத்தோன்
வரப்புலி யாடை வனைந்தா டொருவன்
பிறப்பிலிப் பெம்மான் பேயொ டாடி
அவனவ ளதுவென் றுய்தர நின்ற
சிவனெம் மிறைவன் சின்மயன் சீவர்க்
கிருவினைப் போக மியறா வூட்டும்
பொருவிலா னந்தன் போர்விடைப் பாகன்
ஆரணந் தேடி யறியா வநாதிப்
பூரணன் றில்லைப் பொதுவி னடிக்கும்
வேதிய னீறணி மெய்ய னுதற்கட்
சோதியில் வந்த துரியா தீதா
ஏக நாயக வெய்ப்பில் வைப்பே
மோக மவித்தார் முன்னின் றருள்வோய்
மலைபைக் கிழித்து மாக்கூறு செய்யும்
இலைவடி வேலொன் றேந்திய முதல்வா
ஆறுமா முகனே ஆறிரு புயனே
மாறிலா தென்றும் மன்னிய பொருளே
பம்பையு முழவும் பரவையிற் றழங்குங்
கம்பை நகர்வாழ் கந்தா முருகா
தம்பதந் தாங்குந் தமியனை யாண்ட
உம்பன் முகவற் குற்ற சகோதரா
காசினி முற்றுங் கருவொரீஇப் பெற்ற

பாசிழை யிமையப் பைங்கொடி பாலா
மன்பதை யுய்ய மகபதி மகளைத்
தென்பரங் குன்றிற் றிருமணஞ் செய்தோய்
குன்றக் குறவர் குலமான் றன்னைச்
சென்றப் புனத்திற் சேர்ந்தணைந் தோனே
நட்டந் தருமயி னடாத்துவ தல்லால்
இட்ட முடன்றக ரேறுசே வகனே
கோழி பொறித்த கொடியுயர்த் தோய்நீ
வாஅழி வாழி வாழிபொற் பாதம்
தாயிற் சிறந்த தயாபர சண்முகா
நாயிற் கடையே னல்லார் வாய்ச்சொற்
பேணு வுன்றன் பெரும்புகழ்ந் கியைபக்
கோணு தளிக்குங் கொடைத்திற னெண்ணிப்
பாட்டளி முரலும் பைந்தார்க் கடம்பா
வேட்டன னென்று மீனத் துவசன்
படைபட் டாவி பதைத்துமெய் சோர்ந்து
கிடையிற் கிடந்து கீழ்மை யெய்தி
முத்தம் பரித்த முலைச்சியர் முயக்கியற்
சித்தம் பறிபோய்த் தியக்குறு பொழுதுந்
தன்னைப் பில்லாச் சரவண பவவென்
றுன்னப் பழகின னுண்மை யீதால்
வந்தனங் கோடி மறைமுதற் பொருளே
தந்தன னந்தகன் சாருங் கடைநாள்
பவப்பகை யாகிப் பசுமலம் போக்கிச்
சிவத்தொடு கலக்குந் திருநீறு பூசிக்
கண்டி புனைந்து கசிந்துள் ளுருகித்
தொண்டு கொண் டங்கை தொழுது நின்னை
ஆறெழுத் தோதி வன்புன்
சிறடி வைக்குந் திறமொன் றதுவே. (4)

நேரிசை வெண்பா.

வேளையெலா முண்டுறங்கி வீணாள் கழிப்பீர்செவ்
வேளையகன் பண்ணை வெடிவரால்—பாளைவாய்
கந்தி மிடறுடிக்குங் கம்பைநகர் சென்றொருகாற்
சிந்திப்பீர் சேருந் திரு. (5)

கட்டளைக் கலித்துறை.

திருமங்கை யார்மரு மத்தன் மருகன் றிரண்டசங்க
திருமங்கை யார்நடஞ் செய்கம்பை வேலன் றிருப்புயஞ்சேர்ந்
திருமங்கை யார்வளைக் குங்கந்த நாதனைச் சிந்தனைசெய்
திருமங்கை யார்துயர் செய்யார் தினமகஞ் சேருநெஞ்சே. (6)

அறுசீர்க் கழிநெடிலடி விருத்தம்.

நெஞ்சகந் தூய்தா யன்பு நிரந்தரம் பெருக்கி யுன்றாள்
தஞ்சமென் றடைவார் நேயந் தருவையோ சிறுமை யாக்கும்
வஞ்சகர் தம்பா னேயம் வகுப்பையோ வள்ளி பொற்றாட்
கஞ்சமேற் றஞ்சம் புக்க கம்பைவாழ் கந்த வேளே. (7)

இணைக் குறளாசிரியப்பா.

வேழப் பிடரில் வெண்குடை கவித்துச்
சூழப் பவனி தொடர்ந்து சாரணர்
பல்லாண் டிசைப்பப் பவுரிகொண் டிச்சை
நல்லா ராட நாட்டுதம் புகழைக்
கட்டிய காரர் கட்டளை யமைத்து
மட்டிலா துரைக்க வாள்வய வீரர்
தேர்கரி பரிமாச் சேனைத் திரள்கள்
ஆர்கலி யென்ன வாரவா ரித்தெழ
மன்னர் மண்டலிகர் மந்திரத் தலைவர்கள்
நன்ன ரிருபுடை நணுகமற் றெல்காப்
பணிபுரி வோர்தம் பதவியி னிற்கக்
குணில்பொரு முரசங் குமுற வேதியர்கள்
வாழ்க வாழ்க வாழ்கவென் றேத்த
யேழ்கட னிலனு மிறைகொண்டு
தாவா வோகைச் சலதியின் மூழ்கித்
தூண்டா விளக்காஞ் சோதி
வாய்ந்தபொற் றீப மடநலா ரேந்தச்
சாந்திசெய் தாசி தருஞ்சொல் வழங்கிப்

பேரிளம் பெண்கள் பெட்டா லத்தி
மஞ்சணீர் சுற்றி வரிசை செய்யப்
பொன்னு மணியும் புனைந்தமா மண்டபந்
தன்னி லரிமான் றூங்கிய தவிசிற்
றந்தா வளமுந் தருவு நிதியும்
நந்தா வளரு நாகநாட் டரசாம்
இந்திர னென்ன இனிதுவீற் றிருக்கும்
மைந்துறு மன்னர் வாழ்க்கையு மவர்தஞ்
சீரும் பேருந் திருவுமற் றெல்லாம்
நீரி லெழுத்தென நின்றதை யன்றே
ஆதலி னுலக மாய்ந்தறி நெஞ்சே
ஓதும் பேய்த்தே ரொப்பன வாகும்
நித்திய மொன்றே நிற்கு மற்றைய
நித்திய மெல்லா நில்லா தழியும்
வேதன் முதலாம் விண்ணவ ராயினுஞ்
சாதல் பிறத்த றவிரா தோய்வின்
றலையிற் புறழு மடைவுமற் றஃதன்
னிலையிற் றிரிபுற நீநினைந் தாயேற்
சாற்றுவன் கேண்மதி தாழா தோடிப்
போற்றுவை யின்றே போற்று வையின்றே
கூற்றுயி ருண்ட கூத்தன் மகன்றனைப்
போற்றுவை யின்றே போற்றுவை யின்றே
வீற்றுச் சிறையில் விதியை யிட்டானைப்
போற்றுவை யின்றே போற்றுவை யின்றே
அண்டமா யிரத்தெட் டாண்ட சூரனைக்
கண்டதுண் டஞ்செய் கதிர்வே லவனைக்
குலாசல மெட்டுங் குலுங்க நடஞ்செய்
கலாபந் தூண்டுங் கார்த்தி கேயனை
ஊழிதோ றோங்கு மொப்பில் லாவொரு
கோழி பிடித்த குமரநா யகனை
ஆறு படைவீ டமர்ந்தருள் செய்யும்
ஈறு முதலு மில்லா முதல்வனைக்

காணங் கடந்தார் கைவரக் கண்ட
பிரணவப் பொருளைப் பேதியா தெங்குந்
தானய் நின்ற சரவணேற் பவனே
ஆன வன்பி னகமே
மாற்றரும் பிறப்பை மாய்த்துவீ டெய்தப்
போற்றுவை யின்றே போற்றுவை யின்றே
தும்பை மிலைச்சிய தூயோய்
கம்பை நகர்வாழ் கந்தா வென்றே. (8)

நேரிசை வெண்பா.

கந்தந் திமிர்ந்தகுழற் காரிகையார் பான்மயங்கி
விந்தந் திகழ்ந்ததன மேவாமற்—சந்ததமும்
நண்ணித் திருக்கம்பை நாதனெழுத் தாறுநெஞ்சே
எண்ணித் திருக்கோ யினி. (9)

கட்டளைக் கலித்துறை.

இனிக்கம்பை வேள்புயத் தார்பெற்று வந்திவ ளேக்கறுமின்
கனிக்கம்பை வல்லர விற்றுயின் மாறந்த காளைமதன்
தனிக்கம்பை வைத்த வினைகார னீலந் தனைவிடுத்தாற்
றுனிக்கம்பை நேருங் களத்தாட் கடங்குறுந் தோகையரே.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தோகைவிரித் தாடுபரி யுடையா யென்றுஞ்
சூடுவை வேல்பிடித்த துரையே யென்றுஞ்
சாகைவிரித் தோங்கியநால் வேதத் துச்சி
தனிலாடி யொளிதூங்கு சைவா வென்றும்
வாகைபுனை பன்னிருதோள் வரதா வென்றும்
வளமோங்கு கம்பைநகர் வாழ்வே யென்றும்
ஓகையுட னடிவணங்கி யோத வல்லார்க்
குறவாகி யவர்பவம்போக் கொரு மருந்தே. (11)

நேரிசை யாசிரியப்பா.

பருந்துண் வாழ்க்கை மகபதி மகடோள்
பொருந்து மாறிரு புயாசல சண்முகா
ஏனற் புனஞ்சென் றிளம்பிடி யனநடைக்
கானக் குறவர் கன்னியை மணந்தோய்
சங்கரி வாலை சத்தி சாஅம்பவி
பொங்கரி வாகனி புதல்வ வொன்றுகேள்
ஈரிரு தோற்றத் தேழெழு பிறப்பிற்
சீரிய மாஅனிட சென்ம மன்றே
நின்னடி போற்றி நினக்காட் பட்டுத்
தன்னைக் காக்குந் தகைமைத் தாமால்
அத்தகு பிறப்பி லவனியில் வந்துன்
மத்தராய்ச் சிற்சிலர் மயக்க மெய்தித்
தங்குல முதல்வன் றுய்சொற் பிழைத்துச்
செங்கண் மதமாத் திரிதல் போலக்
களித்துப் புன்னெறி கைக்கொண் டந்தோ
தெளித்துப் பன்னா றேறின ரென்ன
ஊத்தை வாயா லுலகம் படைத்த
ஆத்தனில் லென்றும் மாமக மற்றை
வேதம் பழித்தும் மெய்க்கதி காட்டுந்
தீதறு சைவச் செந்நெறி பிழைத்துந்
தெய்வ மென்பதோர் சிந்தை யின்றி
ஐவர் வயப்பட் டலமருங் கடையர்
பாழ்நர கஞ்சேர் பழவினை யாளர்
ஊழ்தா னென்னே யூழ்தா னென்னே
சிற்றினம் பேணுமத் தீயர் நேயப்
பற்றினை யறுத்துப் பராபர நின்னிரு
தண்டை யொலிக்குஞ் சரணந் துதிக்குந்
தொண்ட ரடிக்குத் தொண்டுசெய் யும்வரம்
வேண்டின னென்றன் வேட்கை யிதுவே
காண்டகு மணியே கம்பை நகர்வாழ்
முருகா முருகா முருகா,
பெருகா தரவிற் பேரருள் செய்யே. (12)

நேரிசை வெண்பா.

செய்வளைக்கு நத்துமுத்தஞ் சிந்துகம்பை வாழ்முருகா
கைவளைக்குந் தண்டெடுத்த காலனூர்—மைதழைக்கும்
பட்டிக் கடாவூர்ந்து பாசமெறி யுங்கடைநாள்
எட்டியுதைத் தாள்வா யெனை. (13)

கட்டளைக் கலித்துறை.

என்னைப் புரப்பவ ரில்லையென் றேயெரி யிட்டுடலிற்
பொன்னைப் பரப்பிவன் பூசலிட் டான்மதன் பூங்கணைவில்
தன்னைப் பொடித்தருள் சம்புமைந் தாகம்பைச் சண்முகநான்
அன்னைப் பழிக்கஞ்சி யின்னுயிர் போக்குமு னாதரியே. (14)

எழுசீர்ச் சந்தவிருத்தம்.

ஆதரி யாதய ராகுல மோதிய வஞ்சக் கா மாவோர்
சோதரி மாலதி சூடிய தாயுமை சொந்தச் சிறு பாலா
நீதரி யாமண நீபம தான்மக ணிந்தைக் கிட மானாள்
காதரி வாதிடு காமனை யோதரு கம்பைப் பதி வாழ்வே. (15)

நேரிசை யாசிரியப்பா.

வேய்படர் வெள்ளி வெற்பனு மிடத்தாள்
தாயுமை சுந்தரித் தையனு யகியும்
இருவருந் தம்மு ளெழுந்தபே ரன்பால்
மருவருங் குஞ்சி வதன நோக்கி
எம்முயிர்க் குயிரே வெம்மில் வேருகா
தம்மென வந்த வரும்பெருஞ் சோதி
தேரு மறைச்சொற் றேற்றுசெவ் வாயா
ஆரு வமுதே வப்பவென் றணைத்து
மடிமீ திருத்தி மறைகுழைத் தொழுகுஞ்
செடிதீர் மழலைத் தேன்செவி பருகி
உச்சி மோந்து மூறு கழித்தும்

அச்ச மறுத்தடி யாரைவீ டுய்க்குஞ்
செம்மணிச் சிலம்பு சிலம்பக் கடம்பின்
மைமலர் மொய்த்து மணத்த செங்கமல
பாத முதலாப் பனிபடு கிரணச்
சீத மதிமுகச் சென்னி வரைக்குங்
காண்டகு செவ்வி கண்டன ரமைத்துள்
தூண்டுமா லாசைத் தொடக்குண் டெடுத்துத்
தழீஇனர் தைவந்து தைவந் தன்பு
கெழீஇனர் நின்வழிக் கிடப்ப வவர்தம்
இமையா விழிகட் கிரும்பயன் சேர்த்துச்
சமையா விணவு சமைத்துக் கொடுத்த
வடிவுடை முருகா மான்மரு காவெங்
குடிமுழு தாண்ட குமர நாயகா
பம்பை நாளும் பாவையிற் றழங்குங்
கம்பை நகர்வாழ் கார்த்தி கேயா
சரவணோற் பவகுக சண்முகா நின்புகழ்
சிரவணஞ் செய்குவன் சிந்திப்ப னேதரும்
படைக்கலக் கூற்றன் படுபகைக் கஞ்சி
அடைக்கலம் புகுந்தன னடியேன்
கடைக்கணித் தென்னைக் காத்தருள் செய்யே (16)

நேரிசை வெண்பா.

செய்க்கஞ்சத் தேன்பருகித் தேன்பாடுங் கம்பைதனின்
மைக்கஞ்சற் றேனுமயன் மாற்றுது—கைக்கஞ்ச
மாமலராள் கொண்ட மயறீர்க்கும் பூங்கடப்பந்
தேமலரா யுண்மை தெளி. (17)

கட்டளைக் கலித்துறை.

தெளியவெற் குந்தா மாமோ பழமறை தேடியெய்க்கும்
அளியபத் மந்திகழ் நின்சீ ரடிமல ரங்கைகுறைந்
தெளியவெற் குந்தா வென்றுட் கிரங்கு மிறைவகம்பைத்
தளியநித் யந்தரு வாயெழு வாயென் றனிநெஞ்சமே (18)

அறுசீர் கழிநெடிலடி விருத்தம்.

நெஞ்சக நினக்கே யாக்கி நிகரிலா நினது கஞ்சச்
செஞ்சரண் வணங்கி யின்பந் தேக்குநா ளுளது கொல்லோ
தஞ்சமென் றடைந்த கீரன் றமிழ்க்கருள் செய்த நீதா
கஞ்சமேற் கஞ்ச மாடுங் கம்பையி லும்பர் வாழ்வே. (19)

நேரிசை யாசிரியப்பா.

உம்பலைக் காட்டி யொருநாட் புனத்திற்
கொம்பனை யாளெங் குறச்சிறு மானை
மருட்டி வெருட்டி மயக்கியச் சுறுத்தித்
திருட்டிற் புணர்ந்த சேவக நீதான்
வேடுரு வாயினை வேங்கை யாயினை
பாடுறுஞ் சைவ பண்டார மாயினை
யென்றுபல் சுருதி யிசைக்குமா லதுபொய்
யன்று மெய்யே யாயினு மொன்று
பிறந்து மிறந்தும் பிணிவாய்ப் பட்டும்
மறந்துங் கதிதப்பி மாய்ந்துழ லெம்மனோர்க்
கடுத்த செயலீ தாகுமற் றதனைத்
தடுத்தெமைத் தாங்குந் தயாபர னீயே
உலகந் தந்த வொருமுதல் சிவனை
யலகில் பம்பரத் தாட்டுந் தலைவன்
ஆதலின்
மந்திரந் தந்திரம் வகுத்துப் பெயரா
தைந்தொழி னடாத்து மாதீ யென்பதை
யேவருங் காண்ப ரீதோ ருண்மை
தேவர் நாயகா செந்தி னாயகா
கருமக் கட்படாக் கடவு ளினக்கு
வருமக் கருமம் வகுப்பது யாங்ஙனம்
அந்தோ
மடம்படு மனத்தன் மயக்க நீங்கித்
திடம்பட வுணருந் தேற்ற மில்லேன்
நால்வர்க்கு

கல்லா லிருந்து கையமைத் தொருசொற்
சொல்லா துணர்த்துஞ் சுருதிநா யகற்குக்
கரணவந் தனைகொடு காதிற் காமர்ப்
பிரணவந் தந்தருள் பிள்ளா யடியேன்
ஐயம் போக்கி யறியுமா செய்தல்
சையம் பிளந்த சண்முகா நின்கடன்
அண்ணல்
வேதம் நீயே விளம்பினை யாதலிற்
பாதகம் படிறு பற்று வாக
ஒருபாற் கைக்கிளை யோதுந் துறையின்
மருவா நின்று வகுத்தனை போலும்
ஆயின்
கொள்ளல் கூடுங் குமர நாயக
வள்ளல் காதல் வரம்பிற் றுதலால்
நாயேன்
ஆரருள் வழிநின் றையம் போக்கினன்
ஏரகத் துரையே யென்கண் மணியே
தோளா மணியே சுந்தரி தந்த
காளா யந்தண் கம்பை முருகா
தொண்டரீண் டித்தொழுந் தூய
புண்டரீ கப்பதம் போற்றி போற்றியே. (20)

நேரிசை வெண்பா.

போற்றிசெய்து காதலித்த பொல்லேனை யாட்கொண்டே
ஆற்றியிடர் வாராம லாதரித்தான்—நாற்றிசையும்
வம்பை யிறைத்து மறுகெங்குந் தென்றியுழல்
கம்பையிறைச் சண்முகநாதன். (21)

கட்டளைக் கலித்துறை.

கந்தா நினது சரணம் புயந்தனைக் காதலித்தேன்
பந்தாடு நொங்கை மடவார்த நேயம் பயிலவிடேல்
பிந்தாடு வார்சடை யான்மைந்த மற்றிங் கெவருமிலைச்
சந்தா டவிதிகழ் கம்பையில் வாழுந் தனிமுதலே. (22)

அறுசீர்க் கழிநெடிலடி விருத்தம்.

தனிமுத லென்கோ தந்தை தமக்குப தேசி யென்கோ
பனிமொழி மதலை யென்கோ பழமறைக் கிழவ னென்கோ
கனியுதிர் மரக்கா வேந்துங் கம்பைக்கா வலனீ யென்கோ
இனியுனை யேத்து மாறென் றியம்புதி யருள்செய் தின்றே. (23)

நேரிசை யாசிரியப்பா.

இன்றே யடியா ரிடர்களைந் தாக்கம்
நன்றே யளிக்கு நங்கும ரன்போல்
நலியு நெஞ்சே நலிதா னெஞ்சே
கலியுக வரதன் கார்த்தி கேயனே
உவத்தல் வெறுத்த லொன்றுமி லான்பா
சிவத்தொடு கலக்குஞ் சின்மய ரூபன்
வேதன் முதலாம் விண்ணவ ரெவர்க்கும்
ஆதி நாயக னறுமுகத் தொருவனும்
மெய்ப்படு வேதம் வெகுநாட் டேடியும்
எய்ப்பொடுங் காணு திளைத்தன வன்றே
ஆரணர் போக்கி யருங்கதி கூட்டுமச்
சீரியன் றிருட்பணி செய்வ தேகடன்
காலந் தாழ்த்தல் கரும மன்றாற்
கோலங் காட்டுங் கூற்றன் வருநாள்
இன்றோ பின்போ வேழை நெஞ்சே
நன்றே யின்றே நயந்து வணங்கல்
பொன்னங் குடுமிப் பொருப்பன் மகளாம்
அன்னம் பயந்த வண்ணன் முருகனை
வலந்தரக் காலும் வணங்கச் சென்னியும்
நலம்புனைந் தேத்த நாவும் படைத்தனை
மற்றும்
ஆறு முகமு மருள்பொழி விழிகள்
ஆறிரு டாறு மாதிரு தோளும்
பரிபுர பங்கய பாதமு நினைக்கத்

திரிபில் லாவொரு சித்தமும் பெற்றனை
ஆதலின்
மடம்படுத் துய்ந்து வாழ்தி கூர்வேல்
உடம்பிடி யெடுத்த வொருவனைக் கம்பை
நகர்வாழ் சண்முக நாதனைத்
தகர்வா கனனைத் தலையன்பு செய்தே. (24)

நேரிசை வெண்பா.

தலைக்கொன்றை யானளித்த சண்முகவேள் கம்பை
மலைக்கொன்று மூரர் மறந்தார்—இலைக்கொன்றும்
வேல்விழியாய் மட்கூழ் விழைந்தகா ளன்றிந்நாள்
மால்விளையா யம்மாசும் மா. (25)

கட்டளைக் கலித்துறை.

மாதங்க நெஞ்சரங் காயளித் தான்முன் மடுவிலொரு
மாதங்க மோல மிடநேமி தொட்டருண் மான்மருகன்
மாதங்க னைமுகன் காளைக் குமரன் மருவுமிடம்
மாதங்க மாமணிக் கோபுரஞ் சூழ்கம்பை மாநகரே. (26)

அறுசீர்க் கழிநெடிலடி விருத்தம்.

மானந் தரித்தின் னுயிர்மாய்த்து மணிநீ ருலகிற் புகழ்நிறுவி
வானந் தரித்துச் சிவலோக மருவி யிருப்பா ருளத்திருப்பாய்
கூனந் தரித்த மணிநிலவு கொழிக்குங் கம்பைத் திருமுருகா
ஏனந் தரித்த கோடணிவார்க் கியம்பு மறையொன் றெனக்கருளே.

நேரிசை யாசிரியப்பா.

அருளு வாஅழி அருளு வாஅழி
பொருளு மாற்றலும் பொருப்பிற் றிரியா
உரமும் வடிவு மோங்கி யொப்பில்லா
வரமும் பெற்ற மாதவச் சூரன்
அரிமுகன் கரிமுக னனந்தங் கோடி
தரியல ருதிரச் சலதியுண் டுமிழ்ந்த

வடிவேல் வாழி வடிவேல் வாழி
கொடிவா ரணமுங் கோல மஞ்ஞையும்
வாஅழி வாழி வாஅழி நாயகா
கற்பகக் கோவுங் கமல யோனியுஞ்
சிற்பர மென்னோர் திகைக்க நின்றநின்
அருளு வாஅழி அருளு வாஅழி
மருளு மனத்து மத்தனைப் பித்தனைக்
கழிமடன் போக்கிக் கன்மனங் கரைத்துப்
பழிதபு நெறியிற் படர வைத்துத்
தெருளத் தெருட்டித் திருமணம் புணர்த்தி
அருமறைக் கெட்டா வண்ண னிற்குக்
கந்த வெற்புங் கயிலை மலையும்
நந்தா வளஞ்சூழ் நாகங் கோடியும்
ஈமத் தாடி யெண்டோட் குவடும்
வாமக் குயிலின் மணிச்சீர் மடியுஞ்
சுருதியின் முடியுந் துகளறுத் துணையே
கருதிப் பாசங் கருக்கிய தொண்டராம்
அன்ப ருள்ளமு மன்றியிந் நிலத்திற்
றென்பரங் குன்றுஞ் செந்தில் வேங்கடமுந்
துங்கமா ரேரகஞ் சோலை மலைமுதற்
பங்கமி லாயிரம் பதிகள் கொண்டுமென்
வாடிய பயிர்க்கு மழைபோ னடித்
தேடிக் கடையேன் சிந்தையுங் கொண்டநின்
பேரருள் வாழி பேரருள் வாழி
நாரணன் மருகா நாண்மதி முகத்துச்
சீரணங் கன்னோர் திருநடங் காட்டும்
மந்திரந் துன்னு மறுகி லரசர்
சிந்துரம் விலாழி சிந்துநீர் பாய்ந்து
செம்பயிர் வளர்க்குஞ் செறுச்சூழ்
கம்பை முருகநின் கழல் வாழியவே. (28)

நேரிசை வெண்பா.

கழல்வணங்கப் பச்சிலையுங் கைநீரு மின்றே
விழலுணங்கி நெஞ்சே மெலிந்தாய்—அழல்சேர்
திருக்குளத்தில் வந்தானைத் தென்கம்பைத் தேவைத்
திருக்குளத்தில் வாரானைச் சேர். (29)

கட்டளைக் கலித்துறை.

சேரும் படுபகை செப்பும் பெருந்துயர் சிந்தியின்றே
சேருங் குழலை முடிக்குமென் றன்னத்தைத் தூதுவிட்டேன்
போருந் தயில்விழி யீர்கம்பை வேடன் புதுத்தடநீர்
சாரும் மிரைக்கயர்ந் தென்னை மறந்து சதிசெய்தவே (30)

எண்சீர்ச் சந்த விருத்தம்.

சதியிற் பாணி யமைத்துப்பொ னம்பலந்
தன்னி லாடிய சங்கரன் மைந்தனே
மதியிற் கூர்முக மங்கைநின் னுசையால்
மட்டு வார்கணை பட்டுயிர் சோர்ந்தனள்
ததியிற் காவல்செய் சண்முக நின்புயந்
தங்கி மாறரு தண்கடம் பின்றருள்
கதியிற் றேவர் களித்திருக் கத்தினங்
கருணை காட்டிய கம்பையில் வேலனே. (31)

நேரிசை யாசிரியப்பா.

கம்பை வேலா கருணா கரகுகா
தும்பை முடித்த தூய சண்முகா
பார்ப்பதி பாலா பனைக்கை மாவுரி
போர்ப்பவ னடுக்கட் புலன்வரு மிளையோய்
வித்தக முத்தமிழ் விரகா சண்பை
உத்தம வாதிட் டொருசமண் டீர்த்தோய்
பசுமலஞ் சுட்டுப் பதியொடு கூட்டும்
பஸ்மத் துண்மை பாப்பிய சைவா

உமையாள் பாகத் தொருவனைப் போற்றுஞ்
சமையா தீதச் சைவமெற் களித்தாய்
வல்லா யாறு வதனந் தோற்றி
யெல்லா மாகி யிருந்த கடவுணீ
அறியா யல்லை யந்தோ வரசே
யெரிவாய்த் துரும்பி னிளைத்தேன் கண்டாய்
ஊதையி னிலைகெட் டுலைதீ பம்போல்
வாதையிற் பட்டு மாழ்க லறமோ
ஆய்மதி நாயே னுவியு முடலுந்
தேய்மதி யென்னத் தேய்ந்தல மந்தேன்
மண்டிய நோயை மாற்றும் ஞான
பண்டித னீயே பரம தயாளா
கூற்றன் வேற்றுருக் கொண்டு வாட்டுதல்
ஆற்றே னெந்தா யாறுதல் செய்வாய்
இமையா நாட்டத் திந்திரன் முதலோர்
தமையாட் படுத்த தம்பிரா னேலங்
குஞ்சரி நாதா குறமின் பாற்போய்த்
தஞ்சங் காட்டுஞ் சதுரா வோலம்
உச்சித மறையி னுயர்முடி நின்ற
சச்சிதா னந்தத் தனிமுத லோலம்
என்று நீநா னன்றே யுனக்குக்
குன்று வடிமை குமர நாயகா
தாஅயு நீயே தந்தையு நீயே
பாயலை யுவரிப் பாரு நீயே
பொல்லாப் பிணியைப் போக்கி யின்பம்
நல்லா தரவி னல்குதல் கடன்காண்
மூலபண் டாரத்தின் முளைத்தமும் முதலுன்
கோலபண் டாரக் குரைகழல் போற்றுவன்
காலங் கடந்த கடவு ணினக்கே
ஓல மோலம் ஓலந் தமியேன்
பொருந்துங் கருணை பூத்து
மருந்தொன் றுதவிநல் வாழ்வளித் தருளே. (32)

கம்பை நான்மணிமாலை

நேரிசை வெண்பா.

வாழ்வளிக்கக் கம்பை வாதன்கை வேலிருக்கத்
தாழ்வளிக்க யார்க்குத் தாநெஞ்சே—சூழ்வளிக்கும்
மாவேகங் காட்டு மயிலன்பே ராறெழுத்தைப்
பாவேகங் காட்டிப் பகர். (33)

கட்டளைக் கலித்துறை.

பகரக் கவிகற்று லோபரைப் பாடிப் பதஞ்சலிப்பீர்
மகரக் கடல்வைப்பும் விண்ணும் புரப்பான் மழைக்கரத்தான்
நுகரக் கனகமுங் கூறையுஞ் சோறு நுமக்களிப்பான்
தகரக் கடாவரு கம்பையிற் கந்தனைச் சாற்றுமின்றே. (34)

எண்சீர்ச் சந்த விருத்தம்

இன்னிலந் தன்னிலெற் கன்னையுந் தந்தையும்
பெத்தனை யத்தனை யெண்ணுதற் கொண்ணுமோ
பொன்னிலந் துன்னினர்க் கின்னலும் பந்தமும்
பொட்டெனக் கட்டனை புண்ணியச் சண்முகா
உன்னில னின்னினைத் தென்னையுஞ் சந்ததம்
உற்றனை பித்தனை யுண்ணிறுத் துண்மையே
சென்னிலம் பொன்னியொத் தன்னமன் கம்பையிற்
சித்தனே முத்தனே திண்புயத் தண்ணலே. (35)

நேரிசை யாசிரியப்பா.

அண்ணன் முருக னரன்மகன் றுமரைக்
கண்ணன் மருகன் கமலச் சரணன்
செத்தும் பிறந்துந் திரிந்துழ றேவர்க்குக்
கர்த்த னுலக காரண னெந்தை
தொலையா வாத்துச் சூர பன்மனை
இலைவடி வேலொன் றேவி யடர்த்தோன்
ஐந்தரு வாழ்க்கையு மளவி னிதியும்
இந்திரற் களித்த விறைவன் மாயாப்

பூரணன் புனிதன் புண்ணியன் பொருவில்
ஆரணந் தேடி யறியா வநாதி
முருகா முருகா முருகாவென் பார்க்குப்
புருடார்த்த நான்கும் புணர்த்துந் தெய்வங்
காட்சிக் கெளியன் கருணை வாரிதி
மாட்சி தொகுத்து வகுக்க வொண்ணுதான்
பொன்புனை கஞ்சப் பூவிற் பெடையை
யன்புட னஞ்ச மணைக்குங் கம்பைக்
குலமணி யெந்தங் குமரனை
நலமலி நெஞ்சே நயந்துபா ராட்டே (36)

நேரிசை வெண்பா

பாராட்டிப் பாலூட்டிப் பார்ப்பதியா டாலாட்டிச்
சீராட்டுங் கம்பைச் சிவபாலா—காராட்டின்
பானச்சு மோட்டெருமைப் பால்விரும்பாப் பாலகனுன்
மானச்சு வேட்டிருக்க வா. (37)

கட்டளைக் கலித்துறை.

வாவந் தவிழ்ந்த குழலை முடித்து வளைகலையுந்
தாவந் தனங்கோடி யூரலர் சூழுமுன் றண்கடம்பா
பாவந் தனம்விம்மு வாண்மாட் டிரங்குகம் பைமுருகா
பூவந்த வேதனைக் குட்டிச் சிறையிட்ட புங்கவனே. (38)

எழுசீர்ச்சந்த விருத்தம்.

புங்கவ துங்கம யிற்பரி மேல்வரு போரூ ராறுமு கப்பொருளே
மங்கலை சங்கரி சிற்பரை நாயகி மாதா மாதுமை பெற்றவனே
எங்கட னுங்கம லச்சர ணேத்துத லீதே தாசுக மெற்கினியே
பங்கமில் கம்பையி னித்திய பூரண பாலா மூலப ருப்பொருளே. (39)

நேரிசை யாசிரியப்பா

பொருளுந் தனமும் பூப்பெரு வாழ்வுநின்
அருள்வயப் பட்ட வடியார் வெறுத்து

வெறுக்கையென் றொருபெயர் விளக்கின ரன்றே
கட்புலன் கதுவா விட்புலச் செல்வமும்
புற்புத நீரிற் புணரெழுத் தாமால்
எண்ணத் தகுவதொன் றில்லை மற்று
வண்ணத் தாமரை மலரிற் சிறந்து
கூம்பல் விரிதல் கொள்ளா தென்றுந்
தேம்ப லின்றித் திகழ்ந்து பொன்னஞ்
சிலம்பு புனைந்து சிறுபரற் சதங்கை
கரித்துத் தேடுவார் தம்மை நாடிப்
புரக்குந் தெய்வப் போதா முனது
சீரடி வந்தனை செய்குவ னாசே
மறந்துந் தரையில் வந்து வந்து
பிறந்து மிறந்தும் பீழை படாமற்
கன்மம் போக்கிக் கருங்கடற் றிரையில்
ஓவா தலைக்கு மொருபிறப் பாழிக்கு
மாக்கல மாகி மன்னி வீட்டிற்
பொக்கமி லன்பரைப் போக்கு மந்தச்
சிற்கன கப்பதஞ் சிரமேற் றாங்கி
மற்று மொருகால் வணங்குவ னிறையே
வாஅழி நின்சீர் வாஅழி மயில்வேல்
கோழி வாழீஇ குஞ்சரி வள்ளி
நாயகி வாழி நலம்பல புனைந்தித்
தமிழும் வாழி சரவணத் துதித்த
கந்தா பம்பை கரங்குங் கம்பைச்
சிந்தா மணியே தெய்வ நாயகா
அவிழு முழுவ லன்பிற் (40)
கவிழுங் கூம்புங் கங்கை தானே.

திருச்சிற்றம்பலம்.

கம்பை நான்மணிமாலை முற்றிற்று.

உ

சிவமயம்.

மகாகணபதே நம:

திருச்சிற்றம்பலம்.

கம்பை
முருகன் திருப்புகழ்.

இது

புதுவயல்

திருவாளர், நா. அ அண்ணுமலைச்செட்டியார்

கனிஷ்ட குமாரர்

சண்முகச் செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்றது.

யுவ வருடம் ஆவணி.

1935.

உ

சிவமயம்.

மகாகணபதே நம:

கம்பை முருகன் திருப்புகழ்.

தான தந்தன தந்தன தானன
தான தந்தன தந்தன தானன
தான தந்தன தந்தன தானன—தனதானா.

பாலனந்திகழ் பங்கயனாகிய
வேதனுஞ்சிறை தங்கமுனுள்விடு
பாலசந்தம யின்மிசையேவளர் குமரேசா
பாடுறும்படை கொண்டவிராவண
னவியுண்டவ ரண்டமெலாநிறை
பாலனம்புரி பண்டிதனுமரி மருகோனே
சாலநின்புக டங்கியபாவினே
யேலநின்செவி யின்புறுமாவெளி
தானபுன்சொலி தென்றெருவாதிட லமரேசா
சாடியென்றனே வன்பொடுவாதுசெய்
பாவியந்தக னஞ்சிடவேயடல்
தாருமின்றுமை யன்றியிலேனெடு வடிவேலா
வேலகந்தப ரங்கிரிமேவிய
சீலவம்பா விந்திரனூர்மகள்
வேடர்தங்குல நங்கையர்தோள்புணர் கதிரேசா
வீடுதந்தரு ளுங்கருணாகா
ஞானபண்டித வெந்தைதயாபா
வேதவந்தித செஞ்சரணவெழின் முருகோனே
காலனஞ்சிவி ழுந்திடமோதிய
பாதரெண்டிசை யும்புகழ்மேவிய
காமரன்றுக ரிந்திடநாடிய பெருமானுர்
காடுமண்டிய செஞ்சடையாரொரு
பாதிதங்கிய மங்கையுமாவருள்
காளிரஞ்சித கம்பையினுயக பெருமாளே. (1)

தனனதன தானதந்த தனனதன தானதந்த
தனனதன தானதந்த—தனதான.

கருவியெழு மேகநந்து தவழுமலை நீருவந்து
கடவரையின் வீணெசிந்து வதுபோலக்
கவிஞனென வேதிரிந்து பொருணசையி னுன்மெலிந்து
கசடர்தமை யேபுகழ்ந்து துதியாமன்
மருதினிடை யேதவழ்ந்து நிருதர்தமை யேகடிந்து
மடுவினட மேபுரிந்த திருமாலின்
மருகவுன தாணிளைந்து தினமுமன மேகனிந்து
மதுரமென வாய்திறந்து கவியோதப்
பரிதியொளி வேல்சுமந்து வரமருள நீயுவந்து
பரிமயிலின் மீதிவர்ந்து வரவேணும்
பகரரிய சூர்தடிந்து புலவர்மக டோள்புணர்ந்து
பரமலையின் மேலமர்ந்த குமரேசா
கருவியளி பாடுகொந்து மலரின்வழி தேனிமிர்ந்து
கழனிவிளை வாகுமந்த நகராகுங்
ககனமுறை மாதரம்பை நிகரழகி யார்நடஞ்செய்
கனகமணி மாடகம்பைப் பெருமாளே (2)

தனனதந்தன தனதனதந்தன
தனனதந்தன தனதனதந்தன
தனனதந்தன தனதனதந்தன—தனதான

அமலையம்பிகைதிரிபுரைசுந்தரி
விமலைமங்கலைபரைசிவசங்கரி
அடியர்வந்திதசரணபரம்பரி யருள்பாலா
அனகவம்பலமதினடனம்புரி
பரமரம்புலியணிசிவசங்கர
ரரவகங்கணரருளியசுந்தர மறைமூலா
கமலையிந்திரையவளைமணந்தமு
துததிதுஞ்சிடுமுகினிறனந்தணி
கரியவன்றிருமருமகனென்றுளிர் குணசீலா

கலைகளும்பலநெறிமறையும்பயில்
அயனைவெஞ்சிறையிடுமொருதந்திர
கருணையங்கடலெனவளர்சம்ப்ரம மிகுசீலா
இமயமென்றெதிர்வருமதகுஞ்சா
வதனனெங்குலமுழுதருளங்கா
னிளையவன்களிகொடுமயிலுந்திய சுகலீலா
இணைய றுந்திநிசுதருடலங்குட
ருதிரமுண்டொருதனியுயிர்சிந்திய
வெழிறரும்படிபுகணிறையுங்கதிர் வடிவேலா
அமராம்பரவுலகதிலைந்தரு
நிழலிருந்தனவாதசுகம்பெற
அருளுமங்கலவழகியசண்முக வனுகூலா
அழகிகுஞ்சரியொடுகுறமின்கொடி
யமையவந்தடியனையுமுவந்தரு
ளரியகம்பையினறுமுகசுந்தா பெருமாளே (3)

தந்தா தனத்ததன தந்தா தனத்ததன
தந்தா தனத்ததன—தனதான.

பந்தாமெனச்சொன்முலை யெந்தாய்குறத்திவளி
பங்காமயிற்பரியின் வருவோனே
பம்பாரலைப்புவியி லந்தோகொடிச்சியர்கள்
பஞ்சாரடிக்கபய மிடுமேழை
சிந்தாகுலத்தையொழி நந்தூரலைப்பொருத
செந்தூர்நகர்த்தளியி லிறையேநின்
செந்தாமரைப்பதம்வி ழைந்தேனளித்தருள்செய்
சிந்தாயவச்சுதனன் மருகோனே
தந்தா தனத்ததன வென்றேயெடுத்தொாடி
சந்த்ராதிசித்தரொடு பலதேவர்
சங்க்ராவெனக்கனக மன்றூடுமத்தனொரு
சம்பாவன்மிக்குதவு குமரேசா

கந்தாகடப்பலர்பு ஊனந்தாயெனக்கினிய
கன்றுமதக்கரித னிளையோனே
கம்பாநதிக்குநிக ரம்பாறடுத்துவளை
கம்பாநகர்க்கண்வளர் பெருமாளே. (4)

தனன தனதன தனதன தந்தன
தனன தனதன தனதன தந்தன
தனன தனதன தனதன தந்தன—தனதான.

குமரசடானனமணிகளிலங்கிய
கடகபுயாசலமறைபுகலிங்கித
குரவர்சிகாமணியிருபதபங்கய முருகோனே
குவளைவிலோசனியிடனுறையும்பா
பவளசடாதரனுதவியமங்கல
குருகருணாகரவரிமகிழுந்திரு மருகோனே
சமாமயூரகமிசைநடனந்தரு
பழமுதிர்சோலையிலறுமுகசுந்தா
சாதபதாயுதமுயரியசெங்கா விளையோனே
தவளமதாசலனுதவிபகுஞ்சரி
களபபயோதரகுறவர்தமின்கொடி
தழுவுசுகாதிபவடிவபரங்கிரி யுறைவோனே
நிமலபராபரவலையெறிசெந்தியி
னளியகுணம்ர்தபலகலைபுந்தொழு
நிரதிசயாவெனதகமதினின்றரு ளமரேசா
நிலவுகலாமதிதவழ்தருகுன்றுறை
பகவவசீகரபழநியுவந்தருள்
நிதியமனோகரவடியர்பவந்தெறு கதிரேசா
திமிரதிவாகரவளியுளர்சந்தன
வரைதனிலாதரவொடுவளர்ந்தண
சிறியவனுமொருதமிழ்முநிவன்பா வதிலோலா
திசைகளெலாமுயவரமருள்கம்பையி
னிலவியவாறிருநயனகடம்பணி
செகதலநாயகதனிமுதல்ரஞ்சித பெருமாளே. (5)

தந்தத் தனதன தந்தத் தனதன
தந்தத் தனதன—தனதானு.

மஞ்சிற்பொலிகுழ லஞ்சொற்கிளியிள
வஞ்சிக்கொடிநிக ரிடைமானர்
வஞ்சத்தளையெனுள் பந்தித்திடவடி
வந்தித்தனுதின முழல்வேனே
நஞ்சிற்படுகணை யுந்தித்தெறுபகை
நந்தப்பொருநள மதிலேகா
நந்திற்பொலிகரன் நங்கைக்கிடமருள்
நஞ்சிற்பானருள் குமரேசா
பஞ்சிற்றிகழுமு னஞ்சிற்றடிமிசை
பைம்புற்றழையெனு மிடவேதா
பம்புற்றலைவிரி கங்கைச்சுதநனி
பண்புற்றுயர்வா மிளையோனே
கஞ்சிப்பதியொரு செந்திற்றலநிகர்
கந்திற்புயல்படு வளமேசேர்
கம்பைத்திருநக ரன்புற்றுறைசிவ
கங்குற்பவகுக பெருமாளே. (6)

தனதன தந்தன தானுந் தனதன
தனதன தந்தன தானுந் தனதன
தனதன தந்தன தானுந் தனதன—தனதனதனதானு.

மறைமுதலந்தணமாவேங்கடமலை
குலவியசம்ப்ரமகோவாண்டலையுயர்
மதுரையிருந்தாசாயாண்டுலகருள் குருபரவமரேசா
மலைமுழைவந்தொருநாள்வேண்டிடுதமிழ்
வலவனையன்புகொடேயாண்டவிர்புகழ்
வனைதருபண்டிதஞானங்கனைசுத வடியவர்பவநாசா
இறைகடனெந்தமையேயாண்டருள்வது
னிருகழல்வந்தனையேநான்புரிதர
வினமலர்கொண்டயாரேதோங்கிடவர மருளுதிகதிரேசா

இடுகிடைமந்தரநோார்ந்தெழுமுலை
வடியயிலம்பினையோதாஞ்சனவிழி
இளையவான்பினைவேரும்படிதயை புரிதிருமருகோனே
பறைபடுமந்தவநாளேங்கிடவிட
லாகரகந்மயூராம்பரகட
பசியகடம்பணிதோளோங்கியகுக வயமிகுமெழில்வேளே
பயிறருகுஞ்சரிபாகாம்பதகட
மயில்குறமின்கொடிமோகாண்டர்கபொழு
பரிபுராஞ்சிதபாதாம்புயமருள் அழகியமுருகோனே
கறைதிகழுந்தனிவேலந்தியகர
மலைமகள்சுந்தரிமாதாம்பிகைபுணர்
கதிர்மதியம்பணிகாமாந்தகனருள் அறுமுகவிளையோனே
கமழ்தருபங்கயமேலோங்கியதிரு
வுறைநகாந்தாநாடேய்ந்தனமணி
கதிர்விடுகம்பையின்வாழ்வார்ந்தவமறை
[முடிவளர்பெருமாளே (7)

தனன தாத்தந் தனதன தந்தன
தனதன தாத்தந் தனதன தந்தன
தனன தாத்தந் தனதன தந்தன — தனதான.

குருவியோட்டுங்குறமகள்சந்தன
வரையைவாட்டுங்குவிமுலையின்படர்
குறுகிவேட்டன்றடிதொழுரஞ்சித குமரேசா
குவளைகாட்டம்பகபரையந்தரி
யமலைசேட்டங்கியசுாருந்தொழு
குமரிகோட்டந்திருமுலையுண்டரு ளிளையோனே
அருவிகாட்டுங்குலமலையுஞ்சிர
குமரகோட்டந்தணிகையுவந்தற
அழகுநாட்டும்பலதளிகொண்டவ கதிரேசா
அரவமாட்டுங்கடிதடமங்கைய
ருறவைவீட்டும்படிகமழ்பங்கய
அடியையேத்துந்திறனருள்சுந்தர முருகேசா

தருவினுட்டஞ்செறியுடலிந்திர
னமராக்கம்பெறவளையுங்கிரி
தகராட்டுந்தயைமலிசம்ப்ரம வடிவேலா
தாணிகாட்டுந்திசைமுகனஞ்சுபு
தளையைமாட்டுந்தனிவிறலந்தண
சடையனுர்க்குந்தருதிருமந்திர குருநாதா
கருவிலாழ்த்தும்பழிதவவன்புறு
திமிரநீக்கம்பெறநினதன்பர்கள்
கதியின்மோக்கங்கொளவருளிங்கித வமரேசா
களியதூட்டும்பொழிறனின்மந்திகள்
கமுகையார்க்குந்தொறுமணிசிந்திய
கவினைமோக்குந்திருவளர்கம்பைய பெருமாளே. (8)

தானதந்தன தனதன தனதன
தானதந்தன தனதன தனதன
தானதந்தன தனதன தனதன—தனதானு.

வேதசிந்திதகுறுமுநிபரவிய
நாதாஞ்சிதமதிமுகமணிநகை
வேடர்தங்குலமயின்மலரடிபணி வெகுதீரா
மேலவன்பெறவறிவுருகசிய
மாகுமந்திரவொருமொழியருளிய
மேன்மைதங்கியகுருபரபரிபுர மணிபாதா
சீதரன்றிருமருமகனழகிய
மீனவன்கொடிதருமகனுயர்வுறு
தேவகுஞ்சரிதலைமகனெனவள ரொருவேளே
தீனபந்தடியகருளமுறைசிவ
ஞானபண்டிதவெமைவழியடிமைகொள்
தேவகந்தனிருடாவெனதெதிர் வருவாயே
வாதவம்புவிவெளிபுனலனலவிர்
ஆதவன்பனிமதியுயிரொருவடி
வாயெழுந்திமையவர்தரிசனமுற வளர்வோனே

வாதுவந்திடுமமணர்கள்கழுவுற
நீதருந்திருமுறைநதியெதிர்செல
மாநிலஞ்சிவசமயநனிலைபெற வருஞகா
நாதவம்பாகடமாகதமயி
லேறியின்புடனிருகொடிவளைதா
நாகமந்திரமதில்வளரிறையவ வடிவேலா
நாகர்வந்தடிதொழுதனுதினமறை
யோதுகம்பையினுறைநிதியொளிர்மணி
நாடரும்புகழ்பாவியவறுமுக பெருமாளே. (9)

தந்தனந் தந்ததன தந்தனந் தந்ததன
தந்தனந் தந்ததன—தன தானு.

பங்கயந்தங்குமன மிங்கிதம்பொங்குகுயில்
பஞ்சரந்துஞ்சுகிளி வனமானேர்
பண்புளங்கொண்டுபத பங்கயந்தெண்டனிடு
பண்டிதன்செந்திநக ரிளையோனே
சங்கலம்புங்கரமொ டிந்திலங்கும்வதன
தண்டைகொஞ்சும்பதமி னிடையார்பூஞ்
சந்தனங்கந்தமுலை சந்ததங்கெஞ்சியுழல்
சங்கடங்குன்றவருண் முருகேசா
திங்களங்கொன்றையுர கந்தருஞ்செஞ்சடையர்
செஞ்சரண்டுன்றமுய லகன்மீதே
திந்திமிந்திந்தியென மன்றினின்றுந்துநடர்
சிந்தைதங்கெந்தமுமை தருபாலா
கங்கவந்தங்குலவு தண்டரங்கம்புணரி
கங்கமொண்டுண்டுலவு களமேகிக்
கண்டதுண்டஞ்செயரி யந்தகொண்டன்மருக
கம்பைமந்த்ரங்குலவு பெருமாளே (10)

தனதந்தன தந்தன தந்தன
தனதந்தன தந்தன தந்தன
தனதந்தன தந்தன தந்தன—தனதான.

மனையின்கடைநின்றெதிர்கொண்டவண்
வருமைந்தர்கடங்களையின்சொலின்
வருகென்றுறுவஞ்சகமிஞ்சுகண் வலைவீசி
வழிகொண்டுனையன்றியிலென்றுணை
யெனவங்கமர்புந்திமருண்டுணர்
வழியும்படியந்தமிறந்திர வகைபேசி
தினையின்சுகமன்றதையும்பொரு
திரையின்பெரிதென்கைபுரிந்தனு
தினமும்பொருள்கொண்டளவின்படி யணைமாதர்
திறமென்பலவிங்கிதமுஞ்செய்து
திருவந்தெனவுண்டறநொந்துகை
சிறுகின்றெருவுந்தமமுண்டைக ளுறவாமோ
வனசம்பொருநின்றனருங்கழன்
மயலொன்றியழிந்தலையுங்கடை
மடையன்பெறவண்டமுமஞ்சுறு மயின்மீதே
வனகுஞ்சரியுங்கயலுண்கணி
வளியும்புறமன்றநெடுங்கா
வடியொன்றயிலுங்கொடுவென்றெதிர் வருவாயே
கனகன்சிதறுண்டழியும்படி
யுதிரங்குடருண்டணியும்புயல்
கனகம்பமுறுஞ்சினமிஞ்சரி மருகோனே
கமழ்தந்தகடம்பணியும்புய
முழவங்கடலின்கதறும்பல
கவியும்புகழ்கம்பையுவந்தருள் பெருமாளே (11)

தனன தந்தன தந்தன தந்தன
தனன தந்தன தந்தன தந்தன
தனன தந்தன தந்தன தந்தன—தன தானு.

சரணவந்தனை தந்துமனங்குழை
சரணருய்ந்துமகிழ்ந்திட வெம்பவ
சலதியும்பகைகொண்டுமலைந்திடு மசுரேசன்

தவமுணர்ந்தளவின்றிவரும்புய
றணைமணந்தநெடும்படைதுன்றிய
சலதியும்பருகுங்கதிரொன்றயில் முருகேசா

வருணனுந்தொழவந்துநெடுந்திரை
வளைகருங்கடலன்றணைகண்டொரு
வழிநடந்தமர்தந்துபொருந்தச முகனுகும்

வலவனும்படையும்படவெந்திறல்
வடிகொளுங்கணையுந்தியடுந்தனி
வரதனெண்டுளவம்புனைவிண்டரி மருகோனே

அருணையங்கிரிநின்றுயரும்பரை
அடிமைகொண்டலைவந்தெழுநஞ்சினை
அமுதினுண்டமரந்தனனிந்துறை சடையானோர்

அருணிறைந்தபரஞ்சிவசங்கர
னமலனம்பலமன்றினடந்தரும்
அனகனங்கணனம்பரஅந்தா னிடமேவும்

கருணையங்கடலந்தரிசுந்தரி
கவுரிமங்கலையம்பிகைதந்தருள்
கடவுளெண்டிசையுந்தொழுசம்ப்ரப விளையோனே

ககனமும்புவியும்பரவும்பத
கமலாஞ்சனிதங்கிநடம்பயில்
கனகமந்திரகம்பையுவந்தருள் பெருமாளே. (12)

தன்ன தன தானனம் தன்ன தன தானனம்
தன்ன தன தானனம்—தன தானு.
தந்ததன தானனம் தந்ததன தானனம்
தந்ததன தானனம்—தன தானு.

அன்னநடையாருங் கன்னன்மொழியார்விடம்
அன்னவிழியார் தனம் விலைகூறு
அந்தமடவாரினஞ் சொந்தமெனநாடுறும்
அந்தமதிகேடுறும் படியாள்வாய்
வன்னமுலைமாதிடந் துன்னவளாதிமன்
வன்னிவடிவானவெம் பெருமானுர்
வந்திதருபோனகங் கந்தைதனிலேகொளும்
வஞ்சநடையார் தருஞ் சிறுபாலா
இன்னமெனையேனடுஞ் சின்னவினை தானுகந்
தின்னல்களைவாயுளங் குழைவாகி
இந்திரனுமாயனுந் தந்தமருகாவெனும்
மெங்கடலைவாசுகந் தருவாயே
கன்னமதவாரணஞ் செந்நெலொடுமாடுறும்
கன்னறனைவாயிடும் வயலாரும்
கந்தமலராசனந் தந்தகனிவாழ்வுறும்
கம்பைநகராளுமெம் பெருமாளே. (13)

தானதத்த தந்தனம் தானதத்த தந்தனம்
தானதத்த தந்தனத்—தன தன தன தானு.

மாரணத்தையுந்தருங் கோலினைத்துறந்தகண்
மாதரைப்புகழ்ந்தவர்க் கனுதினமுறவாகா
மாமனத்தையுந்தினங் கோதறுத்ததென்சொலின்
மாலையிட்டுநின் கழற் றுணைதொழவருள்வாயே
ஆரணத்தைவிண்டயன் மோலிகுட்டியம்பரன்
ஆதரித்துவந்ததற் பாருகவிளையோனே
ஆறெழுத்துமைந்தவன் ரோரெழுத்தையுஞ்சிவன்
ஆலினுற்றவன்றனக் கருளியகுருநாதா

வாரணத்தனந்தனின் னீளுடற்றுயின்றபெம்
மானயப்பொடுங்களித் திடுதிருமருகோனே
வானளித்தவிந்திரன் மாமகட்புணர்ந்துமம்
மானளித்தசெந்தினேக் குறமகளணேவேளே
காரணத்துரிஞ்சிமுன் வாரணத்தையுண்டவன்
காதலிக்கவின்றமிழ்த் தனிமொழிதருவோனே
காமாப்பணிந்தளம் பாடிமொய்த்துவண்டுணுங்
காவளைத்த கம்பையிற் றிகடருபெருமாளே. (14)

தந்ததன தந்தனம் தந்ததன தந்தனம்
தந்ததன தந்தனத்—தன தானு.

கும்பமுலையும்படந் தந்தவரையுஞ்சுகங்
கொஞ்சுமொழியும்படைத் திடுமானுர்
குந்தவிழியஞ்சனங் கண்டுமயல்கொண்டுளங்
குன்றியலையென்றனக் கருள்வாயே
தம்பமதிலன்றுவன் சிங்கமெனவந்துபொன்
தந்தகனகன்றனைப் பொருமாலாஞ்
சங்கரியும்பரின் இந்திரனுமின்புடன்
தந்தமருகென்றபச் சிளையோனே
அம்பலநடந்தருஞ் செம்பதமிறைஞ்சிமுன்
அண்டர்செயருந்தவப் பயனுயோர்
அந்திநிறநந்தியெஞ் சிந்தைகுடிகொண்டவன்
அன்றருளவந்தசற் குருநாதா
கம்பமதகுஞ்சரந் தம்பியெனவன்புறுங்
கந்தகுகசுந்தரத் தனிவேலா
கந்தமலர்நந்தனஞ் சிந்துமணமுண்டுவிண்
கங்கைகமழ்கம்பையிற் பெருமாளே. (15)

தந்ததன தந்ததன தந்ததன தந்தனம்
தந்ததன தந்ததன தந்ததன தந்தனம்
தந்ததன தந்ததன தந்ததன தந்தனம்—தனதான

சங்கையறவந்தருளியெஞ்சுகலகந்தெறுந்
தண்டமிழறைந்துபொருடந்திடவுளங்கொளுஞ்
சங்கமுறையும்புலவரங்கைதொழுதின்புறுங் கழலோனே
சம்பகநறுங்குழலுமுண்கணுமொர்தந்தியின்
கொம்பெனநிமிர்ந்தணியணிக்கெழுதனங்களுஞ்
சம்பையிடையுங்கெழுமுகுஞ்சரிமணம்பெறுங் குகவேளே
திங்கணிலவுஞ்சடைவிரிந்தசையவம்பரஞ்
சென்றுமுடியுந்தடவநின்றொருபதந்தினந்
திந்திமிதியென்றுமணிமன்றினடனஞ்செயுஞ் சிவனாஞ்
செம்பவளவங்கரகமுங்குழையவன்புறுங்
கும்பமுலையண்டபகிரண்டமுழுதுந்தருஞ்
செம்பொனகமங்கைகளிகொண்டுளமகிழ்ந்திடுங் குமரேசா
பங்கமுறுமிந்தவுடலந்தனைமணுண்டிடும்
மங்கியழியும்பெயருமென்பதைமறந்துமென்
பங்கிலுறவிந்திரபதந்தனைவிழைந்திடுங் கடையேனுன்
பம்புபறைநின்றுகுளறந்தமதிலந்தகன்
பந்தமுறவன்றளையிடுந்தொழிலினைந்தகம்
பம்பரமெனும்படிசுழன்றறவுநொந்தனன் அருடாராய்
கங்கையருளுங்குமரசெந்திநகரந்துனுக்
துங்கநிகமம்பரவுசுந்தரவைகுந்தமுன்
கங்கைதரியுண்டசுரரந்தமுறவுந்திடுங் கதிரேசா
கம்பையலைசிந்திமுடிகந்தியையெறிந்திடுஞ்
சம்பைமலியந்தநதிசந்துமணியுந்தருங்
கம்பைதனிலும்பர்தொழநின்றருளுநம்பியெம் பெருமாளே(16

தந்தனந்தந்தனந் தந்தனந்தந்தனந்
தந்தனந்தந்தனத்—தனதான

அஞ்சனந்துஞ்சுகண் வஞ்சகம்மிஞ்சுபெண்
அன்பநங்கொண்டவர்க் குறவாகி

அங்கசன் றண்டினேந் தந்தரந்துஃபுறும்
அன்பனுன் றஞ்சமிப் பொழுதாழ்வாய்
உஞ்சனஞ்சந்ததம் உன்சரண் வந்தனம்
உம்பரமென் றிளைத் தொருகோடி
உம்பரும்இம்பரும் தும்பையும்வம்புறும்
ஒண்கடம்புந்தொடுத் தணிதோளா
நஞ்சுநஞ்சென்மனங் கங்குலுந்துன்புறும்
நந்திகண்வந்தசற் குருநாதா
நம்பிநின்றுண்டரின் செம்பதந்தொண்டிடும்
நந்தனன்வந்தெனக் கருள்வாயே
கஞ்சியுஞ்செந்திலுந் தென்பரங்குன்றமுங்
கந்தகுன் றுந்தனக் கொருநோராங்
கம்பையின்மந்திரந் துன்றிநின் றின்புறுங்
கந்தனென்சுந்தரப் பெருமாளே. (17)

தன தன தந்தத் தன தன தந்தன
தன தன தந்தத் தன தன தந்தன
தன தன தந்தத் தன தன தந்தன — தன தான.

திரிபுரம்வெந்துச்சிதமறமுன்பொரு
சிறுநகைதந்துச்சினமிகுசங்கரர்
திரிபுரைபங்கிற்றிகழ்திரியம்பகர் புதல்வோனே
தினகரனெண்டிக்கினரரியிந்தனல்
அநிலநெடுஞ்சக்கிரியலர்துன்றிய
திசைமுகனந்தச்சமநெடுமிந்திர னனைவோரும்
உரிமையிழந்தெய்த்தனமினியெந்தமை
யருளுதியின்றைக்கபயமுவந்தன
துபயபதஞ்சிற்பரநினையன்றியொர் புகல்காணேம்
உறுதியொடுந்தற்பானுதவுங்குக
வருதியெனுஞ்சொற்பலபலதந்தக
முருகிமயங்கிக்கழிதருமண்டரொ டுடனேகி

குருதிவழிந்திப்புவிமகள்செந்துகி
லரையிலணிந்திட்டயர்நடமென்றெரு
குறையுடலுந்திக்குதிகொளவுங்கழு தொருகோடி
குழுமிநெருங்கிக்குகுகுகுகுங்குகு
வெனமுழவுந்திப்பயிறரமண்டிய
கொடிகழுதுண்டெக்களிகொளமுந்தொரு களமீதே
தரியலரங்கத்தலைகுலையும்படி
தழையுயிர்சிந்தித்தரைமகிழும்படி
தனியயிலுந்திச்சமர்களைசம்ப்ரம வெகுதீரா
தளையதுபந்தித்தனுதினமுந்துய
ரடியனையன்புற்றருள்திருவம்புயை
தவளமினண்பிற்றிகழ்தருகம்பைய பெருமாளே. (18)

மயிற்றுதி.

உள்ளிற் கலாநெஞ் சுருக்குமே யோர்தரம்வாய்
விள்ளிற் கலாஞ்செய் வினையறுக்கும்—தெள்ளியசீர்த்
தேசண் முகநாற் றிசையும் புகழ்கம்பை
மாசண் முகனர் மயில்.

திருச்சிற்றம்பலம்.

கம்பை முருகன் திருப்புகழ் முற்றிற்று.

வாழ்த்து.

மானிலம் வாழ்க மன்னன் மன்னிய செங்கோல் வாழ்க
மேனிலை யடைந்து வேத மெய்ந்நெறி வாழ்க ஞாலத்
தானிலைக் குயிராஞ் சைவ மாகமம் வாழ்க மாறுத்
தேனிலைப் பொருள தாகுந் தென்றமிழ் வாழ்க மாதோ.

சுபம்.